


வைத்திய சிந்தாமணி

முனைவர்
வே.இரா.மாதவன்

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

வைத்திய சிந்தாமணி

பதிப்பாசிரியர்
முனைவர் வே.இரா. மாதவன்
இணைப்பேராசிரியர்
ஓலைச்சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-320-3

தமிழ்நாடு பாடநூல் கழகம் நிதி வெளியீடு

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 260

திருவள்ளுவராண்டு 2034 மார்கழி - திசம்பர், 2003

நூல்	:	வைத்திய சிந்தாமணி
பதிப்பாசிரியர்	:	முனைவர் வே. இரா. மாதவன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	மருத்துவம்
பதிப்பு	:	முதற்பதிப்பு - 2003
பக்கம்	:	xxx +246 = 276
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரூ. 80/-
படிகள்	:	1000
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
துணைவேந்தர்

அணிந்துரை

மருத்துவ முறைகளில் தொன்மை வாய்ந்ததாக விளங்கும் சித்த மருத்துவம் குறித்து ஏராளமான தமிழ்ச்சுவடிகள் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ்ச் சுவடிகளுள் இன்று மிகுதியாகக் காணப்படுகின்றவை மருத்துவச் சுவடிகளே. வாழ்விற்கு மிக இன்றியமையாததாக விளங்குவது உடல் நலம். இதனை நன்கு பேணுதற்குரிய நெறிமுறைகளை முன்னையோர் இச்சுவடிகள் மூலம் நமக்கு வழங்கியுள்ளனர்.

பழந்தமிழ் இலக்கியங்களிலும் பிற நூல்களிலும் காணலாகும் தமிழர்தம் மருத்துவச் சிந்தனைகளை இன்று தொகுத்து ஆராய்ந்தால் பழந்தமிழர்களுடைய மருத்துவக் கோட்பாடுகளை நன்கு உணர்ந்துகொள்ள முடியும்.

மருத்துவம் இன்று அறிவியல் துறையோடு இணைந்து பல புதிய மாற்றங்களைக் கண்டுள்ளது. இவற்றைப் பழந்தமிழ்க் குறிப்புகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்தால் புதிய புதிய செய்திகள் கிடைக்கக்கூடும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் பழைய ஓலைச்சுவடிகளைப் போற்றிப் பாதுகாத்து வருகிறது. பல்கலைக்கழகம் தொகுத்து வைத்துள்ள பல்வேறு சுவடிகளுள் ஒன்று 'வைத்திய சிந்தாமணி' என்பதாகும். அச்சிடப்பெறாத இச்சுவடி அனைவருக்கும் பயன்படும் வண்ணம், இன்று தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகின்றது.

சுவடிப்பதிப்பியலில் பெரும் புலமை பெற்ற முனைவர் வே.இரா.மாதவன் அவர்கள் இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். செய்யுள் வடிவில் அமைந்துள்ள இந்நூலினைத் தேவையான குறிப்புகளோடு வெளியிட்டு இருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

சிந்தாமணி என்னும் பெயரில் ஒரு நூற்றாண்டிக்கு

முன்னரேயே பல மருத்துவ நூல்கள் வெளிவந்துள்ளன. சிந்தாமணி என்பதற்குப் பல்வேறு பொருள்கள் உள்ளமையையும் நூலாசிரியர் உரிய சான்றுகளோடு தொகுத்துத் தந்துள்ளமை பாராட்டத்தக்கது. பல்வேறு ஆண்டுகட்கு முன்னரேயே சிந்தாமணி என்னும் சொல் வழக்கு இருந்ததையும் இந்நூலால் உணரமுடிகிறது.

சுவடிகளைப் பதிப்பிப்பது என்பது எளிமையான செயல் அன்று. பிழை நிறைந்துள்ள பாடல்வடிவங்களைத் தக்கவாறு திருத்திப் பதிப்பிப்பதற்குத் திறமையும், புலமையும் வேண்டும். இன்ன காலத்து தோன்றிய நூல் என்னும் கால அறிவு, அக்காலத்தில் தோன்றிய சொல்லுக்குரிய பொருளைத் துணிவதற்குரிய மொழி அறிவு, பல்துறை அறிவு முதலியன சுவடிப்பதிப்பாளருக்கு இன்றியமையாதன. மூலச்சொற்களுக்குத் தேவைப்படும் உரை விளக்கங்களைத் தருவதற்குப் பல்வேறு நூல்களில் பயிற்சியும் புலமையும் இன்றியமையாதவை.

மருத்துவம் சார்ந்த இத்தகைய நூலை உரை விளக்கங்களோடு பதிப்பிப்பதற்கு, பெரும் உழைப்பும், பொறுமையும் முயற்சியும் கொண்டு உருவாக்கும் திறனும் வேண்டும். நூலாசிரியர் முனைவர் வே.இரா.மாதவன் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடித்துறையில் பணியாற்றி இத்தகைய பட்டறிவுகளைப் பெற்றுள்ளவர். பல அரிய மருத்துவச் சுவடிகளைப் பதிப்பித்து வெளியிட்டவர்.

வைத்திய சிந்தாமணி என்னும் இந்நூல் சித்த மருத்துவத்தில் கூறப்பெறும் பல்வேறு மருத்துவச் செய்திகளையும் உள்ளடக்கியதாக விளங்கும் ஒரு அரிய நூலாகும். இந்நூலினை நன்கு திட்டமிட்டுத் தொகுத்தும் வகுத்தும் பதிப்பித்த நூலாசிரியரின் பணி பெரிதும் பாராட்டத்தக்கது.

பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள மருந்துப் பொருள்களின் அகர வரிசையும், நோய்கள் அகரவரிசையும், அவற்றிற்கு இணையான ஆங்கிலக் குறிப்புகளும் படிப்போருக்குப் பெரும் பயன்தரவல்லன.

நூலாசிரியரின் இவ்வரிய பெரிய முயற்சியைத் தமிழுலகம் நன்கு பாராட்டிப் போற்றும் என நம்புகிறேன்.

நூலாசிரியர் முனைவர் வே.இரா.மாதவன் அவர்கட்கும், இந்நூலினை நன்முறையில் வெளியிட்டு உதவிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையினருக்கும் இனிய பாராட்டுதல்கள்.

தஞ்சாவூர்
1.12.2003

(இ. சுந்தரமூர்த்தி)

பொருளடக்கம்

பதிப்புரை

தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவம் தொன்மைச் சிறப்புடையதாகும். உலக மருத்துவ முறைகளில் மிகவும் பழமையானது இயற்கையானதுமாகிய இத்தமிழ் மருத்துவம் பற்றிய நூல்கள் யாவும் மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்னும் நோக்கில் நம் முன்னோர்கள் இவற்றை ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்துப் பாதுகாத்து வந்துள்ளனர். இன்று அறியக்கூடிய அனைத்துத் தமிழ் ஓலைச்சுவடிகளை ஆராயுமிடத்து, மருத்துவச்சுவடிகளே மிகுதியான எண்ணிக்கையில் கிடைக்கக் காணலாம். மக்களின் அன்றாட வாழ்வியலுக்கு இவை மிகவும் தேவையானவை என்பதால் இவற்றை மிகுதியாக எழுதிவைத்துப் போற்றியுள்ளனர். ஆயின், கால மாற்றங்களின் காரணமாக ஓலைச்சுவடிகள் பல அச்சுவடிவம் பெறாமல் இன்னும் அப்படியே கிடக்கின்றன. அச்சிடப்பெற்ற சில நூல்களும் பயன்பாட்டிற்குரிய வகையில் இல்லை. சுவடிகளில் செய்யுள் வடிவங்களே மிகுதியாக உள்ளமையால் இக்கால மருத்துவ மாணவர்களும் பொதுமக்களும் இவற்றைப் படித்தறிவதில் மிகுந்த ஆர்வங்கொள்வதில்லை. தமிழ் மருத்துவத்தின் தனிச்சிறப்பைப் பல்துறை அறிஞர்களும், அறிவியலாரும் நன்கு அறிய வேண்டுமாயின் பல தமிழ் மருத்துவச் சுவடிகள் நல்ல முறையில் உரையுடன் பதிப்பித்து வெளியிடப் பெற வேண்டும். இத்தகைய மருத்துவ முறைகளால் இன்றைய மக்களும், வருங்கால மக்களும் எவ்வெவ்வாறெல்லாம் பயன்பெறலாம் என்பதை அறிவியல் நோக்கில் ஆராய்ந்து அறியவும் இச்சுவடிப் பதிப்புகள் துணையாகும். இவ்வகையில், பல்லாண்டு காலமாகப் பயன்பாட்டில் இருந்துவரும் தமிழ் மருத்துவ முறைகளைத் தேர்ந்து திரட்டி எழுதப்பெற்றுள்ள 'வைத்திய சிந்தாமணி' என்னும் நூல் ஓலைச்சுவடியிலிருந்து இவண் பதிப்பிக்கப்பெறுகின்றது.

வைத்தியம்

வையகத்தாருக்கு வேண்டப்படும் நுகர்ச்சிப் பொருள்களை அவரவர் உடல் நிலைக்குத் தக்கபடி கூறும் நூல் வைத்தியம் எனப் பெறும். இந்நூல் ஆராய்ச்சியில் வல்லவருக்கே வைத்தியர் எனப் பெயராகும்.

பொதுவாக , 'வைத்தியம்' என்பது பரிகாரம் அல்லது நீக்குகை என்ற பொருளில் வரும். (பரிகரித்தல் – காத்தல், குணமாக்கல், நீக்கல்). இதே போன்று, வைத்தியன் என்பது பண்டிதன், பரிகாரி என்ற பொருளிலேயே வழங்கப்பெறுகிறது. சிவபெருமானுக்கு இப்பொருளில் வைத்தியநாதன் என்ற பெயரும் வழங்கக் காணலாம்.

தமிழில் 'மருத்துவம்' என்னும் சொல்லுக்கு இணையாக 'வைத்தியம்', 'வாகடம்' ஆகிய சொற்களை வழங்கும் மரபைப் பல பழைய நூல்களில் காணலாம். இடைக்காலத்தில் தோன்றிய இவ்வழக்குகள், பல சுவடிகளிலும் காணப் பெறுகின்றன.

சிந்தாமணி

விரும்பிய அனைத்தும் கொடுக்க வல்ல ஒரு தெய்வமணி சிந்தாமணி எனப்பெறும்.

பாற்கடலில் பிறந்த பொருள்களுள் ஒன்று சிந்தாமணி. இது, இந்திரனிடமிருந்து நினைத்ததைத் தரவல்லது என்பர் அபிதான சிந்தாமணியார்.

தமிழில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே 'சிந்தாமணி' என்னும் வழக்கு இருந்துள்ளதைக் காணலாம். திருத்தக்க தேவர் தாம் எழுதிய நூலுக்குச் 'சீவக சிந்தாமணி' என்றே பெயரிட்டுள்ளார்.

சிந்தாமணி என்பது, இந்நூற்குத் தன்மையால் வந்த பெயரென்பர். பிறந்தவுடன் சீவகனை விசயை 'சிந்தாமணி' என்று பாராட்டியமையால் (சீவக.பா.311), சிந்தாமணி என்பது முதலில் அவனுக்குப் பெயராய், அப்பால் அவன் சரித்திரமாகிய இந்நூலுக்காயிற்று என்றும் கூறுவர்.

'சிந்தாமணியின் தன்மை பொருந்திய செல்வன்' என்பதைச் 'சிந்தாமணி யேத்த செல்வன்' (பா.2370) என்னும் பாடலடி உணர்த்தும். மேலும்,

> *"முந்நீர் வலம்புரி சோர்ந்தசைந்து*
> *வாய்முரன்று முழங்கி யீன்ற*
> *மெய்ந்நீர்த் திருமுத் திருபத்தேழ்*
> *கோத்துமிழ்ந்து திருவில் வீசும்*
> *செந்நீர்த் திரள்வடம்போற் சிந்தா*
> *மணியோதி யுணர்ந்தோர் கேட்டார்*
> *இந்நீர ராயுயர்வ ரேந்துபூந்*
> *தாமரையாள் காப்பா ளாமே."* (பா. 3143)

என்னும் இப்பாடலில், சோழகுலமாகிய கடலிலே பிறந்து வலம்புரி, பிறர் குற்றங்கூறுகின்றாரென்று தளர்ந்து அஞ்சி முரன்று முழங்கி ஈன்ற இருபத்தேழாகிய முத்தையும், மாணிக்கத்தையும் வடம் போலே கோர்க்கப்பட்டுத் திருவில் உமிழ்ந்து வீசுஞ்சிந்தாமணி என்னும் இச்செய்யுளை ஓதியுணர்ந்தவரும், அவர் கூறக் கேட்டாரும் இந்திரராய்ப் பின்பு வீடு பெறுவர்; அவரை இப்பவத்துத் திருமகள் காப்பாள் என்று கூறுவர்.

சிந்தாமணி என்னும் இப்பெயருள்ள நூல்கள் சில அன்றே தமிழில் இருந்ததாதலின், அவற்றினின்றும் வேறுபடுத்தித் தெரிவித்தற்பொருட்டே, 'சீவக' என்னும் அடைமொழியுடன் இந்நூற் பெயர் வழங்குவதாயிற்றென்று தெரிகின்றது. ஆயின், உரையாசிரியர்களாற் பெரும்பாலும் இந்நூல் 'சிந்தாமணி' என்றே வழங்கப்பெறும். புலவர் சிந்தித்தவற்றை யெல்லாம் தருதலின் இது சிந்தாமணி என்று பெயர் பெற்றதென்றும் கூறுவர்.

இதே பொருளில், தமிழில் பல துறைகளிலும் இயற்றப்பெற்ற பல நூல்கள் சிந்தாமணி எனப் பெயர் பெற்றுள்ளமையைக் காணலாம். காட்டாக, அபிதான சிந்தாமணி, கௌசிக சிந்தாமணி (காலக் கணித நூல்), சோதிட விளக்க சிந்தாமணி, தனிச்செய்யுட் சிந்தாமணி, நவக்கிரக சிந்தாமணி, விடநிக்கிரக சிந்தாமணி, விநோத விகட சிந்தாமணி, விவேக சிந்தாமணி, வேதாந்தமனை சிந்தாமணி என இவ்வாறு பல நூல்கள் உள்ளன.

மருத்துவத்தில் சிந்தாமணி

தமிழ் மருத்துவத்தில் 'சிந்தாமணி' என்னும் பெயர் பரவலாகப் பயன்படுத்தப்படக் காணலாம். திரு.டி.வி. சாம்பசிவம் பிள்ளை அவர்கள் தொகுத்துள்ள தமிழ்–ஆங்கில அகராதியில் இப்பொருள் பற்றிப் பின்வருமாறு விளக்கக் காணலாம்.

சிந்தாமணி:1. சிவபெருமான் உமாதேவியாருக்கு அருளிச் செய்த 'பதார்த்தகுண சிந்தாமணி' என்னும் ஓர் அரிய நூல் சிந்தாமணி என்றே அழைக்கப்பெறும். (A materia medica in Tamil said to have been given out by God Siva to Umadevi).

2. சமணர் காலத்தில் தென்னிந்தியாவில் தமிழர்கள் கையாண்டு வந்த சித்த வைத்திய நூல்களினின்று திரட்டி எழுதிய ஒரு சிறந்த வைத்திய நூல் சிந்தாமணி எனப்பெறும். (An excellant treatise on medicine consisting purely of selections from the medical works of Siddhars, compiled by the Jains of Southern India).

3. தமிழ்–சித்த வைத்திய நூல்களினின்று வடமொழியில் மொழிபெயர்க்கப்பெற்ற ஒரு நூல் சிந்தாமணி எனப்பெறும். (A work translated form the Tamil Siddhar's medical works into Sanskrit).

4. அகத்தியர் செய்த தமிழ் வைத்திய நூல்களினின்று திரட்டி எடுத்து மலையாளத்தில் கையாளப்பட்டு வரும் ஒரு நூல் சிந்தாமணி எனப்பெறும். (An abridged edition of the supposed Agastiyar's work on Tamil Medicine used at the present day by the Malayalees).

5. தன்வந்திரியால் செய்யப்பட்ட ஒரு வடமொழி வைத்திய நூல் சிந்தாமணி எனப்பெறும். இது ரோக நிதானத்தைப் பற்றிச் சொல்வதாகும். (A Sanskrit treatise on diseases by Danvantri).

சிந்தாமணி வைத்தியம்

தமிழ் நாட்டில் வழங்கி வந்த சித்த வைத்திய முறையை மலையாள மொழியில் மொழிபெயர்த்தெழுதி மலையாளத்தில் சில வைத்தியர்களால் சரக, சுசுருத ஆயுள் வேதத்திற்கு மாறாகக் கையாளப்படும் ஒரு முறை, ' சிந்தாமணி வைத்தியம்' என்று கூறப்பெறும். (A translation of Tamil Shiddha medical works in Malayalam and practised by some of the physicians in Malabar in opposition to Sanskrit Ayurveda of Charaka and Susruta).

சிந்தாமணி வைத்தியன்

சரகம், சுசுருதம் முறைப்படி அட்டாங்க இருதய வைத்தியன் என்று சொல்லிக் கொண்டு செய்யும் வைத்தியத்திற்கு மாறாக, அகத்திய முறையை அனுசரிக்கும் *மலையாளத்திலுள்ள தமிழ் வைத்தியர், 'சிந்தாமணி வைத்தியன்' என்றே அழைக்கப்பெறுவர்.* (The Tamil physicians who follow Agastiya's work on medicine in opposition to Malayalam Vaidyans who style themselves as Ashtanga Hirdaya Vaidyans and follow charaka and Susruta).

எனவே, சிந்தாமணி வைத்தியம் என்பது தமிழ் மருத்துவத்திற்கே உரிய ஒரு தனிச்சிறப்பு என்பது தெளிவாகின்றது.

மேலும், சிந்தாமணிக்குளிகை, சிந்தாமணி மாத்திரை, சிந்தாமணி ரசம் என இவ்வாறு சிந்தாமணி என்னும் பெயரில் பல மருந்துகள் தமிழ் மருத்துவத்தில் வழங்கப் பெறுவதையும் நோக்குமிடத்து இப்பெயர் தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவத்தில் கொண்டுள்ள சிறப்பினை நன்கறியலாம்.

'சிந்தாமணி' என்னும் பெயரிலான மருத்துவச் சுவடிகள்

இன்று கிடைக்கக் கூடிய தமிழ் மருத்துவச் சுவடிகளில் 'சிந்தாமணி' என்னும் பெயரில் பல சுவடிகள் உள்ளன. காட்டாக,

அகத்தியர் வைத்திய சிந்தாமணி	–சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
அகத்தியர் சிந்தாமணி குணவாகடம்	– ”
அகத்தியர் சிந்தாமணி தாதுநிதானம்	– ”
அகத்தியர் சிந்தாமணி நாடி சாத்திரம்	– ”
தன்வந்திரி சிந்தாமணி அமரவெண்பா	– ”
தன்வந்திரி வைத்திய சிந்தாமணி 70	– ”
தன்வந்திரி வைத்திய சிந்தாமணி 1500	– ”
தன்வந்திரி கர்ப்ப சிந்தாமணி	– ”
வைத்திய சிந்தாமணி 4000	– ”
வைத்திய சிந்தாமணி வெண்பா	– ”
அகத்தியர் எந்திர சிந்தாமணி 100	–தஞ்சை சரசுவதி மகால் நூலகம்
அகத்தியர் வைத்திய சிந்தாமணி	– ”
தன்வந்திரி சிந்தாமணி	– ”
திருவள்ளுவர் ஞானவெட்டி 1500க்குச் சூத்திரம் (நவரத்தின சிந்தாமணி 800)	– ”
பேஷஜ கல்பம் (வைத்திய சிந்தாமணி) உரைநடை	– ”
வல்லபேந்திரர் சிந்தாமணி	– ”

வைத்திய சிந்தாமணி (உரைநடை)	– ”
அகத்தியர் சிந்தாமணி 650	– சித்தமருத்துவ வாரியம், சென்னை.
தன்வந்திரி வைத்திய சிந்தாமணி	– ”
யூகி வைத்திய சிந்தாமணி	– ”

போன்ற சுவடிகள் குறிப்பிடத்தக்கன.

மேலும், கௌசிகர் சிந்தாமணி, நாடிநிதான சிந்தாமணி, யூகிமுனி வாத சிந்தாமணி, வைத்திய சிந்தாமணி 10,000 போன்ற சுவடிகள் பற்றி உஸ்மான் கமிட்டி அறிக்கையிலிருந்தும் அறியலாம்.

தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை நூலகத்தில் இதுவரையில் சேகரிக்கப் பெற்றுள்ள சுவடிகளில், தன்வந்திரி சிந்தாமணி, தன்வந்திரி வைத்திய சிந்தாமணி, சிந்தாமணி வாகடம், வைத்திய சிந்தாமணி ஆகியவை சிந்தாமணி என்னும் பெயரிலுள்ளன.

'சிந்தாமணி' என்னும் பெயரிலான மருத்துவ அச்சு நூல்கள்

சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அச்சில் பதிப்பிக்கப் பெற்ற சில தமிழ் மருத்துவ நூல்கள் சிந்தாமணி என்னும் பெயரில் வெளிவந்துள்ளதைக் காணலாம். காட்டாக,

அனுபோக இரண வைத்திய சிந்தாமணி (1903)
இராமதேவர் என்னும் யாகோபு வைத்திய சிந்தாமணி 700 (1918)
கிருமி சிந்தாமணியும் குணதீட்சை மர்மமும் (1909)
தஞ்சை வைத்திய ராஜ சிந்தாமணி (1922)
தன்வந்திரி நாடி சிந்தாமணி, சுர சிந்தாமணி, சன்னிவாத சிந்தாமணித் திரட்டு (1870)
தன்வந்திரி வைத்திய சிந்தாமணி 1200 (1868) (1883)
திருநேத்திர சிந்தாமணி (1899)
நாடி சிந்தாமணித் திரட்டு (1870)
பதார்த்த குண சிந்தாமணி (1867 முதல் பல பதிப்புகள்)
யூகிமுனி வைத்திய சிந்தாமணி (1877)

போன்ற நூல்கள் மிகவும் குறிப்பிடத்தக்கன.

தமிழ் இலக்கிய வடிவமும் மருத்துவ நூல்களும்

வாகடப் பிள்ளைத்தமிழ், வைத்தியப்பள்ளு, வைத்தியக் கும்மி, யமக வெண்பா, வைத்திய சதகம் என இவ்வாறு சில இலக்கிய வடிவங்களோடு கூடிய மருத்துவ நூல்கள் பல அண்மைக்காலத்தில் இயற்றப்பெற்றுள்ளன. இவ்வகையில் 'சீவக சிந்தாமணி' என்னும் தமிழ் இலக்கியத்தின் அமைப்பைப் போன்றே பல உட்பிரிவுகளை (இலம்பகங்கள்) உள்ளடக்கியதாக அமைத்தும் ஒரு மருத்துவ நூல் பிற்காலத்தில் எழுந்துள்ளது.

வைத்தியர் சி. கண்ணுசாமிப்பிள்ளை அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள 'சிகிச்சாரத்னதீபம் இரண்டாம் பாகமாகிய வைத்திய சிந்தாமணி' என்னும் உரைநடை நூலில் இத்தகைய அமைப்பினைக் காணலாம்.

சீவக சிந்தாமணியில், நாமகளிலம்பகம் முதலாக முத்தியிலம்பகம் வரையிலான பதின்மூன்று இலம்பகங்கள் (உட்பிரிவுகள்) அமைத்திருப்பதைப் போன்றே மேற்குறிப்பிட்ட வைத்திய சிந்தாமணி நூலாசிரியரும் தம் நூலில் தத்துவ இலம்பகம், சுரரோக இலம்பகம், சந்நிரோக இலம்பகம், குன்மரோக இலம்பகம், மேகரோக இலம்பகம் என நோய்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு இலம்பகமாகவும்; கியாழ இலம்பகம், சூரண இலம்பகம், மாத்திரை இலம்பகம், இலேகிய இலம்பகம், தைல இலம்பகம், 'சிந்தூர இலம்பகம் என மருந்துகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு இலம்பகமாகவும் அமைத்து இறுதியில், எச்ச இலம்பகம் என்னும் பகுதியில் பிற மருத்துவச் செய்திகளை எழுதி அமைத்திருக்கக் காணலாம்.

எனவே, தமிழ் இலக்கியத்தின் தாக்கம் காரணமாகவும், எளிதில் விளக்கம் பெற வேண்டும் என்னும் நோக்கிலும் இத்தகைய மருத்துவ நூல்களை இயற்றியுள்ளனர் எனலாம்.

வைத்திய சிந்தாமணி

சுவடியிலிருந்து பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப் பெற்ற நூல் 'வைத்திய சிந்தாமணி' என்பதாகும். 'சிந்தாமணி போன்று வேண்டுவோர் விரும்பிய மருத்துவமெல்லாம் தரவல்ல நூல்' என்னும் பொருளில் இந்நூலுக்கு வைத்திய சிந்தாமணி எனப் பெயரிட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட சுவடிகள் மற்றும் அச்சு நூல்களினின்றும் முற்றிலும் வேறுபட்டது இந்நூல்.

சித்த மருத்துவத்தில் கூறப்பெறும் பொதுவான மருந்து செய்முறைகள் குறிப்பிட்ட நோய்களுக்கான மருந்துகள் எனப் பல மருத்துவச் செய்திகளை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது.

இதுவரையில் அறியப் பெறும் மருத்துவ நூல்களினின்றும் வேறுபட்ட நிலையில் காணப் பெறுவதாலும், பல நூல்களின் செய்திகளைத் தொகுத்து விளக்கும் ஒரு புதிய நூலாக விளங்குவதாலும் இந்நூல் இங்குப் பதிப்பித்தளிக்கப் பெறுகின்றது.

சுவடி பற்றிய செய்திகள்

'வைத்திய சிந்தாமணி' என்னும் பெயரிலான இச்சுவடி, தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையின் சுவடி நூலகத்தில் பாதுகாக்கப் பெற்று வரும் ஒரு தனிச் சுவடி (சு. எண்:799) ஆகும். இதுவரையில் கிடைத்துள்ள சுவடிகளிலிருந்தும் முற்றிலும் மாறுபட்ட இச்சுவடி இன்னும் அச்சிடப் பெறாததாகும். 32 செ.மீ. , நீளமும் 3.5 செ.மீ.இ அகலமும் கொண்ட இச்சுவடியில் 52 ஏடுகள் உள்ளன. ஏடுகளின் இரண்டு பக்கங்களிலும் எழுதப் பெற்றுள்ள இச்சுவடியின் ஒவ்வொரு பக்கத்திலும் 10 அல்லது 11 வரிகள் மிக நெருக்கமாக எழுதப் பெற்றுள்ளன.

முதல் ஏட்டில், 'வைத்திய சிந்தாமணி;' என இடதுபுற ஓரத்தில் எழுதப் பெற்றுள்ளது. இறுதி ஏட்டில், 'அகத்தியர் அருளிச் செய்த வை... எழுதி நிறைந்தது' என எழுதப் பெற்றுள்ளது. அகத்தியர் எழுதியதாகக் கூறப் பெறும் சில மருத்துவ நூல்களிலிருந்து திரட்டி எழுதப் பெற்றுள்ளமையால் இறுதியில் இவ்வாறு எழுதப் பெற்றிருக்கலாம். ஏட்டின் தொடக்கத்தில் , 'வைத்திய சிந்தாமணி' என எழுதப் பெற்றுள்ளமையால் அதே பெயரில் இந்நூலை அமைப்பது பொருத்தமுடையதாகும்.

நூலின் தொடக்கத்தில் காப்புப் பாடலாக கபில தேவ நாயனாரின் பாடல், விநாயகர் வணக்கமாக எழுதப்பட்டுள்ளது.

சுவடியிலுள்ள ஏடுகளின் இடது பக்க ஓரங்களில் ஏட்டெண்ணும் உட்தலைப்புகளும் எழுதப் பெற்றுள்ளன. ஏட்டெண், பாடலெண் போன்றவை தமிழ் எண்களாலேயே குறிக்கப் பெற்றுள்ளன.

இச்சுவடியில் மிகவும் கிறுக்கலாக எழுதப் பெற்றுள்ள நிலையைக் காணலாம். சுவடிகளில் பொதுவாகக் காணப்படுவது போன்றே இதிலும் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளிகள் இல்லை. ஒற்றைக் கொம்பு (ெ), இரட்டைக் கொம்பு (ே) ஆகியன ஒன்று போலவே (ெ) எழுதப் பெற்றுள்ளன. மேலும் ா, ர இவற்றிற்கான வேறுபாடுகள் இல்லை. க, ச; க, த; ப, ழ; ய, ப; போன்றவை தம்முள் மயக்கம் தருவனவாக எழுதப் பெற்றுள்ளன.

ஏடு எழுதியவரின் கவனக் குறைவு, விரைவு, பேச்சு வழக்கு போன்ற பல காரணங்களால் இச்சுவடியில் பிழைகள் பல மலிந்துள்ளன. இவற்றை இடத்திற்கேற்றாறும் பொருளுக்கேற்றவாறும் இங்குத் திருத்திப் பதிப்பிக்கக் பெற்றுள்ளன. காட்டாக,

சுவடியிலுள்ள வடிவம்		திருந்திய வடிவம்
இனனூல	–	இந்நூல்–1
தமிளமுனிமகிளநது	–	தமிழ்முனிமகிழ்ந்து–1
சாஷததிரபடி	–	சாத்திரப்படி–3
வயயெ	–	வையே–26
குளாயினில	–	குழாயினில்–29
மாதலமபழம	–	மாதுளம்பழம்–31
வாயவுததிரசசி	–	வாயுத்திரட்சி–37, 290
குனடியிடை	–	குன்றியெடை–41
ஒனறொடி	–	ஒண்டொடி–46
நீரளினடைபபு	–	நீரடைப்பு–60
சிலெஷடடுமம	–	சிலேட்டுமம்–60
தொனனுததாறும	–	தொண்ணூற்றாறும்–60
அரிவதாமெ	–	அறிவதாமே–64
சிரநத	–	சிறந்த–92
நமசசாரம்	–	நவச்சாரம்–94

தவரியெ செயத பெறகள	–	தவறியே செய்த் பேர்கள்—103
கிசபுடம	–	கசபுடம்—104
புனாறும	–	பின்னும்—105
உஷடடினரொகம	–	உட்டணரோகம்—127
கிஷாயம்	–	கசாயம்—133
குணாடி	–	குன்றி—141
சுறாயகிஷம	–	சுராங்கிசம்—147
வயததுபபிசம	–	வயிற்றுப்பிசம்—161
வளாஞ்சரம	–	பழஞ்சுரம்—162
குறாசாணி	–	குராசானி—163
செறறுமங்கள	–	சேற்றுமங்கள்—166
ஊமறறஞசாா	–	ஊமத்தஞ்சாறு—168
சொழுபபயிா	–	சோளப்பயிர்—188
துடைவாலை	–	தொடைவாழை—229
மிளிகுருடு	–	முழிகுருடு—231
மாஙசிஷவழததி	–	மாங்கிச வளர்த்தி—241
அணணலானருளிநாலெ	–	அண்ணலாரருளினாலே—241
பரநதிடும	–	பறந்திடும்—271
கொளியவரை	–	கோழியவரை—277
துவழவெ	–	துவளவே—297
வெணணீா	–	வெந்நீர்— 300. 343
வளகிலுபபு	–	வளையலுப்பு—313
கிறாணி	–	கிராணி—347
அகுஷதியா	–	அகத்தியர்—373
அழவாய	–	அளவாய்—397
மெளுகுடன	–	மெழுகுடன்—421
இலுமபிசசம	–	எலுமிச்சம்—483
மஞசகாமாலை	–	மஞ்சள் காமாலை—475
காசசியே	–	காய்ச்சியே—480
வாகததியலவு	–	வாகடத்தியல்பு—538
விறாகன	–	வராகன்—549
அரைபொடி	–	அரப்பொடி—594
சுளிகணை	–	சுழிகணை—600
நாதநாா	–	நாதனார்—637
பிளியஙகொடடை	–	புளியங்கொட்டை—644
வெஙகாரம	–	வெண்காரம்—654
ஆயிற படடை	–	ஆயிலப்பட்டை—666
சிகநதனில	–	சகந்தனில்—684
சூசசமாய	–	சூட்சமாய்—697
ஒரொணடு	–	ஒரொன்று—716

என இவ்வாறு பல சொற்களும் திருத்தம் பெற வேண்டியுள்ளன. சுவடியிலுள்ள ஒவ்வொரு வரியிலும் இவ்வாறு பிழைகள் பல மலிந்துள்ளமையால் மிகவும் கடின முயற்சியுடன் கவனமாகப் பதிப்பிக்கப் பெற வேண்டியுள்ளன.

மேலும், பாடல்கள் யாவும் அசை, சீர், அடி என்னும் வேறுபாடுகள் இல்லாமல் உரைநடை போன்று ஒரே தொடர்ச்சியாக எழுதப் பெற்றுள்ளமையால் இவற்றையும் பிரித்தறிந்து பதிப்பிக்கப் பெற வேண்டியுள்ளன.

இச்சுவடியில் எழுதப் பெற்றுள்ள 724 பாடல்களில் பெரும்பாலானவை விருத்தப்பாக்கள், வெண்பா, கலிவெண்பா போன்றவை சிலவும் உள்ளன. சில பாடல்களில் ஐந்தடிகளும் (பா. 542, 570), சில பாடல்களில் மூன்று அடிகளும் (பா.16. 128, 359, 363, 369, 544) உள்ளன. சில பாடல்க்ள் இடையிடையே விடுபட்டும் (பா.8, 47–56, 70–81, 108, 137, 138, 245, 309, 424, 425, 608, 634, 647, 667, 722) உள்ளன. இவை அனைத்தும் சுவடியில் உள்ளவாறே பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

இச்சுவடிக்கான மாற்றுச் சுவடிகள் கிடைக்காத நிலையில் இதுபோன்ற விடுபாடுகள் அல்லது மாறுபாடுகளைச் சரி செய்வது கடினமாகும். எனவே, இதற்கு வேறு பிரதிகள் கிடைக்குமாயின் இவை மேலும் தெளிவாகலாம். மேலும் பிழையாக உள்ள சில பகுதிகளும் திருத்தப் பெறும்.

காலம்

இச்சுவடியில் காலக்குறிப்பு ஏதும் எழுதப் பெறவில்லை. எழுத்துக்களின் தன்மை போன்றவற்றை வைத்து நோக்குமிடத்து, சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப் பெற்றிருக்கலாம் எனத் தெரிகின்றது.

நூலாசிரியர்

வைத்திய சிந்தாமணி என்னும் இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் அறியக் கூடவில்லை. இந்நூலினுள் அமைந்த பாடல்களை நோக்குமிடத்து, அவை வெவ்வேறு நூல்களிலிருந்தும் செய்திகளைத் திரட்டித் தொகுக்கப்பட்டதாகத் தெரிகின்றது. குறிப்பாக, அகத்தியர் நூல்களையெல்லாம் திரட்டி அளித்ததாகத் தெரிகின்றது. முதலில் சிவபெருமான் உமைக்குக் கூறிய மருத்துவ முறைகளை வழிவழியே வழங்கப் பெற்ற அகத்தியர் இவற்றை அளித்ததாகவே பல பாடல்கள் அமைந்துள்ளன. காட்டாக,

"அத்தனார் உரைத்த தென்று அகத்தியர் அருளிச் செய்தார்" – 472
"ஆதியரு ளாளெமக் குரைத்தார் அகத்திய மாமுனி யானவரே"–176
"ஆலம் உண்டார் தாமுரைத்தார் என்றார் அகத்திய மாமுனியே" –390
"*சிவனார் அருளிச் செய்ததென்று முந்த முனிவர் தானுரைத்தார்*" -131
"*சிவனார் மகிழ்ந்து கொண்டு*
செப்பவே உபதேச மீதென்று

திருவுளம் மகிழ்ந்து கொண்டு
முக்காலம் உணர்கின்றீ கும்பனுக் குரைசெய்ய
முகமலர்ந் தடிவ ணங்கி
முசியாமல் மானிடர்க் குரைசெய்த நூல்தனை
முத்துவார் சத்தி யமிதே." - 547

"நஞ்சப் பிறையணி கண்டனார் நமக்கே யுரைத்தார் நலமாக" – 156

"நாதனார் அருளிச் செய்தார்" –172

"முன்னமே புரமெ ரித்த முக்கண்ணர் அருளிச் செய்தார்" –476

"வள்ளல்தம் அருளி னாலே மகாமுனி அருளிச் செய்தார்" –30

"வள்ளல்தம் அருளி னாலே மானிடர்க் குரைத்த நூலைத்
தெள்ளுதாய் குறுமுனிவனும் செப்பினார் இந்த வண்ணம்" – 256

என இவ்வாறு வருமிடங்கள் குறிப்பிடத்தக்கன. மேலும்,

"வியாசர் உரைத்த படியாமே" – 553

"வியாசர் கும்பனுக் குரைத்த நூலை" – 611

என்றும்,

"வியாசர் கும்பன் தனக்குரை செய்தா ராமே" – 641

என அமையும் பாடல்களும் குறிக்கத்தக்கன.

தமிழ்நூல்

வடமொழியிலும் பிறமொழியிலுமுள்ள மருத்துவச் செய்திகளெல்லாம் ஒப்பிடப் பெற்றுத் தமிழில் அகத்தியரால் தொகுக்கப்பட்டது இந்நூல் என்பதைப் பல பாடல்களில் சுட்டக் காணலாம். காட்டாக,

"அத்தனார் அருளிச் செய்தார் அவனியோர்க் காகு மென்று
மெத்தவே விரித்துக் கும்பன் விளம்பின தமிழி தாமே" – 659

"பற்றறுமென் றிமையவரும் ரிசிகள் தானும்
பகர்ந்தனர்முன் அருந்தமிழின் படியே கண்டீர்" – 696

"சாற்றினார் தரணி யோர்க்குத் தமிழ்முனி உரைத்த நூலே" –482

"பண்டே முனிவர் இதன்படியே பகர்ந்தே எழுதி வைத்தனரே" – 423

"பொதிகைமா மலையில் வாழும் மாமுனிவ ருரைத்ததென
வசனிப் பீரே"–426

"ஆதிமா முனிவன் முன்னூல் அறிவினால் உரைத்த தாமே"– 204

"சத்திய மாகச் சொன்னோம் தமிழ்முனி உரைத்த தாமே"–65

"முந்தவே குருமுனி வன்தான் மொழிதவ றாமல் சொன்னான்"– 69

என இவ்வாறு பல பாடல்கள் அமைகின்றன.

இத்தகைய குறிப்புகளைக் கொண்டு ஆராயுமிடத்து, இந்நூல் அகத்தியரின் மருத்துவ நூல்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டதாகத் தெரிகின்றது.

அகத்தியர் என்னும் பெயரில் அமைந்த புலவர்கள் பலர் பல காலங்களிலும் பலவாறாக வாழ்ந்து நூல்களை வழங்கியதாக அறிகிறோம். இவர்களைப் பற்றிய பல்வேறு கதைகளும், செவி வழிச் செய்திகளும் பலவாறாகக் கூறப் பெறுகின்றன. தமிழில் மருத்துவ நூல்களை உருவாக்கித் தந்த யாரோ ஒரு அகத்தியர் என்பாரின் வழிமுறையைப் பலரும் பின்பற்றி வந்துள்ளனர் என்பதை இன்று அகத்தியர் பெயரில் கிடைக்கும் ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகளே வலியுறுத்தக் காணலாம். இவ்வகையில், இம்மரபில் வந்த யாரோ ஒருவரால் இந்நூல் பல்வகை மருத்துவச் செய்திகளைத் திரட்டி எழுதப் பெற்றதாகக் கொள்ளலாம்.

பாடப்பட்டுள்ள முறை

இந்நூலிலுள்ள பல பாடல்கள் எளிய நடையில் பாடப் பெற்றுள்ளன. பெரும்பாலான பாடல்கள் முன்னால் உள்ள பெண்ணை விளித்துப் பாடுவதாகவே உள்ளன. காட்டாக,

அரிவையே–334,* அன்னையே–606, இன்னிசைக் கிளிமொழி மானே–544, ஏந்திழையீர்–246, ஒண்டொடி மாதே–46, ஒண்டொடியீர்–94, காரொத்த குழலே–592, கானார் குழலி–433, கோதையீர்–560, செவ்வாய் மடமயிலே–246, திருமயிலே–93, 308, நல்லாய்–549, பாவையரே–548, பூங்குழல்மாதே–627, மங்கைக்கரசே–616, மங்கையே–510, மடமயிலே–21, மாதர்க்கரசே–399, மாதே–110, மீனைக் கொல்லும் விழியணங்கே மானே–136, மின்னேர் இடையீர்–525, மேடுலவு பூங்குழலாய்–11, வஞ்சிக் கொடியே–391, 454, வட்டமுலை மாதே–111, வண்டணி குழலினாளே–612, வண்டுசேர் குழலாள்–106, வருமயிலே–93, வாரணி மாதே–532. என இவ்வாறு அமையும் விளிகள் குறிப்பிடத்தக்கன.

சிவபெருமான் தன் தேவியாகிய உமைக்கு மருத்துவ நூலை அருளியதாகவும், அவரிடமிருந்து வழிவழியே அகத்தியர் இக்கலையை அறிந்து உலகிற்கு வழங்கினார் என்று கூறப் பெறும் ஒரு மரபினைச் சுட்டும் வண்ணம் "அத்தனார் உமைக்கு ரைத்தார் அகத்தியர் நமக்கு ரைத்தார்"– 432 "மகாதேவர் உமைக்குரை செய்தாரே"–364 என வரும் பாடலடிகள் அமைகின்றன. மேற்கண்ட மகடு முன்னிலை அமைந்த பாடல்களும் இதனையே வலியுறுத்துவன எனலாம்.

உவமைகள்

குறிப்பிட்ட நோய்களை விளக்குமிடத்தும், மருந்து செய்முறையில் சில பக்குவங்களைக் கூறுமிடத்தும், நேர்யகலும் விதங்களைக் கூறுமிடத்தும் உவமையுடன் விளக்கும் போக்கை இந்நூலின் பல பாடல்களிலும் காணலாம். காட்டாக,

நோய்கள்

பெரும்பானைபோல் வீங்குவது வாடும் –568 (அண்டவாதம்)
பெருகிய பூதம் போல ஆட்டிய அண்டவாதம்" –503

மருந்து செய்முறை

எழுதிய சித்திரம் போல இரத்தமா யிருக்கு மென்றே – 535 (அரிதாரம் வைப்பு)
மாதுளம்பூச் சாயல் போன்றிருக்கும் –59 (அப்பிரகச் சிந்தூரம்)
குன்றி போல – 126, பாசிப் பயறு போலே – 188,
தூதுளங்காய்ப் போலுருட்டி –189

நோய்கள் அகலும் முறை

கதிரோன் கண்ட நன்பனி போல நீங்கும் – 714
காரிருள் கதிரோன் கண்ட கதையது போல வாகும் – 700
வாரியில் வெள்ளம் வந்து வற்றும்போ லாகும் – 671
வெள்ளம் போல் ஓடு மென்று – 636
கதிரோன் கண்ட இன்னிருள் போலே நீங்கும் – 541
உடைத்திடும் குளமடைந்த வாறுபோற் தீரு மென்றே – 511
சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கு மென்றார் – 41
கோலித் திறந்த மடைபோலே குமிழ்ப் பரிந்து ஓடுமென்றே – 57
பருதி கண்ட பனியது போல நீங்கும் – 262
சூரியனைக் கண்ட இருள் போல – 268
ஊமை கண்ட கனவதுபோல் ஒதுங்கு மென்று – 352
தெள்ளிதாய் ஒருத்தன் செய்த்தீ *வினைபோலத் தீரும்* – 420
பொடி நீறாக ஓடிப் போகும் – 173

என இவ்வாறு வருமிடங்கள் குறிக்கத்தக்கன.

வடுகும் தமிழும்

'வயிற்றுப் கடுப்புக்கு' மருந்து கூறும் 545 ஆம் பாடலில் சில மறைபொருளுடன் கூடிய மருந்துப் பெயர்களைச் சுட்டுவதும், அக்கசாயத்தைக் குடித்தால், 'வடுகும் தமிழும் குணமாமே' எனச் சுட்டுவதும் குறிப்பிடத்தக்கதாம். தெலுங்கில் 'கடுபு' என்றால் வயிறு; தமிழில் 'கடுப்பு' என்பதுடன் இதையும் சேர்த்து, 'வயிற்றுக் கடுப்பு குணமாகும்' என்பதை இவ்வாறு வேடிக்கையாகக் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மருந்துகளில் தன்மை

முறைப்படி செய்து முடிக்கப்பெற்ற மருந்துகளை நோயுற்றோருக்குக் கொடுக்க நோய் எவ்வாறு நீங்கும் என்பதைக் கூறுமிடத்து, அம்மருந்துகளில் வன்மை அறியுமாறு வலியுறுத்திக் கூறும் தன்மையைப் பல பாடல்களிலும் காணலாம். காட்டாக,

திசை கெட்டுத் தீரும் –567
இளைத்தோம் என்றே ஓடிவிடும் –550
எள்ளள வில்லா மலேதான் ஏகிடும் – 520
அஞ்சியே தீரும் –485, திட்டமாய்த் தீரும் –435
முடுக்கமாய்த் தீரும் – 488, கூட்டுடன் வீழும் –440
குலை குலைந்தோடும் – 453, 495
நடுங்கியே ஒதுங்கும் – 499, தேட்டமாய் ஓடும் – 478
பறந்திடும் உண்மை தானே – 496
ஏருடன் சொல்லா தோடும் – 480
பேரும் சொல்லாதே யோடும் – 400
அலைந்தோடும் – 210, நிலத்தில் காணா தோடிவிடும் – 212

என வருமிடங்கள் குறிப்பிடத்தக்கன.

துணை மருந்துகள்

நோய்க்கேற்ற மருந்துகளைக் கொடுக்கும் போது, தேன், பழச்சாறு போன்ற துணை மருந்துகளைக் கூட்டிக் கொடுக்க நோய்கள் விரைந்து நீங்கும். இது சித்த மருத்துவத்தின் தனிச்சிறப்பாகும்.

ஒரே மருந்தைப் பல்வேறு நோய்களுக்கும் அளிக்க வெவ்வேறு துணை மருந்துகளைப் பயன்படுத்துவதை இந்நூலின் பலவிடங்களிலும் காணலாம்.

முறைப்படி செய்ய வலியுறுத்தல்

நோய் நாடி, நோய் முதல் நாடி, அதைப் போக்கத் தேவையான மருந்தினை அறிந்து. அவற்றின் அளவறிந்து, உடல் நிலையறிந்து முறைப்படி கொடுக்க வேண்டுமென்பதில் மருத்துவர் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்பதைப் பல பாடல்களிலும் கூறக் காணலாம். மேலும், இவ்வாறு பலரும் செய்வதில்லை என்பதையும் சில பாடல்களில் சுட்டக் காணலாம். காட்டாக,

இந்த வண்ணம் இவ்வுலகில் செய்வார்கள் இல்லை கண்டாய் – 11
குறித்திடும் சுத்தி தன்னைத் தேடியே செய்வார் நல்லோர்
செய்வார்களில்லை கண்டாய்–24
ஆமென்று அறிந்து செய்யும் பண்டிதர் இல்லையென்று
பாரினில் அறிவ தாமே – 64
கும்பமுனி யுரைத்தார் உலகத்தோர்க்குச் சொல்லுவோம்
செய்வார்கள் இல்லை தானே – 323

என இவ்வாறு கூறப் பெறுகின்றன. இவ்வாறில்லாமல், இந்நூலாசிரியர் கூறியவாறு முறைப்படி செய்தால் நோய்கள் உடனடியாகத் தீருமென்பதையும் பலவிடங்களில் சுட்டக் காணலாம். காட்டாக,

வழுதில்லாக் குறுமுனி யுந்தான் வசனித்த படியே செய்தால்
முழுதுமே சன்னி வாதம் மூடியும் மயக்கம் போமே. – 508
சத்தியப் படியே சொன்னோம் சாத்திரப் படிதப் பாதே – 232
முன்னோர் சொன்ன மொழிகண்டு முயங்கக் கடவுள் அடிபோற்றி
மின்னே தமிழ் இப்படிச் செய்தாக்கால் வேறு வினையும் வாராதே – 183
பக்குவ மாகச் செய்வோர் பண்டித ராவார் தானே –580
பார்த்தது பொருளா யுள்ள பார்தனில் வைத்தி யர்க்கு
வேற்றுமை யில்லா வண்ணம் விவரமாய் முனிவன் சொன்ன
சாத்திரப் படிதப் பாதார் தமிழுக்கே உரைகல் லாவார் –628
பாத்திரா பாத்தி ரங்கள் அறிந்துபண் டிதர்கள் செய்வார்
சாத்திரப் படியும் தப்பித் தவறியே செய்த பேர்கள்
கோத்திரம் சூலைதான் சுற்றிக் கொள்வரே இவர்கள் தானே – 103

என இவ்வாறு இதை மிகவும் கவனமாகச் சுட்டக் காணலாம்.

இயற்கையில் நச்சுத் தன்மையோடு கூடிய மருந்துப் பொருள்களை முறைப்படி சுத்தம் செய்தெடுக்கும்பொழுது அவை நச்சுத் தன்மை நீங்கி மருந்தாகப் பயன்படுகின்றன. இவற்றை முறைப்படி செய்யாது மருந்து செய்தளிப்பதால் நேர்மாறான – தீய விளைவுகளே ஏற்படும். இதை நன்கு உணர்ந்த சித்த மருத்துவர்கள் தம் நூலில் அங்கங்கே சுத்தி முறைகளையும், மருந்து அளவைகளையும் மிகவும் கவனமாகக் குறிப்பர். இந்நிலையை இந்நூலிலும் மிக அழுத்தமாகக் கூறக் காணலாம்.

உரை விளக்கங்கள்

'வைத்திய சிந்தாமணி' என்னும் இந்நூலில் பல மருந்து செய்முறைகள் செய்யுள் வடிவிலேயே கூறப் பெறுகின்றன. எழுநூற்றிற்கும் மேற்பட்ட இந்தப் பாடல்கள் விருத்தம், கலிவெண்பா போன்ற வெவ்வேறு யாப்பு வடிவங்களைப் பெற்றுள்ளன. ஆயினும், பிற தமிழ் மருத்துவச் சுவடிகளில் காண்பது போன்று இதில் பாடல்கள் தொடர்ச்சியாக அந்தாதி அமைப்பில் எழுதப் பெறவில்லை. ஒவ்வொரு பாடலும் தனித்தனியே அமைந்துள்ளன. பல மருந்து செய்முறைகளும் திரட்டிச் செய்யுள் வடிவில் எழுதப் பெற்ற ஒரு 'திரட்டு நூலாகவே' இது அமைந்துள்ளதைக் காணலாம்.

நோய்கள் பிறக்கும் வகை அல்லது நோய்களுக்கான குறிகுணங்கள் போன்ற செய்திகள் ஏதும் இதில் தனியே குறிப்பிடப் பெறவில்லை. குறிப்பிட்ட சில பொதுச் செய்திகளை முதலில் கூறிய பின்னர், மருந்துவப் பொருள்களின் சுத்திமுறைகளும், தொடர்ச்சியாகப் பல மருந்து செய்முறைகளும் இதில் கூறப் பெற்றுள்ளன.

சிந்தூரம், பற்பம், மாத்திரை, தைலம், புகை என இவ்வாறு மருந்து செய்முறைகள் பல கூறப் பெறுகின்றன. அயச்சிந்தூரம், தாளக பற்பம், பூபதி மாத்திரை, மகாவிடமுட்டித் தைலம் என இவ்வாறு மருந்துகளின் பெயர்களைத் தலைப்பாகக் கொண்டும்; சுரத்திற்கு, கிரந்தி புண்ணிற்கு, மதுமேகத்திற்கு, வயிற்றுக் கடுப்புக்கு என இவ்வாறு நோய்களின் பெயர்களைத் தலைப்பாகக் கொண்டும் பல பாடல்கள் அமைந்துள்ளன.

இப்பாடல்களுக்கான உரை விளக்கங்கள் சுவடியில் எழுதப் பெறவில்லை. எனவே இவற்றிற்கான உரை விளக்கங்கள் யாவும் சுவடியிலுள்ள தலைப்பு வரிசையிலேயே இப்பதிப்பில் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன. ஒவ்வொன்றிற்கும் வரிசை எண்ணிடப் பெற்றுத் தனித்தனியே விளக்கப் பெற்றுள்ளன. பாடல்கள் சிதைந்தும், விளங்காமலும் உள்ள சில இடங்களுக்கான உரை விளக்கங்கள் எழுதப்படவில்லை. இதற்கான மாற்று ஏடுகள் கிடைப்பின் அவை மேலும் விளக்கமாகும்.

மேற்காணும் வகையில் அமைந்துள்ள உரை விளக்கங்கள் அனைத்திலும் அச்செய்திகள் இடம்பெறும் பாடல்களின் எண்கள் அங்கங்கேயே குறிக்கப் பெற்றுள்ளன. அவற்றைக் கொண்டு நூற்செய்திகளை நன்கறியலாம்.

பொதுநிலையில், பல சித்த மருந்து செய்முறைகளை முழுமையாக விளக்குவதாகவே இந்நூல் அமைந்துள்ளது. சில சித்த மருத்துவ நூல்களில் இடையிடையே கூறப் பெறும் யோகம், ஞானம், தத்துவம், சோதிடம் போன்றவை எதுவும் இந்நூலில் கூறப் பெறவில்லை.

எளிய தமிழ்ச் சொற்களாலான பாடல்கள் நிறைந்த இந்நூலை ஏட்டில் எழுதியோர் பிழையாக எழுதியுள்ளதன் காரணமாகச் சிலவிடங்கள் சிதைந்துள்ளன. எனினும், கிடைத்துள்ள பாடல்கள் அனைத்தையும் ஆராய்ந்தறியுமிடத்துப் பல தெளிவாகவே உள்ளன. இதே போன்ற சுவடிகள் வேறு கிடைக்குமாயின் நூலை மேலும் செப்பம் செய்ய ஏதுவாகும்.

இந்நூலில் கூறப் பெற்றுள்ள பல மருந்துகளின் தலைப்புகள் வேறு பல நூல்களிலும் குறிக்கப் பெறுகின்றனவாயினும், இதிலுள்ள பாடல்களும், மருந்து செய்முறைகளும் தனித்த நிலையினைக் கொண்டு விளங்கக் காணலாம். எனவே, சித்த மருந்து செய்முறையில் இந்நூலிலுள்ள பல செய்முறைகள் பயனுடையனவாக அமையும் என உறுதியாகக் கூறலாம்.

இந்நூலில் கூறப்பெறும் மருந்துப் பொருள்களின் பட்டியல் மற்றும் நோய்களின் பட்டியல் போன்றவை தனித்தனியே தொகுக்கப் பெற்றுப் பின்னிணைப்பாக அளிக்கப்பட்டுள்ளன. இவை, இந்நூலைப் பயன்படுத்துவோருக்குப் பெரிதும் துணையாகும்.

சித்த மருத்துவம் என்று சிறப்பாக அழைக்கப் பெறும் தமிழ் மருத்துவம் ஆழ்கடல் போன்று அகன்று பரந்து விரிந்ததும், ஆழமான அறிவியல் நுணுக்கங்கள் பல கொண்டதுமாகும். இம்மருத்துவம் பற்றிய எண்ணற்ற பல நூல்கள் இன்னும் ஏட்டு வடிவிலேயே உள்ளன. இன்றைய அறிவியல் நிலைகளுக்கேற்ப இவற்றைப் பயன்படுத்த வேண்டுமாயின் முதலில் இவை நன்முறையில் பதிப்பிக்கப் பெற்று அச்சுவடிவம் பெற வேண்டும். இதன் விளைவாகப் பல்துறை வல்லுநர்களும் இவற்றைத் தெளிந்து ஆராய இயலும். பல்லாண்டுகளாக, இந்நாட்டு மக்களுக்கேற்ப அளிக்கப் பெற்ற இம்மருந்துகளின் எளிமை மற்றும் செயல்பாட்டுத் திறனை இன்றைய மேல்நாட்டு அறிவியலாரும் ஏற்று வியந்துவரும் நிலையில் இத்தகைய நூல்களை வெளிக்கொணர்வது நம் அனைவரின் கடமையாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே இந்நூல் சுவடியிலிருந்து பதிப்பித்து அளிக்கப் பெற்றுள்ளது.

இந்நூலிலுள்ள பல செய்முறைகள் மிக எளிதில் யாவராலும் செய்தளிக்கக் கூடியதே ஆயினும், இத்துறையில் நல்ல பயிற்சியுடையோரின் அனுபவமும் துணையும் உடனிருப்பின் மேலும் சிறப்பாகும். இம்மருந்து செய்முறைகளை அனுபவ முறைகளுக்கேற்ப செய்வதும் பயன்படுத்துவதும் மருத்துவர்களின் கடனாகும். குறிப்பாக, சித்த மருத்துவ வல்லுநர்கள் அனைவருக்கும் இந்நூல் ஒரு வழிகாட்டியாக அமையும் என்பது உறுதி.

வே. இரா. மாதவன்

வைத்திய சிந்தாமணி

பொருள் அட்டவணை

வைத்திய சிந்தாமணி

(காப்பு)

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

நூ ல்

திருந்திய கயிலை மேவும் சிவனுமைக் குரைக்க யிந்நூல்
குருந்தமிழ் முனிம கிழ்ந்து குனிந்தடி வணங்கி யேத்தி
அருந்தமி ழாற்ப டுத்தி அவனியில் அருளிச் செய்த
மருந்தினைத் திரட்டிச் சிந்தா மணியென் விளம்ப லுற்றார்.

உற்றதோர் மருந்தின் சாரம் உறவினால் அறிந்த பேர்கள்
சித்தமாய் நாடி பார்த்துத் தெளிவினால் செய்வோர் நல்லோர்
குத்தமும் வாரா தொன்றும் குறையவர்க் கில்லை யென்று
சத்திய மாகச் சொன்னோம் தமிழ்முனி யுரைத்த நூலே.

நேத்திர ரோகம் குன்மம் நேரிடும் கிராணி மூலம்
காத்திர மாம்வி டங்கள் கணரண மோடுயர் ஈளை
மாத்திர மில்லாச் சத்தி ரோகமும் அறிய வென்றால்
சாத்திரப் படியில் லாதார் தரணியில் நரகில் வீழ்வார்.

அட்டமா ரோகங் தன்னை அவனியில் அறிய வேண்டி
நட்டநா லாயி ரத்து நானூற்று நாற்பத் தெட்டும்
விட்டதோர் வியாதி தன்னை விபரமும் வகையுங் கண்டு
சட்டமாய்ப் பதிந்து ரைப்பான் தலைவனை அறிவா னென்றே.

சண்டைக் காரன் செகுடன் மதியில்லாக் குட்டன் விருந்துண்பான்
பண்டித னாரொடு பகையன் நிட்டூரம் பாசு பதமறியான்

கண்டது ரும்புக்கிள்ளி கைகா லரும்பூனி கனத்தபி மானமிலான்
வண்டா றிவனை விட்டு வைத்தியம் மிகவும் பண்ணீர். 5

அண்ணிய திரிசங் கைக்குக் கபடமன சானான் சுஞ்சாத்
திண்ணிய லொட்டி அபினி மருந்து கொள்ளி யம்பில்லி
கொண்ணிய நித்திரை கொண்டு கொடுப்போங் கொடோ மென்றும்பல
பண்ணிய பலசத் திரிஆண் மைகள் விட்டிடும் பண்டிதரே. 6

உண்டு கண்டவர் 'உற்பன மானவர்
பெண்டு கண்டவர் பிக்குள்ள வாணிபம்
கொண்டு கண்டவர் கூச்ச மில்லாதவர்
வண்ட நால்வர் வளிவச மாவரோ. 7

(வேறு)

மாதர சம்ப நூறி லம்பது மருவிய இருபத் தஞ்சதிற் பாதி
கோதரு ஆறு குறைந்தது மூன்று கொள்கையி லொருபலம் குறைவெண்ணாது
தீதறு சொச்ச பூசையி னாலும் தீபந் தூபங் கோரமந் திரத்தாலும் 8
மாதவன் பூசை செய்து பண்ணிட நன்றே.

(1) (மருந்துப் பொருள் சுத்தி செய்முறைகள்)

செங்கற்பால் ஒட்டடைச் சித்திர மூலம்
செய்மஞ்சள் திரிபலை தேவ தாரி
அங்கத்தில் பூசும் சந்தனச் சாறும்
அருங்கோவை வெற்றிலை நிலப்பனை ஊமத்து

முங்கத்துச் சாரணை புரசம் பட்டை
முருங்கைவேர் பாகலிலை மஞ்ச ணத்தி
தங்கப்பூங் கொன்றைவேர்ப் பட்டைச் சாறு
தனித்தனி யேமத் திக்கச் சுத்தி. 9

கந்தகந்தான் கரண்டிதனில் நெய்மூற விட்டுக்
கிளராமல் உருக்கியே பாலில் சாய்த்து
இந்தவிதம் மூன்றுதரம் காய்ச்சச் சுத்தி
ஈதல்லாமல் பிட்டவியில் பாலில் சுத்தி

பா. 8 இல் சீர் ஒழுங்கில்லை.

அந்தமுள்ள குழிவெட்டிச் சட்டி வைத்து
ஆவின்பால் விட்டுமேல் வேடு கட்டி
பந்தமுள்ள கந்தகத்தைப் பரப்பி மூடிப்
பருவாளி யிட்டெரிக்கப் பதமாம் சுத்தி.

காடிதனில் நேர்வாளம் பத்துநாள் தானும்
கதிக்கவே ஊறவைத்துச் சாணிப் பாலில்
வேடுபட வேகவைத்து நஞ்சு போக்கி
வியன்பாலும் அரைக்கீரை குமரிச் சாறு
வாடுகிற வெவ்வேறு வெந்து லர்த்தி
வரிசைபெற சுத்திதனைச் செய்வாய் நீயும்
மேடுலவு பூங்குழலாய் இந்த வண்ணம்
இவ்வுலகில் செய்வார்கள் இல்லை கண்டாய். 11

கவுரி வெள்ளைப் பாடாணம் கடவே நறுக்கிச் சீலைகட்டிப்
பவுரி யாக நாலஞ்சு பசுவின் பாலின் ஊறக்
கவுரி யான சிறுகீரை கூடிய சாறு அஞ்சுநாள்
தவறில் லாமல் நாற்தோறும் தனிப்பால் சாறு விடச்சுத்தி. 12

தொட்டிப் பாடாணம் கோசலம் தோளேந் திரத்தில் தானும்
இட்ட மாசு மூன்றுதரம் எரித்துக் கரிப்பான் சாறுதனில்
அட்ட பாகம் ஒருசாமம் ஆன குமரிச் சாறுதனில்
மட்ட மாக ஒருசாமம் மருந்து வேகச் சுத்தியதாம். 13

அரிதாரம் சீலையில் கட்டி ஆனதைத் தோளேந் திரமாகக்
குரிதான கோச லத்தில் குமுறவோர் நாளும் வெந்து
பரிதான பூச ணிக்காய்ப் பாணையில் ஓர்நாள் வேகக்
கரிதான எலுமிச் சம்பழம் காடியில் ஒருசா மம்சுத்தி. 14

நறுக்கிய மனோசி லையை நற்சீலை முடிந்து போட்டு
உருக்கிய ஆமூத் திரத்தில் ஒரெழு சாமம் வெந்து
வெருக்கொள இரண்டு சாமம் வேகவே கோச லத்தில்
அருக்கிய சுத்தி யாகும் ஆனதோர் மனோசி லையே. 15

முலைப்பாலில் சாதிலிங்கம் ஒருநாள் ஊற
உகந்த எலுமிச்சம் பழச்சா றூற
நிலைப்பான சுத்தியாம் அடங்க ணந்தான்
நெருப்பிலே பொரிக்கவே சுத்தி யாகும்

கலைப்பான பெருங்காயம் வெற்றிலைச் சாற்றில்
கடுகுவொரு சாமம்நனைத்து வைக்கச் சுத்தி. 16

சாலவே வெருங்கோளஞ் சாற்றில் சத்தி சாரம்
சலிகாடி கோசலத்தில் மூணு நாளும்
கோலமாய் நனைத்துவற்றச் சுத்தி யாகும்
கொடியவனச் சாரந்தான் கழுநீர் காடி
வாலமாய் நனைந்துலர்த்தச் சுத்தி யாகும்
வனத்திலெட்டிக் கொட்டைகுப்பைக் கீரைச் சாற்றில்
ஏலமாம் ஒருசாமம் வேக சுத்தி
இயல்பாக இப்படி நிகண்டு செய்யே. 17

(வேறு)

காந்தி யுள்ள இந்துப்புக் காடிகோ சலம்நனைத்து வற்ற
ஆந்த மில்லா வெடியுப்பு ஆவின் மூத்திரம் எலுமிச்சை
போந்த வனையிரும் புத்தான் புளிமோர் கோசலந் தான்நனைக்கச்
சாந்த புளியிலை அட்டுப்புச் சட்டியில் வறுப்பாய் நல்லுப்பே. 18

ஏரண்ட விதைதான் நல்ல இளநீரில் வேகச் சுத்தி
தீரண்ட குங்கி லியமும் திரிபலைச் சாற்றில் வேக
ஊரண்டும் ஊமத் தம்விதை உயர்நிம் பழச்சாற்றில் ஊறக்
காரண்டு கசத்திப் பிலிகடுகு நிம்பழச் சாற்றில் சுத்தி. 19

சீரகம் இருவ கையும் சிறுக வறுக்கச் சுத்தியாம்
ஓரக ஓமம் தன்னைச் சுண்ணாம்பு நீரில் சாமம்
ஆரக மூறச் சுத்தி அழகிய மிளகு மோரில்
ஊரக மூணு நாளும் உகத்துடன் ஊறச் சுத்தி. 20

சுக்குத் சீவித் தோல்போக்கிச் சுண்ணாம்பு பூசி வெயிலுலர்த்தி
அக்கச் சாமம் ஒன்றுசென்றால் அழகாய்க் கழுவி உலர்த்த சுத்தி
வெக்கக் கடுகு திப்பிலிகொடு வேலிக் கசாயம் தனில்சாமம்
ஒக்க ஊறி உலர்த்தசுத்தி உகந்து காண்பாய் மடமயிலே. 21

காந்தம் காடி மோருதனில் கடிதாம் நிம்பழச் சாற்றில்
சேர்ந்து இரண்டு நாழிகை செவ்வே ஊறச் சுத்தியாம்

பா. 16 இல் மூன்று அடிகளே உள்ளன.

நாந்த கந்தகம் நாலிலொன்று நல்ல எருக்கம் பால்கோரை
போந்த புரசம் பட்டைரசம் போடு குக்குடப் புடம்மூன்றே. 22

செம்பைப் பரக்கத் தகடுதட்டிச் சிவக்கக் காய்ச்சிக் காடியிலும்
உம்பர்க் குரிய கோசலத்தில் உகந்து எண்ணெய் காணநீர்
இம்ப மாக மூணுதரம் இப்படித் தோய்த்துக் கந்தகத்தைத்
தம்ப நிம்பச் சாற்றரைத்துத் தகட்டில் பத்துப் புடம்போடே. 23

காடிய கோமூத் திரமும் கருதுமோர் சாணி தானும்
நாடிய எருக்கிலைச் சாறு நல்லெண்ணெய் வெள்ளாட்டுப் பாலும்
கூடிய வகைக்கஞ் சாகக் குறித்திடும் சுத்தி தன்னைத்
தேடியே செய்வார் நல்லோர் செய்வார்க ளில்லை கண்டாய். 24

(2) (அயச்சிந்தூரம்)

அரப்பொடி எண்ணெய் வெந்து அழுக்காகக் கழுவிப் போட்டு
உரைதிரை முப்ப துக்கோர் சரிநிறை சாதி லிங்கம்
பரிவுடன் கோச லத்தில் பகுத்தரை புடங்கள் மூன்று
பரிவுடன் மறுத்து நாவற் பட்டைநீர் புடங்கள் பத்தே. 25

கருத்தஅப் பிரகம் தன்னைக் கடியபத் துக்குரட் டதினால்
வெருக்கப் பிடித்து மிகக்காய்ச்சி வெளாளைப் பசுவின் பால்தோய்த்து
இருக்கும் கொடியே இரண்டுநாள் இயல்பாய் ஊற வைத்துபின்பு
மருக்கும் நிம்பழச் சாற்றில் மதிநாள் இரண்டு ஊறவையே. 26

வைத்திட வேதா ளியந்தான் வகைபத்து நாளும் ஊறில்
எத்திடும் இனிப்பங் காடி இயல்பில் தெளித்தி டித்து
மெத்திடும் கோடி யாடை மேற்றூளி நெல்லுப் போட்டு
மொய்த்திடக் காலால் தேய்க்கில் மோம பொடிநீ ருணரும். 27

உதிர்ந்ததோர் பொடியெ டுத்து ஒள்ளிய எருக்கம் பாலில்
அதிர்ந்திட அரைத்து வைத்து ஆனதோர் சட்டி மூடிப்
பதிந்திடச் சீலைமண் செய்து பத்துக்கச புடமும் போட்டுக்
கதிந்தஆல் விழுதின் கசாயம் கடும்புடம் முப்ப தாமே. 28

ஆகுமாம் சிந்தூ ரத்தை அழகிய இருப்புச் சட்டி
மோகமாம் பாலை வார்த்து மொழிந்ததொரு நாளும் ஊறப்

பாகமாம் பின்னெ டுத்துப் பரிவுடன் நிழலு லர்த்திக்
கூசுமாம் மூங்கி லான குழாயினில் அடைத்துக் கொள்ளே. 29

கொள்ளவே பணவெ டைதான் கூட்டியே அனுபா னத்தில்
உள்ளினில் கொள்ள உட்டணம் உடன்பிர மேக வெட்டை
தள்ளிய சலப்பிர மேகம் சயகாச நீரிழி வும்போம்
வள்ளல்தம் அருளி னாலே மகாமுனி அருளிச் செய்தார். 30

(3) சொர்ண பற்பம்

தங்கத் தகட்டில் புற்றுமண்ணைத் தடவிக் காய்ச்சி மூணுதரம்
எங்கும் உள்ள காடியிலும் இயல்பாம் மாதுளம் பழச்சாற்றில்
பொங்கும் நிம்பழச் சாற்றில் பொதித்தோய்த் துக்கா விக்கல்
இங்கும் சொன்ன படிதடவி இயல்பாய் மூணு தரந்தோயே. 31

தோயப்பா காவி புற்றுமண்ணைத் தொன்மை நிம்பழச் சாற்றில்
வாயப்பா அரைத்து மேற்பூசி வகையாய் மூணு தரந்தோய்க்க
நீயப்பா உப்புத் தான்பூசி நீளக் காய்ச்சித் தோய்த்தபின்பு
காயப்பா மாதுளம் பழச்சாற்றில் காவிக் கல்லரைத் தூறவையே. 32

ஊறிடும் அஞ்சு நாளும் உகந்துடன் கழுவச் சுத்தி
சாறிடும் சூதந் தானும் சரிநிறை கூட்டிக் கொண்டு
மாறிடும் மாதுளம் பழச்சாற்றில் மத்தனை செய்து வைத்து
காறிடும் கழுவி நன்றாய்க் கந்தகம் சரியாய்க் கூட்டே. 33

கூட்டியே மூசை தன்னில் கந்தகம் கீழ்மேல் வைத்து
வாட்டிய மருந்து தானும் வாவியில் புடம்தான் வைத்து
நீட்டமாய் வெந்து ஆறிப் போனபின் எடுத்துக் கொண்டு
நாட்டமாய்ச் சரீர சுத்தி நலம்பெறச் செய்து கொள்ளே. 34

கொண்டிடும் அனுபா னத்தில் கூச்சமில் லாம லேதான்
மண்டலம் கொள்ளத் தீரும் மருவிய வாத பித்தம்
அண்டிய சிலேற்பன காசம் அறுவது முப்பத் தாறும்
இரண்டுபேர் மேகந் தானும் எனமுனி உரைத்த நூலே. 35

(4) தாமிர பற்பம்

கந்தகம் இரதம் கல்லுப்பு கடிய செம்பு தகடாக்கி
நந்த தகடு எண்கழஞ்சு நல்ல மருந்து முக்கழஞ்சு
திந்த பிச்சம் பழச்சாறு சேரக் கழஞ்சோர் சிப்பிவைத்துப்
பந்தச் சூரியன் முகம்சிவத்துப் பாகாய் உருகும் பதமறியே. 36

எண்ணிய மருந்து பணவெடைதான் எடுத்துச் சீனி தனில்கொள்ள
மண்ணிய குன்மம் குடல்வாதம் மருவிய சூலை குடல்புரட்டு
எண்ணிய வாய்வுத் திரட்சியிவை இடைநற் கவிசு விப்புருதி
பண்ணியே கொள்ளப் பார்மீதில் பாரீர் தாமிர பற்பமிதே. 37

(5) அட்ட லோக மாரணம்

வங்கஞ்செம் பொன்னுக்கா மாஞ்சிய்யம் வெள்ளிக்காம்
தங்கம் இரும்புக்குத் தாரமாம் – வங்கத்தைத்
தாரமே கொல்லுமதன் சீலைக்கு நாகமதாம்
செம்புக்குக் கந்தியென்று செப்பு. 38

(6) நவலோக பூபதி

அட்ட பற்பம் ஒரெடையும் அதுக்குச் சூதம் ஒரெடையும்
எட்டு வகையும் பற்பங்கள் ஏகுதி வெள்ளி பொன்செம்பு
வட்ட முலையாள் நாகவங்கம் வலிய காந்தம் வெண்கலமும்
திட்டப் படியே இவைபற்பம் சீத சூதம் அதுகலந்தே. 39

கலந்தே லோகம் அரைப்பதற்குக் கசாயம் எருக்க வேர்க்கொண்டு
சலந்தான் விட்டுக் காய்ச்சியதைச் சார நாலஞ்சு நாளரைத்து
உலர்முன் னேகுப் பிதனில் ஊட்டிச் சீலை மண்செய்து
அலர்உலத் தியெந்தி ரத்தில் ஆறும் இரண்டும் தீமட்டால். 40

குலவும் சிறுகத் தீயெரித்துக் குளிர அமர்த்திப் பின்னெடுத்து
அலரப் பொடிசெய் குன்றியெடை அனுபா னத்தி லிடுவீராய்
பலவும் சகல சன்னிகளும் பயித்தியம் நாற்பது எண்பது வாதம்
நிலமை கெட்டுச் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்குமென்றார். 41

பறக்கும் சருவ சன்னிகளும் பஞ்ச காசம் இருமல்கள்
அறுக்கும் தேவ தாரமுடன் அசாத்திய முள்ள சன்னியெல்லாம்
நிறக்கும் சோம ரோகமுடன் நிதானப் படுமே அசாத்தியமும்
பறக்கச் செய்யும் நவலோக பூபதி யென்று பயின்றனரே. 42

(7) பஞ்சலோகச் சிந்தூரம்

காயமும் இரதம் காந்தம் கதித்திடும் வராகன் பத்து
தூயவெண் காரம் நாகம் சொல்திரா சீனக் காரம்
தாயமாம் இந்துப் போடு தாமிரம் வகைக்கா றாக
நேயரி தாரம் மூன்று நேர்கண காரம் நாலே. 43

காரீயம் வராகன் ஏழு கனத்தகந் தகந்தான் எட்டுச்
சீர்பெற ஒன்றாய் வைத்துச் சிறக்கவே பொடிதான் செய்து
நேர்பட குகைக்குள் வைத்து நெருங்கிடச் சீலை மண்ணைக்
கூரிடச் சட்டி வைத்துச் சட்டிதான் கொண்டு மூடே. 44

மூடிய சட்டி தன்னை முன்னிரண்டு உசர மாக
வீடியே எருவ டுக்கி வெந்தாறிப் போன பின்பு
நாடியே பொடிதான் செய்து நலமுடன் மருதம் பட்டை
சாடிய சாறு மூன்று படிதனை வைத்துக் கொள்ளே. 45

கொண்டுதான் சாறு தன்னைக் குணஞ்சிவந் திருக்கும் மட்டும்
மண்டியே வறுத்தெ டுத்து வைத்திடு குப்பி தன்னில்
ஒண்டொடி மாதே கேளு ஒருபண வெடைசிந் தூரம்
கண்டிதம் கரண்டி தேனில் கதிக்க மண்டலங் கொள்வீரே. 46

எட்டுடன் குன்மம் தீரும் ... — — (47)
— — — — — கொள்ள
விந்தை யாக மேகவெட்டை மிகுந்த சுக்கிலப் பிரமேகம்
தொந்திப் பான நீரிழிவு சுகமாய் பயித்தியம் நாற்பதுவும்
வந்த நோவும் வழிவிலகி மாறும் பவுத்திர முந்தானே. 56

வேலியின் பருத்தி தானரைத்து மிகுத்த சாறு துட்டெடையில்
பாலித்த பற்பம் பணவெடைதான் பரிந்து கொள்வீ ராமாகில்
தோலில் தோன்றும் நீரடைப்புப் துன்மாங் கிசமும் கல்லடைப்பும்
கோலித் திறந்த மடைபோலே குமிழிப் பரிந்து ஓடுமென்றே. 57

பா.எண்: 47–56 சுவடியிலேயே இடம் விட்டு எழுதப்பட்டுள்ளது.

(8) அப்பிரகச் சிந்தூரம்

எடுத்தஅப் பிரகந் தன்னை இருபது பலமி டித்துத்
தொடுத்திடு கந்த கந்தான் சூழவே பலந்தான் நாலு
வடித்திடும் காடி வார்த்து வகையுடன் அரைத்த கல்லில்
பிடித்தகில் கொண்டு மூடிப் பெரும்புடம் போட்டி டாயே. 58

பெருகவே புடந்தான் போட்டுப் பெருமுறத் தாலே வீசி
கருகாமல் வெந்து நன்றாய்க் கரத்தினில் ஆற்றி மெள்ள
வருமயில் மாதுளம்பூச் சாயல் போன்றி ருக்கும் அந்த
அருமைஅப் பிரகச் சிந்தூரம் அநேகரோ கத்தைப் போக்கும். 59

போக்குமே பிரமே கங்கள் பொல்லாநீ ரிழிவு அடைப்பும்
தீக்குமே சயகா சந்தான் சிலேட்டுமம் தொண்ணூா ற் றாறும்
தாக்கிய கல்ல டைப்புச் சோகைகா மாலை,பாண்டு
வீக்கமும் மாறு மென்று விவரமாய் முனியு ரைத்தார். 60

(9) தாளக பற்பம்

இரதம் ஒன்றரை வராகன் இயல்தா ளகந்தான் எட்டு
விரசமாய்க் குழிக்கல் விட்டு வேலியின் பருத்திச் சாற்றால்
உரம்பட அரைத்து வில்லை உலர்ந்துபின் எடுத்துக் கொண்டு
கரசமாய் வெள்ளைச் சாரணைச் சுட்டுக் கரிய தாக்கே. 61

ஆக்கிய கரியெ டுதது ஆனதோர் கலசந் தன்னில்
வாக்குடன் பாதி யிட்டு நடுப்புற வில்லை வைத்துப்
போக்குமே திரையும் போட்டுப் புற்றுமண் சீலை செய்து
பார்க்கவே சட்டி தன்னில் பரிவுடன் மணல்வி டாயே. 62

இட்டதோர் சட்டி தன்னில் இதவுடன் கலசம் வைத்துத்
திட்டமாய் நாலு சாமம் தீயெரித் திட்டு ஆற்றி
வட்டமாய்ப் பொடிதான் செய்து மருவுதேன் கருப்புக் கட்டி
இட்டதோர் பணவெடை பற்பம் இரண்டுநே ரந்தான் கொள்ளே. 63

கொண்டிடில் தீரும் சூலை குட்டமும் கிரந்திப் புண்கள்
மண்டையில் சூலைப் புண்கள் மருவிய பவுத்தி ரந்தான்
அண்டின பேர்க்கும் இல்லை ஆமென்று அறிந்து செய்யும்
பண்டிதர் இல்லை யென்று பாரினில் அறிவ தாமே. 64

பத்தியம் கஞ்சி சோறும் பரிவுடன் முருங்கைக் கீரை
எத்தியே வாந்தி செய்தால் இதம்பழந் தயிரும் கூட்ட
மெத்தவே மீறிற் றானால் வெண்ணெய்சர்க் கரையும் கூட்டச்
சத்திய மாகச் சொன்னோம் தமிழ்முனி உரைத்த நூலே. 65

(10) பொன்னரிதார பற்பம்

பொன்னரி தாரம் முட்டைத் தோடுடன் சுண்ணாம் புக்கல்
இன்னவை சரியாய்க் கொண்டு எலுமிச்சம் பழத்து நீரால்
அன்னமே அரைத்து நன்றாய் அகிலில்வைத் துலர்த்திச் சுட்டுப்
பின்னையும் பழத்து நீரால் பேணியே அரைத்தி டாயே. 66

இந்தப் படிதான் மூன்றுவிசை இயல்பாய்ப் புடந்தான் ஆனபின்
சிந்தைப் படியே சிமிழிலடைச் சீரகம் தனியொரு பணவெடைதான்
முந்த வெந்நீ ருடன்கலந்து மூன்று நாளும் அந்திசந்தி
விந்தை யாகக் குடித்தாக்கால் வேறு வினையும் வாராதே. 67

சீத சுரமும் நாலாம்முறையும் சிலேற்றும காச சுரமுதலாய்
வாத ரோகம் பவுத்திரமும் மாறாக் கிரந்திப் புண்சூலை
பாத சத்திரம் பிரமேகம் பக்கப் பிளவை விப்புருதி
காதில் விரணம் கண்டமாலை கடிவிடம் கரப்பான் தீர்ந்திடுமே. 68

மந்தார சாசத் துக்கு மருவுசஞ் சீவி யாகும்
விந்தையாய்ப் பத்தி யந்தான் வேண்டின புளிப்பு உப்பு
அந்தமாம் கத்த ரிக்காய் ஆவின்மோ ராகு மென்று
முந்தவே குருமு னிவன்தான் மொழிதவ றாமல் சொன்னார். 69

(வேறு)

அரிதாரம் வராகன் நூறு ஆனகற் றாழஞ் சாறு...
தருவான மடக்கின விட்டுத் தானதில் 70
... ...
... ... பீரசார்விட் டரைத்துத் துட்டுமேல்
சூழவே கவசங் கட்டித் துலங்கு மூசையில் தான்வைத்து
வேமுற மூசை மூடி மேலுஞ் சீலைமண் தான்செய்யே. 81

பா.எண்: 70 முதல் 81 வரையில் விடுபட்டுள்ளன.

பற்பத்தைப் பணவெ டைதான் பாங்குட னெடுத்துத் தேனில்
தப்பாமல் இரண்டு வேளை தானுமண் டலந்தான் கொள்ள
செப்பிய சலக்க ழிச்சல் சேர்ந்திடும் நீரிழிவுடன்
ஒப்புடன் பிரமே கந்தான் ஓடுமென் றருளிச் செய்தார். 82

(11) நாக பற்பம்

சீனக் காரம் ஒருபலமும் சேர்ந்த வெடியுப்பு இருபலமும்
ஆன நாகம் பத்துப்பலம் அன்பய்ச் சட்டி தனிலிட்டுத்
தானே இருப்புக் கரண்டியினால் சதிராய்க் கிண்ட பற்பமாம்
கானே கழுநீர் நிறமானால் கல்வந் தன்னில் பொடிசெய்யே. 83

செய்யே சிமிழில் அடைத்துச் சேர்ந்த அனுபா னத்தோடே
வைய்யே பணவெடை பற்பந்தான் வாத பித்த சிலேற்றுமத்தில்
உய்யும் பிரமேகம் நீரிழிவு ஓடும் சயமும் குரல்நெரிவும்
பய்ய விட்டுத் தானகலும் பாரீர் பற்ப குணந்தானே. 84

(12) வங்க சிந்தூரம்

வங்கம் பத்துப் பலமெடுத்து வாகாய் ஓடு தனிலிட்டுச்
சங்கை அபினிவ ராகனெடை தான்விட் டுருக்கச் சுத்தியாம்
பொங்கும் பொன்னா வரைவேர் பொருத்தம் துத்தி வேர்சமனாம்
மங்கை சிறுகத் தரித்து வாகாய் இட்டு வறுப்பாயே. 85

முருக்கம் பாலே கடைந்து முன்போல் வேரைச் சிறுகியிட்டு
வருக்க நாலு சாமமதில் மதிக்க வேசிந் தூரமாம்
பெருக்க மில்லா தேயிறக்கிப் பேணிக் குழாயில் அடைத்துத்
திருக்கும் தேனொரு பணவெடை சேர்ந்த இருபது நாள்கொள்ளே. 86

கொள்ளவே குன்ம ரோகம் கொடியதோர் வாய்வு சூலை
முன்னத்தில் உட்டண வாய்வு மூல ரோக மனைத்தும்
தள்ளிய பிரமே கமுடன் சார்ந்த நீரிழிவ டைப்பும்
விள்ளுதுன் மாங்கி சமுடன் விரணமும் தீரு மென்றே. 87

(13) வெள்வங்க பற்பம்

வெள்வங்கம் தகடு தட்டி வராகன் முப்பது நறுக்கு
தெள்ளிய சித்திரப் பாலை சேரவே சிமைதா னொன்று
வள்ளிதா யிடித்துச் சீலை வாகுடன் அதிலே பரப்பி
ஒள்ளிய தகடு வைத்து ஒக்கமேற் பொடிப ரப்பே. 88

இப்படிப் பரப்பி வைத்து இதமுடன் சுருட்டி நன்றாய்
ஒப்புடன் ர்ராத்தி ரிக்குள் ஒத்ததோர் தரையில் வைத்துச்
செப்பமாய்த் தீயைப் போட்டுச் சேரவே வெந்த பின்பு
தப்பிலா மலேயெடுத்துத் தகட்டெடை மருந்து சேரே.

சேர்த்திடு திப்பிலி யுடனே சிறந்ததிப் பிலிமூ லந்தான்
கார்த்திடும் சாதிக் காயும் சுதித்ததோர் கிராம்பு ஓமம்
நேர்த்தியாம் சாதி பத்திரி நிறைசரி தானே கூட்டி
வார்த்துதேன் புளிப்பில் லாமல் வாகுடன் அரைத்தி டாயே. 90
அரைத்திடும் மருந்து தன்னை ஆனதூ தளங்காய்ப் போலத்
திரத்துடன் அரைத்து வைத்துத் தின்றுதான் இரண்டு வேளைக்
குரைத்திடும் நீரிழி வுடனே குன்மங்க ளெட்டு வாய்வும்
துரத்துமே மேக வெட்டைச் சுரம்அலைந் தோடு மென்றே. 91

(14) நாக சிந்தூரம்

மாதுமை பாகர்சொன்ன மாமறைநூ லைமுனிவன்
போதத் தமிழாய்ப் பொருந்தவே – தீதில்லா
நாகசிந்தூ ரத்தை நமக்குரைத்தா ரிவ்வுலகில்
பாகமாய்ச் சுத்திசெய்யும் பண்டிதரே – யாகமுடன்
பத்துப் பலநாகம் பாங்காய்க் கரண்டிதனில்
வைத்தே யுருக்கும் வகைவிவரம் – உற்ற
இலுப்பையினெண் ணெய்ஆவின் நெய்விட் டுருக்கிக்
கலிப்பாகக் கோமூத் திரத்தில் – சலிப்பில்லா
மூணுவிசை சாய்க்கசுத்தி; முன்போல வேயுருக்கி
பூணுவெள்ளாட் டுப்பால் புகழ்பெறவே – தானும்
இருபதுவி சைசாய் இதமான சுத்தி
உறுமென் றுரைத்த தறிவீர் – திருமயிலே
சட்டிதனி லிட்டுச் சரியாகப் பொட்டிலுப்பு
மட்டடங்கா மோதகங் கூட்டியே – இட்டமுடன்
சுக்குபல மொன்று சுகமான மஞ்சளோ

டொக்கப் பலமொன் றிடித்துமே – சிக்கெனவே
உப்புடனே சேர உறவுபட வேகலந்து
தப்பில்லா மற்சிறுகத் தான்தூவிச் – செப்பும்
ஒருவிறகெ ரித்துருக்கி னாலிம் மருந்து
சிறுகப் பொடிசிந்தூ ரிக்கும் – வருமயிலே
செந்நா யுருவிபல மைந்து நறுக்கியே
தன்னால் சிறுகவே தான்தூவி – நன்றாய்ச்
சிவந்தபதந் தான்வந்தால் சீக்கிரமி றக்கி
அமந்தகல்லி விட்டரைத்துப் பின்னால் – சமைந்த
சட்டிதனி லிட்டொரு சாமமள வும்வறுக்க
இட்டமுடன் செங்களிக்க வைத்திறுத்திக் – கொட்டி
இறக்கிப் பொடிசெய் தினிதாய்ச் சிமிழில்
சிறக்கு மனுபானத் தோடே – மறக்காமல்
சுக்கு மிளகுடனே திப்பிலியு மொக்கவே
பக்குவ மாய்வறுத்துப் பண்புடனே – ஒக்கவே
பொடியாய் நுணுக்கிப் புகழுடனே கொள்ள
கடியெடுத்துத் தேனில் கலந்து – வடித்திரண்டு
வேளைகொள் மண்டலம் இந்தடைவில் நெஞ்சுநோய்
ஈளை எலிகடிமந் தாரகாசம் – மீளும்
அரிகுரல்சி லேற்றுமந்தொண் ணூற்றாறும் நாளும்
சருவும் சிறந்தபித் தம்நூற் – றிருபதுடன்
மூலத்தின் உட்டணம்முந் நூற்றிரு பத்தாறும்
நீலப் பிரமி பதினெட்டும் – சூழுபல
திக்கும் பரவும் திரிபத கட்டியஞ்சும்
நிக்குங் கல்லடைப்பன் பன்னெட்டும்– சிக்கும்
சதையடைப்பன் பன்னாறும் சோமரோகம் ரெண்டும்
இதைபடுப வுத்ரமிரு பத்தும் – முதையவே
கையே முகஎரிப்பு காலெரிப்பு நாள்தோறும்
வைய மதிக்க மகிழவே – தையால்!
கொடிவேலிச் சூரணந்தேன் குத்திச்சிந் தூரம்
பிடியா யிருபதுநாள் கொள்ள – முடியாத
சத்திகுன்ம மெட்டும் தயங்குவாத மெண்பதுவும்
முத்தியகுன் மம்பதினெட் டுடனே –வத்திக்
கிரந்தபதி னெட்டும் கெடுமே சிரங்கு
குறைந்துமுலைக் குத்துபுற்றும் தீரும்– நிறைந்ததாம்
பெய்ப்பீர்க்கங் கூட்டுத்தூள் பேணுஞ்சிந் தூரமுடன்
தப்பாத்தேன் விட்டுதெண்டிற் பூசியே – அப்பால்

அனுபோகஞ் செய்ய அடிவயிற்றி லுள்ள
மனுமலட்டுப் பூச்சி மடியும் – பிணியான
கர்ப்பத்தில் ரோகம் கிருமி பிடிவாதம்
அற்பமில் லாதத நேகமறும் – இப்போது
மூல முளையிலே மூன்றுநா ளுந்தடவச்
சாலமில்லா மற்கரைந்து தான்விழுமே – ஞாலமெல்லாம்
கொணடாடும் நாகசிந்தூ ரத்தைக் குணமாக
மண்டலங் கொள்வாய் மகிழ்ந்து. 93

(15) அண்ட மெழுகு

ஆதி யருளாலே அண்ட மெழுகுகட்டிச்
சோதித்துப் பார்க்குமிதைச் சொல்லுவேன் – நீதியால்
கண்டங்கத் தரிவேர் கதிக்க வரைத்துமே
அண்டத்துமேற் பூசி அயரவைத்து – ஒண்டொடியீர்
ஒருநா ழிகைதன் னிலுலர்ந்த முட்டை
மருகா லுதிர்த்து வகையே – திருவாக்கும்
கொட்டைப்பாக் கானாலும் கொழுத்த பாலாகும்
வெட்டைப்பாக் கானாலும் வெற்றிலையும் – அட்டில்லாப்
புகையிலைவி ரையுடனே பொற்படி நிறுத்து
வகைக்குப் பலமேழு வாங்கி – நகையாமல்
கக்குப் புகையிலையா கக்கனக்க முப்பதிலை
ஒக்கவே வைத்து ஒழுங்குடனே – சிக்காமல்
அன்றுசுட்ட சுண்ணாம்புத் தண்ணீர்விட் டேயரைத்து
ஒன்றாய்த்தி ரட்டியு ருட்டிகட்டி – நன்றாகச்
சீலைமண்ணு யேழுதரஞ்சுற்றியே காயவைத்து
நாலுபடி கொள்ளசட்டி நன்றாக – வால
மணலிட் டிருநாழி வைத்திரண்டு முட்டை
மணலிட்டுச் சட்டிகொண்டு மூடி – அனல்புகுதாச்
சீலைமண்ணைச் செய்தெடுத்துத் தீப்போட்டெ ரிக்குவகை
ஞாலம் புகழ நவிலக்கேள் – ஓலத்தில்
தட்டிவி றாட்டியொரு சட்டிக்கு ஐம்பதுவாய்க்
கெட்டியாய்க் கீழ்மே லடுக்கிப் – பொட்டெனவே
ஆறவிட்டுத் தானெடுத்து அண்டமுடைத் துப்பார்க்கத்
தேறசி வந்தபத மாயிருக்கும் – கூறரிய
பாதி யிரதமுடன் பாங்காய்க் கரண்டிவைத்

தூ்தி யெடுத்தே யுருக்கினால் – நீதியாம்
இந்தப்படி மூன்று இதமாயண் டங்கூட்டி
விந்தையாயு ருக்க மெழுகாம் – வந்த
சாதிலிங்கம் தாரமரி சார்ந்த மனோசிலையு
மாதுகந்த கஞ்சீனக் காரமுடன் – ஊது
வெடியுப்பு நவச்சாரம் வெள்ளைப்பா டாணம்
மிடிதீர்க்கும் வெண்காரம் வேண்டிப் – படியே
மெழுகாக்கிக் கொள்ளவெகு வாய்வியா தியறும்
பழுதில்லா நூற்பயன் கேளும் – தெளிவாய்
இரத மெழுகுசெய்தால் எல்லாவி யாதி
யறும்சுரம் தார மெழுகில் – சிரங்கு
கிரந்திசூ லைவெடிக்குக் கேடில்லா லிங்கம்
நிறைந்துபோக் குங்கெடிதாய் நிற்கும் – திறந்த
சலக்கழிச்ச லுக்குவெண் கார மெழுகு
கலக்கழிய கார மெழுகு – பலப்படுமே
வெண்குட் டமுதலான வேண்டினதோர் குட்டமெல்லாம்
தண்கெட்டொ துங்குந் தகமைபோல் – பண்பட்டு
நவச்சாரத் தின்மெழுகு நல்மகோத ரத்தை
அமைத்துவைத் தாய்வைய கத்தஞ்– சமைத்ததொரு
வெள்ளையப்பா டாணமெழுகு வெவ்வேறு குட்டமெல்லாம்
துள்ளைப் பொடியாய்த் துரத்துமே – என்ரு
கவுரிப்பா டாணமெழுகு கடியான மூலமெல்லாம்
உவரிப் படுத்தா தொதுங்கும் – விவரிதமாய்
கந்தகம் சர்வ வியாதி சலக்கழிச்சல்
சந்தயமில் லாமலே தான்தீரும் – வந்த
வெடியுப்பு மெழுகுமே லானகோவை யெல்லாம்
துடியான காமாலை சோகை – கெடியான
வீக்கமெல்லாந் தீரும் வெகுவிதமாய்ச் சன்னிகளைப்
போக்கும் பிறவீச்சு போக்குமா – மாக்கு
மனோசிலை யென்று வசனந்தப் பாது
சனமே பொருந்துமரி தாரம் – தனமுடன்
வாதமெனப் பட்டதுவும் வாதசன்னி வாய்வுகுத்து
... முதுகுமேற் குத்து கடுப்புகளும்
சேதமில்லாத் தீருஞ் சிறுகுண்டைக் காயளவு

மாதுவளர் வெல்லந் தனில்வியாதி – கோதையரே
மண்டலந்தான் பாண்டு முனியுரைத்த பத்தியமும்
எண்திசையில் ... ...
ஆவின்பால் நெய்யு மதிலும்வெள் ளாட்டின்பால்
மேவுவெள்ளாட் டுப்புக்கண் டம்துவரை – காவில்
அறைக்கீரை ஆன சுறாமீன் கெளுத்தி
கருவாடுங் காடையுடன் சேவல் – சிறக்கும்
கவுதாரி கைப்புப் புளிப்புந் தவிர்த்து
அவுதாய்ச்ச ரீரசுத்தி ஆகுமே – வெகுவாய்
முகவாத சன்னிக பாலசன்னி மூக்கு
மகாவாத மெண்பதுடன் மண்டைக்குத்து – வெகுவாய
சன்னிபதி மூன்றும் தனிவாய்வுக் குத்துசெவி
கன்னரோகங் கண்டமா லையுடனே – வன்னப்
பவுத்திரங்க ளெல்லாம் வகையுடனே பாருமென்று
தொகுத்த மருந்துசேர்த் தோகையாய் – சுகுத்த
இரதமரி தாரம்ம னோசிலை காந்தம்
சுரதசாதி லிங்கசீனக் காரம் – விரதமுடன்
கந்த மெழுகுடனே கூட்டி ஒருநிறையாய்
சந்தயமில் லாமற் சரிகூட்டி – இந்த
மெழுகுகெல்லா மொன்றாய் வெகுவாகக் கூட்டி
வழுது மனுபானத் தோடே – பழுதில்லாக்
கொண்டால் வியாதி குணமாகு மென்றுமுனி
பண்டுரைத்த நூலின் படி. 94

(16) நவலோகச் சிந்தூரம்

அரப்பொடி உருக்குச் செம்பு ஆனவெண் கலம்பித் தளையும்
இரதம்வெண் கார முடனே இனியதோர் கந்த கந்தான்
உரமிகு ஊசிக் காந்தம் உண்மையாம் மனோசி லையும்
திரமுளஅரிதா ரந்தான் சேரவே பலந்தான் கூட்டே. 95

கூட்டியே குமரிச் சாறு குமுறவே பனிரெண்டு சாமம்
ஆட்டியே தான ரைத்து அகலில்வைத் தகலால் மூடி
பூட்டியே சீலை மண்தான் புகழ்பெற செய்த டுப்பில்
மூட்டியே எரியி டத்தான் மூன்றுநாள் ஆகு மென்றே. 96

இரவு பகலு மாயெரித்து இறக்கிக் குளிர ஆறியபின்
சுரத மான நாபியுடன் சொல்லும் திப்பிலி திப்பிலிமூலம்
நிரவும் பலந்தான் ஒன்றுடனே நிறுத்தே உள்ளித் தைலத்தால்
விரசம் பெறவே தானரைத்து மீளும் அரைப்பண எடையுருட்டே. 97

இந்த மருந்துப் கனுபானம் இஞ்சி அரத்தை திரிகடுகு
முந்தி யுள்ளித் தைலமின் வெந்நீர் தேனும் தானாகும்
தொந்திப் பான காமாலை சோகை பாண்டு மூலகுணம்
வந்த மகோத ரம்பீலிகை வெப்புப் பாவை வாய்வுபோமே. 98

வாத ரோகம் எண்பதுவும் மருவிய பித்தம் நாற்பதுவும்
சீத மான சிலேட்டுமந்தான் சிறக்கும் தொண்ணூற் றாறுடனே
பாதம் பெரிய சன்னிதோடம் பதிமூன் றுடனே சுரம்பிறவும்
சூதக வாய்வு மேகவெட்டை துயர்கெட் டொதுங்கும் கண்டிரே. 99

(17) இரச சிந்தூரம்

இரதமு மூன்று பங்கு இனியகந் தகந்தான் நாலு
சரசமாம் தாள கந்தான் தனிப்பலம் நாலு கூட்டி
விரையவே நெய்நல் லெண்ணெய் வேண்டியே கரண்டி தன்னில்
திரமுடன் தித்திக் கந்தகம் தீயினில் பிடித்தி டாயே. 100

பிடித்திட உருகும் போது பின்ரசம் விட்டுக் கிண்டித்
திடத்துடன் குழிக்கல் வைத்துச் சேரவே பொடிப்ப டுத்தி
அடைத்திடும் குப்பி தன்னில் ஆமெனச் சட்டி மீதில்
மடித்திட மணல்மேல் குப்பி வைத்துவாய் சில்லு வையே. 101

வைத்திடும் அடுப்பு மீதில் மந்திரம் பூசை தர்மம்
உத்திட உகந்து செய்து ஓடுதான் எடுத்துப் பார்க்க
எத்தியே சிவந்த தென்றால் இறக்கியே குளிர ஆற்றிப்
பத்தியாய் உடைத்தெ டுத்துப் பாங்குடன் சிமிழில் வையே. 102

மாத்திரை யுடன்க லந்து வைத்திடும் அனுபா னத்தில்
பாத்திரா பாத்தி ரங்கள் அறிந்துபண் டிதர்கள் செய்வார்
சாத்திரப் படியும் தப்பித் தவறியே செய்த பேர்கள்
கோத்திரம் குலைதான் சுற்றிக் கொள்வரே இவர்கள் தானே. 103

(18) உலோகச் சிந்தூரம்

அரப்பொடி உருக்குக் காந்தம் ஆனதோர் பழங்கிட் டமுந்தான்
திரமுடன் சரிநி றையாய்ச் சேர்ந்திடும் கரிப்பான் சாற்றில்
உரம்பட அரைத்துச் செப்பில் ஓடுமேல் சீலை மண்தான்
கரங்கொடு பூசிக் கொண்டு கசபுட மிடச்சிந் தூரமே. 104

ஆனதோர் சிந்தூ ரத்தை அம்மியில் வைத்துப் பின்னும்
தானுமே கரிப்பான் சாற்றில் தனித்தனி விட்ட ரைத்து
ஈனமில் லாம லேதான் இப்படிப் புடந்தான் பத்துப்
பூணுறச் செய்வா யாகில் பொருந்திய கருமம் நன்றாம். 105

நன்றெனத் திரிக டுகுதான் நலம்பெற இடித்துத் தூளாய்த்
தின்றிடச் சிந்தூ ரத்தைத் தேனதில் பணவி டைதான்
கொண்டிடும் இரண்டு வேளைக் கூச்சமில் லாமல் இந்நாள்
வண்டுசேர் குழலாள் தீரும் வகைதனைச் சொல்லு வோமே. 106
சொல்லுமே க்ஷாமா லைகள் சோகையும் சுவாச காசம்
வெல்லுமே பாண்டு ரோகம் விடபாண்டு உடனே மேகம்
கொல்லுமந் தார காசம் குவளைவிப் புருதி யோடு
நில்லுமென் றனேக ரோகம் நிற்குமென் றுரைத்தார் நூலோர். 107

(19) இரச கர்ப்பூரம்

செய்ய வலப்பக்கம் கொண்டு திறமாய் வாய்தான் மண்ணைப்
பையப் பூசி உலர்ந்தபின் பாரச் சூட்டு அடுப்புவெட்டி
வையம் மதிக்கச் சட்டிவைத்து மணலிரு விரக்கடை தானிட்டு
உய்யும் படிக்குக் குப்பிவைத்து உயர்ந்த கழுத்துமண் விட்டெரியே 109

எரிக்கும் தீபம் கமலம் காடாக்கினி யாக எரியிட்டுப்
பரிக்கும் பனிரெண்டு சாமமட்டும் பண்பா யெரித்துத் தானிறக்கி
கரிக்கும் குளிராற் றியபின் காசிக் குப்பியைத் தானுடைத்து
வரிக்கும் இரச கர்ப்பூரம் மாதே அனுபா னத்திலிடே. 110

இட்டே திரிகடு குடன்வெதுப்பி இயல்பாம் வெருகடிப் பிரமாணம்
கட்டாய் இரத கற்பூரம் கதித்த பணவெடை ஒன்றெடுத்து
மட்டாய்த் தேனில் இருபதுநாள் மருவி இரண்டு வேளைகொள்ள
வட்ட முலைமா தேகேளு வகையுடன் வியாதி தீருமிதே. 111

108 ஆம் பாடல் சுவடியிலேயே விடுபட்டுள்ளது

தீரும் வியாதி செப்புவேன் சேர்ந்த சத்தி வலிகுன்மம்
கூறு பதினா றுடன்வாதம் குறைய தெண்பது புண்குடோரம்
வாறும் சூலை சன்னிவாதம் மண்டைச் சூலை பதினேழும்
சேரும் பறங்கி பதினெட்டும் திரும்ப பீனசம் பதினெட்டே. 112

தொண்டைப் புற்று செவிப்புற்று சொல்லும் யோனிப் புற்றுடனே
அண்டப் புற்று லிங்கப்புற்று ஆன பவுத்திரம் அரையாப்பு
முண்ட முங்கால் கள்கட்டி முதிரும் குட்டம் பதினெட்டும்
கண்டம் கரப்பன் பதினெட்டும் கடிய கிரந்தி போமென்றே. 113

கோரழைவிப் புருதி யான கூடும்விப் புருதி ஈளை
சூளைகார மருந்தி னாலும் சிலேற்றும கோபத் தொடை
வாழையும் எலிகடி வகையும் வறட்சியும் மேக மெல்லாம்
நாளையும் மருந்தின் பேரை நவின்றிட வியாதி போமே 114

(20) பூபதி மாத்திரை

நாவி இரதம் கந்தகமும் நல்ல கூவிளைப் பொடியுடனே
சீவிச் சரிநிறை தான்கொண்டு செருப்படிச் சாறு விட்டரைத்து
மேவிநாலு சாமம் மட்டா யிதைக் குன்றி போலுருட்டிக்
கூவும் நிழலில் தானுலர்த்திக் குப்பிக்குச் சீலை மண்செய்யே. 115

செய்யே மருந்து குப்பிதனில் திறமாய் அடைத்துக் கூட்டியதில்
வையே இருவிரல் மணலிட்டு வைத்துக் கழுத்தின் அளவுகொட்டித்
துய்ய தீபம் கமலம்போல் சொல்லும் காடாக் கினியாகப்
பையப் பனிரெண்டு சாமம்தான் பதம்பார்த் திறக்கி ஆறவையே. 16

ஆறிய மருந்து தன்னை அம்மியில் வைத்து முன்போல்
சாறுதான் விட்டு நாலு சாமம்தான் அரைத்து ருட்டிச்
சீறுடன் சிமிழில் வைத்துச் சேர்த்தனு பானத் தோடு
கூறிடக் கொள்வீ ராகில் குணங்குறிச் செப்ப லுற்றாம். 117

உற்றதோர் சீவன் போகும் வேளையில் உரைத்திட் டாலும்
சித்தந்தான் தெளிந்தி ருந்து சேதிகள் எல்லாம் சொல்லி

மற்றொரு பிணிக ளென்றால் மருந்தினைக் கொடுக்க மாறும்
வித்தன மைத்த தென்றால் விவர பூபதியே சொல்லும். 118

(21) பூரண சந்திரோதயம்

தங்கமொன்று இரதம் எட்டுத் தனித்தகந் தகம்பதி னாறு
திங்கள் போன்ற செம்பரத் தம்பூச் சாறு தினமேழு
பொங்க மாக விட்டரைத்துப் போந்த குன்றி போலுலர்த்தி
கங்கைக் குப்பி தனிலடைத்துப் கதித்த சீலை மண்செய்யே. 119

செய்யே பெரிய சட்டிதனில் திறமாய் இருவிரல் மணலிட்டு
வையே குப்பிக் கழுத்துமட்டாய் மணலைக் கொட்டி அடுப்பில்வைத்து
பையத் தீபம் கமலம்போல் பற்றும் காடாக் கினியாக
உய்யப் பன்னி ரண்டுசாமம் உகந்து எரிக்கப் பதமாமே. 120

பதந்தான் பத்து இறக்கிவைத்துப் பார்க்க மாந்துளிர் போன்றிருக்கும்
முதந்தான் கொட்டிக் குழிக்கல்லில் முன்போல் சாறு விட்டரைத்து
சிகந்தான் அறிய வராகனெடை திறமாய் வில்லைப் பிடித்து
உகந்தே கொள்ள நோய்களெல்லாம் ஒதுங்கு மென்று முனியுரைத்தார். 121

(22) திரிலோக சிந்தாமணி

சிவப்பு நீலம் கோமேதகம் சிறந்த வச்சிரம் அப்பிரகம்
அவத்தக் காந்தம் அரிதாரம் ஆறி யடங்கின எவச்சாரம்
சுவத்தச் சூத கமுந்தான் துய்ய மனோசிலை தங்கமிவை
நிவத்த வெள்ளிப் பற்பமிது நிறுத்தே சரியாய்க் குப்பிதனில். 122

இற்றே எரித்தே பதமாய்த்தான் இறக்கி அனுபா னத்துடனே
மற்ற மருந்தில் கலவாமல் வகையாய்த் தனியே தின்றாக்கால்
பித்த சுரமும் நீரிழிவும் பிரமேக ரோகம் சயரோகம்
சித்தப் பிரமை சன்னியிவை தீரும் திரிலோக சிந்தாமணியே. 123

(23) இரச கர்ப்பூரம்

சித்திர மூலமும் பத்து சிறந்த குப்பி அதனடுவே
வத்திய உப்பு மேலிட்டு வகையாய் இரதம் ஒருபலமும்
சத்திய சட்டி மேல்மூடிச் சதிராய் எரிக்கப் பற்பமதாம்
சத்தி குன்மம் தீருமென்று சதிரார் ரசகர்ப் பூரமிதே. 124

(24) வசந்த குசுமாக்கினி

சொர்ண மும்வெள்ளி யிரண்டு துலங்கும் வங்கம் இருவகையும்
வண்ணக் காந்தம் இரதமொன்று வளரும்அப் பிரகம் பவளம்முத்தும்
உன்னு வராகன் தான்நாலு ஒக்க வைத்துக் குழிக்கல்லில்
அன்னம் பால்கருப் பஞ்சாறும் ஆடா தோடைச் சாறரையே. 125

சந்தனத் தண்ணீர் வெட்டிவேர் தானே பசுமஞ்சள் வாழைத்தண்ணீர்
இந்தவிதம் கத்தூரித் தண்ணீர் இயல்பாய் விட்டுத் தானரைத்து
அந்த மாக வில்லைபண்ணி ஆனால் இரண்டு குன்றிபோல
விந்தை யாகக் கொண்டாக்கால் வேறு வினையும் வாராதே. 126

பிரமியம் மேக வெட்டைப் பெருக்கமாம் உட்டண ரோகம்
விரவுள்ள நாபி யில்தான் வெகுயுக்கிர மான ரோகம்
திரமுடன் குருமு னிவனவன் தீரு மென்று புவிக்கே
உரமுடன் அருளிச் செய்த வசந்தகுசு மாக்கினி யென்றே. 127

(25) இராச மிருகாங்கசம்

சூத பற்பம் மூன்றுபலம் சொர்ணம் வெள்ளி தாமிரமும்
சேத மில்லா வகைக்குப்பலம் சேர நறுக்கிப் பொடிபுண்ணி
நீத மான பலகறையில் நிலமை யாகப் பொடிபரப்பே. 128

வெண்காரம் தன்னை வைத்து வெள்ளாட்டின் பாலை வார்த்து
நண்பாக அரைத்துப் பூசி நன்கதிரம் ஊற வைத்துப்
பண்பான பாண்டத் துள்ளே பரிவாய் நாலுவிரல் உப்பையிட்டுக்
கண்கான அதன்மேல் வைத்துக் களக்கவே உப்பி டாயே. 129

பா.128 இல் மூன்றடிகளே உள்ளன.

சட்டியால் மூடி ஏழு சீலைமண் செய்து கொண்டு
கெட்டியாய்க் கசபு டந்தான் போட்டுப்பின் னெடுத்து ஆற்றிக்
கொட்டியே அரைத்து வைத்துக் கொண்டுதான் அனுபா னத்தில்
திட்டமாய் திப்பிலி மிளகு தேனொடு கொள்ள நன்றே. 130

இந்தப் படியே நாற்பதுநாள் இயல்பாய்க் கொண்டால் தீரும்வகை
விந்தைச் சயமும் மேகவெட்டை மிகுந்த சூலை சுரசன்னி
சிந்ததைத் துயர்கெட் டொதுங்கும் சிவனார் அருளிச் செய்ததென்று
முந்த முனிவர் தானுரைத்தார் முந்நூல் ராசமிரு காங்கசமே. 131

(26) சிலோக்கிய சிந்தாமணி

சூதமும் வச்சிரம் சொர்ணம் வெள்ளி துலங்கு தாமிரம்
ஏகுடன் அப்பிரகம் நாபிகந் தகம்மனோ சிலைதாளக பவளமுத்து
நீத மான சங்குடனே நிறைசமன் பற்ப மாய்ச்செய்து
கோதிலாக் கொடுவேலிக் கசாயம் குளிர ஏழு நாளரையே. 132

அரையே எருக்கலம் பால்மூன்று நாளும் நொச்சிக் கசாயத்தில்
நிரைய மூன்று நாட்காட்டுக் கருணைக் கிழங்கு நிசமூன்று
குறைவில் லாம லேயுணர்த்திக் கூறும் பற்பம் சரிகூட்டி
வரையும் இந்தப் பற்பமிதை மாதே நாலி லொன்றுகூட்டே. 133

கூட்டே முருங்கைக் கசாயம் கொண்டு ஏழு நாளரைத்து
ஈட்டுக் கொடுவேலிக் கசாயம் இருபத் தொருநாள் தானரைத்து
நாட்டில் இஞ்சி மூன்றுநாள் நல்கும் கஞ்சா இலைமூன்று
தீட்டும் எலுமிச்சம் பழம்மூன்று சேர்ந்த கொம்மட்டி மாதுளை மூன்றே. 134

மூன்று நாளும் ஆனபின்பு முன்போல் உலர்த்திப் பொரிகாரம்
நான்றில் ஒன்று நாபிசுக்கு இலவங்கம் திப்பிலி சாதிக்காய்
வேண்டும் கொம்மட்டி மாதுளைச்சாறு விரைய மூன்று நாளரைத்துப்
பூண்டும் படிக்குத் தானரைத்துப் பொருந்தச் செய்யும் இனித்தானே. 135

தானே குங்குமப் பூச்சாறு சதிராய் விட்டுத் தானரைத்து
மானே வில்லை யாகப்பிடித்து மருவும் தேன்திப் பிலியுதினில்
தேனே நாற்பது நாள்கொள்ளத் தெளிவாய்க் குணமும் சொல்லக்கேள்
பேநீர் விழியாள் வாதபித்த சிலேற்றும ரோகம் போமென்றே. 136

பா. 137, 138 ஆகியன சுவடியிலே விடுபட்டுள்ளன.

(27) வாத ராட்சதன்

சீதாம் அப்பிரகம் தாமிரமும் சிவந்த ஊசிக் காந்தமுடன்
சூதம் கந்தகம் நாபிஇவை சொன்ன படிக்கு ஒருநிறையாய்ச்
சாதக மான சாரணைச் சாற்றினில் ஒருசாமம் அரைத்துக்
கோதும் கொடுவேலிக் கசாயத்தில் குன்றிபோல் அரைத்து உருட்டுமே. 139

காசிக் குப்பி தானதற்குக் கடுக சீலை மண்செய்து
பூசித மாக உலரவைத்துப் பொருந்த உண்டை தானடைத்து
வாசி யான வாய்மூடி மண்மேல் பூசி உலர்ந்தபின்பு
மாசில் லாத சட்டிதனில் மணலிட்டு அதன்மேல் குப்பிவையே. 140

வைத்தே கழுத்தின் மட்டாக மணலிட்டு அடுப்பின் மேல்வைத்துக்
கைத்தீ பமது தான்போல் கமலாக் கினிகா டாக்கினியாய்
உத்தே சாமம் பனிரெண்டு உகந்தே எரித்துக் குழிக்கல்லில்
முத்தே முந்தின படியரைத்து முதிரும் குன்றி போலுருட்டே. 141

இந்த உண்டைக் கனுபானம் இஞ்சி அரத்தைப் பிட்டுவகை
அந்த மான திரிகடுகு ஆன முலைப்பால் இளநீரும்
விந்தையாக இடத்தீரும் விடமும் சீதளம் சன்னிதோடம்
மந்த மான வாதம்எண் பதுவும் வாத ராட்சதனே. 142

(28) கனக கோடாசூடி

இரதம் கந்தகம் வெண்காரம் இனிய திரிகடுகு திரிபாலைதாபி
சுரத மாக ஒருகழஞ்சு சொல்அரி தாரம் பதின்கழஞ்சு
விரத மான நேர்வாளம் விதையும் பதின்கழஞ் சேநிறுத்துப்
புரதம் வேர்ச்சாறு விட்டரைத்து போந்த குன்றி போலுருட்டே. 143

உருட்டிய குளிகை தன்னை உகந்துடன் உலர்த்திக் கொள்ள
சுருட்டிய சுரங்கள் சன்னி தோடங்கள் மூல குன்மம்
கிருட்டிய கெண்டை வாய்வு கிளிசுவிப் புருதி பாண்டு
மருட்டிய மகோத ரங்கள் வயிற்றினில் கட்டி போமே. 144

போமே கவுசு குடல்வாதம் பொல்லா இருமல் மேல்மூச்சு
ஆமே பயித்தியம் வாயூறல் அதிக எலிகடி சுவாசமுடன்
தாமே சத்தி எரிகுன்மம் சந்து வாதம் குளிர்வெதுப்பும்
காமன் கணைபோல் தயத்துருவும் கனக கோடா சூடியிதே. 145

(29) சுராங்கிசம்

வெண்காரம் இரதம் திரிகடுகு மிதந்த வெந்திக் கந்தகமும்
நண்பா ஒரொன் றொருகழஞ்சு நல்லநேர் வாளம் இருகழஞ்சு
உண்பான் கடுகு ரோகிணியும் உறவே நாலு கழஞ்சாகப்
பண்பாய் முலைப்பால் விட்டரைத்துப் பருத்த குன்றி போலுருட்டே. 146

அரைத்தோர் குளிகை தன்னில் ஆனதோர் முலைப்பால் இஞ்சி
உரைத்திடச் சுரங்கள் எல்லாம் ஒருசா மத்தினில் விட்டேகும்
நிரத்திடும் சன்னி தோடம் நேரிடும் வாயு மந்தம்
துரத்துமென் றறிந்து கொள்ளு சுராங்கிசம் இதுவா மென்றே. 147

(30) அக்கினி குமாரன்

துத்தமும் துருசு நாபி துய்யவெண் காரம் சூதம்
வித்துநேர் வாளம் கந்தகம் வெள்ளைப் பாடாணம் தானும்
வைத்திடும் சரிநி றையாய் வகைபடக் கரிப்பான் சாறு
உத்திட அரைத்து ருட்டி உளுந்துபோல் உண்டை சேரே. 148

சேர்த்திடும் குளிகை தன்னைத் திரிகடுகு இஞ்சிச் சாற்றில்
மாத்திரை மூன்று நாளும் வகையுடன் இடுவீராகில்
தோத்திடும் சன்னி தோடம் தொந்தமாம் சுரமும் மாறல்
வீத்திடும் விடமும் சன்னி நாவில் திமிர்விட் டோடும். 149

சிக்கும் எண்பது வாதந்தான் சிலேற்றுமம் தொண்ணூற் றாறும்
நிக்குமந் தார காசம் நினைவறி வில்லா தார்க்கும்
கொக்கிய அசீர ணங்கள் சுகசன்னி சுரமும் பரவும்
அக்கினி குமார னுக்கு ஆகுமாம் பசுவின் பாலே. 150

(31) தோட ரத்தினாதி

அக்கிரா காரம் நாவி அரிதாரம் சாதி லிங்கம்
சுக்குடன் கந்த கந்தான் திப்பிலி மிளகு சூதம்
ஒக்கவே மனோசி லையும் ஒருநிறை யாகக் கூட்டி
இக்கணம் இஞ்சிச் சாற்றில் இரண்டுசா ம்மரைத் துருட்டே. 151

நிழலு லர்த்திக் கொண்டு நெருப்பினில் ஓடு காய்ச்சி
இளவரை யாய்வ றுத்து எலுமிச்சம் பழத்து நீரால்
இளகவே அரைத்து நன்றாய் இரண்டுசா மந்தான் மட்டும்
மிளகளவு உண்டை செய்து வேண்டனு பானம் செய்யே. 152

வாச மாம்திரி கடுகு மருவிய இஞ்சிச் சாறும்
ஆசையாம் அரத்தை சோகை ஆடா தோடை துளசிபுட்டில்
நாசமாம் சன்னி தோடம் நால்வகைச் சுரமும் நன்றாம்
தோசம் ரத்தி னாதியென்று சொல்லுவார் அறிவுள் ளோரே. 153

(32) சன்னி வாத வைரவன்

சுக்கு மிளகு திப்பிலியும் துய்ய கந்தகம் சாதிலிங்கம்
மிக்க நாபி இரதமுடன் வெண்கா ரம்சரி நிறைகூட்டித்
தக்க நிம்பப் பழச்சாறு தானே விட்டொரு சாமமரைத்து
மிக்க உளுந்து பிரமாணம் இதுவும் உண்டை நிழலுலர்த்தே. 154
உலர்ந்ததோர் குளிகை தன்னை ஒன்றுதான் தேனி லிட்டால்
சலஞ்செயும் விடசு ரங்கள் சன்னி ஈளை இருமல்
நலம்பெரும் ஆடா தோடைக் கசாயத் திடஅஞ் சனமாம்
பலந்தரும் சன்னி வாத வைரவன் என்று பேரே. 155

(33) சூசிகா பரணம்

கஞ்சா இலையும் கந்தகமும் கனத்த அபினி இந்துப்பு
மிஞ்ச ஊமத்தம் விதைசாதிக்காய் மிகுந்த யெருக்கின் பொடியுடனே
தஞ்சப் படவே கொடுவேலி தனித்த நாபி இரதமுடன்
நஞ்சப் பிறையணி கண்டனார் நமக்கே உரைத்தார் நலமாக. 156

எல்லா மருந்தும் சமன்கொண்டு இதமாய்ப் பொன் னூமத்தஞ் சாற்றரை
நல்லாய்ப் பகுத்த மிளகளவாய் நவிலும் சூசிகா பரணமிதே
சொல்லாத் தோடம் சன்னியல சுகிக்கில் நொச்சி இஞ்சியிலை
மல்லார் விசுளி பாண்டுசூலை மருவும் தேனில் அதிற்கொள்ளே. 157

(34) விடச்சுரக் குளிகை

கந்தகம் பச்சை நாவி கேடில்லா மிளகு சூதம்
வெந்தநேர் வாளம் தன்னை விடமது தள்ளிக் கூட்டிப்
புந்தியிற் பொருந்தும் அன்பாய்ப் பூசணிப் பருப்புக் கூட
இந்துண்டை உளுந்து போல ஒன்றிட விடச்சுரம் போமே. 158

(35) ஆனந்த வைரவன்

சாதி லிங்கம் வெண்காரம் தானே சூதம் நாபியுடன்
நீதி சுக்கு மிளகுதிப்பிலி நிறைசரி யாக வேவைத்து
மாது எலுமிச்சம் பழச்சாற்றால் வகைப்பட அரைத்துக் குன்றிபோற்
சேதப் படாமல் நிழலுலர்த்திச் சிமிழில் அடைத்துப் கொண்டிடுமே. 159

அடைத்த குளிகை ஒன்றெடுத்து ஆன இஞ்சிப் பிட்டுவகை
விடைக்கும் சுக்குக் கசாயத்தில் விகுத்த தேனில் இடுவீராய்
நடக்கும் சன்னி சுரதோடம் நவிலும் அஞ்சனம் தானாகும்
அடக்கம் ஏழுக்கும் ஆனந்த வைரவன் என்றறி வார்க்கே. 160

(36) விரோசன சிந்தாமணி

திரிகடுகு சீரகமும் கடுகுரோ கணியும்
சேர்ந்தமுருங் கைப்பூவும் சமனாய்க் கூட்டி
நெரியுடைய நேர்வாளம் இதுக்குச் சமனாய்
நீர்வார்த்த ரைத்துண்டை சூரைக்காய்ப் போல
அரியபல பனைவெல்லம் இளநீர் பால்நெய்
ஆனபனஞ் சீனிதனில் உள்ளே கொள்ள
கிருமியுடன் வாய்வுமந்தம் சீதக் கட்டு
கெண்டைவயிற் றுப்பிசமும் கிளிசு போமே. 161

காமாலை சோகைவிட பாண்டு ரோகம்
கதித்தபழஞ் சுரவகைக ளெல்லாம் ஓடிப்
போமேமந் தார காசம் இருமல்
புத்திமயக் கம்பித்த வெறியெ டுத்தல்
கூமரோகம் குன்மம் குடல்வா தங்கள்
குலையெரிதல் மார்க்கவாய் வுடனே குத்து
ஆமேயிந்த அவிழ்தம் அறிவுள்ளோர் கொள்வார்
ஆகுமாம் புளிப்பு மோரு மாமே. 162

(37) சேதுபந்தனம்

அதிவிடையம் குராசானி சாதி லிங்கம்
ஆனஊமத் தவிதைவ றுத்துக் கூட்டி

மதிசூதம் சாதிக்காய் லவங்க முடன்வசு
வாசிவிளாம் பிசின்மா துளையின் பிஞ்சு
துதிசெய் இதுசமனாய் நிறுத்தொன் றாகச்
சொல்நிறையாய் அபினிசரி தானுங் கூட்டிக்
கதிவிளங்கும் கஞ்சாவின் இலையின் சாறு
கதிக்கவொரு சாமம்நன்றா யரைத்தி டாயே. 163

ஊமத்தம் சாறு விட்டு உறவுசேர அரைத்து ருட்டி
நேமித்து ருத்திப் பணவெடைப் பிரமாணம் உண்டை செய்து
சேமித்த கிராணிக் கன்பாய்த் தேனதில் இடுவீ ராகும்
ஆமிந்த தைலம் கொள்ள வயிற்றுக் கடுப்பு அற்றுப்போமே 164

நிலையா தலால கிராணி நிசமாம் அதிசார கிராணி
பலஅனு பானத்தில் கொள்ளச் சாதிபத் திரிஆ வாரை
அலவிமலை தாங்கி எள்ளுக்கீரை ஆரைப்பத்துச் சேர வறுத்துத் 165
தொலையாத மோரில் கொள்ளச் சூலைநீ ரிழிவு போமே.

தொகுத்திடும் கிராணி யெல்லாம் சூழ்ந்திடும் குன்மம் எட்டும்
வகுப்புடன் அதிசா ரங்கள் வாய்வுடன் மேக வெட்டை
முகித்திடும் மூல ரோகம் முயங்கிய சிலேற்று மங்கள்
செகித்திடும் என்று ரைத்தார் சேதுபந் தனமிது வென்றே. 166

(38) புரந்தரநாத குளிகை

வெள்ளைப் பாடாணம் துத்தம் மேவிய பீத ரோகணி
வள்ளிய வகைக்கு இரண்டு வராகனும் இரதம் ஒன்று
தெள்ளுதாம் எட்டிக் கொட்டைத் தெளிவுடன் மூன்று கூட்டி
உள்ளஊ மத்தம் சாறுநாலு உறவுசேர் நாலு சாமம். 167

அரைத்திட்டு மிளகள வாக ஆனதோர் குளிகை சேர்ந்து
நிரைத்ததோர் வாதம் பித்தம் சிலேற்றுமம் இதுமூன் றுக்கும்

உரைத்திடும் முலைப்பால் ஆவின் பால்குளிர் தண்ணீ ராகும்
துரைத்திடும் அஞ்சாம் நாழிகை சுரம்விட் டேகுமென் றுரைத்தார். 168

(39) காந்த குலாந்தகம்

காந்தமும் சூதம் வெள்ளை கடியதோர் கவுரி லிங்கம்
போந்ததில் சரிநிறை யாகப் பொன்னாங் காணிச் சாறுவிட்டு
மாந்தவே ஒருசா மந்தான் வகைப்பட அரைத்து ருட்டிச்
சாந்த கையாந் தகரைச் சாறு சீலையிற் தடவே. 169
தடவிய சீலை தன்னில் தனிமருந் துருட்டி வைத்து
இடைபெரும் சட்டி தன்னில் இருநாழி உப்பை யிட்டு
நடைபெற அதன்மேல் வைத்து ரண்டுடன் படியுப் பிட்டு
அடவென்ச் சட்டி மூடி ஆனசீலை மண்தான் செய்யே. 170

செய்திடும் அடுப்பில் வைத்துத் தீயெரித் திரண்டு சாமம்
பையவே ஆற விட்டுப் பணவெடை தானெ டுத்து
உய்யுமாம் பனைவெல் லத்தில் உறவுசெய் திரண்டு வேளை
எய்திடும் ஏழாம் நாளில் இதுவினில் உப்பா மென்றே. 171

மின்றிடும் காணம் தானும் மிளகுவெள் ளுள்ளி யாகும்
கன்றினில் மறுபத் தியந்தான் கழித்தபின் தீரும் ரோகம்
கொன்றிடும் கிரந்தி யெல்லாம் குழிவாழை வாய்வுச் சூலை
நன்றிக ளாகு மென்று நாதனார் அருளிச் செய்தார். 172

வெடிசூலை புண்கு டோர விப்புருதி கண்ட மாலை
வடிமான பாணி யான வலுகரப் பானும் சிரங்கு
சடுதியிற் தீரு மென்று சருவாங்க வாதந் தானும்
பொடிநீ றாக ஓடிப் போகுமா மென்று ரைத்தார். 173

(40) வாய்வுக் குடோரி

சூதம்வெண் காரம் நாபி சுக்கொடு கடுக்காய் தான்றி
ஒதுகந் தகமும் தாரம் வளர்லிங் கம்வ ராகன்
நீதநேர் வாளம் அஞ்சு நிறைகூட்டிப் போசம் வேரின்
சாதகமான சாற்றில் சாமமிரண் டரைத்தி டாயே. 174

அரைத்திடும் மருந்து தன்னை ஆனதோர் குன்றி போல
நிரைத்திடும் இஞ்சிச் சாற்றில் நினைவுடன் மூன்று நாளும்
உரைத்திடக் குட்ட ரோகம் ஒதுங்குமீ னசமும் வாய்வு
இரைத்திடும் இளைப்பு இருமல் ஈரலில் வலியும் போமே. 175

வாத பித்த சிலேற்றுமமும் வயிற்றுள் கட்டி சயித்தியமும்
சூதக வாய்வு நீராமை சுரசன்னி தோடம் இவையனைத்தும்
பேதகம் இல்லாமல் தீரும் புளிப்புகை மாங்கிச மாகாதென்றால்
ஆதியரு ளால்எமக் குரைத்தார் அகத்திய மாமுனி ஆனவரே. 176

(41) மதன காமேசுர சிந்தூரம்

நவச்சாரம் இரதம் கந்தகமும் நன்றாய் ஒருபல மாகவைத்து
அமைத்தே செருப்படிச் சாற்றில் சாமம் ரைத்துப்கரு ஊமத்தை
சமைத்த சாற்றில் நாலு சாமமரைக் காசிக் குப்பியில்
இரைக்க நிறைய அடைத்து ஏழு சீலைமண் செய்துவையே. 177

களிமண்ணும் சோறு முட்டைக் கருவிட்டு அடைத்து வாயை
மொளியவே அடைத்து மூடி முன்சீலை மண்போலச் செய்து
இளியவே குறுணிப் பானை இருவிரல் மணலிட்டுக் குப்பிவைத்துத்
தெளியவே கழுத்து மட்டும் தெரியாமல் கொட்டி மூடே. 178

மூடியே சீலை யாலே முன்சீலை மண்ணை யெடுத்து
நாடியே செய்துவி நாயகன் வைரவ பூசை செய்து
தேடியா வாரை யாலே தேனே தொண்ணூறு நாழிகை
ஆடியே எரித்த மத்தி ஆற்றிப்பின் எடுத்துப் பாரே. 179

(42) தம்பனை

சாதிக்காய் கிராம்பு பச்சைக் கர்ப்பூரம் வராகன் இரண்டு
பேதியா தூரமத்தின் சாற்றினில் பேசியே நாலு சாமம்
நீதியால் அரைத்துச் செப்பில் நேசமாய் வைத்துக் கொண்டு
ஆதியால் புரலைப் பட்சத் தசனைமேற் கொள்வ தாமே. 180

ஆமே இரண்டு குன்றியெடை அளவாய்க் கொண்டாக் காலும்
சாமம் ஒன்று மட்டாகத் தம்பனை நின்று விளையாடும்

காமே வித்தைக் கிதுவீடாம் கட்டுப் படுத்தும் பிரமேகம்
போமே சருவ உட்டணமும் புண்ணு மாறும் என்றுரைத்தார். 181

(43) விரேசனம்

சுக்கு மிளகு திப்பிலியும் துய்ய கடுக்காய் இந்துப்பு
மிக்க கடுகு ரோகணியும் மீறாமல் கழஞ்சு ஒரொன்று
ஒக்கச் சரிகொள் நேர்வாளம் ஒன்று படவே எலுமிச்சம்
தக்க நிம்பழச் சாற்றரைத்துச் சலியா திடுவிரோ சனமே. 182

வெந்நீ ரிந்தப் பரிகாரம் மீறிக் களியில் பால்கஞ்சி
சொன்னோம் உறுதி கண்டால் சுரமும் குளிரும் மலமற்று
முன்னோர் சொன்ன மொழிகண்டு முயங்கக் கடவுள் அடிபோற்றி
மின்னே இப்படிச் செய்தாக்கால் வேறு வினையும் வாராதே. 183

(44) விரோசனக் குளிகை

இந்து கடுக்காய் மிளகுசுக்கு இதுவும் கடுகு ரோகணியும்
முந்த நிறைஎண் கழஞ்சுகொண்டு முதிரும் கரிய நேர்வாளம்
இந்தப் படியே அறுகழஞ்சு இனிய தேசிப் பழச்சாற்றில்
இந்தப் படியே அரைத்துண்டை இடுவீர் சுரைக்கா யளவே. 184

(45) விட மை

இரதம் கந்தகம் அரிதாரம் இனிய காயம் துருசுடனே
விரசம் பெறவே வெண்காரம் வெண்பா டாணம் மனோசிலையும்
சரச முடனே சரிசமனாய்த் தனிநேர் வாளம் இதுசமனாய்க்
கருங்கொட்டங் கச்சிக் கரிதான் கதித்த வராகனு மிரண்டே. 185

எல்லாம் கூட்டித் தேங்காய்ப்பால் இதமாய் மூன்று சாமம்மட்டும்
நல்லாய் அரைத்து வழித்துச் சிமிழில் அடைத்துக் கடியறிந்து
பல்லோர் புகழும் பயறளவு பகுந்து உள்ளுமே கொடுத்து
மெள்ள விடம்மீறில் தோள்தொடை மீதிற்கீறி மருந்து செய்யே. 186

செய்யே மருந்து இரண்டுபணவெடை சேர்ந்த குப்பை மேனிச்சாற்றில்
வையே கீறின வாயில்மருந்து தேய்க்க விடமும் மீறில்
வையே எள்ளுப் பிரமாணம் முலைப்பால் உரைத்துக் கண்ணிலிட
அய்யும் பேயும் சுரம்விடம் அலற்றும் சன்னியும் போமே. 187

போமே ஆடு மாட்டுக்கும் பொல்லாத அடைப்பன் சகலவிடம்
ஆமே சோளப் பயிர்கொட்டை அதனைத் தின்ற மயக்கமிவை
தாமே பூரான் எலிகடிதான் தருகா தோடிக் கடல்புகுந்து
போமே யென்று முனியுரைத்தார் பொருந்தும் பாசிப் பயறுபோலே. 188

(46) மேகநாதன் குளிகை

சாதிக் காயுடன் வசுவாசி சார்ந்த கிராம்பு சாதிலிங்கம்
ஊசிக் காந்தம் ஊமத்தம்விதை ஒன்று வறுத்து ஒருநிறையாய்
நீத அபினி இதுக்குச்சமன் நிறுத்து ஊமத்தஞ் சாற்றரைத்து
தூத எங்காய்ப் போலுருட்டிச் சுவறி நிழலில் உலர்த்திடுமே. 189

தீரும் வெந்நீர் தேனதனில் தெளிவாய் அரைத்துத் தான்கொள்ள
நீரும் சுடுத்துப் பெரும்பாடாய் நினைவு தப்பி வரும்ரத்தம்
ஆரும் அறியா நீரிழிவும் அதிக மூலக் கடுப்பதுவும்
மாறும் வாத பித்தசிலேற்பனம் வயிற்று வலியும் மாண்டிடுமே. 190

(47) ஆனந்த வைரவன்

நாபி சூதம் மனோசிலை கந்தகம்
மேவு சாதிலிங்கம் வெண்காரம் சமனெடை
நீவி நிம்பழச் சாற்றி லரைத்துண்டை
நிறையு ளுந்துப்பிர மாண மாகவே
வேவும் இஞ்சி முலைப்பாலில் இட்டிட
வாத சுரம்சன்னி குளிர்கூ றெல்லாம்
ஆவி யன்று தளராமல் ஏகிடும்
ஆதி ஆனந்த வைரவ னாமிதே. 191

(48) சுரத்திற்கு

அபினி இரதம் நேர்வாளம் ஆன கந்தகம் மடற்துத்தம்
தவனிடை யாரில் வசமாய்த் தானே வெற்றிலைச் சாற்றரைத்து
உவனி குன்றிப் பிரமாணம் ஒண்ணே இஞ்சிச் சாற்றிலிடத்
தவமே ஏழு நாழிகைக்குள் தருகா தோடும் சுரமழைத்தே 192

மாசில் வால வர்க்கு மாந்துண் டைதனை அரைக்க
ஆசையால் வாய்வி ளங்கம் ஆமை யோடு மிளகு
வாசமாம் பொடுதலைக்காய் வசம்பு திப்பிலி கழற்பருப்பு
கூசாமல் சரிநி றையாய்க் கூட்டி வைத்தரைத் திடாயே. 193

அரைத்த மருந்து பொடுதலைச்சாறு அம்மி தன்னிலே விட்டரைத்து
நிரைத்த சூரைக் காயளவு நிழலி லுலர்ந்த குளிகைதனைச்
சுரத்தில் இருமல் கழிச்சலுக்குச் சொற்கண்டங் கத்திரிக் கசாயத்தில்
உரைத்து உண்டை தான்கொடுக்க உடம்பு பிணியும் மாறிடுமே. 194

வாந்தி பொரும லுக்கு வகைவேலிப் பருத்திக் கசாயமதில்
ஓய்ந்த வெகுவாய்க் கழிச்சலுக்கு ஓமக் கசாயந் தன்னிலிடக்
காந்தி யான மாந்தத்துக்குக் கசாயம் அறிந்து இடுவீரால்
மாந்தம் விட்டுத் தானகலும் வளரும் பிள்ளை யாமென்றே. 195

(50) குன்ம குடோரி

சூதம் இரண்டு வராகனெடை சோம னாதி வராகனிந்துச்
சேதம் இல்லாச் சீரகமும் சேர்ந்த வராகன் தான்நாலு
பேதம் இல்லாப் பேய்ப்பாகற் சாற்றால் பேணி யரைத்துண்டை
ஓதும் காய்க்குள் வைத்துண்டை உறவு சேர நூலகத்தே. 196

சாணி கொண்டு பொதிந்துஉமிக் காந்தல் தனிற்புடம் போட்டுப்
பேணி முன்போலச் சாறுவிட்டுப் பெருக்க மாக வேயரைத்துப்
பூணும் சுண்டைக் காயளவு பொருந்த உண்டை நிழலுலர்த்தி
வேணும் தேனில் உட்கொள்ள வியாதி தீரும் வகைகேளே. 197
எட்டுடன் குன்மம் தீரும் இனியதோர் மந்தம் வாய்வு
உட்டணம் வாய்வுச் சூலை உதிரத்தில் கட்டி போகும்
அட்டிலா மிளகோ டுப்பும் அறைக்கீரை மிளகு நீரும்
திட்டமாய்ப் பருகு வீராய் செகத்தினில் வாழ்வா ரென்றே. 198

(51) புட்ப விரோசனம்

சூதமும் ஒன்ற தாகும் துலங்குகந் தகந்தான் இரண்டு
மாதுநேர் வாளம் மூன்று மணியாத ளைக்கிழங்கு நாலு
நீதவெண் காரம் அஞ்சு நேர்சிற் றாமணக்கோ டாறு
கோதில் லாக்கொன்றை ஏழு குளிர்ந்தி டும்காய் எட்டே. 199

சிவதைவேர் ஒன்ப தாகும் சென்றிடும் புரசம் வித்து
நவமெண் பத்தாய்க் கூட்டி நல்லதோர் திருகு கள்ளி
முவரியாய்ப் பாலை விட்டு மூன்றுநாள் அரைத்துத் தேங்காய்க்
கவரிக்கண் திறந்து இட்டுக் கன்னிக்கொம்பில் அடைத்தி டாயே. 200

அடைத்துப்பா தாள எந்திரம் ஆகவே தைலம் வாங்கிப்
புடைத்தபீங் கானில் வைத்துப் புட்பத்தில் தடவி முகர்ந்தால்
நடைக்கொரு தரமே கழியும் நன்றாய்த் தாகிற் புட்பம்
திடத்துடன் எரித்துப் போட்டுச் சீக்கிரம் சாப்பிடு வாயே. 201

(வேறு)

தேங்காய்க் கண்திறந் ததனில் தெளிந்தநேர் வாளம் பேய்ப்பீர்க்கில்
பாங்காய் வகைக்குப் பலமரைதான் பண்பா யிட்டு முளையடித்து
ஆங்கான் புதைத்து எட்டாநாள் அடவாய் எடுத்துச் சீலைமண்ணைத்
தாங்க மூன்று தரஞ்செய்து சாணரை அகலம் குழிகெல்லே. 202

கீழினிற் கலசம் வைத்துத்தலை கீழாய்த் தேங்காய் மேலே
சூழவே எருவ டுக்கிச் சுருக்கெனத் தீயைப் போட்டுத்
தாழ்விலாக் கலசந் தன்னில் தைலத்தை வாங்கி புட்ப
வாழ்விழி யாளே தோய்த்து வாசினை கொள்ளப் பேதி. 203

பேதிதான் பொறுக்கும் மட்டும் புட்பத்தை முகந்து பார்க்கப்
பேதிதான் பொறுக்கா தென்றால் புட்பத்தை எரித்துப் போட்டு
நீதியாய் வெந்நீர் விட்டு நிறையவே அசனம் பண்ண
ஆதிமா முனிவன் முந்நூல் அறிவினால் உரைத்த தாமே 204

(52) மேக சஞ்சீவி மாத்திரை

சாதிலிங்கம் குராசானி ஓமம் காந்தம்
சாதிக்காய் வசுவாசி காசுக் கட்டி
சோதிலங்கும் அக்கிராகா ரம்கிராம்பு துத்தம்
துலங்கவோ ரொன்றுநாற் கழஞ்சு கூட்டி
நீதிலங்கு ஊமத்தவிதை வங்க பற்பம்
நிகரில்லா சூதபற்பம் கழஞ்சோ ரொன்று
மாதிலங்கும் அப்பிரகச் சிந்தூ ரந்தான்
வகைப்படியே இருகழஞ்சு வகுத்துச் சொன்னோம். 205

பா. 207 இல் சீர் ஒழுங்கில்லை.

சொன்னபடி அபினுமிரு கழஞ்சு தொகுத்து
அனைத்துங் கூட்டிப் பொடிநீர் தன்னில்
மன்னுயிரும் மஞ்சாடி யளவ தாக
வகுத்துமுறை செய்திடிலோர் மாதே கேளீர்
முன்னேவினை யாலெழுந்த பிரமே கந்தான்
மூவேழு வகையுடனே தீரும் திண்ணம்
மன்னுதித்த குருமுனிவ ரிசையிது தந்த
மருவுசஞ் சீவியென்னும் மாத்திரை தானே. 206

(வேறு)

சாதிக் காய்க்குப் போடதி விடை வில்வப்பழந்
தேனுடன் வெரித்துல கிடவே ஆக மோக
மாக மீறி ஆறு போல வீரர்தான்
மேக ரோக மான தோடுமே. 207

(53) மேகநாதன் மாத்திரை

திப்பிலி மிளகு சுக்கு செய்ய கந்தகம் நீள்நாபி
இப்புவி யுள்வெண் காரம் இதுசமன் இரதம் கூட்டி
மெய்ப்பொருள் நொச்சிச் சாற்றில் விட்டரைத் துண்டை எள்போல்
ஒப்பிசைத் தனுபா னத்துடன் கலந்து கந்து தின்னே. 208

தின்றிடில் காய்ச்சல் வாதம் சீரிய சுவாசம் மேகம்
வண்டுரை சூலை சன்னி வாதமுள் சீதம் எல்லாம்
மன்றினில் கதிரோன் கண்ட வல்லிருள் என்ன நீங்கும்
நன்றிக மேக நாதன் நதிரமெனும் குளிகை தானே. 209

(54) சன்னிசுர மாத்திரை

சிற்றரத்தை மிளகுமஞ்சள் முட்டைத் தோடு
செய்யசிறு திப்பிலியும் திறமாய் நல்ல
மற்றரத்தை கத்தூரி மஞ்சள் வீட்டில்
வளருகின்ற ஒட்டடைத் தூளுடன் இன்னும்
நற்றரத்தைக் காசதிவிடை சுக்குக் கூட
நன்றாக ஒருநிறையாய்ப் பொடிதான் பண்ணி
ஒற்றகுழ லிலடைத்து ஒருபண வெடைதான் ஊத
ஓடும்விடம் சன்னிசுர முமலைந்தோ டுமென்றார். 210

(55) புகைபிடிக்கத் திரி

துய்ய மிளகு திப்பிலி துலங்கும் மஞ்சள் மரமஞ்சள்
வெய்ய சதகுப்பை கத்தூரிமஞ்சள் விளங்கும் தீப கர்ப்பூரம்
செய்ய சமனாய் சேர்குன்றி சேர்ந்த சாறு விட்டரைத்து
பையச் சீலை தனிலூட்டிப் பதத்தில் திரியாய் உலர்த்துவதே. 211

உலர்ந்த திரியை அனல்கொளுத்தி உகந்த நாசி தனில்பிடிக்க
அலந்து தலைநோய் கண்ணோவும் அதிய சலத்துப் பீனசமும்
பிலத்த பிடரி முகவாத பிறகே இசிக்கும் சன்னியும்
நிலத்தில் காணா தோடிவிடும் நிச்சய மான திரியிதுவே. 212

(56) இரசம் கட்டிச் சிந்தூரமாக

வெள்ளைப் பாடாணம் இரண்டு வராகனும் பொடிதான் செய்து
ஒள்ளிய சட்டி தன்னில் உடன்பாதி பொடியைத் தூவி
தெள்ளிய இரதம் இரண்டு வராகனும் குளித்துள் விட்டு
உள்ளதோர் பொடியைத் தூவி ஒப்பர வாக மூடே. 213

செப்புக்கின் ணத்தால் மூடிச் சீலைமண் செய்து சட்டிக்கு
ஒப்பர வாக மூடி உடன்சீலை மண்தான் செய்து
தப்பாத அடுப்பில் வைத்துத் தான்கம லாக்கினி கொண்டு
ஒப்பர வாயெ ரிக்க ஒருபத்து நாழி கையே. 214

ஆரவிட் டெடுத்து வெண்காரம் விட்டு குக்க வேதான்
சேரவே வெந்து ருக்கிச் சேர்ந்திடும் குளிகை யாகப்
பாரெனும் சிந்தூ ரத்துக் காமெனும் குளிகை தன்னைச்
சீர்பெரும் தமிழ்வல் லோர்கள் செப்புவார் திண்ண மென்றே. 215

(57) இரச குளிகை

இரதம் காயம் இந்துப்பு இனிய அரிதார மனோசிலையும்
சரசக் கடுகு திப்பிலியும் தானே வகைக்கு வராகனிரண்டு
விநோத மான நேர்வாளம் வராக னொன்று தான்கூட்டி
அரசம் பெறவே தேன்விட்டு அரைத்து வகையாய்ச் சிமிழடையே. 216

வாத மான சுரத்துக்கு மருவு திப்பிலியி லிடவும்
ஓது பித்த சுரத்துக்கு உகந்த கடுக்காய்க் கசாயத்தில்
தீது சிலேற்றும சுரத்துக்குத் திப்பிலிப் பொடியி லிடவும்
பாத விடச்சுரத் துக்குப் பசுந்த சுக்கில் இடுவீரே. 217

எள்ளுப்போல் இதனைக் கண்ணுக்கு இனியிடச் சன்னி தீரும்
பிள்ளையில் லாத பேர்க்கும் பெருஞ்சூதகம் இல்லா தார்க்கும்
வெள்ளாட்டின் பாலில் கொள்ள வேண்டிய பாலும் கஞ்சி
வள்ளல்தம் அருளால் இந்த வண்ணம் செய்மாறு மென்றே. 218

(58) போசன குளிகை

சுக்கு மிளகு திப்பிலியும் துலங்கு மஞ்சள் வண்ணமுடன்
மிக்க காயும் வாலுளுவை விளங்கும் வெள்ளைச் சாரணைவேர்
முக்கா வேளை மால்கிழங்கு மோதகம் வசம்பு சீரகமும்
சிக்கும் செவ்வியம் சித்திரமூலம் சிறக்கும் திப்பிலி மூலமுமே. 219

சாதிக் காயுடன் நவச்சாரம் சத்தி சாரம் எவச்சாரம்
நீதிப் படியே இவைசமனாய் நிறுத்து வறுத்துத் தானிடித்து
மாதர்க் கரசே அம்மிதனில் வைத்த எலுமிச்சம் பழச்சாற்றால்
சோதித் தரைத்து வகையாகச் சுண்டை யளவு உண்டைசெய்யே. 220

இந்த உண்டைக் கனுபானம் இளவெந் நீரில் தான்குடித்தால்
மந்த மான வாய்வுகளும் முதிர வாய்வுத் திரட்சி யெல்லாம்
வந்த குன்மம் மகோதரமும் வயிற்றில் சருவ வியாதிகளும்
முந்திக் குடல்வாத மூலவாய்வு முளுவை யளுவை தான்போமே. 221

(59) இரதம் முறிந்த சூலைக்குப் புகை

எருக்கலங் கரியும் இரண்டு இனிச்சாதி லிங்கம் ஒன்று
சுருக்கமாய்ப் பொடிதான் செய்து சொன்னபூ வரசம் பட்டை
விருப்பமாய் இடித்து லர்த்தி வெறுஞ்சுங்கான் தன்னில் வைக்க
பெருக்கமாய் மருந்த தன்மேல் பின்னுமேற் பட்டை வையே. 222

வைத்திடும் நெருப்ப தன்மேல் வாங்குவது எருக்கங் குச்சி
உத்திடும் மூன்று நாளும் உறவுசேர் அந்தி சந்தி
பத்தியம் ஒன்றும் ஆகா பாங்குடன் வெந்நீர் கூட்டிச்
சுத்தமாய் ஆறு நாளும் சுகமுடன் கற்ப தாமே. 223

கருதி ஏழாம் நாளில் கரிவிளக் கெண்ணெய் தேய்த்து
உறுதியாய் உச்சி யிட்டு உடன்வெந் நீரால் முழுகி
குறுகிய கோழிக் குஞ்சு குறுமிளகு உப்புக் கூட்டி
வெறுவா யால்மிளகு நீரை மிகவுடன் கூட்ட நன்றே. 224

நன்றெனும் கபால சூலை நாடுபுண் கிரந்தி மேகம்
கொண்டிடும் வெடிகு லைப்புண் குறுகிய அரையாப் போடு
வண்டணி குழலாய் வாத சூலையும் கரப்பன் ரோகம்
பண்டுசேர் முனியு ரைத்தார் பாங்குடன் தீரு மென்றே. 225

(வேறு)

கருங்குங் கிலிய மரமாம் கரியுடன் வகைக்கு ஆறு
தருஞ்சாதி லிங்கம் இரண்டு தானிவை ஒன்றாய்க் கூட்டி
வரும்எலு மிச்சம் பழச்சாறு விட்டரை வழித்து எடுத்து
ஒருநிறை யாக ஒன்பதுண் டையாய்ப் பிடித்தி டாயே. 226

சுங்கான் குழலும் புதுசாகச் சோடித்த மருந்ததன் மேல்வைத்து
தங்காமல் நாலரை நாளும்தான் சவியா மறுபத்தியம் அப்படியே
வெங்காயம் மோரும் சோறும் வேண்டிய ஒன்பது நாளில்
இங்குப்புப் புளித்த விர்த்து எத்திபத் தக்கது பாரே. 227

ஒன்றுவிட் டொருநா ளாக உறுதியான தயிரை வார்த்து
நன்றென மூன்று முறை நயந்துபின் னான பின்பு
கன்றெனும் ஆம ணக்கம் கருதியே எண்ணெய் வார்த்து
உண்டெனும் மூன்று முறையே உறுதியாய் முழுகு வாயே. 228

இரதம் முறிந்து கைகால் இனிய சூலைக் கட்டுனதும்
சுரத மான கிரந்திப்புண் சூலை முடக்கம் தொராத
விரசம் பெறவே அரையாப்பு மேக வெட்டை வெடிசூலை
பர்வும் தொடைவாழை கண்டமாலை பறங்கிப் புண்ணும் தீர்ந்திடுமே. 229

(60) கண்ணிற்கு இரத்தினாதி மாத்திரை

துத்தமே துருசு நெல்லி துய்யதோர் கடுக்காய்கர்ப் பூரம்
சித்தமாம் பொன்னாங் காணி சிறுகீரை பூலா வேரும்
வித்தரப் புளியம் பூவும் வெண்தலை யோடு தன்னில்
ஒத்ததோர் ஒரிலைத் தாமரை வேரிவை ஒக்கக் கூட்டே. 230

முத்தொடு பவளம் கழஞ்சு இரும்புபொன் வெள்ளி செம்பு
இத்தனைத் திறத்துக் கெல்லாம் எலுமிச்சம் பழச்சாறு விட்டு
மெத்தென அரைத்து உண்டை வெய்யிலில் படாது லர்த்தி
உத்தமம் முலைப்பால் வார்த்து உரைத்திரு கண்ணில் தீட்டே. 231

குத்தமாம் குந்தம் மாலை முழிக்குருடு சுக்கிரப் படுவன்
வைத்திடும் ஆணிப் பூவும் மணிநீல காசப் பூவும்
பித்தமே படலம் காசம் மூடனும் மாசும் தீரும்
சத்தியப் படியே சொன்னோம் சாத்திரப் படிதப் பாதே. 232

(61) கண்ணிற்குப் பச்சைத் தாமிராதி

துத்தமே துருசு சங்கு துய்யநற் பவளம் செம்பு
வைத்திடும் ஆமை யோடு வகைப்படி சரிநி றையாய்
எத்திய பனைமட் டைச்சாறு எலுமிச்சம் பழத்தின் சாற்றில்
உத்தியே அரைத்து ருட்டி உண்டைதான் சேர்த்தி டாயே. 233

உண்டையை முலைப்பால் தன்னில் உரைத்திரு கண்ணி லிட்டால்
மண்டையில் கனப்பும் பித்தம் மருவிய கண்ணில் காசம்
வண்டுரை பூப்படலம் மனிதனில் நீல காசம் பூவும்
சண்டப் பிரசண்டன் பச்சைத் தாமிராதி யாகும் தானே. 234

(62) கிரந்திப் புண்ணிற்கு

கந்தகம் இரதம் அரிதாரம் கூடியவெள் ளைமனோ சிலையும்
விந்தைவேர் விடத்தோம வேர்ப்பட்டைச் சரிநி றையாய்ப்
பந்தமாம் பாகற் சாறு பரிந்தேழு நாள ரைத்து
அந்தமாய்க் குன்றி போல ஆனதோர் குளிகை சேரே. 235

சேர்த்தது குளிகை தன்னைத் தினமொன்று எருமை மோரை
வார்த்துரைத் திடவே அந்தி சந்தியும் ஏழு நாளும்
கார்த்திடக் குணமாம் ஆவின் கணிமோரும் பழைய சோறும்
மார்த்துடன் கூட்டத் தீரும் வியாதியின் வகையு ரைப்பன். 236

சொல்லிய கிரந்தி ரோகம் தொடைவாழை கண்ட மாலை
பல்லவர் புகழும் புற்று பவுத்திரம் விப்பு ருதியும்
மெல்லிய வெடிகூ லைப்புண் மேவிய பாத சக்கரம்
நில்லுமென் றுரைக்கும் கண்டாய் நேசமாய் முனியு ரைத்தார். 237

(63) கர்ப்பூராதிப் பொடி

வெள்ளைக் காக்கணம் வேர்த்தோல் மிகவும் அதன்வி தையும்
தெள்ளிய வட்டச் சாரணை சிறுகீரை கொடுப்பை வேரும்
வள்ளுநா யுருவி வேரும் வரட்பூலா வேரும் ஒன்றாய்
உள்ளதோர் படிசமன் வைத்து உறவுசேர அரைத்தி டாயே. 238

சம்பீரப் பழச்சாறு விட்டுத் தனித்ததொரு சாமம் ஆட்டு
கம்பீர மாய ரைத்துக் கடுகட்டியாய் வில்லை செய்து
நம்பிவெண் சீலை சுத்தி நாட்டினில் எருவ டுக்கி
அம்பினில் கடிது பச்சைக் கர்ப்பூர முந்தான் கூட்டே. 239

கூட்டிய சம்பீரச் சாறு குளிரவே துளியும் விட்டுத்
தேட்டமாய்ப் பிதிர்த்தெ டுத்துச் சிமிழினில் அடைத்துக் கொண்டு
ஒட்டிய கண்ணில் இட்டால் மருவுகண் ணோவு மாறும்
பூட்டும்நீர்ப் பாய்ச்சல் பற்பல ரோகங்கள் காசம் போமே. 240

கண்ணினில் கடுத்த மாலை கருப்பு வெண்ணோக் காடு
விண்ணில் சூடு மாங்கிச வளர்த்தி சுக்கிரப் படுவன்
நன்னிய தொண்ணூற் றாறு வியாதியும் ஏகு மென்று
அண்ணலார் அருளி னாலே ஆகுங்கர்ப் பூராதி தானே. 241

(64) பீதரோகணி மாத்திரை

பீதரோ கணியும் சுக்கு பெருத்திடும் தலையி னோடு
நீதமாம் ஓரிலைத் தாமரை வேரிவை நிறைமுன் றாகத்
தூதனாம் துருசு பச்சை வளையலும் சொல்லிரண் டாக
வேதமாம் பன்றிக் கொம்பு வெள்ளைக்காக் கணத்தி வேரே. 242

இதுதனக்கு ஒன்று கூட்டி ஏற்றதோர் முலைப்பால் வார்த்து
கதிபெற அரைத்துச் சாமம் கயிறுபிடித் துலர்த்தி வைத்து
துதிபெற கண்ணில் தோடம் தொண்ணூற் றாறுக்கு மாகும்
அதிசய மறுப டாத அனைத்து நோயும் போமே. 243

(65) புறவளையம்

சாணியால் புறவ ளையம் தாங்கவே கட்டி அண்டம்
முணியே உடைத்து வெள்ளைக் கருவுள் விட்டு மெள்ளப்
பூணியே முழித்துப் பார்க்கில் பொங்கிய சிவப்பு மாறும்
ஆணியும் பூவும் துன்மாங் கிசமும் அறுக்கு மென்றார். 244

(66) ஏலாதி மாத்திரை

நல்லேலம் லவங்கம் அதிமதுரம் இருவேலி மிடிசுக்கு
நன்னாரி முந்திரிகை பேரீஞ்சு லாமிச்சு
கோரோசனை தாளிச பத்திரி கோட்டம் சடாமாஞ்சில்
சந்தனம் தேவதாரம் தன்னுடன் திப்பிலி யிலுப்பைப்பூ

இவைதனித் தனிக்கழஞ் சாகவே வராகன்
கடுகுரோகணி கழஞ்சொரு பத்து வீராயிளநீர் வார்த்து
விழுதா யரைத்துண்டை குன்றியள வாகவே
வெயில்படாத வகைசெய்து பாலாமொழி மங்கை
இளநீர் மனிற்கொடுக்கப் பயித்திய சுரந்தீரும்
பண்பான குதிரை வாலிக்க சாயத்திலிடப் பலசன்னியுந்தீரும்
நெய்யிலிட நீர்ச்சிறுப்பு நிற்கும் நீர்க்கடுப்புக்குத்
தையல் முலைப்பாலில் தானகலும் – அய்யமே
வாகாய்சு வாசத்துக் குத்தேனிலிடப்
போயகலு மென்றே புனத்திலே – ஞாயமாய்
வாதந் தனக்கு வருமிஞ்சிச் சாற்றிலிடப்
பூது கடலிற் புகுதுமே – சீதநறுங்
கந்தமலர்ப் பூங்குழலாள் காசினியில் மானிடர்க்கும்
இந்தமருந் தாமென் றுரை. 245

(67) இராசகேசரி மாத்திரை

எல்லாரும் போற்றுராச கேச ரிவடிவைச்
செவ்வாய் மடமயிலே செப்பக்கேள் – சவ்வாபொதி
கோரோ சனைகாந்தம் குங்குமப்பூ கோட்டமகில்
சீரகம் தாரம் சிறுதேக்கு – ஓராய்
நவமாம் பவளமுத்து நற்சீரி லுப்பை
இவமான நல்ல லவங்கம் – சிவமான
நன்னாரி லாமிச்சு நற்பொன் மெழுகுலிங்கம்
கன்னார் கழுநீர் சிறுகிராம்பும் – எந்நாளும்
ஏலம் தருமுந் திரிகையி யல்பாந்தக்
கோலதிப் பிலிமூலம் முத்தக்கா – சீலமதாய்க்
கலையுட கொம்புகடுகு ரோகணிபே ரீந்து
நிலைமைபெறு திப்பிலிநேர் வாளம் – நல்முடைய
சாத்திரவே திதலமாம மணிக்கரு டப்பச்சை
மாத்திரையிற் கீரிபல வாகுடன் – காத்திரமாய்க்
காணச்சார் சிறுமிளகு கல்மதம்வெண் காரசிவதை
வேணும் படியிவை வெண்பாலில் – காணுபடி
சேத வொருநிறையாய்ச் செவ்விளநீர் முன்னரைப்பு
மாதர் முலைப்பாலில் மற்ற நாள் – தூதுசேர்
மாதுளம்ப ழச்சாற்றில் மண்ணரிய மூன்றாநாள்
தூதுசேர்க ரும்பு தலைநாளில் – வீசுபுகழ்

பா. 245 இல் சீர் ஒழுங்கில்லை

பன்னீரஞ் சானாளில் பாங்கா யரைத்ததனை
எந்நிலமும் ஏத்த எடுத்தின் புறவேதான்
சுண்டைக்காய்த் தண்டி சுகமா யுருட்டிநிழல்
பண்டுமுனி சொன்னபடி யேதானும் – தண்டமுறச்
தாபசுர மானாலும் சத்திவிக்க லுள்ளதுவும்
கூவுமெனச் சுக்குகுறுந் தொட்டிவேர் – ஆவலுடன்
காய்ச்சி யிரண்டொன் றாக வடித்திறுத்து
தேய்த்தத னிற்குளிகை செய்திடுகில் – போச்சுதே
தாப சுரமயக்கஞ் சத்திவிக்க லுள்ளதுவும்
ஆவலுடன் சொன்னேன் அறிந்துகொள் – கோபமுறு
சன்னிகுளிர்க் காய்ச்சலுக்குத் தக்கயிஞ்சிச் சாற்றிலிடு
உன்னிதமாய்ச் சேர்பனு வல்கேள் – முன்னிதமாய்
மேகசலக் கழிச்சலுக்கு மேதித் தயிரிலிடு
சோகை கிறுகிறுப்பு துன்மாங்கிசம் – பாகுடனே
செவ்விளநீர் வெந்தவித்துச் சீனியதில் மேல்விசரி
நவ்வி விடத்தீரும் நாடிக்கேள் – எவ்வவிடும்
ஈளையிரு மல்விக்க லேகிவிடும் பார்தனிலே
நாளைமுத லச்சமதை நாடிக்கேள் – மீளவுந்தான்
தாதுவிழலை யென்று தயங்கித் திரிவார்க்குத்
தூதுவளை வேர்ப்பொடியில் துய்யபால் – நீதிபெறக்
கிராணிக் கடுப்புளைவு கெண்டை கழல்வாய்வு
பிராணிவகை யாட்டின் பெரும்பால் – திருனிதமாய்க்
காமாலை பாண்டுக்குக் கைதோ ணியுமிளகும்
நாமாகக் காய்ச்சியிடு நன்றாக – தாமாக
வாத கரப்பன் வலிகுன்மம் வாய்வுக்கும்
நீதியுகாய் வேர்ப்பட்டை நாய்வேளை வேர்நெருஞ்சி
ஈதுமுடி பேறுண் டனுபானம் – ஏந்திழையீர்
இன்பநலம் பேசும் இயற்றமிழ் தன்முனிவன்
பண்டுரைத்த வாறுசொல்வோம் பார். 246

(66) மேக வெட்டைக்கு மாத்திரை

காரியம் கரண்டி தன்னில் கதித்தநல் லெண்ணெய் குத்தி
சீரிய அடுப்பில் காய்ச்சிச் சிறக்கவே உருகும் போது
பாரிய இரதம் விட்டுப் பண்புடன் மத்திச்சுக் கல்லில்
ஆரவே கொட்டிக் கல்லால் அரைத்திடப் பொடிய தாமே. 247

பொடியுடன் சாதிக் காயும் பேர்ந்திடும் சாதி பத்திரி
வடிவுள்ள லவங்கம் சொன்ன வகைப்படி சமன தாக
அடவுசேர் வளைப்பூச் சாறு ஆனதோர் தென்னம் பாளை
திடமுடன் விட்ட ரைத்துச் சேர்த்திடும் குன்றி போலே. 248

ஆவாரைக் கசாயம் தன்னில் ஆழாக்கு இறுத்துக் கொண்டு
மேவிய குளிகை ஒன்றுஇட மேக வெட்டைத் தீரும்
தாவுநீ ரிழிவும் சலக்க ழிச்சலும் பிரமே கந்தான்
ஆவிவிட் டகலும் என்று ஆனதோர் முனிவர் சொன்னார். 249

சொன்னதோர் வார்த்தை கேட்டுச் சுகமுடன் மானி டன்தான்
பின்னையும் புளிப்பு கைப்பு பேணியே கிரந்திப் பண்டம்
அன்னமே ஆகா தென்று அரனுமைக் கருளிச் செய்தார்
தின்னமே அவிழ்தம் கொண்டால் சீக்கிரம் வியாதி போமே. 250

(69) வதன பிண்டி

வெள்ளுள்ளி பலந்தான் நூறு மிகுபனை வெல்லம் பாதி
எள்ளுமே அதனில் பாதி இனிதாவின் மோரும் பதக்கு
நள்ளிய நறுநெய் நாழி நல்லெண்ணெய் நாழி கூட்டித்
தெள்ளியதாய் அடுப்பில் ஏற்றிக் தீங்கறப் பதமாய்க் காய்ச்சே. 251

திரிகடுகு ஓமம் காயம் சேர்ந்திடு லவணம் அஞ்சு
புரிதரும் கொத்த மல்லி புகளிரு நாகப் பூவும்
சரிஇரு சீரக முடனே தானெனும் விளங்கம் போலாம்
அரியதோர் இலவங்கப் பட்டை அத்தித்திப் பிலிகி ராம்பே. 252

சித்திர மூலம் செவ்வியம் திப்பிலி மூலத் தோடு
வெத்திய லவங்க பத்திரி விடையம் கடுகு ஏலம்
கொத்தி வெட்பா லரிசி குராசடனி வாலுளு வையும்
பத்திசேர் பலந்தான் ஒன்று பாங்குடன் இறுத்தி டாயே. 253

இடித்திடும் மருந்தே ஒன்றாய் இசைந்திடக் கொட்டிக் கிண்டி
திடத்துடன் பதந்தான் பார்த்துத் தீயைவிட் டிறக்கி வைத்துப்
பிடித்துடன் இரண்டு வேளைப் புன்னைக்கா யளவு கொண்டால்
துடித்திடும் வியாதி தீரும் வகைதனைச் சொல்லு வோமே. 254

சூசிகா வாய்வு சன்னி சுரம்சயம் காச ரோகம்
வாசியாம் வாதம் வாய்வு வயிற்றினில் உதிரக் கட்டி
ஊசிபோல் உளுவை கெண்டை உடலினில் குத்துச் சூலை
மாசிலான் அருளி னாலே வலியத்தும் ஓடு மென்றே. 255

பிள்ளையில் லாத பேர்க்கும் பெதுப்பி னில்லா தார்க்கும்
வள்ளல்தம் அருளி னாலே மானிடர்க் குரைத்த நூலைத்
தெள்ளுதாய்க் குறுமு னிவனும் செப்பினார் இந்த வண்ணம்
உள்ளநோய் எல்லாம் தீர்ந்து முதுமைபோய் இளமை யாவார். 256

(70) பீனசத்திற்குச் சூரணம்

சன்ன லவங்கம் அதிமதுரம் சதகுப்பை மகரப் பூவுடனே
வன்ன மாமிரு சீரகம் வகைக்குவ ராகன் எட்டு
இன்னம் கொத்த மல்லி இதுக்குச் சமன்தான் கூட்டிச்
சொன்னேன் சீனி கற்கண்டு தொகையாய் இதுக்குச் சரிகூட்டே. 257

கூட்டி யேவெரு கடிதூள் கொண்டிடும் இளவெந் நீரில்
வாட்டிய பீனி சங்கள் மருவிய பித்த ரோகம்
தீட்டிய சிலேற்ப னங்கள் சிறுநீரில் அடைப்பு மேகம்
நாட்டிய ரத்த பித்தம் நாடாது என்று சொன்னார். 258

(71) அரோசிய சிந்தாமணி

வில்லைமுன்னை வாகையுடன் குமிழ வேரும்
விதமான பாதிரையும் கண்டங் காரி
சொல்லரிய பேராமல்லி சிற்றா மல்லி
சிறுநெருஞ்சி வகுமுள்ளி வகையொன் றுக்குப்
பல்லவர்ச்சொல் பலம்பத்து நறுக்கி வெட்டிப்
பாண்டத்தி லிட்டுஇரு தூணிநீர் வார்த்துச்
சொல்லரிய ஒருவிறகாய் எரிதா னிட்டுச்
சோர்வில்லா தெட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சே. 259

கோட்டம் திப்பிலி மிளகேலம் கொத்த மல்லி நாணல்பூ,
நாட்டில் சுக்கு அகில்மாஞ்சில் நன்னாரி முத்தம் விலாமிச்சு
தீட்டும் சந்தனம் சாதிக்காய் தேவ தாரம் இருவேலி
ஈட்டும் லவங்கம் இந்துப்பு இனிய தாளிச பத்திரியே. 260

மாசிலான் அருளி னாலே மானிடர்த் தமக்குத் தீரும்
ஆசிகா வாய்வு சன்னி சுரமேக வெட்டை வாந்தி
வாசியாம் வாத பித்த சிலேட்டுமம் பீனி சங்கள்
பாசிபோல் பருதி கண்ட பனியது போல நீங்கும். 262

(72) உடும்புச் சூரணம்

பாகுடன் உடும்பு வெந்நீர்ப் படுத்தியே குடலை வாங்கி
வாகியே நேசமாந் திரிகடுகு மகரப்பூ தேசா புரமும்
வேகமாம் காயம்வெள் ளுள்ளி விரவுமோர் பலமாய்க் கொண்டு
ஆகவே உள்ளி நீங்கல் ஆமென மருந்தொன் றாக. 263

கூட்டியே வயிற்றில் வைத்துக் குறைதீர நூல்கொண்டு தைத்து
ஆட்டிய பாண்டத் துள்ளே ஆறுடன் மரக்கால் நீரை
மீட்டியே விட்டு வேடு கட்டியே வேட்டின் மேலே
பூட்டியே வைத்து மூடிப் புற்றுமண் சீலைசெய் திடாயே. 264

அட்ட பாகமாய் எரித்து அமரவே எலும்பைத் தள்ளி
சட்டமாய்த் தான்நூல் சுற்றித் தனதுட னுள்ளி கூடத்
திட்டமாய் இடித்துத் தெள்ளி தினம்வெரு கடிதான் கொள்ள
முட்டிய மூல ரோகம் முயங்கியே ஓடு மென்றே. 265

(73) சிந்தாதி லேகியம்

ஏர்மேவும் புளியிலைது லாழுமி ரண்டு
இதுவுமோடி ரும்பொருது லாம்வெந்தநீர்
இதுநாலு மாகநன் னாரி பாதிரை
இசங்கு கண்டந் கத்திரி
சீர்மேவும் நீர்முள்ளி தூதுவளை பேராமுட்டி
நொச்சி முள்ளிசிறு முன்னை
கோட்டங் கரந்தை சிற்றா் முட்டி
குவளை நிலக்குமி ழுடனே
கூர்மேவு மலைதாங்கி வேரும் முக்குள
குலக்கை யாற்த கரையும்
கோரைக்கி ழங்குபுளி யிலைத்தண்ணீ ரோடு
நிறைகொண் டாடு மதனை
நேர்பாதி யாகவே சுவறிட வற்ற
நீர்நிறை நாழி யுடன்பலம்
நிறைநா ரத்தை யிஞ்சிபுளி யாரை
நிலமஞ்சள் வெல்லங் கூட்டே. 266

ஏதிற்ற பாகெனக்கண் டளவி லோமம்
இலவங் கப்பத் திரியிதும்
இப்பட்டை மஞ்சள் திப்பிலி மூலம்
மரமஞ் சள்கருஞ் சீரகம்
மீதுற்ற திரிகடுகு திரிபாலை மல்லிகை
விளங்க முடன்நற் சீரகம்
வெட்டிவேரி லாமிச்சு வேரிந்துப்பு முந்திரிகை
வெள்வெங் காய மாஞ்சில்
கூதுற்ற கண்டுபறங் கிப்பட்டை சாதிக்காய்
குலவு சாதி பத்திரி
கூறுற்ற கரிதான்சித் திரமூலம் கடுகு
கோட்டமுட னாக மலரும்
தாதுற்ற புகழ்பெற்ற திதனைவ கைக்கொரு
பலம்பெற நிறுத்தி டித்து
ராவொடுக லந்துலேகிய பாகமிது வென்று
நன்கறிந் துண்ண வல்லீர். 267

பாகவஞ்சோ கைகாமா லைவிட பாக
மொடுமத கெண் டைதுடி கெண்டையும்
பாண்டுவித மோரைந்தும் விடமுளக ரப்பானும்,
பகர்கின்ற மேக வாய்வும்
சாகவம கோதரச லோதரங் குணநோய்
தவிறாத நீராமை நேரியில்
தாதுகட்டி களிதுமுத லானநோய்க ளெல்லாம்
தருசூரிய னைக்கண்ட யிருள்போல
வேகமுனோ டிவிடுமென்று வானவர் முனிவர்
விபரமுரை செய்த தாக
மேதினியில் மானிடர்த மக்குரைத்த திதுவென்று
முத்துவார் சத்தி யமிதைச்
சேகரம தாகவே சரீரசுத்தி செய்து
சிறுபுன் னைக்கா யளவு
நான்தினம்நாற் பதுரெண்டு நேரமும் கொண்டுவா
சிந்தாதி லேகியந் தனையே. 268

(74) வெகு மூத்திரத்திற்கு

வட்டத் துத்தி இலைபறித்து மதித்த எலுமிச்சங் காயளவு
திட்ட மாகத் தானரைத்துச் சேர்ந்தநல் லெண்ணெயிற் குழப்பி
வட்ட முலையீர் இருபோது மதிக்கக் கொள்வீ றாமாகில்
கட்டப் படாத வெகுமூத்திரம் கட்டும் என்று முனியுரைத்தார். 269

(75) அயவேதிச் சூரணம்

திரிகடுகு ஏலம் நெல்லி சேர்ந்திடும் கடுக்காய் முத்தம்
புரிதரும் விளங்கம் சன்ன லவங்கம் புகழும் பத்திரி
ஒருநிறை தானே கூட்டி உகந்துடன் சிவதை மூன்றும்
சரியுடன் சர்க்கரை யுந்தான் வெருகடி தானும் கொள்ளே. 270

அக்கினி மந்தம் குன்மம் அரோசிகம் பயித்திய வாய்வு
மிக்கதோர் பாண்டு சோகை விடபாண்டு மூல வாய்வு
சிக்குமா மகோத ரங்கள் தசவாய்வு பீலி கையும்
பக்கமாம் சூலை தானும் பறந்திடும் என்று ரைத்தார். 271

(76) கலியாண நாராயணன்

நெல்லி யின்சாறு தானும் நேரிட நானா ழியாக
வல்ல சர்க்கரை பலந்தான் வரையுடன் இருபத் தஞ்சு
நல்லெண்ணெ யுழக்கு கூட்டி நலமுடன் அடுப்பில் வைத்து
சொல்லவே நாழி யாகச் சுவறிட எரித்தி டாயே. 272

திரிகடுகு ஏலம் ஓமம் சித்திர மூலம் செவ்வியம்
அரியதோர் இலவங் கந்தான் ஆனபத் திரிவெட் பாலை
வருமிரு சீர கந்தான் வளரிரு நாகப் பூவும்
புரிதரும் கொத்த மல்லி புகழுமஞ் சிட்டி தானே. 273

திப்பிலி மூலம் வாலுளுவை சிறக்கும் தக்கோலம் சடாமஞ்சில்
இப்படி வகைப்பலம் ஒன்று இதுக்குத் திரிபலை ரெட்டிப்பாய்
தப்பில் லாமல் தானிடித்துச் சாறுடன் கொட்டிக் கிண்டிமெள்ள
இப்படிப் புன்னைக் காயளவும் இரண்டு நேரம் கொள்ளலாமே. 274

கொண்டிடும் சத்தி குன்மம் குலையெரிவு உட்டண வாய்வு
பண்டுமுன் பயித்திய வாய்வு பாண்டு சோகை காமாலை
தண்டிய பிரமே கங்கள் தாதுவர்த் தனையுள் மூலம்
ஒண்டொடி தனக்குக் கர்ப்பம் உண்டென உரைக்க லாமே. 275

அக்கினி மந்தம் காசம் அரோசிகம் வாந்தி மூச்சு
சிக்கென குத்தி ருமலும் சிரரோ கம்நீ ரிழிவும்
விக்கல் கைகால் எரிவு மிகுதியும் இரைச்சல் தானும்
இக்கணம் தீரும் உண்மை இதுவென விளம்ப லுற்றாம். 276

(77) கிரந்திக்கு எண்ணெய்

ஆடா தோடை கழற்சிகோழி ஆவரைவெள் ளிடைவுரி சின்னி
நீடாம் கண்டங் கத்திரிமணலி நெருஞ்சி தும்பைநில வாகை
ஈடாம் முருக்கு சிற்றகத்தி எருக்குச் செம்முள்ளி வெருகிலையும்
வாடா கொட்டைக் கரந்தைதுத்தி மணத்தக் காளி கருவிண்டே. 277

சங்கு கரிப்பான் பொடுதலையும் சாரணை கருவேல் தூதுவளையும்
புங்கு கோவை நத்தைச்சூரி பொன்னா வரைநீர் முள்ளி
சங்கங் குப்பி மாவிலங்கு தழைக்கும் வெண்ணொச்சி கருநொச்சி
தங்கள் நாரத்தின் எலுமிச்ச சிறுசெருப்படி பெருஞ்செருப் படியே. 278

வெப்பா லிலையும் மேற்பட்டை வேலிப் பருத்தி நாய்வேளை
செப்பாங் கிரந்தி நாயகமும் சிறுநா யெரிஞ்சி பூனைமுள்ளி
ஒப்பாம் பெருமுள்ளி பெருவாயன் லத்திச் சாறுட னேகூட
தப்பா தோரொன் றுழக்களவாய் தானே இடித்துப் பிழிந்துகொள்ளே. 279

ஏரண்ட யெண்ணெய் தானும் எட்டுடன் படியும் விட்டுச்
சீரடன் காவெரு கங்கி ழுங்குடன் செங்கத் தாரி
வேருடன் கடுக்காய் வெள்ளுள்ளி யிதுபலம் நாலி லிடித்து
பாரி னில்ஈ ருள்ளி பலமிரு பதுதான் கூட்டே. 280

சீரகம் மிளகு ஓமம் சித்திர மூலம் கோட்டம்
கார்போக அரிசி சுக்கு கருஞ்சீ ரகங்கத் தூரிமஞ்சள்
பார்புகழ் பறங்கிப் பட்டை பரிவுடன் வசம்பு ஏலம்
வாரணி மாதே பூத கரப்பனும் மதுர மாமே. 281

கடுகு ரோகணி கிராம்பு கதித்திடும் சாதிக் காயும்
சடுசாதி பத்திரி கிரந்தி தகரமும் சிவதை வேரும்
இடுமில வங்கப் பட்டை இசைந்த திப்பிலி வகைக்கு
கொடுமென வராகன் எட்டுக் கொண்டுதான் அரைத்தி டாயே. 282

எல்லாம் ஒன்றாய்த் தான்கலந்து இதமாய் அடுப்பில் வைத்தெரித்து
மெள்ள மெழுகு பதத்திறக்கி வேறே கலசம் அதில்வடித்து
செல்ல ஆழாக்கு எண்ணெயுள்ளே சுகமாய்க் கொள்வீ ராமாகில்
நில்லாச் சயமும் குன்மமிவை நிகழும் குட்ட ரோகம்போம். 283

கொண்டால் வாதம் எண்பதுவும் கொடிய கிரந்தி பதினெட்டும்
பண்டும் உள்ள காமாலை பாண்டு சோகை விடவாதம்
அண்ட வாதம் கழல்வாதம் அந்தர வாய்வு சூலையுடன்
வண்டு கடியும் விடகரப்பன் மண்டைக் கரப்பன் தான்போமே. 284

குழிவாழை கண்ட மாலை கூறிய வெடிசூ லைப்புண்
அழிவான கர்ப்ப ரோகம் ஆனதோர் மேக வெட்டை
சுழிகணை முதலாய மற்ற சூழ்ந்திடும் கணைகள் தானும்
இழிவான இருமல் காசம் இதுவும்நீ ரடைப்பும் போமே. 285

போகுமாம் சருவ ரோகம் பிள்ளையில் லாத பேர்க்கும்
ஆகுமாம் இந்த எண்ணெய் ஆமெனக் கொண்ட போது
வேகமாய் இருந்த தென்றால் மிகுதியும் ஆவின் பாலும்
பாகமாம் பச்சைப் பயறு பாலுடன் கஞ்சி தானே. 286

(78) சரட்டைப் பொடி

இரதம் வெள்ளை அப்பிரகம் இதுவும் வகைக்குப் பலமொன்று
விரவும் எலுமிச்சம் பழங்கிடையா மேவும் பூசணிக் காயாகில்
சுரதம் விட்டு ஒருசாமம் சோர அரைத்துச் செப்பிலிட்டுப்
புரவும் செப்பா லேமூடி புதிய சீலை மண்செய்யே. 287

செய்யே ஒருமுன் எருவடுக்கிச் செப்பை அதனில் திறமாக
வையே அதன்மேல் எருப்போட்டு வாகாய் வெந்து ஆறியபின்
பைய எடுத்துப் பணவெடைதான் பண்பாய்த் தேனில் கொள்வீராய்
செய்யும் அனுபோகம் விடாது தீரும் நீரிழிவு தானே. 288

ஆனின் கோமயம் வெள்ளாட்டின் ஆனகோ மயமும் உப்பு
மேவி யிலைக் கள்ளிப்பால் இதன்தண்டுச் சாறும் நெய்யும்
தாவி யேசம னுழக்காய்ச் சட்டியில் இட்டுக் காய்ச்சி
ஏவிய நெருப்பி லிட்டால் ஈரமில் லாமற் காய்ச்சே. 289

இந்த மருந்து வெருகடிதான் நெய்யிற் கொள்ள வயிற்றிலுள்ள
மந்தம் வாய்வுத் திரட்சிகட்டி மகோதரம் வெப்புப் பாலைகெண்டை
முந்து முருவை யளுவைகவுசு உள்நீர்க் கோவை புறக்கோவை
வந்த குன்மம் குடல்வாதம் வயிற்றில் சருவ வியாதியும்போம். 290

(79) மகா பூதிகா தைலம்

வில்வமும் குமிழும் வாத மடக்கி ஆதளை பழையவேர்
நல்லதோர் சிற்றா முட்டி நவிலும் பேரா முட்டிமற்ற
நில்லெனும் நெருஞ்சி கண்டங் கத்தரி தேவ தாரம்
சொல்லுமா விலங்கு சங்கு துலங்கும் உவாய் சித்திரமூலம். 291

நொச்சி வேரிலை ஆனை நெருஞ்சி சாரணை எருக்கு
சித்தா மணக்கம் வேரிலை சிறக்கும் காஞ்சிரை வேரிலையும்
மெச்சிய சுக்குக் கருவேம்பும் விரவிய பலமீ ராது
உச்சிதம் அரத்தை வேங்கைச் சிராய்பலம் இருப தாமே. 292

அளுந்திய ஆயிலப் பட்டை அய்யெட்டுப் பலமி ரண்டு
உளுந்துடன் காணந் தானும் ஒருநிறை படிநன் நாலாய்
எளுந்தினைப் படியி ரண்டு இயல்புடன் படியொன் றுக்குக்
குளுந்தநீர்ப் படிதான் நாலு கூட்டியே அடுப்பில் வையே. 293

வேர்வகைப் பலமொன் றுக்கு விரவுநீர் படிய ரையாய்ச்
சீர்பெறக் கணக்குப் பார்த்துச் செப்புடன் அடுப்பில் வைத்து
ஏர்பெற எட்டொன் றாக்கி இயல்புடன் இறுத்துக் கொண்டு
தேரிய நல்ல யெண்ணெய் தெளியவே நாழி கூட்டே. 294

ஆவின்பால் படிதான் எட்டு ஆனதோர் இஞ்சிச் சாறும்
தாவிய படிதான் ஒன்று சம்வீரப் பழச்சா றுந்தான்
மேவிய படியு மிரண்டு விரவியே ஒன்றாய்க் கூட்டிப்
பூவிலோர் புகழ டுப்பில் பொங்காமல் காய்ச்சி டாயே. 295

மதுரம்நன் னாரி குக்கில் மாஞ்சில்பொன் முசுட்டை ஏலம்
விதிவிலா மிச்சு பூலாங் கிழங்குடன் வெட்டி வேரும்
துதிசெய சண்பகப் பூக்கோட்டம் சுகமஞ்சள் கொத்த மல்லி
கதியிரு சந்தன முடனே கடுகுமர மஞ்ச ளாமே. 296

இந்துப்புச் சமுத்தி ராப்பழம் இதன்வகை ஒன்றுக் குடனே
தொந்திப்பாய் வராகன் எட்டுத் துவளவே அரைத்தொன் றாக
விந்தையாய்க் கரைத்தெ ரித்து மெழுகுடன் பதந்தப் பாமல்
அந்தமாய் வடித்தி றக்கி அதிலிடு மருந்து சொல்லே. 297

குங்குமப் பூவும் பச்சைக் கர்ப்பூரம் கோரோ சனையும்
பொங்கமாய்ப் பொடிதான் பண்ணி புகழ்ந்தெண் ணெய்தனி லிட்டுத்
தங்கிய தானி யத்தில் தனிப்புடம் வைத்தெட் டாம்நாள்
மங்கையே அப்பிங்கம் நசியம் வத்திகட் டிடவே தீரும். 98

கபால சன்னி பீனிசசுவாச காசம் ஒருதலை வலியும்
அபாய பீனிசம் நீர்ப்பீனசம் அதிக ரத்தப் பீனிசமும்
உபாய மண்டைச் சூலைகுத்து உடன்மந் தார காசமிவை
சிவாய மான செவியடைப்புத் தீரும்நா சியடைப் பாமே. 299

சீயக் காயிட்டு வெந்நீர் தேய்த்துடன் முழுகு வீராய்
காயத்தில் வளரும் வாத பித்தமும் கபமும் மாறுமதாய்
வாயத்து தித்தாப் போல சரீரமும் காந்தி யாகும்
மாயமா முனியு ரைத்தார் மகாபூதி காதைல மென்றே. 300

(80) மகா விடமுட்டித் தைலம்

காஞ்சிரை வில்வம் நொச்சி கனத்திடும் குமிழ வேரும்
வாஞ்சையாம் மாவி லங்கு வாதம டக்கி பாதிரையும்
தேஞ்ச ஆதளை பேரமல்லி சிற்றமல்லி நெருஞ்சி முள்ளி
ஆஞ்சும் ஆனைநெ ருஞ்சி கண்டங்கத்தரி அமுக்கிரா சங்கவேர்தானே 301

எருக்குப் புங்கு ஆயிலப் பட்டை இதமுடன் சிற்றா முட்டி
திருக்கமாம் சாரணை ஊமத்து திருகு கள்ளி இலைக்கள்ளி
குருக்கிய சிற்ற கத்தி கொடுவேலி கொடிக்கள்ளி ஆமணக்கு
வருக்கமாம் தேவ தார மாலப் பிரண்டை வாகை கொன்றை. 302

காட்டு முருங்கை சங்கங்குப்பி கனத்த அழிஞ்சி செங்கத்தாரி
வீட்டு முருங்கை வகைக்குப்பலம் பத்தாய் வெட்டித் தரித்திடித்து
நாட்டில் காஞ்சிரப் பட்டைபலம் நாற்ப துடனே நன்றாய்க் கலந்து
கூட்டிப் பலத்துக் கரைப்படியாய்க் குளிர்ந்த நீரைத் தானூற்றே. 303

தீயினில் வைத்தே எரித்துத் திரமுடன் எட்டொன் றாக்கி
மாயமாய்ப் பாண்டந் தன்னில் வடித்துநல் லெண்ணெய் புங்கு
ஆயுமே இலுப்பை வேம்பு ஆமணக் கெண்ணெய் தானும்
ஞாயமாய் வகைக்கு நாலு படியென நயந்து கூட்டே. 304

கடுகெண் ணெய்செந் திருக்கு காட்டா மணக்கெண்ணெய் வகையாம்
விடுகவே காஞ்சி ரம்பழச் சாறுமு ழக்குத் தானு
முடுகிய ஆவின் பாலும் முக்குறுணி கூட விட்டு
இடுமென எருக்குக் கொடிக்கள்ளி இலைக்கள்ளி திருகு கள்ளி. 305

வகைக்கொரு படிபா லாக வார்த்திடும் எண்ணெய் தன்னில்
தகைக்கும் ஆமணக் கத்தி தைவேளை நல்ல நொச்சி
சகைத்தினில் கழற்சி வட்டச் சாரணை சிற்ற கத்தி
பகைப்பிலா முருக்க ழிஞ்சி பாரினில் முருங்கை இஞ்சி. 306

கஞ்சாங் கோரை குப்பைமேனி கடிய வேலிப் பருத்திதுளசி
வஞ்சம் இல்லா ஆடாதோடை வளரும் தாழம் விழுதுடனே
இஞ்சொல் புகழும் எலுமிச்சம் இலைக்கள்ளி நீர்முள்ளி சாரணையும்
செஞ்சொற் பிரண்டை ஆதளைபிரமி செப்பு நெருஞ்சி தேள்கொடுக்கே. 307

இருவகைச் செருப் படியும் இலங்கிய சாறுநாழி யாகப்
பெருகவே பிழிந்து கொண்டு பேசிய எண்ணெ யூடே
திருகவே தினைஉ ளுந்து கொள்ளுமே வகைக்குக் குறுணி
திருமயி லேப டிக்குச் சேருநா நாழி நீரே. 308

கருங்கோழி முசலு டும்பு கதுவாலி வெள்ளாடு காடை
எருமையின் கிடாமயி லுடனே இசைந்திடும் நண்டு பன்றி
வருங்காடைக் கோழி காட்டுப் பன்றியும் பச்சைப் பாம்பும்
... ... *தவளையும் வகைக்கஞ் ஞாங்கே.* 309

அரத்தையும் பலமே யெட்டு ஆனதோர் சுக்கு நான்கு
நிரத்திடும் காட்டுக் கருணை யும்புளி நடலைக் கிழங்கு
உரைத்திடும் வகைக்கீ ரைந்து பலமொன்று ஒன்றாய்க் கூட்டித்
திரத்துடன் பலமொன் றுக்குச் சேரும் நீர்படி அரையே. 310

ஆட்டு மூத்திரம் கழுதைமூத்திரம் ஆனை மூத்திரம் எருமை
மாட்டு மூத்திரம் குதிரை வகைக்கிரு படிய தாகப்
பூட்டும் தேங்காய்ப் பாலும் புகழின் நீரு முள்ளி
வாட்டிய தைலம் அண்டத் தைலமும் வகைக்கு நாலே. 311

காடிமுக் குறுணி விட்டுக் கருதியே ஒன்றாய்க் காய்ச்சி
தேடியே எட்டிக் கொட்டை திப்பிலி மூலம் செவ்வியம்
நாடிய சித்திர மூலம் திரிபலை திரிகடு குடனே
ஏடிரு லவங்கப் பட்டை இலவங்க பத்திரி இலாமிச்சு. 312

வெற்றிசேர் வெட்டி வேரும் விதமுள்ள கடுகு ரோகணி
சத்திய சாரம் எவச்சா ரமுங்கே சுரமும் தானும்
வத்தியே பொட்டி லுப்பு வளைய லுப்புஅட் டுப்பு
பத்திய கரியுப் புப்பெருங் காயம் சட்டி யாமே. 313

தேவ தாரம் வசம்பு செவ்வள்ளி சாதிக் காயும்
மேவு பூலாங் கிழங்கு நாகணம் விளங்கம் ஓமம்
தாயகிற் கட்டை மாஞ்சில் சதகுப்பை சந்த னமுடன்
கூடிய தாமரை வளையம் குலவுசெஞ் சந்தனம் கோட்டம். 314

பா. 309 இல் சீர்கள் விடுபட்டுள்ளன.

குங்குமப்பூ கத்தூரி குளிர்ந்த செங்கழு நீர்க்கி ழங்கு
புங்குஆ மணக்கு வேம்பு புன்னையும் சதுரக் கள்ளி
மங்கையே இலுப்பை முத்து மகிழுடன் வகையொன்றுக்குச்
சங்கையாய்ப் பலந்தா னொன்று தனித்தனி அரைத்திடாயே. 315

அரைத்திடும் மருந்தொன் றாக அடுப்பினில் வைத்தெ ரித்துத்
திரத்துடன் மெழுகு போலத் திரண்டதோர் பதந்தப் பாமல்
நிரத்திட வடித்து அப்பியங்கமும் நசியம் பண்ணிப்
பிரத்தினில் வைத்துக் கட்டப் பிடிப்பித்துத் தேய்க்க லாமே. 316

செய்ய எண்பது வாதந்தான் சேர்ந்திடு மேக சன்னிவாதம்
மைய்யவே பிறவிச் சுந்தான் பாரிச வாய்வு வாங்கும்
வெய்யவே நடுக்கு வாதம் வெடிசன்னி முகவாத சன்னி
உய்யப் பட்சி வாதம் உடற்குத்து சருவாங்கம் போமே. 317

தனுவாத மரண சன்னி தவிர்ந்திடும் யாவர்க் குந்தான்
அணுகாத விடவா தத்தை அகற்றிடும் விடக ரப்பன்
பிணியிதன் பேர்சொன் னாலும் பேருல கத்தில் நில்லா
மனிதர்க்கும் சஞ்சீவி யாகும் மகாவிட முட்டித் தைலமிதே. 318

(81) மகாவில்வாதி லேகியம்

சொல்லரிய வில்வவேர் ஐம்பது பலத்துடன்
தோன்றிய இலாம்பிச் சம்வேர்
தூது வளைநன் னாரி முன்னை
பெருவாகை வேரும்
நல்லரிய சிறுவிளாப் பெருவிளா பத்திரி
நயவெட்டி முசுமு சுக்கை
நடுத்தேற் றான்வே ரிவையெல் லாமும்
நன்றாக ஒவ்வொரு பலமும்
வல்லரிய பொட்டண மாயரைத்திதை இடித்தே
வாகான பானை யிட்டு
வந்தநீர் தூணிய தக்கதனில் விட்டு
வடியவே வெட்டி லொன்றாய்க்
கல்லரிய டுப்பினிற் காய்ச்சிடு மெள்ளவே
கண்டகொம் மட்டி மாதுளை
கனத்ததோர் நிம்பழம் கண்விளா திஞ்சியும்
கருதுவகை நாழி கூட்டே 319

கூட்டுமுந் நாழிச் சாறுடன்
கூறுமெ டைசர்க்கரை
கோதாய் வடித்துக் குழம்பா யெரித்துக்
கோலமாய் இறக்கும் வகைகேள்
நாட்டுக்கி ராம்புடன் திரிகடுகு திரிபாலை
நல்ல இருசீ ரகமும்
நவிலும் பருத்திவிதை ஏலமில வங்கம்
நற்சந் தனம்செவ் வியமும்
தீட்டுஅ ரேணுகம் விளாவ ரிசியுடன்
சிறப்புள்ள இலுப்பை மலரும்
வில்லைக் கனிநெய் தற்கி ழங்கு
சீராக வேபே ரீஞ்சும்
தேட்டமுடன்முந் திரிகைக் கனிக
ளோடு ஆவின் நெய்விட்டு
போட்டியே சேரும் பதங்கள் கண்டே. 320

கண்டுதேன் நாழிக லந்துகு ழப்பி
கருதுதா னியபுட மதாக வைத்துப்
பதினெட்டாம் நாளெ டுத்துக்
கொண்டிடில் காயத்தி லுள்ளநோய் தீரும்வகை
குன்மமொடு காமாலை பாண்டுடன் சோகை
குமிறுமி ரைச்சல்வலி யொருமல்
தண்டியசு வாசமோ டரோசிகம் விக்கல்
சத்தி தனது கைகா லெரிவு
வெள்ளோக் காளம்
மெண்டிவிழு மரேகத காசம்உட் காய்ச்சல்
வியனாம் கிராணிஅதி தாபம் மயக்கம்
முதலான தீரும் மகாவில் வாதி லேகியமிதே. 321

(82) மதுமேகத்திற்கு

நலம்பிடித்த வெள்ளாட்டின் கிடாய்த் தலையை
நன்றிபெற வீழிச்சாறு படியும் இரண்டு
சலம்பதக்கு நீர்விட்டு வற்றக் காய்ச்சிச்
சதையெடுத்து எலும்புதள்ளிப் பொடிதான் செய்து
குலம்மதுரம் கோட்டம்சிறு நாகப் பூவும்
கொத்தமல்லி சீரகமும் மிளகு மஞ்சள்
தலம்புகழும் சன்னலவங் கம்வெள் ளுள்ளி
தனதிருள்ளி வகைக்குவ ராகன் மூன்றே. 322

இடித்தமருந் தொன்றாகக் கொட்டிக் கிண்டி
இசைந்தவிளக் கெண்ணெய்நறு நெய்நல் லெண்ணெய்
பிடித்ததனில் ஒன்றாக விட்டு மெள்ளப்
பிசரியே வேகவைத்து இரண்டு வேளை
வடித்தமுதைக் கொள்ளமது மேகந் தானும்
மாறிப்போய் வாலாகுண மாகு மென்று
துடித்தகும்ப முனியுரைத்தார் உலகத் தோர்க்குச்
சொல்லுவோம் செய்வார்கள் இல்லை தானே. 323

(83) அசுவ கந்தாதிச் சூரணம்

ஆனி அமுக்கிரா இரண்டுபலம்
அதுவும் திரிகடுகு அரத்தைமல்லி
கானிற் சிறுதேக்கு விளங்கம்
கருஞ்சீ ரகமும் சீரகமும்
தானே திரிபலை தேசாபுரவோமம்
தனிச்செவ் வியம்சித் திரமூலம்
மானிற் கோட்டம் அக்கிரா காரம்
வகைக்கு வராகன் நாலு கொள்ளே. 324

தாளிச பத்திரி கிராம்பு சாதிக்காய் குராசானி மாஞ்சில்
நாலு வால்மிளகு ஆனைத் திப்பிலி சிறுநா கப்பூ
ஏழு முந்திரிகை பேரீஞ்சு இலவங்கப் பட்டை பத்திரி
வான விலாமிச் சுடனே வகையிரண்டு வராகன் கூட்டே. 325

கூட்டியே எல்லாம் சேரக் கொண்டுதான் இடித்துத் தூளாய்
நாட்டிய சர்க்க ரையும் நாலுடன் பலங்க லந்து
வாட்டிய வெருகடி தானிரண்டு வேளை யும்வெந் நீரில்
கூட்டியே கொள்ளத் தீரும் குணந்தனைச் சொல்லு வோமே. 326

ஆமே பயித்திய வாய்வுடனே அக்கினி மந்தம் அரோசிகமும்
சோம ரோகம் காமாலை சோகை பாண்டு அத்திசுரம்
வாமே வாய்வு உட்டண வாய்வு குன்ம முடனே
போமே காசம் சயரோகம் புவிவிட் டோடுங் கண்டீரே. 327

(84) குண்டலாதி லேகியம்

ஆனதோர் சங்கம் வேரை ஐம்பது பலம்நி றுத்து
தேனுரும் கண்டங் கத்தரி செவ்வியம் அதனிற் பாதி
வானுரும் தூது வளையும் மோராம் அதனிற் பாதி
கானினிற் சித்திர மூலம் கனசிறு தேக்கு வாமே. 328

திப்பிலி மூலம் தானம் சேரவே வகைக்கீ ரைந்து
மெய்ப்புகழ் வில்வம் வாத மடக்கி ஆதளை நெருஞ்சில்
தப்பில்லாக் குமிழு முள்ளி தழுபா திரைபேரா மல்லி
இப்படிச் சிற்றா மல்லி இங்கொரு பலமாய்க் கொள்ளே. 329

வேர்வகை பலமொன் றாக விடுநீரை நாழி யாக
சீர்பெற மூன்று நாளும் சிறந்துரி எட்டொன் றாக்கி
ஏர்பெரும் சட்டி தன்னில் இதமுடன் இறுத்துக் கொண்டு
பார்புகழ் பழைய வெல்லம் முப்பது பலந்தான் கூட்டே. 330

கூட்டிய பாகு போலே கொதிக்கவே வைத்துப் பின்னை
நாட்டினிற் சுக்கெட் டுப்பலம் இலவங்கப் பத்திரி சிறுநாகப்பூ
ஈட்டும் சன்னலவங் கப்பட்டை ஏலம் காயம் ஓமமுடன்
பூட்டும் வகைக்குப் பலமொன்று பொருந்தக் கூட்ட வல்லீரே. 331

மிளகு டன்அரத் தைவாய் விளங்கம் கர்க்கடக சிங்கி
வளமிரு கூகை நீறு மகிழ்தா ளிசபத் திரியும்
உளமகிழ் வகைக்கு இரண்டு பலமென ஒன்றாய்க் கூட்டிச்
சலமில்லா திடித்துச் சீலை வடிசெய்து கொட்டிச் கிண்டே. 332

கிண்டியே தேனும் மூணு படிதனை விட்டுக் கீழ்மேல்
அண்டியே அளாவி வைத்து அந்தியும் சந்தி யாக
ஒண்டொடி மாதே நெல்லிக் காய்அளவு வுள்ளே கொள்ள
பண்டு பீனச சுவாச காசமும் பாண்டு போமே. 333

சருவாங்க வாய்வு வாதம் தனதுடல் வீக்கம் பித்தம்
குறுகிய சிலேற்று மத்தின் கூறினில் உள்ள காய்ச்சல்
அரிவையே அட்ட குன்மம் அந்தர வாய்வு மந்தம்
உறுதியாய் உயரும் வாய்வு ஒதுங்குமாம் என்று ரைத்தார். 334

(85) பூசணிக் கிருதம்

பாகுசேர் மொழியி னாளே பருத்திபூ சணியின் காயை
வாகுசேர் விதையைப் போக்கி மருவிய துலாமும் கொண்டு
வேக வைத்துப் பின்னை விடுநெய் நாழி தானும்
வாகுறும் மதுரம் மாஞ்சில் மருவிய சுக்குத் தாரம். 335

தாரமாம் நாகப் பூவும் தகரும் திப்பிலி கோட்டம்
வாரமாம் இந்துப் போடு நிலக்குமிழ் மருவும் காரை
ஆரமாம் கழஞ்சு மூன்று அடவுடன் கொத்த மல்லி
சேரவே இலவங் கத்தோல் சீரகம் மிளகு ஏலம். 336

முப்பல மாகக் கொண்டு முன்மருந் தொக்கக் கூட்டிச்
செப்பமாய் இடித்துத் தள்ளித் தேனுடன் சீனி கூட்டிச்
செப்பமாய் உண்ண ஈளை இருமலும் முதிர்ந்த ரோகம்
வெப்பினில் அத்தி பித்தம் எரிகுன்மம் போகு மென்றே. 337

(86) சிரங்கிற்கு எண்ணெய்

வெள்ளைப் பாடாணம் ஒன்று வேண்டும் கந்தகம் இரண்டு
தெள்ளிய உவாய்வி தைதான் அரைத்தசாந் தெலும்பிச் சங்காய்
மெள்ளவே மெழுகும் அவ்வளவு வேண்டும்நல் லெண்ணெய் குத்தி
உள்ளபடி யேதா னெரித்து உடம்பிற் பூச மூன்றுநாள். 338

இலுப்பைப்பிண் ணாக்கை யிட்டு இனியதோர் குளிர்ந்த நீரில்
சலிப்பில் லாமல் குளித்தால் தனதுடல் சிரங்கெல் லாம்போம்
நலிப்பற நாலு நாளில் நலமுடன் எல்லாம் தீர்ந்து
களிப்புடன் இருப்பார் தம்மைப் கேட்டிருப் போம்செய் யாரே. 339

(87) கருங்கோழி பற்பம்

கருங்கோழி மயிரும் காலும் குடலையும் போக்கி நன்றாய்ப்
பொருமெனப் பறங்கிப் பட்டைப் பத்தையும் பொடியாய்ச் செய்து
திரிகடுகு ஓமம் காந்தம் சேர்ந்தகந் தகமும் லிங்கம்
விரிவுவாய் விளங்கம் சூதம் வெண்கா ரம்குரா சானியே. 340

அத்தித் திப்பிலி வகைக்கு ஆனதோர் வராகன் நாலும்
தத்தும் கள்ளிக் கொழுந்து சாதிக்காய் கிராம்பு கஞ்சா
அத்தும் கழற்சிப் பருப்பு அதிவிடை யம்சாதி பத்திரி
இத்தனை வகையொன் றுக்கு இனிதரைப் பலமாய்க் கூட்டே. 341

கூட்டியே பிரண்டைச் சாறு வார்த்தரைத் துள்ளே வைத்து
மூட்டியே நூலால் தைத்து முற்றின வேப்பம் பட்டை
காட்டிய உவாயும் நொச்சி கழற்சியும் பிரண்டைச் சாறும்
நாட்டினில் வகையொன் றுக்கு நாழிதான் பிழிந்து கொள்ளே 342

கொள்ளவே சாற்றுக் குள்ளே கோழியைப் போட்டு மூடி
மெள்ளவே வற்றக் காய்ச்சி வெந்தபின் எலும்பு தள்ளி
துள்ளவே இடித்துத் தூளாய்த் தேனிள வெந்நீர் தன்னில்
கொள்ளவே குன்மம் சூலை குடல்வாதம் போகு மென்றே. 343

என்றதோர் மூல வாய்வுத் திரட்சியும் வாத சூலை
கண்ட மாலை கடிவிடம் கன்ன ரோகம் மூன்றெனும்
... ...
.... நேத்திர ரோக முடன்கழல் வாதம் போமெ. 344

போகுமே கிரந்தி ரோகம் புண்சேட் டைபவுத் திரமும்
வாகுசேர் நெஞ்சு நோவு வாய்ப்புண் நாபிச் சூலை
வேகமாம் மேக வெட்டை விரணங்கள் எல்லாம் தீர்ந்து
ஆகுமென் றுப்புப் புளிப்பு ஆகாது என்று ரைத்தார். 345

(88) சுக்குக்கரி

சுக்குப் பலமெ டுத்துச் சுண்ணாம்புக் கல்லுடன் கலந்து
விக்க நீரைத் தான்புகட்டி வெந்து ஆறிப் போனபின்பு
சுக்கக் கழுவித் தானுலரக் காய்ந்து இடித்துத் தூளாக்கி
ஒக்க சட்டி காயவைத்து உழக்குத் தேன்விட்டுக் காய்ச்சுவதே. 346

காய்ச்சிய தேனிற் தூவி கழற்சிபோல் உண்டை செய்து
பூச்சித மாயி ரண்டு வேளையும் புகழ்ந்து கொள்ள
நீச்சிலாக் கிராணி வாய்வு நிலையிலா அதிசா ரங்கள்
சூசிகா வாய்வு சோறு செரியாத கிராணி போமே. 347

(89) வாத ராட்சத தைலம்

வாத மடக்கி வெண்ணொக்கி வளரும் வேலிப் பருத்தியுடன்
போத முடக்க ற்றான் வகைக்குப் புகழ்ந்த சாறு நாழியதாம்
சீத மான புளியிலையும் சிறந்த சாறு நால்நாழி
நீத எருக்கம் பாலுழக்கு நிசவெள் ளாட்டின் பாலுழக்கே. 348

நல்லெண் ணெய்வேப் பெண்ணெயும் நலந்தரும் விளக்கெண் ணெயும்
வல்லதோர் வகைக்கு நாழி வசம்பொடு திரிகடுகு தாலும்
வெல்லுமாம் பலந்தா னொன்று வெள்ளுள்ளி பலந்தான் எட்டுக்
கல்லினில் அரைத்து ஒன்றாய்க் கலந்தடுப் பினில்தான் வையே. 349

பா. 344 இல் சீர்கள் விடுபட்டுள்ளன.

வைத்திடும் பதத்தில் நன்றாய் வடித்திடும் கலசம் தன்னில்
ஒத்திட நசியம் பண்ண உள்ளினிற் கொள்ளத் தீரும்
குத்தியே கடுக்கும் சூலை கொடுஞ்சன்னி வாதம் கூனும்
வத்திய பிறவீச் சுசரு வாங்கமும் போகு மென்றே. 350

(90) பயித்தியத்திற்கு நசியம்

கண்டங் கத்தரிப் பழத்தைக் கருதியே கொண்டு வந்து
வண்டணி குழலாள் மாது வளரும் முலைப்பால் தான்விட்டுத்
தண்டியே பிசைந்தி றுத்துச் சங்கரண் டினிலே வார்த்து
முண்டக மான மூக்கில் முறைப்படி விடுவ தாமே. 351

ஆமே பித்தம் நாற்பதுவும் அலத்தும் பித்தம் உள்மாந்தம்
சோம ரோகம் சயரோகம் தொலையாச் சன்னி முசுவாதம்
போமே பித்தம் தலைநோவும் புத்தி மயக்கம் இவையெல்லாம்
ஊமை கண்ட கனவதுபோல் ஒதுங்கு மென்று முனியுரைத்தார். 352

(91) பித்தத்திற்கு உள்ளுக்கு மருந்து

வடக்கே போற அழிஞ்சிவேர் மாதே கொணர்ந்து தானரைத்து
நடக்கும் பசுவின் பாலுழக்கில் நலக்க இப்படி மூன்றுநாள்
முடக்கும் பித்தம் நாற்பதுவும் முதிர்ந்த பித்த எரியெல்லாம்
அடக்கும் என்று முனியுரைத்தார் அவனி தன்னில் செய்வோமே. 353

(92) சம்பீரத் தைலம்

துளசிநல் லெண்ணெய் காடி சொன்னதோர் மகிழி லையும்
வளமுள்ள புளிய வுரியும் வகைக்கிவை நாழி யாக
அளகுள்ள எலுமிச் சம்பழத் தின்சாறு நாழி யுடனே
வளமுடன் திரிகடு குடனே திரிபாலை வருமாம் மேலும். 354

பச்சிலை கோட்டம் முத்தம் பருத்திடும் இலவங் கத்தேரல்
உச்சித மதுரம் இலாம்மிச் சிருவேலி குங்கு மப்பூ
மெச்சும் சந்தனம் அகிலழிஞ்சில் விதையுடன் சாதிக் காயும்
கச்சுடன் புழுகுச் சட்டம் கர்ப்பூர முந்தான் கூட்டே. 355

கூட்டியே வகைக ழஞ்சாய் குறுஞ்சங்கம் பழத்தின் சாறு
நாட்டமாய் விட்ட ரைத்து நலமுடன் ஒன்றாய்க் கூட்டி
வீட்டினில் அடுப்பு வைத்து மெள்ளவே பதத்தி றக்கிக்
கேட்டியால் தலையில் தேய்த்து வெந்நீர்விட் டலம்பு வாயே. 356

சிரரோகம் குட்டம் பித்தம் தினவு டன்மயிர்க் கழிதல்
உரைசரீ ரத்தின் நாற்றம் புழுக்கடி இவைகள் தீரும்
விரைகம ழும்பொதி கையில் மேவிய குறுமு னிவனவன்
தருவென மகிழ்ந்து ரைத்த சம்பீரத் தைல மாமே. 357

(93) தூர்வாதித் தைலம்

துளசிகற் றாழை சீந்தில் சொன்னவெள் ளெருக்கம் அவுரி
அளவில் லாத அகத்தி கையாந் தகரையின் சாறுநால் நாழி
இளமையாம் எள்ளெண் ணெயும் இனிஉரி நேர்சம னாக
வளமுடன் ஆவின் பாலும் வாகுடன் நாழி கூட்டே. 358

தேவ தாரம் இருவேலி செஞ்சந் தனமும் நன்னாரி
மேவும் கிரந்தி தகரம்அசு வகந்தி திரிகடுகு திரிபலை
ஆவல் தனியும் ஏலமிலவங்கம் ஆன பச்சிலை நாகப்பூவே. 359

கோட்டம் தாமரை வளையம் பெருங்குரும் பையுமிவை சமனாய்
கூட்டியே அரைத்து அடுப்பில் கொதியிட வடித்துப் பூச
நீட்டியே விடவா தங்கள் நேர்கடி விடமும் வசூரி
தீட்டிய சிறுசி ரங்கு தினவுடன் அழுத்திப் போமே. 360

(94) புளியிலைக் குழம்பு

ஆவின்மோர் புளியி லையும் ஆனதோர் காடி தானும்
மேவிய வகைப தக்கு வெள்ளுள்ளி திரிபா லையும்
தாவிய பலமொன் றாகத் தானிவை பழைய கிட்டம்
கூவினில் ஆறு பலமும் கொண்டுதான் கூட்டிக் காய்ச்சே. 361

காய்ச்சியே எட்டொன் றாக்கிக் கருதியே இறுத்துக் கொண்டு
தாழ்ச்சியில் லாமல் வெல்லம் தான்பலம் பதினாறு கூட்டி
ஊச்சித மாக மூன்று நாளுமே ஊறி வெந்து
வாச்சிங்கம் பச்சிலை கர்க்கடக சிங்கி ஏலம் திரிகடுகே. 362

நலமுடன் திரிபலை சீரக மோமம் நல்லிந் துப்பு அரைபொடியும்
பலமுடன் வகைக்கொன் றாகப் பாங்காய் இடித்துப் பாகுடனே
தொலையா ஆவின் நெய்நல்லெண்ணெய் சொல்லும் வகைக்குத் தானுழக்கே.
363

பா. 359 இல் மூன்றடிகளே உள்ளன.
பா. 363இல் மூன்றடிகளே உள்ளன.

விட்டுக் குழம்பாய்ங் காய்ச்சியிதை மேவும் இரண்டு வேளைகொள்
தட்டு வாயால் மூக்காலே தள்ளும் ரத்த பித்தமிதைக்
கட்டுப் படுத்தும் காமாலை சோகை பாண்டு கணரோகம்
மடுப் படுத்து மென்றுசொல்லி மகாதேவர் உமைக்குரை செய்தாரே 364

(95) ஏலாதி லேகியம்

தூதுவளை கொடுவேலி வில்லை வேரும்
சொல்லரிய பெருவிளாச் சிறுவி ளாவும்
ஈதெல்லாம் வகைக்கொரு பலமாய்க் கொண்டு
எட்டுப்படி தண்ணீர்விட் டெட்டொன் றாக்கி
மாதேகேள் மறுபாண்டந் தன்னில் வாங்கி
மருவுநெல்லிக் காயிஞ்சி வகைக்கு நாழி
தீதில்லா வெல்லம்பலம் நாலும் போட்டுத்
திரமாகப் பதத்துடனே சேரக் காய்ச்சே. 365

காய்ச்சியே இறக்கி வைத்து கதித்தேலம் பலம தொன்று
வாச்சு தேதிரி கடுகு மரமஞ்சள் அரத்தை ஓமம்
பூச்சுவாய் விளங்கம் மல்லி புகழிரு நாகப் பூவும்
தீச்சுத மான சிறுதேக்கு திப்பிலி மூலம் செவ்வியமே. 366

கருஞ்சீ ரகம்நற் சீரகமும் கடுகுரோ கணிஅதி விடையமும்
தருங்கி ராம்புகோட்டம் மதுரம் தான்றிகடுக் காய்பெருங் காயம்
வருமிந்துப்பு வளைய லுப்பு வகைக்குப் பலந்தான் கால்கூட்டி
மருங்க இடித்துத் தூளாக்கி வடிகொண்ட தணலிடு வீரே. 367

இடுவீர் இதனில் தேன்நாழி இதமாய் ஆவின் நெய்கரண்டி
தடுமா றாமல் லேகியத்தைத் தானே யிரண்டு வேளைகொள்ள
படுமே பயித்திய மயக்கமிவை பலவும் குணமாம் வாய்வுடனே
விடுமே அரோசிகம் அக்கினிமந்தம் விக்கல் சத்தி தீருமென்றே. 368

(96) மூலத்திற்குக் கருங்கோழிச் சூரணம்

காட்டுக் கருணை மால்கிழங்கு கனத்த பிரண்டைக் கிழங்குடனே
கூட்டி யிடுத்து ஒருசமனாய்க் கொண்டு பொடியாய்க் கடைச்சரக்கு
வாட்டும் பறங்கிப் பட்டையொரு பலமும் வாங்க லாமேதான். 369

பா.369 இல் மூன்றடிகளே உள்ளன.

கொத்த மல்லி வாய்விளங்கம் குராசானி கருஞ்சீ ரகமும்
வத்தும் காயம் சிற்றரத்தை வசம்பு ரோகணி ஓமமுடன்
சத்தும் திப்பிலி மூலமுடன் சுக்கு வகைக்குப் பலங்காலாம்
ஒத்த கிராம்பு சாதிக்காய் உயர்ந்த கந்தகம் இரதமிதே. 370

வகைக்கொரு வராக னாக வாங்கியே இடித்துத் தூளாய்
நகைப்பி லாக்கருங் கோழியை நற்குடல் மயிர்கால் போக்கித்
தகைத்தகு ரணத்தை யிட்டுத் தைத்தொரு பாண்டத் துள்ளே
பகைப்பிலாப் பதக்கு நீரைப் பாங்குடன் அளந்து கூட்டே. 371

பானையில் சீலை கட்டிப் பாங்குடன் கோழி வைத்துத்
தானுவாய்ச் சட்டி மூடித் தனிச்சீலை மண்தான் செய்து
ஈனமில் லாமல் வெந்து எட்டொன்றாய் நீரும் வற்றி
ஆனதோர் எலும்பு தள்ளி ஆறவிட்டு இடித்தி டாயே. 372

இடித்திடும் சூர ணத்தை இனிவெரு கடிதான் தேனில்
பிடித்தொரு மண்ட லந்தான் பேணியே கொள்வா யாகில்
துடித்திடும் மூல ரோகம் சொன்னதோர் முளைமூ லமும்தான்
அடுத்தவர்க் கில்லை யென்று அகத்தியர் அருளிச் செய்தார். 373

(97) முயல் நெய்

கால்தலை குடல்கள் போக்கிக் கஞ்சதை யாயெ டுத்து
நால்பத்துப் பலம்நீ றுத்து நாலாறு மரக்கால் நீரைக்
கோலமாய் விட்டு வெந்து குறுக்கியே நாலொன் றாக்கிப்
பாலுடன் நெய்யும் ஆடா தோடையின் சாறும் படியே. 374

பெருவாகை வில்லை. முன்னை பெருங்குமிழ் பாதிரை யாகும்
முருகண்டன் காவி முள்ளியுடன் தூது வளைநெ ருஞ்சி
தருஞ்சிற்றா மல்லி பேரா மல்லிசங் கமுக்கி ராவும்
வருமரத்தை தேவ தாரம் மஞ்சள் மிளகு திப்பிலியே. 375

இவ்வகை தனக்கு மூன்று பலம்நிறுத் திடித்தொன் றாகச்
செவ்வையாம் பாண்டத் திட்டுச் சிறக்கவே தூணி நீரைக்
கவ்வையாய் விட்டு நாலொன் றாகவே காய்ச்சிக் கொண்டு
ஒவ்விய முன்மருந் தோடு ஒக்கவே ஊற்றி டாயே 376

பஞ்சமூலம் கடுகு ரோகணி பதித்தகர்க் கடக சிங்கி
வஞ்சமில் லாத ரத்தை மிளகுவா லுளுவை ஏலம்
கொஞ்சிய கோட்டம் ஓமம் கிராம்புசீ ரகமிந் துப்பு
இஞ்சொல் முந்திரி கைஅத்தித் திப்பிலி லவங்கப் பட்டை 377

சாதிபத் திரிசிறு தேக்கு சடாமாஞ் சில்வகை ஒன்றுக்கு
நீதியாய் வராக னிரண்டு நிறுத்தரைத் ததனிற் போட்டுக்
கோதிலா தடுப்பில் வைத்துக் கொதியிட்டு மூன்று நாளும்
மாதுசேர் நாலாம் நாள்நெய் வடித்திரு வராகன் கொள்ளே. 378

கொள்ளவே திப்பிலி மேற்பொடி தூவிக் கொண்டால் தீரும்
உள்ளத்தில் உட்டண மானால் உடன்சீவி கூட்டி யுண்ண
தெள்ளிய சிலேட்டும காசம் சேர்ந்திடும் தொண்ணூற் றாறும்
வள்ளல்தான் தீரு மென்று மானிடர்க்கு உரைத்த நூலே. 379

(98) ஏலாதிச் சூரணம்

ஏலம் கிராம்பு சடாமஞ்சில் இதமாம் சுக்குத் திப்பிலியும்
கோலம் முத்தம் கர்ப்பூரம் கொத்த மல்லி பேரீஞ்சு
ஞாலம் புகழும் இலவங்க பத்திரி மதுரம் இலாமிச்சு
நீலம் நெருஞ்சி வெட்டிவில்வம் நிலப்பனை சாரணை நன்னாரி. 380

சாதிக் காயுடன் சந்தனமும் தாமரை வளையம் முந்திரிகை
மாதர்க் கரசே அமுக்கிராவும் சிறுநா கேசுரம் கூகைநீறு
சேதப் படாச்செஞ் சந்தனமும் திகழ்கரு வேம்பு முக்கரைச் சாரணைவேர்
நீதப் படியே வகையொன்று நிறுத்தே இரண்டு வராகனெடை. 381

இந்தப் படியே தானிடித்து இதமாம் சர்க்கரை நேர்கூட்டி
விந்தை ஆவின் நெய்யுடனே வெருகடி கொள்ளத் தீரும்வகை
பந்த மான பயித்தியம் பருக்கும் சரீரம் திடமாகும்
வந்த சயமும் பெரும்பாடு மாதே தீரும் திண்ணமிதே. 382

(99) தாளிவில்வாதி லேகியம்

முத்தான வில்லை வேரை முப்பது பலம்நி றுத்து
வத்தாத கலநீர் விட்டு வற்றவே எட்டொன் றாக்கிப்
பத்தமாய் வடித்தி றுத்துப் பனைவெல்லம் எடைதான் சேர்த்துச்
சுத்தமாய்க் காய்ச்சி இஞ்சிச் சாறுடன் நாழி கூட்டே. 383

கொம்மட்டி மாது ளங்காய் குலவுநா லுடைத்துக் கூட்டிச்
செம்மையாய் லேகி யந்தான் தெளிவுடன் பதந்தப் பாமல்
நன்மையாய்ச் சுக்கு மூன்று நலம்தரும் மிளகு நாலு
உண்மைதிப் பிலியும் இரண்டு உகந்தசெவ் வியமும் ஒன்றே. 384

சித்திர மூலம் ஒன்று திப்பிலி மூலம் இரண்டு
நத்தும் தாளிச பத்திரியொன்று நல்லநா கேசுர மொன்று
இத்தனை எல்லாம் கூட்டி இடித்தெ டுத்தே கூட்டி
வத்திர காயம் செய்து மருந்துடன் கிண்டு கிண்டே. 385

தேன்படி அரையும் விட்டுச் சேரவே கொட்டிக் கிண்டி
தான்படு தானி யத்தில் பத்துநாள் புடந்தான் வைத்து
வாம்பிர சரீர சுத்தி வாங்கியே புன்னைக் காய்போல்
வீம்பீரக் கொள்ளத் தீரும் வியாதியின் விவரம் சொல்லே. 386

அக்கினி மாந்தம் குன்மம் அரோசிகம் வாந்தி பித்தம்
விக்கவோ டிவைகள் வாய்வு மிகுத்தகா மாலை சோகை
சிக்குமே மூல வாய்வு சேர்ந்திடும் பித்த பாண்டு
நிக்குமாம் என்று கும்பன் நேசமாய் உரைத்த நூலே. 387

(100) ஏலாதிச் சூரணம்

கோட்டம் ஏலம் சடாமஞ்சில் குக்கில் திப்பிலி முத்தமுடன்
வாட்ட மதுரம் இலவங்கம் வலிகை பேரீஞ்சு முந்திரிகை
நீட்டும் சாரணை நெருஞ்சிவேர் நிலப்பனை சீந்திற் சர்க்கரையும்
பூட்டும் சந்தனம் இருநாகப் பூவுமிரு சீரகந் தானே. 388

தானே வகைக்குத் துட்டுநிறை சரிசர்க்க ரையுந் தான்கலந்து
மானே ஆவின் நெய்யிலொரு மண்டலங் கொள்ளத் தீரும்வகை
ஊன பித்தம் நாற்பதுவும் உன்மாத பித்த ரோசிகமும்
தானே பாண்டு அத்திசுரம் சயங்கா மாலை தான்போமே. 389

மூல வாய்வு குன்மமெட்டு மூத்திர கிரிச்சிர ஆமலகம்
சாலம் செய்யும் பிரமேகம் சார்ந்த இருபத் தொன்றுடனே
வால உட்டண வாய்வுடனே வாந்தியும் மாறு மென்று
ஆலம் உண்டார் தாமுரைத்தார் என்றார் அகத்திய மாமுனியே. 390

(101) கண்டாத்திரி லேகியம்

இஞ்சிமேற் புறணி சீவி இதமாய்ப் பத்துப் பலமெடுத்து
வஞ்சிக் கொடியே ஆவினெய் விட்டு வறுத்துப் பதத்துடனே
தங்கப் படவே திரிகடுகு தானே வகைக்குப் பலமொன்று
மஞ்சும் ஏலம் சீரகமும் மிகவும் தாளிச பத்திரியே. 391

கொத்த மல்லி தேசாபுரம் கொடிய அரத்தை நாகேசுரம்
பத்தும் கடுக்காய் இலவங்க பத்திரி நெல்லி நெற்பொரியும்
உத்தம் பேரீஞ்சு முந்திரிகை உகந்த இலாமிச்சு பருத்திவிதை
வைத்து மருந்து வகைக்குபலம் அரையாய்க் கூட்டி யிடித்திடுமே. 392

இடுமே சாதி பத்திரியும் இனிய கிராம்பு சாதிக்காய்
கொடுமே மூன்று வராகனெடை கொண்டே யிடித்து உடன்கலந்து
தடுமா றாமல் சர்க்கரையும் சரியே கூட்டி அரைப்படிநெய்
விடுமே தேன்படி கால்கூட்டி மிகவும் லேகிய மாய்ச்செய்யே. 393

சேர்த்திடும் மருந்தே ஒன்றாய்ச் சிறுபுன் னைக்கா யளவு
ஏத்திடும் இரண்டு வேளை இச்சாபத் தியமாய்க் கொள்ள
தீத்திடும் பயித்திய வாய்வு செரியாத குன்மம் வாய்வு
ஊத்த வாய் உலர்த்தல் மந்தம் உட்டண ரோக முடன்போமே. 394

சூசிகா வாய்வு காசம் சுரமூல வாய்வுச் கிராணி
பாசிபோல் படரும் பித்தம் பாண்டுகா மாலை சோகை
வாசியாம் உளுவை கெண்டை மகோதரம் விக்கல் வாந்தி
மாசிலான் அருளைக் கொண்டு மண்டலம் மருந்து செய்யே. 395

(102) அரையாப்புக்கு எண்ணெய்

கொடிவேலி மாவி லங்கு கூறிய வேளை வேரும்
வடிவுள்ள எலுமிச் சங்கா யளவுசாந் தரைத்தெ டுத்து
இடிகளி லையின் சாறு படியரை இதம்நல் லெண்ணெய்
படியரை கூட விட்டுப் பாங்குடன் அரைத்தி டாயே. 396

மிளகுவ சம்புவெள் ளுள்ளி மிகவும் வகைக்குவ ராகனஞ்சு
அளவாய்ப் சிலைச் சாறுவிட் டரைத்து அடுப்பில்வைத் தெரித்து
வளமாய் மெழுகு பதத்துடனே வடித்துக் கலச மதில்வைத்து
அளவாய்ச் கரண்டி எண்ணெய்தான் அந்திவி டிந்தது கொள்வீரே. 397

கொள்ளும் இப்படி மூன்றுநாள் குலவுமறு பத்திய மும்போய்
உள்ள படிக்குத் தலைமுழுகி உப்பு வறுத்துத் தான்கூட்டி
மெள்ளவே எட்டாம் நாளும் வேண்டின தெல்லாங் கூட்டத்
தள்ளுமே கட்டி நாலாய் தானுடைந் தோடு மென்றே. 398

(103) வயிற்றுக் கடுப்புக்கு

சாதிக் காயுடன் அபினி சரிநிறை கரண்டி தனிலிட்டுச்
சோதிக் கானநல் லெண்ணெய் துளிவிட்டே பதமாய்க் காய்ச்சி
மாதர்க் கரசே அம்மிதனில் வைத்துஅனத்துப் பனைவெல் லமதில்
நீதிப் படியே மூன்றுநாள் நிசமாய்க் கொள்ளத் திருமிதே. 399

தீரும் ரத்த சீதமுமாய்ச் சேருங் கிராணி உள்மூலம்
ஆரும் அறியா தேயோடும் அதிசாரத் துடன்வயிற் றுளைவும்
நீரும் கடுப்புச் சுரம்மிகுந்து நிலைமை தப்பில் போறதுவும்
பேரும் சொல்லா தேயோடும் பிரளைய வாரி அடைபடுமே. 400

(104) நீரிழிவுக்கு உடும்பு நெய்

ஆவினெய் காரெள் ளெண்ணெய் அப்பைக் கிழங்கு ஆத்திச்சாறு
மேவும் நீர்வள்ளி விழி மிகுகட லிறாஞ்சில் பட்டை
ஆவாரைப் பட்டையின் சாறு ஆனதோர் வகைக்கு உரியாய்
தாவிய பருத்திப் பாலும் தானுழக்கு அளந்து கூட்டே. 401

பூனைக் காலி அமுக்கிரா பொருந்தும் நெருஞ்சி சிறுபூனை
பீனை வென்ற நிலப்பனையும் மேவும் கடலிறாஞ்சி ஆவரை
ஆன மஞ்சட் கிழங்குஅல்லி அதிமதுரம் சண்பகப் பூவும்
மானே சாதிக் காயேலம் மருவு சாதி பத்திரியே. 402

கோட்டம் கிராம்பு களிப்பாக்கும் கொள்ளும் கல்மதம் அபினியுடன்
நாட்டி வகைக்கு ஒர்கழஞ்சு நல்ல உடும்பு ஒன்றுரித்து
கூட்டி அரைத்துக் கொதிக்கவைத்து குறுக வெந்து தான்வடித்துப்
பூட்டும் கடுகு மிகஅருந்தி பின்பு எண்ணெய் கொள்வீரே. 403

கொள்வீர் இப்படி அந்திசந்தி கூசாது இருபது நாளளவில்
தள்ளும் பிரமேகம் இருபத்தொன்று சாந்தம் நீரிழிவு இருபத்தொன்று
துள்ளி தெரிக்க ஒட்டாமல் சூழ்ந்து அடைபட்டு உடையாது
உள்ள உடும்பின் நெய்யிது உறுதி யான நெய்யாமே. 404

(105) கிரந்திக்குக் கசாயம்

சீனத்தின் பறங்கிப் பட்டை செங்கத்தாரி சித்திர மூலம்
தேனுற்ற சிவனார் வேம்பு திரமுடன் சங்கங் குப்பி
கானொத்த சங்க வேரும் கனமுடன் பிரப்பம் வேரும்
மானொத்த அமுக்கி ராதிவேர் மருவிய நிலவா கைவேர். 405

இந்த வகைக்குப் பலமஞ்சு இதமாய் இடித்துத் தூளாக்கி
அந்த முடன்கருஞ் சீரகமும் அடவிச் சீரகம் வகைக்குப்பலம்
விந்தை யாக வேயிடித்து வெருகடி நாழி நீரிலிட்டுச்
சிந்தைப் படியே ஆழாக்காய்த் தெளிவா நிறுத்துக் கொள்ளே. 406

கொண்டிடும் இரண்டு வேளை கூச்சமில் லாம லேதான்
மண்டலம் கொள்ளத் தீரும் மருவிய கிரந்தி சூலை
வண்டுகள் கடிகள் குட்டம் வாதமும் அற்று யாவும்
அண்டின பேர்க்கும் வாரா தென்றுமா முனிவன் சொன்னான். 407

(106) அருளாதி லேகியம்

ஆலுடன் அரசு வில்வம் அத்திமா துளையும் நெல்லி
வேலுமா நாவல் இச்சி விரவிய வகைக்கு ஈரைந்து
சாலவே பலமி டித்து இதன்தொ கைதழை பிடியாய்
கோலமாய் பாண்டத் திட்டுக் குளிர்ந்தநீர் பதக்கு வாரே. 408

இந்த மருந்தி னோடொக்க இலாமிச்சு வேருமே கூட்டி
அந்த கசாயம் எட்டொன்று ஆக வடித்துச் சட்டிதனில்
சிந்தை மகிழச் சர்க்கரையும் சேரொன் றேகால் தான்போட்டு
வந்த குழம்பாய்ப் பதம்பார்த்து வற்றக் காய்ச்ச வல்லீரே. 409

திப்பிலி சுக்கு மிளகோமம் சீரகம் சிறுநா கப்பூ
இப்புகம் ஏலம் இலவங்கம் இனிய கிராம்பு சாதிக்காய்
அப்படி முத்தம் அதிவிடையம் ஆன சாதி பத்திரியும்
தப்பில் லாத வாய்விளங்கம் தனித்த லவங்க பத்திரியே. 410

தாளிச பத்திரி நாகப்பூ தனதுடன் கொத்த மல்லி
கேளும் வால்மிள கதுவும் கூகை நீறுடன் குராசானி.
வாள கருஞ்சீ ரகமும் வகைக்கரைப் பலமாய்க் கொண்டு
நாளும் இடித்துத் தூளாய் நலமுடன் கொட்டிக் கிண்டே. 411

தேனுரி அளந்து விட்டுத் திடமுடன் கிளறி நன்றாய்
வானுரைக் கவசந் தன்னில் வைத்துப்பின் புன்னைக் காய்போல்
ஆனதோர் அந்தி சந்தி அவிழ்தங்கள் கொள்ளு வோர்க்கு
மானமாம் வாய்வு மந்தம் வயிற்றினில் எரிவு போமே. 412

மூலமாம் கடுப்பு உளைவு முதிர்ந்திடும் பித்த ரோகம்
சீலமாய் சீத ரத்தம் சேர்ந்திடும் வயிற்று உளைவும்
கோலமாய் பாண்டு சோகை குன்மமும் பயித்திய வாய்வு
மேவலார் குழலீர் மேக வெட்டையும் மிடந்து போமே. 413

(107) இலகு வில்வாதி லேகியம்

பார்புகழ் வில்லை வேரின் பட்டையைத் தட்டி நன்றாய்
சீர்பெறத் தரித்தி டித்துச் சிறக்கவே முப்பது பலந்தான்
வார்பெறப் பாண்டத் திட்டு வற்றுநீர் தூணி விட்டு
ஏர்பெற எட்டொன் றாக்கி இதமுடன் இறக்கி டாயே. 414

இறக்கிய கசாயந் தன்னை இதமுடன் வடித்துக் கொள்ள
முறுக்கமாம் பனைவெல் லந்தான் முப்பது பலம்நி றுத்து
நறுக்கியே அதனிற் போட்டு நன்றுடன் பாகு பண்ணி
சுறுக்கமாய்ச் சுக்கு இரண்டு சொன்னதோர் மிளகு நாலே. 415

திப்பிலி மூலம் செவ்வியம் திகழும் வகைக்கி ரண்டு
மெய்ப்புடன் லவங்கப் பட்டை பத்திரி வகைக்கி ரண்டு
செப்புடன் சிறுநா கப்பூச் சீரகம்ஒன் றோமம் இரண்டு
தப்பில்லா தெல்லாம் தானும் தாளிச பத்திரியும் காலே. 416

இத்தொகை மருந்தொன் றாக இதமுடன் இடித்துத் தூளாய்
வத்திய பாகி விட்டு வாகுடன் கொட்டிக் கிண்டி
நத்திய தேனும் நாழி நலம்பெற விட்டு ளாவி
பத்திய சரீர சுத்தி பாவித்துக் கொண்டி டாயே. 417

கொண்டால் குன்மம் வாய்வுடனே கொடிய வாந்தி பிராந்தியும்போம்
உண்டால் அசனம் சீரணமாம் உட்டண வாய்வு உட்காய்ச்சல்
பண்டும் உள்ள காமாலை பாண்டு சோகை விடவாதம்
விண்ட பயித்தியம் இருமல் விக்கல் மூல வாய்வறுமே. 418

வெகுவாய் கழிச்சல் நீர்ப்பாடு மிகுதி இரைச்சல் வயிறுபொருமல்
சொகுசாய் கைகால் எரிவுடனே சொறியும் தினவும் மயக்கமிவை
அகுவை வெப்புப் பாவையினால் அக்கினி மந்தம் எரிகுன்மம்
லகுவில் வாதி லேகியம்சொல் லகுவா மென்று முனியுரைத்தார். 419

(108) காது நோவுக்கு

உள்ளியும் முருங்கை வேரும் முத்தெருக் கிலையும் உப்பும்
கள்ளியும் பாலும் நன்றாம் கலந்துடன் வெந்த எண்ணெய்
துள்ளியும் தெரிக்க வேண்டாச் செவிதனில் அருகே செல்ல
தெள்ளிதாய் ஒருத்தன் செய்த்தீ வினைபோலத் தீரு மென்றே. 420

நல்லெண்ணெய் ஆயிலப் பட்டை நலந்தரும் சாதிக் காயும்
மெல்லநீர் விட்ட ரைத்து மெழுகுடன் பதத்தி றக்கிச்
சொல்லிய காதிற் குத்தித் துணியினால் அடைத்துக் கொண்டால்
கல்லுமே கரைந்து மண்டைக் கரப்பனும் வாங்கு மென்றே. 421

(109) சுரமக்கினி மாத்திரை

நாலு சூதம் சீயிரண்டு நல்ல கந்தகம் ஈரெட்டு
கால காந்தம் அதுக்கிரட்டி கதித்த லோகம் அதுக்கிரட்டி
ஏலம் குழலி இவையைந்தும் இட்டே குமரிச் சாற்றரைத்துத்
தாலம் தன்னில் தப்பிவைக்கத் தணலாய் எரியும் கண்டீரே. 422

கண்டு கொள்ளீர் காமாலை கதித்த பாண்டு வுடன்சூலை
அண்டவாதம் விரைவாதம் அலற்றும் சன்னி ஆரியமாம்
விண்டே ஒருபண வெடைதான் விரையும் இஞ்சிச் சாற்றிலிடப்
பண்டே முனிவர் இதன்படியே பகர்ந்தே எழுதி வைத்தனரே. 423

(110) அரக்கெண்ணெய்த் தைலம்

கொம்பரக்கு வெருகன்கி ழங்குஅமுக் கிராவேர்
கூறுமிலா மிச்சுவேர் சீந்திற் தண்டு
அம்பர்க்கு நன்றாய் வற்றக் காய்ச்சி
....
வம்பர்க்கு முலையாளே நல்லெண் ணெய்தான்
வார்த்திரண்டு படியும்விட்டு மத்திப் பாயே. 424

மத்தித்துப் பாலிரண்டு படியு மிரண்டு
மருவுமிள நீர்விட்டு வற்றக் காய்ச்சி
தித்திக்கும் அதிவிடையம் மஞ்சிட் டியுந்தான்
செஞ்சந்தனம் அகில்தேவ தாரம் தேக்கு
உத்தசந்த னம்குப்பை யோடு ...
... ...
அத்தனையும் வகைக்கிரண்டு வராகன் வாங்கி
அரைத்ததனைக் கலசந்தனில் வடித்தி டாயே. 425

பா. 424, 425 இல் சீர்கள் விடுபட்டுள்ளன.

வடித்தஅரக் கெண்ணெய்தனை முழுக மெய்யில்
மத்திக்க நசியமிட உள்ளே வாங்கி
குடித்துவர உட்காய்ச்சல் மாறல் காய்ச்சல்
குளிர்க்காய்ச்சல் பிரமேகம் குட்டம் நெஞ்சில்
இடித்திருமல் சயகாசம் ஈளை முதலிய
இவையெலாம் தீர்ந்து விடுகு மென்றே
வடித்துமுதே பொதிகைமா மலையில் வாழும்
மாமுனிவ ருரைத்ததென வசனிப் பீரே. 426

(111) கலிங்காதி லேகியம்

அலகையெனும் பேய்க்கொமட்டிக் காய்ச்சாறு நாழி
அதனடுவே எலுமிச்சம் பழச்சாறு நாழி
குலவுகரு நொச்சியிலைச் சாறு நாழி
கொள்ளிவைவெள் ளுள்ளியிஞ்சிச் சாறு நாழி
சலமிறவே காய்ந்துவற்றி நாழி யாகத்
தன்னொடுசா திலிங்கம் சூதம் காயம்
நலமுடைய வெண்காரம் சோற்று உப்பும்
நற்கடுகு மோதகமும் நயந்து கொள்ளே. 427

கொள்ளுவது வெந்தய மிரிசி சுக்கு
குலவுசெரி நேர்வாளம் காந்தமோ ரொன்று
உள்ளபடி நிறைமூன்று கழஞ்சு கொண்டு
ஒக்கவே தான்காய்ந்து துழாவிக் கொண்டு
மெள்ளவது பழம்புளிபோல் பதந்தான் ஆனால்
மீறாமல் தூதுவளங் காய்ப்போல் உண்டை
உள்ளபடி குன்மமெட்டும் வாய்வு வாங்கும்
உதிரத்தில் உட்தோடம் ஓடிப் போமே. 428

(112) கலிங்காதி எண்ணெய்

பேயன்கொம் மட்டிக்காய் தன்னைப் பெருக்கமாய் உடைத்துப் போட்டு
மாயநீர் பதக்கு விட்டு வற்றவே எட்டொன் றாக்கிக்
காயதே சாபுர முடனே கடுகுரோ கணிஇந் துப்பு
ஆயதோர் திரிகடு குடனே அடவுடன் வராக ஸிரண்டே. 429

எல்லா மருந்தும் தான்கூட்டி இதமாம் கடுக்காய் ஒருபலமும்
கல்லில் அரைத்துப் பொடித்து கதித்த விளக்கெண்ணெய் இருநாழி
வல்ல அடுப்பில் வைத்தெரித்து வாகாய் மெழுகு பதத்திறக்கி
மெல்ல வேஆழாக் கெண்ணெய்கொள் விடவாதம் வாய்வோடிப்போமே. 430

கெண்டை கிளிசு அகுவை வெப்புப்பா வைகுன்மம் எட்டுடனே
வண்டனி குழலாய் மகோதரம் நீராமை வயிற்றில் கட்டிகளும்
கண்டித நெஞ்சு நோக்காடும் கடிய சீதக் கட்டுடனே
அண்டின சிலேட்டு மத்தில் அநேக நோய்கள் தீருமென்றே. 431

பத்தியம் மிளகு நீரும் பருகிடில் மீறிற் றென்றால்
மெத்துடன் ஆவின் பாலும் மோருடன் கூட்ட நிற்கும்
சுத்தமாய் விரோசன முந்தான் சுகமுடன் ஆகு மென்று
அத்தனார் உமைக்கு ரைத்தார் அகத்தியர் நமக்கு ரைத்தார். 432

(113) தேற்றான் நெய்

சீனி உழக்கு நெய்நாழி தேற்றான் வேரின் தோல்நாழி
ஆன சிறுகீரை வேர்பிடியும் அடுக்கும் பேய்ப்புடல் பற்படாகம்
தானே வெந்து தின்னச் சயரோ கம்போம் ஈளைபோம்
கானார் குழலி மந்தார காசம் போகும் கண்டீரே. 433

(114) வியாதி கிருதம்

சேங்கொட்டை பனையின் வெல்லம் சேர்ந்தெள்ளு சமனாய்க் கொண்டு
பாங்குடன் இடித்து ஒன்றாய்ப் பழகிய கலசத் திட்டுச்
சாங்கமாய்ப் புன்னைக் காயளவு நாற்பது நாள்கள் தானும்
தீங்கரக் கொள்ளு வீராய்ச் சேருமே மோரும் சோறும். 434

குட்டமும் கிரந்திப் புண்ணும் கொடியதோர் சொறிசி ரங்கும்
மட்டில்லா வாத சூலை வண்டுகள் கடிகள் மூலம்
அட்டமாம் குன்மம் வாய்வு அடிவயிற் றிரண்டு மெல்லாம்
திட்டமாய்த் தீரு மென்று திருமுனி அருளிச் செய்தார். 435

(115) விடவாத எண்ணெய்

வாதம் அடக்கி முடக்கற்றான் மாலா தொண்டை நீர்முள்ளி
கோதும் சங்கங் குப்பியுடன் கொட்டைக் கரந்தை துளசிநொச்சி
பேதம் இல்லாக் கோழியவரை பெரிய மூக்கரைச் சாரணையும்
சேதம் இல்லாக் கரிப்பானும் சேரும் கருஞ்சூரை யுந்தானே. 436

இந்த மருந்து சேர்த்துவைத்து இதமாய் வகைக்குச் சாறுழக்கு
அந்த மான விளக்கெண்ணெய் ஆனதோர் நாழி தானும்
விந்தை யான சிற்றகத்திச் சாறுமே நாழி கூட்டிச்
சுந்தர அடுப்பி லேற்றிச் சுவறிட எரித்தி டாயே. 437

எரித்திடும் மருந்து தன்னை இறக்கியே வைத்துப் பின்னை
நறுக்கிய திரிகடு குடனே கோட்டம் கத்தூரி மஞ்சள்
சுருக்கமாம் வேம்பு செங்கத் தாரி சென்ன கரப்பட்டை
பெருத்திடும் வசம்பு சாதிக் காயும்வெள் ளுள்ளி தானே. 438

கடுக்காய் தானிக்காய் சிவதை கருஞ்சீ ரகமும் கழஞ்சாக
இடுக்க மில்லா நேர்வாளம் இருபது விதையும் தான்கூட்டி
ஒடுக்க மாக வேயரைத்து ஒன்றாய்க் கலந்து ஈருள்ளி
அடுக்கும் பலந்தான் இரண்டுடனே அறிந்து கூட்ட வல்லீரே. 439

கூட்டிய மருந்து தன்னைக் கொதியிட்டு மெழுகு போல
ஏட்டியே வடித்தி றக்கி இரண்டுகா செடைதா னருந்த
வாட்டியே விதம்வித மாக வயிறுதான் கழிந்து ஆமக்
கூட்டுடன் வீழு மென்று குறுமுனி அருளிச் செய்தார். 440

சூலையும் கிரந்தி ரோகம் சொறிசிரங் கொடுக ரப்பன்
மாலையும் விடபா கந்தான் வாய்வுடன் கெண்டை கட்டி
மூலமாம் வாய்வும் தீரும் முள்ளியும் அறைக்கீரை யுள்ளி
கோலமாம் பருப்பும் கூட்டிக் கொண்டிடில் வியாதி போமே. 441

(116) பெரும்பாடு, வெள்ளை சாய்கிறதுக்கு

சந்தனம் ஏலம் கோட்டம் சாதிக்காய் சாதி பத்திரி
இந்தில வங்கப் பட்டை இலவங்க பத்திரி கிராம்பு
வந்தமா விரைசீ ரகமும் மதுரமும் கலையின் கொம்பு
மந்தமாய்ச் சமனாய் ஆவின் வெண்ணெயில் தானுங் கொள்ளே. 442

கொள்ளவே மூன்று நாளும் கோதில்லா வெந்நீர் தன்னில்
தள்ளுமே சீயும் ரத்தம் தானடைப் படுத்து மென்று
உள்ளதில் உட்டண மெல்லாம் ஒதுங்கிய பிரமே கமுந்தான்
துள்ளியே யில்லா தோடிச் சுவறிடு மென்று ரைத்தார். 443

(வேறு)

மூங்கிலிலை நீர்ப்பூலா யிலையும் விளங்கா யளவா யரைத்துப்
பாங்காம் எருமைத் தயிரும் படியில்திரு நாமம் விரல்நீளம்
தாங்க அரைத்துச் சர்க்கரையில் தானே எலுமிச்சங் காயளவு
ஆங்கான் வயிறுநிறை யம்மட்டால் அருந்து மூன்று நாள்தானே. 444

(வேறு)

எலுமிச் சங்கா யளவு இனியவெற் றிலைய ரைத்துக்
குலுங்கவே முலைப்பால் ஆழாக்கில் குடித்திட வும்நன் றாகக்
கலங்கிய சீயும் மாற்றக் கட்டியும் உடனே நிற்கும்
துலங்கிய மூன்று நாளும் சுகமுடன் உள்ளே கொள்ளே. 445

(117) விப்புருதிக்கு

மிளகுடன் ஓமம் வெல்லம் வகையொன்று வராக னொன்று
அளவென அரைத்துக் கோழி முட்டைமூன் றுடனே கொள்ள
களமுள வென்ற வாய்வுக் கனமும்விப் புருதி யெல்லாம்
வளமுள வயிற்றில் உப்பிசமும் வலியது தீரு மென்றே. 446

(118) வாதத்திற்குச் சூரணம்

சித்திர மூலம் மிளகரணை சிறக்கும் வெண்ணொச் சியுடன்
உத்திடும் ஒருசம னாக உள்நரம் பெடுத்துப் போட்டு
வத்திர காயம் பண்ணி வராகனெடை குளிர்ந்த நீரில்
நித்தமும் கொள்வீர் வாதம் எண்பதும் நிலைகெட் டோடும். 447

(119) சுரத்திற்கு

பழகிய பாண்டத் துள்ளே பாங்குடன் நீரை யூற்றி
அழகிய சீலை கட்டி அதில்ம ருந்து தானும்
துளசியை யிடித்து வைத்துச் சுக்குத்திப் பிலியும் ஓமம்
மிளகுவெள் ளுள்ளி ஐந்து முடிந்துவைத் தெரித்தி டாயே. 448

சட்டியால் மூடி நன்றாய்ச் சதிரென வெந்தி றக்கிக்
கெட்டியாய் இழுத்த ரைத்துக் கிண்ணியில் கலந்தொன் றாக்கி
அட்டிபண் ணாமல் கொள்ள அத்தியில் குளிர்சு ரங்கள்
விட்டிடும் வாத பித்த சிலேட்டுமம் சுரமுந் தானே. 449

(120) நேத்திர வாய்வுக்கு

துத்தமும் சீனக் காரம் சிறுகவே சுட்டெ டுத்து
மெத்தவும் களிம்புண் டான வெண்கல வட்டில் மீதில்
வைத்தாவின் வெண்ணெய் இட்டு மருவியே செங்கல் லைத்தான்
உத்திடப் பொடிதான் செய்து ஒக்கவே சரிதான் கூட்டே. 450

சீரகம் பொடிதான் செய்து சீலையில் வடிதான் கூட்டி
நீரகம் பொருந்தும் காவிச் செம்பினால் இரண்டு சாமம்
ஊரமாய் இழைத்து நல்ல உயர்செம்புச் சிமிழில் வைத்துக்.
கார்நிற மான கண்ணில் கதித்தெள்ளுப் போலி டாயே. 451

கண்ணோவு அமரம் சூடு கதித்திடும் புழுவெட் டுப்பூ
வெண்ணோவு நேத்திர வாய்வு மிகுந்தஅக் கரமும் பில்லம்
மன்னர் கோபந் தினவு மனவினால் புகைச்சல் குந்தம்
பின்னர் சேர்மைதன் னாலே பிணிவிடு மென்று ரைத்தார். 452

(121) மூலக்கடுப்புக்கு

அவரையின் சாறா ழாக்கு ஆவின்மோர் தானு ழக்கு
சுவறிட மூன்று நாளும் துணிந்துதான் உள்ளே கொள்ள
உவரியாம் வயிற்று ளைவும் உள்மூலம் சீத ரத்தம்
குவலயம் தன்னில் நோவும் குலைகுலைந் தோடு மென்றே. 453

(122) இஞ்சிக் குழம்பு

இஞ்சிச் சாறு ஒருபடியும் இதமாம் கொம்மட்டி மாதுளங்காய்
வஞ்சிக் கொடியே கிடையாதால் மருவும் நாரத்தம் பழச்சாறுழக்கு
தஞ்சப் படவே பனைவெல்லம் தானே பத்துப் பலங்கூட்டிக்
கொஞ்சத் தீபம் போட்டெரித்துக் குழம்பாய்க் காய்ச்ச வல்லீரே. 454

இலவங்கப் பட்டை ஏலம் இசைந்த வெட்பா லரிசி
நலமிகு திரிகடு குடனே நல்லதோர் திரிபா லையும்
குலவிய லவங்க பத்திரி கூறிய சித்திர மூலம்
சுலசெயம் வாய்வி ளங்கம் கருஞ்சீ ரகமும் கூட்டே. 455

வகையொன் றுக்குப் பலங்கால் வாங்கியே இடித்துத் தூளாய்த்
திகையாமல் கொட்டிக் கிண்டி தீயைவிட் டிறக்கி வைத்து
நகையாத தேனு ழக்கு விட்டுநற் கலத்தில் வைத்து
மகையாத புன்னைக் காயளவு மருவுமிரண்டு வேளை கொள்ளே. 456

கொள்ளவே சோபம் சூலை கொடியதோர் சுவாச காசம்
தள்ளுமே பயித்தி யத்தில் சருவமும் தீரு மென்று
விள்ளுமே விக்கல் சத்தி மேவிய குன்மம் வாய்வும்
என்னை வில்லா தோடும் என்றுமா முனியு ரைத்தார். 457

(123) குக்குடாதித் தைலம்

வேப்பம் முத்து முசுறுமுட்டை மிளகு திப்பிலி வசம்புசுக்கு
ஆப்பா நாங்குள்பாம்பு பற்படாகம் ஆன சந்தனம் கோட்டமஞ்சள்
நீப்பம் கிலுகிலு நன்னாரி நிற்கும் இந்துப் புடன்வகைக்கு
சேப்பாம் பன்னிரு வராகனெடை சேரு நாநாழி எண்ணெய்க்கே. 458

தோடையின் சாறு விட்டுத் துளாவவே அரைத்து எண்ணெய்
கூடவே விட்டுக் கா்ய்ச்சிக் கொதியிட்டுத் தானு மெல்லாம்
நாடியே பிடித்து உள்ளும் நன்றுகா சளவு கொள்ள
மூடிய சன்னி தீரும் என்றுமா முனியு ரைத்தார். 459

(124) கந்திக் குழம்பு

சங்கிலை துவைத்தி டித்துச் சாறுரி பிழிந்து கொண்டு
பொங்குகந் தகமும் ஆறு வராகனும் பொடியாய்ச் செய்து
பங்கிய நல்ல வெல்லம் வலங்கரைத் தொன்றாய் வைத்துக்
கங்குல்சேர்க் கருப்ப தாகில் கருதுபீங் கானில் வையே. 460

வைத்திடு சூரியன் முன்னே வலித்து மெழுகு போல
உத்திட ஆன பின்பு ஒருபண வெடையெ டுத்து
வெற்றிலை தன்னில் கொள்ள மேகவாய் வுடன்தான் சூலை
அற்றிடு பாரிச வாய்வு அற்புத வாதம் போமே. 461

(125) பிள்ளைகளின் விடாக்கழிச்சலுக்கு

சாதிக்காய் அதிவி டையம் சாதி பத்திரி அபினி
மாதா்க் கரசே சரிசமண் வைத்துநல் லெண்ணெயில் தோய்த்து
சேதப் படாமல் பொரித்துத் தினமொரு பணவெடை முலைப்பாலில்
நீதப் படியே தான்கொடுக்க நிசமாய்க் கழிச்சல் அடைபடுமே. 462

(126) விடப்பருவத் தைலம்

இரதம் கந்தகம் வெண்காரம் இனிய நாபி மனோசிலையும்
சுரதம் லிங்கம் தாளகமும் சொல்லும் கா்க்கடக சிங்கியிவை
விரசம் பெறவே வராகனெடை மிகவும் திப்பிலி மூன்றிவையும்
சரசம் எலுமிச்சஞ் சாற்றில் காடி தன்னி லரையே. 463

தனியே சீலையில் தடவி தனது நிழலில் தானுலர்த்தி
இனிய திரித்து வேப்பெண்ணெய் விட்டே யெரித்து தைலத்தில்
முனிய அண்டத் தைலமொன்று உண்ணத் தைலத்தில் கலந்து
பினியில் தடவத் தீரும்வகை பேசி உரைப்போம் கண்டீரே. 464

கண்டீர் தீரும் வகைவிவரம் கருதும் சன்னி பதினேழும்
பண்டே சுரசன்னி பதின்மூன்றாம் பருத்த வாதம் எண்பதுவும்
வண்ட வலிப்புப் பிறவீச்சு மத்தும் கடுப்புக் குத்துகளும்
விண்டே முனியும் விடப்பருவத் தைலம் உரைத்த திதுவாமே. 465

(127) குறுப்பு தள்ளினதுக்கு

வெந்தயம் பலம்வ றுத்து விளக்கெண்ணெய் படியில் போட்டு
அந்தமாம் நிலக்கு மிழவேர்ப் பட்டை அரைத்துக் கூட்டி
விந்தையாய் அடுப்பில் வைத்து வெந்தபின் இறக்கிக் கொள்ள
பந்தமாம் உடுப்பு மூலக்கடுப் பும்போம் பாரி லோர்க்கே. 466

(128) சருவசுரக் கசாயம்

தாமரை வளையம் கோட்டமுத்தம் தருங்காஞ் சொறிவேர் சிறுதேக்கு
நேம முடனே திப்பிலிமூலம் நிலவேம் புடன்கருஞ் சீரகமும்
காம ரோகணி பற்படாகம் கதித்த ஆடா தோடையிவை
ஆமே சரிநிறை கொண்டிடித்து அடவே நானாழி நீரிலிடே. 467

காய்ச்சியே எட்டொன் றாக்கிக் கருதியே கொள்ளு வோர்க்கு
நீச்சில்லாக் குளிர்வெ துப்பும் நிலைப்பிலா வாத பித்தம்
ஊச்சித சிலேற்று மத்தில் உடன்சுரம் அனைத்தும் போமென
ஆச்சுதே சருவசுர கசாய மென்றே அருளிச் செய்தார். 468

(129) பித்தவலிக்கு

திப்பிலி வறுத்து நன்றாய்ச் சேரவே பொடிதான் செய்து
செப்பமாய்ச் சர்க்க ரையைத் திரமுடன் கூட்டி யொன்றாய்
மெய்ப்புடன் வெருகடி தானும் மிளகுத்தக் காளிச் சாற்றில்
இப்படி ஏழு நாளும் இதமுடன் கொள்ளு வீரே. 469

கொள்ளவே தீரும் ரோகம் கொடியதோர் சிலேற்று மத்தால்
உள்ளிரு மல்வாய் மூக்கால் உடைந்தெழும் இரத்த பித்தம்
தெள்ளுதாம் ரத்த காசம் சிரோரோகம் மாறு மென்று
வள்ளலாம் முனியு ரைத்த மருந்தினை அறிந்து செய்யே. 470

(130) பீனசத்திற்குப் புகை

காயம் மிளகு நொச்சி கதித்தசந் தனமும் கூட்டி
மாயநீர் விட்ட ரைத்து வழித்துச் சீலையில் ஊட்டி
ஞாயமாய்த் திரித்தெ டுத்து நல்லெண்ணெய் தன்னில் தோய்த்துத்
தேயுந்திக் கொளுத்தி மூக்கில் தீப்புகை பிடித்தி டாயே. 471

பித்தத்தின் வலியும் சன்னி பிறவலிப் புளது மண்டைக்
குத்துமே பீனி சத்தில் கூடிய மயக்கம் எல்லாம்
சத்துமில் லாமல் தீர்ந்து தாரணி வைத்தி யர்க்கு
அத்தனார் உரைத்த தென்று அகத்தியர் அருளிச் செய்தார். 472

(131) அசீரணத்திற்கு

வெற்றிலை பத்தெ டுத்து வேண்டும்சுண் ணாம்பு பூசி
வைத்திடும் அடுப்பில் சட்டி மடித்தவெற் றிலையைப் போட்டு
உத்திட வறுத்து நன்றாய் ஒருபடி நீரை வார்த்துப்
பத்திர எட்டொன் றாக்கிப் பாங்குடன் இறுத்துக் கொள்ளே. 473

இப்படிக் கொள்ள வேதான் இதமுடன்அ சீர ணங்கள்
தப்பிய தாது சன்னி சயித்தியம் வாந்தி பிராந்தி
செப்பிய வயிற்றில் நோவும் சீதமும் கடுப்புத் தாகம்
அப்பொழு தோடு மென்று அகத்திய மாமுனி யுரைத்தார். 474

(132) மந்தார காசத்திற்கு

வேலியின் பருத்திச் சாறு வெள்ளுள்ளி உரித்துப் போட்டுப்
பாலித மாக வெந்து பதத்தினில் இறக்கி நன்றாய்
ஏலமாங் குழலாய் இந்த அவிழ்தம்நாற் பதுநாள் கொள்ள
சீலமந் தார காசம் தெரிந்திடும் உண்மை தானே. 475

சன்னியும் பிறவ லிப்பும் தனதுடன் வாத வாய்வும்
அன்னமே குன்மம் எட்டும் அவுடதம் பேரு சொல்ல
என்னமா முலைநல் லாளே வகையுடன் தீரு மென்று
முன்னமே புரமெ ரித்த முக்கண்ணர் அருளிச் செய்தார். 476

(133) பித்தவாய்வுக்குச் சந்தனவாதிச் சூரணம்

சந்தனம் மதுரம் முத்தம் தழைத்தபூ லாங்கி ழங்கு
முந்திரி கைபே ரீந்து விலாமிச்சு நெல்லி முள்ளி
வந்திடும் கோட்டம் செங்கழுநீர் வகைக்கரைப் பலம தாக
இந்தவிழ் தம்சர்க் கரைதான் இயல்புடன் கூட்டி டாயே. 477

கூட்டியே வெருகடி தானும் கூசாமல் கழுநீர் தன்னில்
பூட்டியே கொள்ள பித்தம் பிரமேகம் கிறுகி றுப்பு
நாட்டமாய்க் குலையெ ரிவுடனே நன்றுகை காலெ ரிவுந்தான்
தேட்டமாய் ஒடு மென்று திருமுனி அருளிச் செய்தார். 478

(134) கிரந்தி, சூலை, அரையாப்புக்கு

பெருமரப் பட்டை தன்னைப் பெருக்கமாய்க் கொண்டு வந்து
வெருவவே எலுமிச்சங் காயளவு வெந்நீரில் கோள்ள வேதான்
கருதிய மூன்று நாளும் கனத்தாவின் பாலும் சோறும்
பருகவே முனிவர் சொன்னார் பண்டிதர் அறிந்து பாரே. 479

பாரினில் தீரும் ரோகம் பண்டிதர் அறியச் சொல்வேள்
சீர்கெடும் கிரந்தி சூலை சிறுசிரங் கோடு வாதம்
நீரினில் கடிவி டங்கள் நின்றரை யாப்பு மேகம்
ஏருடன் சொல்லா தோடும் என்றுதான் அருளிச் செய்தார். 480

(135) இரத்த பிரமியத்திற்கு

ஆவின்மோர் அரைப்ப டியினில் ஆனசங் கிலைது வைத்துத்
தாவியே பிசைந்தி றுத்துத் தானதைக் கொள்வீ ராகில்
மேவிய மூன்று நாளும் விடிவேறு குடித்து உப்பில்லா
நாவடக் கிப்பின் பத்தியம் நாள்மூன்று காப்ப தாமே. 481

காத்திடும் மானி டர்க்குக் கருதிய மேக வெட்டை
ஏத்திடும் இரத்தப் பிரமியம் இருவகை பேர்க்கும் தீரும்
மாத்திர மல்லால் பெரும்பாடு மாறு மாறு மென்று
சாற்றினார் தரணி யோர்க்குத் தமிழ்முனி உரைத்த நூலே. 482

(136) மஞ்சள் காமாலைக்கு

எருமைமோர் குறுணி தன்னில் எலுமிச்சம் பழம்பி ழிந்து
அருமையாம் பருவ காலத்து அழகிய கிட்டந் தன்னைப்
பெருகவே இடித்துப் போட்டுப் பூமியில் புடந்தான் வைத்துப்
பெருகவே மூன்று நாளும் பாருஉப் பில்லாப் பத்தியம். 483

உப்பில்லாப் பத்தி யத்தில் உப்புடன் குப்பை மேனி
தப்பில்லா மல்பி ழிந்துச் சாரதனைத் தலையில் தேய்த்து
செப்பமாய் மூன்று நாளில் தீரவே குளிர்ந்த நீரில்
ஒப்புடன் முழுக மஞ்சள் நிறமது ஒதுங்கு மன்றே. 484

மஞ்சட்கா மாலை தீரும் மருவிய பித்தம் தீரும்
வஞ்சியாம் மருந்து நாலும் மாதர்தம் ஆசை யாலும்
கொஞ்சிய சோகை பாண்டு குவளைவிப் புருதி ஈளை
அஞ்சியே தீரு மென்று அகத்திய மாமுனி யுரைத்தார். 485

(137) தேற்றாம் பழச்சீலை

தேற்றாம் பழத்தைப் பிசைந்திருத்துத் தெளிவாய்ச் சீலை தனிலூட்டிக்
காற்றில் உலர்த்தி வைத்திருந்து கதித்த நீரில் தான்கலக்கி
மாற்றம் இல்லாது உட்கொள்ள வாந்தி பிராந்தி மந்தாரம்
ஏற்ற காசம் இருமல் பித்தம் எரிகுன்மம் போகு மென்றே. 486

(138) பீனசத்திற்கு எண்ணெய்

எருக்கம்பூச் சாறு நாழி எள்ளெண்ணெய் படிதான் நாலு
இருப்பமாம் வெள்ளுள் ளியுமே இருபது பலந்தா னாகும்
நறுக்கிய வசம்பு பத்துப் பலமுடன் ஒன்றாய்க் கூட்டிப்
பெருக்கமா யரைத்துப் போட்டுப் பிழையற வடித்துக் கொள்ளே. 487

வடித்திடும் எண்ணெய் தன்னை வாகுடன் சிரசில் மெய்யில்
பிடித்திட வாதம் வாய்வும் பெருத்திடும் சன்னி சூலை
அடிக்கடி தலையில் நோவும் அதிகமாம் உடம்பிற் குத்து
முடுக்கமாய்த் தீரு மென்று முனியுரை செய்த தாமே. 488

வேறு

வெள்ளைச் சாரணையும் குப்பை மேனியும் துவைத்துச் சாறு
மெள்ளவே வகைக்கு உரியாய் வெள்ளுள்ளி பலந்தான் எட்டுத்
தெள்ளிதாய் உரித்துப் போட்டுச் சேர்ந்தநல் லெண்ணெய் தானும்
உள்ளிரு நாழி கூட்டி உகந்துடன் பதமாய்க் காய்ச்சே. 489

காய்ச்சியே பதந்தப் பாமல் கடுகினில் உள்ளிமேல் வந்து
ஆச்சுது வென்ற போது ஆனகம்பி பிசினுங் கால்தான்
கூச்சமில் லாமல் தூவிக் குண்டு சட்டியில் வடித்துப்
பூச்சித மாகத் தேய்த்துப் புகன்றொரு சாமம் வையே. 490

வைத்தபின் சீயக் காயால் வாங்கியே வெந்நீர் தன்னில்
மெத்தென முழுகு வீராய் மூக்கினில் சலம்போல் வீழும்
ரத்தபீ னிசமும் மண்டை நேத்திர வாய்வு சன்னி
பத்தரத் தீரு மென்று பண்டிதர் அறிந்து கொள்ளே. 491

(139) வயிற்றுக் கடுப்புக்கு

வறுத்த புளியங் கொட்டைத்தோல் வாகுடன் பொடியாய்ச் செய்து
நிறுத்துச் சரியாய்ப் பனைவெல்லாம் நேக அரைத்துக் கலந்தொன்றாய்
வெறுத்து வெருகடிப் பிரமாணம் வெந்நீ ருடனே தான்குடிக்க
குறுத்து மான சீதரத்தம் குணமாய் மாளும் கூறலுற்றார். 492

(140) அசீரணத்திற்கு

ஒருகுத்து வேப்பி லையை உரலினில் இடித்துக் கொண்டு
திருமெய்க்கு மரிய உப்புச் சேரவே ஒருபிடி யாகப்
பெருக்கவே யிடித்து நன்றாய்ச் சரியே புடைத்துப் போட்டு
வெருவுயர் காய்ந்தெ டுத்து வேக வைத்தி டாயே. 493

நீர்படி யிரண்டு விட்டு நெருங்கவே எட்டொன் றாக்கிச்
சீருடன் கொஞ்ச மாகச் சிறக்கவே கொள்வீ ராகில்
பாரினில் அசீர ணங்கள் பகைத்திடும் சன்னி வாதம்
வேருடன் கெடுமே மந்தம் விசுளியும் ஓடிப் போமே. 494

(141) கடுப்பு மூலத்திற்கு

நெருப்பழச் சட்டி காய்ச்சி நேருடன் மிளகு போட்டுப்
பருப்பு மத்தால் கடைந்து படிநீர்விட் டுழக்காய்க் காய்ச்சி
இருத்துடன் குடிக்க மந்தம் இசைந்தசீ ரணமும் மூலம்
குருத்துமாங் கடுப்பு மாந்தி குடிகுலைந் தோடு மென்றே. 495

(வேறு)

அழகாம் புளியங் கொழுந்தரைத்து ஆன புன்னைக் காயளவு
விளமை யாமெ ருமையின் தயிருடன் உள்ளே கொள்ளே
முழுவென்ற சத்தக் கடுப்பு மூலக் கடுப்பு எல்லாம்
பழகிய சீத ரத்தம் பறந்திடும் உண்மை தானே. 496

(142) கர்ப்பூரவள்ளித் தைலம்

கர்ப்பூரவள்ளி கொழிஞ்சி முசுமுசுக்கை கதித்ததோர் கஞ்சாங் கோரை
பற்பல விரையில் சாறு பரிந்தொரு உழக்காய்க் கொண்டு
நற்புடன் நல்ல யெண்ணெய் நாட்டில் ஏலமில வங்கப்பட்டை
தர்ப்பருந் தேவ தாரம் தளவிலா மிச்சிரு வேலிசண்பகப்பூ 497

சாதிக்காய் வாய்வி ளங்கம் சரக்கதாம் அசம தாகம்
கோதில்லா கொத்த மல்லி கொள்வகை கழஞ்சே யாகும்
ஏதில்லா எண்ணெய் தன்னில் இதனுடன் கற்கம் சேர
பேதியா தடுப்பில் வைத்துப் பிழையற வடித்துக் கொள்ளே. 498

வடித்திடும் எண்ணெய் தன்னை வாகுடன் தலையில் தேய்த்து
திடத்துடன் முழுகு வீராய்த் தீருமே பித்த மெல்லாம்
பிடித்திடும் பீனி சங்கள் பிரமேகம் இருபத் தொன்றும்
நடுங்கியே ஒடுங்கு மென்று நாதனார் அருளிச் செய்தார். 499

(143) மூலத்திற்கு

கருணையின் கிழங்கு மூன்று கரித்துணி யாலே சுற்றி
எருமையின் சாணிக் குள்ளே இயல்புடன் பொதிந்து சுட்டுக்
கருகாமல் வெந்தெ டுத்து கதித்திடும் இஞ்சிச் சாற்றால்
பெருகவே விட்ட ரைத்துப் பேணியே வழித்துக் கொள்ளே. 500

கொண்டதோர் ஓமம் தானும் கூர்பலம் அரைய தாகப்
பண்டுசேர் பனையின் வெல்லம் பலமொன்று பொடியாய்ச் செய்து
அண்டி சட்டி காய்ச்சி அதிலிட்டு மெள்ளக் கிண்டி
தண்டிய கழற்சி போலே தான்கொள்ள மூலம் போமே. 501

(144) அண்டவாதத்திற்கு

திருவை யேவெள் ளுள்ளியும் சேர்ந்திடும் பலந்தான் நாலு
கருதிய பனைவெல் லந்தான் கதித்திடும் பலமு பிரண்டு
உறுதியாம் கழற்சிக் காயே உடைத்தெட்டு வறுத்துக் கூட்டி
அருமையாம் பெருங்கா யந்தான் அரைவரா கனெடையுங் கூட்டே. 502

கூட்டியே அரைத்தொன் றாகக் கொண்டிடும் கழற்சி போல
வாட்டியே இரண்டு வேளை மருவியே ஏழு நாளும்
பூட்டியே கொள்ளத் தீரும் பெருகிய பூதம் போல
ஆட்டிய அண்ட வாதம் அந்தர வாய்வும் போமெ. 503

(145) வண்டு கடிக்கு

பூம தாளப் பட்டைதன்னைப் போரந்த எலுமிச்சங் காயளவு
தாமே அரைத்து இளவெந்நீர் தன்னில் ஏழு நாள்கொள்ள
ஆமாம் வண்டு கடிகிரந்தி அழுகாம் காணாக் கடியுடனே
போமே உப்புப் புளியெல்லாம் பொருந்த மறுபத் தியங்காரே. 504

(146) அதிசார சுரத்திற்குக் கசாயம்

முத்தக் காசு வில்லைவேர் முதிரும் வட்டத் திருப்பியுடன்
ஒத்த சுக்கு வெட்பாலரிசி உயரும் திப்பிலி அதிவிடையம்
சுத்த மான சலத்திலிட்டுச் சுவறக் காய்ச்சி அருந்துவீராய்
மெத்த வான அதிசார சுரம்விட் டகலும் கண்டீரே. 505

(147) சன்னி வாதத்திற்கு எண்ணெய்

தேங்கா யெண்ணெய் வேப்பெண்ணெய்
சிறந்த இலுப்பை புங்கெண்ணெய்
ஆங்கான் பேயன் கொமட்டியெண்ணெய்
அழகாய் மாவட் டையுடன்
பாங்காய் வகைக்குழக்கு யிரண்டரையாய்ப்
பகுத்த கொடுவே லியின்சாறு
தாங்கும் வேலிப் பருத்திகுழலா
தொண்டை ஊமத்தஞ் சாறுழக்கே. 506

எருக்கலம்பால் கள்ளிப் பாலும் இதமுடன் வகைக்கு ழக்காய்
நறுக்கிய கழற்சிக் கொட்டை நன்றுநூற் றைம்ப தாகும்
இருப்பமாம் அரிதா ரந்தான் ஏழுடன் வராகன் கூட்டிச்
சுருக்கமாய்ப் பொடிதான் செய்து சுவறவே எரித்தி டாயே. 507

மெழுகுடன் பதத்தி றக்கி மேலிட்டுப் பிடித்தால் சன்னி
பழுதில்லா வாதம் எண்பதும் பணிவுடன் தீரு மென்று
வழுதில்லாக் குறுமு னியுந்தான் வசனித்த படியே செய்தால்
முழுதுமே சன்னி வாதம் மூடியும் மயக்கம் போமே. 508

(148) சோறு செரியாமைக்கு

அசம தாகம் வசம்புசுக்கு ஆன சாரணை வேர்நறுக்கிச்
சமனாய்ச் சட்டி தனிலிட்டுத் தானே வறுத்துக் கறியுப்பு
நிசமாய்ச் கூடவே போட்டு நீர்நாழி விட்டு உழக்காக
வசமாய்க் கொள்வீ ராமாகில் மாதே சோறு செரித்திடுமே. 509

(149) அசீரணத்திற்கு

புங்கிலை வசம்பு ஓமம் பொன்னிற மாக வறுத்து
சங்கையாய்ப் பழநீ ரூற்றித் தானுழக் காகக் காய்ச்சி
மங்கையே இறுத்துக் கொள்ள வாந்தியும் பிராந்தி யெல்லாம்
பொங்கமாய் அடைப டுத்தும் என்றுதான் முனிபு கழ்ந்தார். 510

(150) குடல்படுவனுக்கு

திடத்துடன் கேளும் வாகைத் தீட்டியே புடைத்துப் போட்டு
மடக்கியே நாழி நீரை வார்த்தரைப் படியாய்க் காய்ச்சிக்
குடித்திடக் குடற்ப டுவனைக் கொண்டிடும் அசீர ணங்கள்
உடைத்திடும் குளம டைந்த வாறுபோற் றீரு மென்றே. 511

(151) நீர்க்கட்டுக்கு

சிறுகீரை பொன்னாங் காணி சிறுபூளை நெருஞ்சி நாணல்
கரிப்பான் நீர்முள்ளி வேரும் கலந்த வெள்ளரி விதையும்
நறுக்கியே ஒன்றாய்க் கூட்டி நாழிநீர் விட்டா ழாக்காய்ப்
பொறுப்பான பொரிகா ரத்தைப் பொரித்ததில் கரைத்தி டாயே. 512

கரைத்திடும் மருந்து தன்னைக் கலந்துடன் உள்ளே கொள்ள
சிறுத்தநீர்க் கடுப்புத் துன்மாங் கிசம்கல் லடைப்பு மாறி
அறுத்துவெள் ளுடைப்பெ டுத்து ஆறுபோ லாகு மென்று
விரைத்தனன் முனிவன் முன்னூல் விவரமா யுரைத்தா ரென்றே. 513

(152) குட்ட ரோகத்திற்கு

ஆதித்த வாரந் தன்னில் ஆனதோர் விரியன் பாம்பைச்
சோதித்துப் பிடித்த டித்துச் சொன்னதோர் பாண்டத் திட்டு
நீதியால் அரிசி இரண்டு படியுடன் போட்டு மூடிப்
பேதியாம் நாற்பது நாளும் புதைத்துப்பின் எடுத்தி டாயே. 514

எடுத்திடும் அரிசி தன்னை இதமுள்ள வெள்ளைச் சாவல்
... ...
கொடுத்துப்பின் பார்க்கச் சாவல் தன்னையான் சூரணஞ் செய்து
விடுத்திடக் கொள்வோர் குட்ட ரோகமும் விலகு மென்றே. 515

(153) எலும்புருக்கிக்கு

தேங்காய்ப் பாலரைப் படியும் திரமாய்ப் பருத்தி விதையின்பால்
ஆங்கான் அரைப்படி தான்கூட்டி ஆன பசுவின் பால்நாழி
தாங்கவே மூன்றுங் கூட்டிச் சாரித்து உரியாய்க் காய்ச்சிப்
பூங்குழல் முள்ளில வம்பிசி னொருவ ராகன் கூட்டே. 516

பொடியதனில் போட்டுப் பொங்கமாய் மூன்றுநாளும்
விடிவேறு கொள்ளத்தீரும் விரணமும் எலும்புருக்கி
குடியான பிரமேகமுமே கூறிய பெரும்பாடுந்தான்
மிடிகுலைந் தோடுமென்று வேதமா முனியுரைத்தார். 517

(154) மாந்தத்திற்கு லேகியம்

கச்சந் திராயும் வேப்பிலையும் கண்டங் கத்தரிச் சாறுழக்காய்
உச்சித மான விளக்கெண்ணெய் உடனே தானும் உழக்குவிட்டு
அச்சியில் லாத தென்னவெல்லம் ஆன பலந்தான் எட்டுடனே
மெச்சும் வெள்ளுள்ளிப் பலமைந்து விரைய உரித்து வரைந்திடுமே. 518

இந்துப்பு சுக்கு ஓமம் இயலுந் திப்பிலி மிளகு
வெந்தித்து வகைக்கரைப் பலமே விரும்பிக் கொண்டு மதையே
தொந்திப்பாய் இடித்துக் கூட்டிச் சோடித்துப் பதந்தப் பாமல்
அந்தியும் சந்தியும் தானளவு புன்னைக்காய்ப் போலக் கொள்ளே. 519

கொள்ளவே உதிரக் கட்டு கொதித்திடும் கிராணி மந்தம்
துள்ளும் சூசிகா வாய்வும் துடித்திடும் அதிசா ரங்கள்
எள்ளள வில்லா மலேதான் ஏகிடும் எனமுனி வன்தான்
உள்ளன உரைத்தா னென்று உலகுள்ளோர் அறிவ தாமே. 520

(155) மூலக்கடுப்புக்கு

புளியங் கொழுந்தும் ஈறுள்ளி பொருந்த நறுக்கிச் சாறுவாங்கி
மொழியும் எருமைத் தயிருடனே மூன்று நாளும் உட்கொள்ள
கழியும் மூலக் கடுப்புடனே கனத்த சீதம் ரத்தமிவை
துளியும் வாரா தென்றுலகில் சொன்னார் அகத்திய மாமுனியே. 521

(156) கண்டமாலை, பவுத்திரத்திற்கு எண்ணெய்

முத்தெருக் கஞ்செவி யின்வேர் முயங்கிய சிறுபூ ளைவேர்
பத்தியே வகைக்குப் பிடியே பாங்குடன் நல்லெண்ணெய் நாழி
உற்றவெள் ளுள்ளி யுந்தான் ஒரைந்து பலமுங் கூட்டிப்
பத்தியாய் இடித்தொன் றாகப் பாங்குடன் கலந்தி டாயே. 522

கலந்திடும் எண்ணெய் தன்னைக் காய்ச்சியே பதந்தான் பார்த்து
நலந்தரும் வெண்கா ரத்தை நன்றொரு வராகன் கூட்டிச்
சலமில்லாப் பதத்தி றக்கித் தானதை வேறே வைத்து
உலர்ந்திட ஆழாக் கெண்ணெய் உள்ளுக்குக் கொள்ளு வாயே. 523

கொண்டாய் தீரும் விப்புருதி கூறிய பவுத்தி ரங்கள்
கண்ட மாலை தொடைவாழை காசினி குழிவா ழைப்புண்
பண்டே யுள்ள கர்ப்ப விப்புரு தியும்படு வனுமே
அண்டின பேர்க்கு இல்லை யென்று மாமுனிவர் சொன்னார். 524

(157) வாதத்திற்கு, வாய்வுக்குப் பற்று

பொன்ன வரைவேர்த் தோலும் பொருந்துஞ் சுக்குச் சமன்கூட்டித்
தண்ணீர் விட்டுத் தானரைத்துச் சற்றே கொதியிட் டேபூசி
மின்னேர் இடையீர் வாதமுடன் மிகுத்த கட்டி விடகரப்பான்
அன்னல் அருளால் தீருமென்று அறிவோம் இந்த அம்புவிக்கே. 525

வெள்ளுள்ளி கடுகு சுக்கு வெறுந்தண்ணீர் விட்ட ரைத்துத்
தெள்ளிதாய்க் கொதியி லிட்டுத் திண்ணமாய் வலியிற் பூச
நள்ளிரு கதிரோன் கண்ட பனியென நீங்கு மாப்போல்
உள்ளிரு வாய்வு வாதமும் உடன்வலி கடுப்புப் போமே. 526

(158) இரணத்திற்கு

ஊருடன் சுத்தியின் சாறு உடன்விளக் கெண்ணெய் கூட்டி
ஆருடன் சொல்லாய் நாயு ருவியும் அரைத்துப் போட்டுப்
பாரினில் மெழுகு போலப் பதத்தினில் இறக்கிப் புண்ணிலிட
வேருடன் அற்றுப் புண்கள் வெடிமாறும் என்று ரைத்தார். 527

(169) துருசு வைப்பு

செப்புச் சருவந் தன்னில்மேகம் சேர்ந்திடும் உப்பு நாழி
குப்பை மேனியின் சாறுநாழி கூறுநிம் பழச்சாறு நாழி
தப்பில்லா தடுப்பில் வைத்துத் தானெரித் திட்டால் வேறு
அப்பில் லாமல் வற்றினால் ஆனதோர் துருசு மாமே. 528

(160) அபினி வைப்பு

வில்லையின் கனியும் காஞ்சுரையும் மிகவும் வகைக்கு இருநூறு
நல்லா யொன்றுக்குப் பதக்குநீர் நன்றாய் ஊற்றிப் பிசைந்திறுத்து
வல்ல அடுப்பில் தான்காய்ச்சி வாகாய்த் தைலம் ஒன்றாக்கிச்
சொல்லும் ஊமத்தம் விதைபதக்குத் துலங்க வறுத்துப்பொடியாக்கே. 529

ஆக்கிய பொடிய தன்னில் அம்மியில் வைத்து நேக
மூக்கமாய்த் தைலம் விட்டு மெழுகுபோல் அரைத்து வில்லைத்
தீர்க்கமாய்ப் பிடித்து மத்தம் பழுப்பதன் மேலே போட்டுச்
சேர்க்கவே நிழலுலர்த்திச் சேர்ந்திடும் அபினி யாமே. 530

(161) கரப்பனுக்கு எண்ணெய்

அகத்தி கர்ப்பூர வள்ளி அவுரிவெள் ளுறுகு சங்கு
மகத்துவம் ஆடா தோடை மணத்தக் காளி ஆவரை
சுகத்தொடு சங்கங் குப்பிச் சொன்னதோர் நிலக்க டம்பு
முகத்தினில் நாயக மும்கரு நொச்சியு முருக்குக் கூட்டே 531

பாரினில் ஈர வுள்ளி பலவகை யுந்து வைத்துச்
சீர்பெற வகைக்கு முக்காய்ச் சிறக்கவே பிழிந்து கொண்டு
ஏர்பெற ஆம ணக்கம் எண்ணெயும் நாழி விட்டு
வாரணி மாதே மஞ்சள் மரஞ்சள் கத்தூரி மஞ்சள். 532

சிவதை கடுகு ரோகணியும் சீரகம் இருவ கையும்
நலமெ னுடந்திரி கடுகு நல்ல தோர்திரி பலையும்
இவமுடன் ஏலந் தானும் இவ்வகை வராக னொன்று
தவமென வுரைத்தோன் றாகச் சாறுடன் அரைத்தி டாயே. 533

எல்லாம் ஒன்றாய்த் தான்கலந்து இதமாய் அடுப்பில் வைத்தெரித்து
மெள்ள மெழுகு பதத்திறக்கி வேறே கலசம் அதில்வடித்து
நல்லாய் ஆழாக் கெண்ணெயுள்ளே நல்கில் இப்படி மூன்றுநாள்
சொல்லால் கரப்பன் பதினெட்டும் துயர்கெட் டோடுங் கண்டீரே. 534

(162) அரிதாரம் வைப்பு

கழுதைவிட் டையைப் பிசைந்து கட்டியாய் அரிதா ரத்தைப்
பழுதில் லாம லெடுத்துப் பதிந்ததில் புடந்தான் வைக்க
முழுதுமே வெந்து ஆறிப் போனபின் னெடுத்துப் பார்த்தால்
எழுதிய சித்திரம் போல இரத்தமா யிருக்கு மென்றே. 535

இதுதனை யெடுத்துக் கொண்டு எந்தெந்தப் பிரயோ கத்துக்கு
அதனிறை சரியே கொண்டு ஆமெனக் கூட்டி வைத்துப்
பதிவினால் நேமி தேனிஞ்சி பதிந்தசர்க் கரையில் கொள்ளச்
சதிசெயும் காச ரோகம் தளர்ந்திடும் குணமா மென்றே. 536

(163) புண்ணிற்குக் களிம்பு

துத்தமும் துருசு வெள்ளைக் குங்கிலியம் காசுக் கட்டி
மெத்தென மெழுகு நெய்யும் விளக்கெண் ணெயுடன் கலந்து
பத்தரக் கொதிதா னிட்டுப் பாங்குடன் கூட்டி நீரில்
சுத்தமாய் ஊட்டிப் பார்க்கத் துலங்கிய மெழுகு போலாம். 537

புளியிலைத் தண்ணீர் தன்னைப் புண்ணின்மேல் வார்த்து மெள்ளக்
கழுவியே களிம்ப தன்மேல் கண்டுதான் செய்து வந்தால்
குளுமையா யிருந்து புண்ணைக் குணமுடன் ஆற்று மென்று
வழுதிலா முனியு ரைத்த வாகடத் தியல்வு தானே. 538

(164) மந்தார காசத்திற்கு

தேற்றான் கொட்டை ஐந்தாறு தெரிக்கவே நறுக்கி ஊறவைத்து
மாற்றுஞ் சீரகம் கூட்டி வகையுடன் ஆவின்பால் உழக்கில்
ஊற்றுங் கழுநீர் ஆழாக்கில் ஒன்று படுத்திப் பனைவெல்லாம்
தோற்றுக் கொட்டைப் பாக்களவு சுகமாய் அடுப்பில் வைத்தெரியே. 539

எரித்திடும் மெழுகு போல இறக்கிற சமயம் பார்த்து
கருத்திடும் வளையில் ஆர்க்கப் பொடிதனைச் செய்து கொண்டு
திரத்துடன் ஒருவ ராகன் பொடிதனைத் தூவித் தின்றால்
அரைத்திடும் காசம் ஈளை இளைப்பும் ஆமா மென்றே. 540

மந்தார காசம் ஈளை இளைப்புடன் தீரு மென்று
எந்தாமே விடக்கட் டிகளும் இயங்கிய ரத்த காசம்
விந்தையாம் கதிரோன் கண்ட இன்னிருள் போலே நீங்கும்
சுந்தரக் குறுமுனி யுந்தான் சொன்னதோர் படிக்குத் தானே. 541

(165) காமாலை, பித்த சூட்டுக்குத் தைலம்

முற்றாத நெல்லிநங்காய் நீயே கேளாய்
முதிர்ந்தபித்த மாய்க்கிடந்து சுழன்றி டாதே
கற்றாழை வேர்ச்சாறு நால்நா ழியுந்தான்
கருதுநெல்லிக் காய்ச்சாறு நால்நா ழியந்தான்
வற்றாத பசுவின்பால் நால்நா ழியுந்தான்
வகைகொடுப்பை முசுமுசுக்கை நால்நா ழியுந்தான்
மற்றாத அதிமதுரம் ஓர்ப லந்தான்
மருவியஎண் ணெயிருநாழி விட்டுக் காய்ச்சி
மெத்தெனவே சிரசிலிட்டுத் தேய்ப்பி ராகில்
மிகுகுளிருங் காயபித்தம் இரண்டு போமே. 542

(166) இருமலுக்குச் சுக்குக் குழம்பு

நெல்லி திப்பிலி நெற்பொரி சர்க்கரை
நல்ல தென்று நெய்தனில் உண்டிடில்
இல்லை யில்லை இருமலும் ஈளையும்
சொல்ல வெனுமோ சோபமும் தீருமே. 543

(வேறு)

சுக்கொரு பலத்தை நலம்பட யிடித்துச்
சுரவின் பாலுடன் கலந்து
வக்கணத் தருந்த வாய்வுத் தீரு
மன்னையில் இருமலும் இளைப்பும்
இக்கணச் சுக்குக் குழம்பென விளங்கும்
இன்னிசைக் கிளிமொழி மானே. 544

(167) வயிற்றுக் கடுப்புக்கு

ஆனைக் கன்றில் ஓர்பிடியும் அரசன் விரோதி இளம்பிஞ்சும்
கானக் குதிரைத் தன்தோலும் காயாந் தண்ணீர் களிப்பொருக்கும்
தாயைக் கொன்றான் தண்ணீரில் தடாகம் காய்ச்சிக் கொள்வீராய்
மானைக் கொள்ளும் விழியணங்கே வடுகும் தமிழும் குணமாமே. 545

(168) அதிசார சுரத்திற்குக் கசாயம்

மலைதாங்கி முத்தக்காசு அத்திப் பட்டை
மருவிய நீர்ப்பூலா நாவற் பட்டை
இலைதாங்கு மாதுளையும் கொழுந்தும் பிஞ்சும்
இருவேலி இலாமிச்சு மாம்பட்டை ஏலம்
விலைதாங்கும் விடத்தோன் கொம்பு கோட்டம்
மேவியசீ ரகமதுரம் காசுக் கட்டி
கலைதாங்க வேயிடித்து நீரெட்டொன்றாய்க் குடிக்கக்
காய்ச்சலதி சாரமெல்லாம் கடுகிப் போமே. 546

(169) கண்டாவுடதம்

அக்கிரா காரமும் வெள்ளியும் பவளமும்
அதிமதுரம் வில்லை யோடும்
ஆகியக் கலங்கொம்பு பொன்முத்து மாசிக்காய்
ஆன திப்பிலி கிராம்பும்
நக்கனா கிநின்ற ருத்திராக் கத்துடன்
நலமான பன்னி ரெண்டு
நன்றாகவே தெக்கமுலைப் பால்விட்ட ரைத்துநுனி
நாவி னிலுள்ளே தேய்க்கவே

பா. 544 இல் மூன்றடிகளே உள்ளன.

சிக்காது தோடம்பதின் மூன்றும்நில் லாதெனச்
சிவனார் மகிழ்ந்து கொண்டு
செப்பவே உபதேச மீதென்று
திருவுளம் மகிழ்ந்து கொண்டு
முக்காலம் உணர்கின்ற கும்பனுக் குரைசெய்ய
முகமலர்ந்த தடிவ ணங்கி
முசியாமல் மானிடர்க் குரைசெய்த நூல்தனை
முத்துவார் சத்தி யமிதே. 547

(170) பதினெட்டு நஞ்சுக்கு மருந்து

எட்டிக்கு நாவல் எழுதோன்றி தான்றிக்காய்
வட்டமுள்ள ஊமத்தைக்குத் தாமரையாம் – இட்டமுடன்
ஆவரைக்குக் கள்ளி அரளிக் கிடுகடுக்காய்
மேவியநெய் தேனுக்கு வெந்தகரி – பாவையரே
எள்ளொடு சர்க்கரையா மென்றார் எருக்கலைக்கு
வள்ளசங்கம் பழங்கழுதை வண்டுக்கு – மெள்ளவே
நீத்துக்கு மஞ்சளாம் நேர்வாளம் நல்வசம்பு
வேத்தும் சிவதைக்கு வெள்வேலாம் – போத்தியுடன்
நெல்வேரும் சர்க்கரையும் நேரொக்கக் கொள்வார்க்கு
எல்லோருஞ் சொன்னார் இலாமிச்சு – நல்லாய்கேள்
நாவி சிறுகீரை நற்குன்றி வெண்காரம்
தாவியபா டாணம் தருமினகு – பாவையரே
வெற்றிலையோ டெண்ணெய் வளாவிக் குடித்தவர்க்கு
முற்றின தேங்காய் மொழிந்தோடுமே – இத்தனையும்
நீதிக்குப் போகுமென்று நிர்ணயமென் றேமுனிவன்
போதித்தார் நஞ்சுவகை போகுமே. 548

(171) வேப்பெண்ணெய் நெய்

வேப்பெண்ணெய் படியு மொன்று வேண்டிய சீனக் காரம்
ஆப்புடன் மயிலி றகுந்தான் வகைக்கு மூன்றுவராகன்
தாப்புடன் அரைத்துச் சீலை தனில்முடிந் ததனிற் போட்டுக்
கோப்புடன் கொதிதான் மூன்று விசையிட்டு இறக்கி வையே. 549

கழற்சிப் பருப்பு ஒன்றெடுத்து கருதும் பொடியாய் நுணுக்கியதைத்
தழைக்கும் நெய்யில் தான்கலந்து தானே ஒருகா சளவுகொள்ள
முளைக்கும் சன்னி பதினேழு முன்னே வாத வாய்வுகளும்
இளைத்தோம் என்றே ஓடிவிடும் என்றே முனிதா னுரைத்தாரே. 550

(172) பாம்பு ஆடாமல் கூட்டடைய

பங்கம் பாளை தலைச்சுருளி பாரில் அவுரி மாதுளையும்
பொங்கும் தள்ளி வெண்குன்றி பொருந்தும் கழற்சித் திரளுடன்
தங்கச் சிறியா நங்கைஎட்டி தானே கோடக சாலையதும்
சங்கே கருடக் கொடியுடனே கனத்த ஆடா தோடையதே. 551

ஆடா தோடை கரண்டாகம் ஆயும் பீர்க்கு கர்ப்பூரவள்ளி
தாடா வேறு பதினாலு சமனாய்க் குளிசந் தானாடி
வாடா அழகு மிகத்தானே வருந்திக் கையி லிடுவீராய்
தேடா நாகம் எரிபாம்பு தீண்டா திரும்கும் திடந்தானே. 552

(173) விக்கலுக்கு

சுக்கு திப்பிலி வாலுளுவை சொன்ன அழுக்கிரா பழம்புளியும்
ஒக்கச் சமனாய்ப் பொடிசெய்து உறவே தேன்விட் டேகலந்து
நிக்க மூன்று நாளிலிரண்டு வேளை கொள்ள நிகரில்லா
விக்க லோடி விடுமென்று வியாச ருரைத்த படியாமே. 553

(174) கண் காசத்திற்கு

கையாந் தகரை நெல்லிக்காய் கருதும் சாறு நானாழி
ஐயா யெண்ணெய் ஐயுழக்கு ஆவின் பாலும் அப்படியாய்
செய்யா மதுரம் ஈறாறும் சேரக் கூட்டிச் சிரசிலிட
ஐயா மந்தம் கண்காசம் அகலும் படியே கண்டீரே. 554

வேறு

திருமால் தேவி அரவிந்தம் செம்பொற் கையாந் தகரையுடன்
மருவார் போற்று மயிரோசிகையும் வளர்ந்த புன்னைத் தாதுடனே
உருவார் தெங்கின் நீர்வார்த்து உண்டை செய்து திலதமிடில்
மருவார் வந்து வணங்கிடுவார் மன்னோர் படும்பா டறியோமே. 555

(175) மாந்த சுரக் கசாயம்

சீந்திற் தண்டு களிப்பாக்கு சிவதை வேரும் கடுக்காயும்
காய்ந்த சுக்கு ரோகணியும் கதியா தோரொன்று ஒருகழஞ்சு
ஏந்து முலையீர் இந்நீரே எட்டொன் றாக்கிக் குடித்தாக்கால்
மாந்த மான சுரம்விட்டு வயிறு கழியும் கண்டீரே. 556

(176) குளிர்சுரக் கசாயம்

முத்தக் காசு பேய்ப்புடலும் முதிரும் சீந்தில் சிறுதேக்கு
சுத்த வசம்பு மிளகுடனே சொல்லும் பாடகம் பெருங்குமிழவேர்
கொத்த மல்லி கடுக்காயும் குலவும் தேவ தாரமுடன்
வற்றக் காய்ச்சித் தேன்விட்டு அருந்த குளிர்சுரம் மாறிடுமே. 557

கோட்டம் திப்பிலி கண்டங்கத்தரி கொள்ளும் சிறிய தேக்குடனே
வாட்ட மில்லா நிலவேம்பு வண்ண முத்தக் காஞ்சொறியும்
நீட்டம் சீந்தில் பற்படாகம் நிறையாய்க் காய்ச்சி அருந்துவீரால்
ஆட்டி விக்கும் குளிர்சுரமும் அமரும் படியே கண்டீரே. 558

ஆரிய வடகலை அந்த மோதகம்
சீரிய இருவரும் சிறந்த மூவரும்
கூறிய ஒருவரும் குறிகொள் ளாமே
நேரிடில் அனைவர்க்கும் நெருப்போ டொக்குமே. 559

(177) குட்டம், சூலை, கிரந்திக்குக் குக்குடாதிச் சூரணம்

கோதையீர் குக்கு டாதிச் சூரணஞ் செப்பக் கேளாய்
பேதமில் லாதப் பறங்கிப் பட்டையும் பலந்தான் நாலு
நீதமாய்க் குப்பிச் சாற்றில் நிறையவே நனைத்து லர்த்திக்
காதலாம் காந்தம் லிங்கம் கடுகுவால் மிளகு சுக்கே. 560

சாத்திர வேதி ஓமம் சாதிக்காய் சாதி பத்திரி
காத்திர கார்போ கரிசி கடுகுரோ கணிகல் நாரும்
தேத்திடும் சிவதை குக்கில் சொல்பொரி காரம் ஏலம்
மாத்திரம் வாய்வி ளங்கம் மரமஞ்சள் மகரப் பூவே. 561

சாரமு மஞ்சு பஞ்சல வணமும் துருசு துத்தம்
காரரி தாரம் கந்தகம் கர்க்க டகசிங் கியுந்தான்
சீரக மிருவகை சித்திர மூலம் கத்தூரி மஞ்சள்
மீறிய அபினி வெந்தயம் மிளகுகுரா சானி ஓமம். 562

வகைக்கொரு பலங்கால் வாங்கி வகையுடன் இடித்து நன்றாய்
பகைப்பிலாக் குக்கு டத்தைப் பாங்குடன் குடல்கால் போக்கித்
தகைப்பில் லாமல் அடைத்துத் தைத்துநூல் கொண்டு கட்டி
நகைப்பில்லா தாவின் பாலும் நன்றுகோ மயமும் கூட்டே. 563

சித்திர மூலம் தும்பைச் சிறுகள்ளிச் சிராயும் நொச்சி
கைத்திடும் பொடுத லையும் காணச் சாறுடன் கூட்டி
உத்திடும் கோணி யாலே உறவுசேர் வாயை மூடி
வைத்திடும் குக்கு டத்தை மருவிய சட்டி மூடே. 564

மூடியே ஏழு சீலை மண்தனைச் செய்து கொண்டு
நாடியே அடுப்பில் வைத்து நன்றொரு சாமம் வெந்து
கூடியே எலும்பைத் தள்ளி கூட்டியே இடித்துத் தூளாய்
தேடியே மண்ட லந்தான் தினம்வெரு கடிதான் கொள்ளே. 565

கொண்டிடும் தேனி லேதான் கூச்சமில் லாம விப்போ
மண்டலம் குட்டம் பதினெட் டுடனே சூலை வாய்வும்
தண்டிய கிரந்தி ரோகம் சலம்வீழும் பவுத்தி ரங்கள்
வண்டுகள் கடியும் கோரை வாதமும் மந்தம் போமே. 566

நீரும் சதையும் கல்லடைப்பு நெடுநாட் சென்ற பிரமேகம்
வாரும் நீறாமல் பொருமல் வயிற்று வலியும் மகோதரமும்
பாரும் உடம்புக் குத்துகளும் பக்க சூலை திசைகெட்டுத்
தீரு மென்று முனியுரைத்தார் செய்வார் இந்தப் புவியோரே. 567

(178) அண்ட வாதத்திற்கு

அலையும் கருவளையல் ஆர்க்கப் பொடிசெய்து
நிலையில் மிளகுடனே நேர்சமனாய்க் – குலையிற்
பெருங்காயங் கூட்டப் பெருகுஅண்ட வாதம்
பெரும்பானைபோல் வீங்குவது வாடும். 568

(179) பல்வலிக்கு

மருக்காரை சுக்குமரு தந்தோல்வெள் வேலா
எருக்கனிலை யோடிவை ஐந்தும் – பெருக்கவே
நாலிலொன்றாய்க் காய்ச்சிநாலு நாள்கொப் பளிக்கப்
பாலன்பல் லாகும் பல. 569

(180) மூலத்திற்கு

நீரிலந் தரத்தே நின்று நிலைபெறும் கொட்டைப் பாசி
வாரியே எடுத்து லர்த்தி மாவடு கறுப்பு நெல்லில்
ஊரியே அரியோ டெயுழக் காலி யாகப் பண்ணி
வாரியே எள்ளி லெண்ணெய் வாரமிட் டளவு கொள்ள
வேருடன் மூல மற்று மீண்டிடு மெய்யி தாமே. 570

பா. 570 இல் ஐந்தடிகள் உள்ளன.

(181) சயத்திற்கு

காட்டுக் கருணைக் கொன்று கடுவேலி அதனிற் பாதி
நாட்டுச் சுக்கு அதிற்பாதி நல்ல மிளகு அதிற்பாதி
கூட்டிச் சேர்த்தே கழுநீரில் குழைத்து விழுங்க வல்லீராய்
ஓட்டித் துரத்திச் சயரோகம் ஒருமண்ட லத்தில் ஒழிந்திடுமே. 571

(182) திரிதோடத்திற்கு

தேன்சிறு தேக்கு நிலவேம்பு திப்பிலி கோட்டம் முத்தக்காசு
வான்சிறு காஞ்சி பற்படாகம் மதித்த சீந்தில் கத்தரிசுக்கு
மேன்சிறு நாழி நீர்விட்டு விரையக் காய்ச்சி எட்டொன்றாய்
மூன்சிறு மாலைப் பொழுதுகுடி மூன்று சுரமும் வாராதே. 572

(183) நாவறட்சி, தோடம், களைக்கு

கண்டங் கத்தரி நிலப்பனையும் கருவே லிலையும் மேற்பட்டை
குண்டு மிளகுத் தக்காளி கூத்தன் குதம்பை தகரையுடன்
கொண்ட உசிலம் பட்டைஅக்கிரா காரம் கோட்டம் மதுரம்
மண்டு திப்பிலி கிராம்பு மாசிக்காய் லவங்கப் பட்டையுமே. 573

இருசீ ரகமும் சமுத்திராப் பழமும் இயல்பாய் வகையொன்றுக்கு
இருவ ராகன் தானெடுத்து இதமாய் நறுக்கி எண்ணெய்தனில்
ஒருநாள் ஊற வைத்திருந்து உகந்து எரிதான் இட்டிறக்கித்
திருவே சீலை தனிலூட்டிச் சேர்ந்த நாவில் போட்டிடுமே. 574

நாக்கு வறட்சி தண்ணீர்த்தாகம் நன்றாய்த் தோடங் களைதானும்
போக்கும் கோவைக் காயதனால் பிணிக ளனைத்தும் போமென்று
சேர்க்கும் ஈசர் கும்பனுக்குத் தெளிய உரைத்தார் இவ்வுலகில்
பார்க்கும் புவியில் பண்டிதரே பரிவாய் மருந்து தான்செய்யே. 575

(184) வில்வாதி லேகியம்

வில்லைவேர் மேற்றோல் போக்கி வீறுடன் பன்னி ரெண்டு
வல்லதோர் பலம்நி றுத்து மருவதெண் நாழி நீரைச்
சொல்லவே அளந்து விட்டுச் சுவறவே நாலொன் றாக்கி
நல்லதோர் வெல்லம் ஆறு பலம்போட்டுக் கரைத்தி டாயே. 576

இஞ்சிச்சாறு நாரத்தஞ் சாறும் இதமுடன் வகைக்கு உரியாய்
வஞ்சியே கூட விட்டு மருவிய குழம்பாய்க் காய்ச்சிக்
கொஞ்சமாய்த் தாலந் தன்னில் குத்திநீர் விட்டுப் பார்த்தால்
அஞ்சியே இறக்கித் தேன்உரி அளந்துதான் கூட்டி டாயே. 577

கூட்டி டுந்திரி கடுகும் குலாவி யதிரி பலையும்
தீட்டு செவ்விய முந்தா ளிசபத் திரிசிறு நாகப்பூ
ஈட்டுசிற் றரத்தை சன்ன இலவங்கப் பட்டை பத்திரி
பூட்டு திப்பிலி மூலமேலம் புகழ்வகை வராகன் எட்டே. 578

இடித்திடு வச்சிர காயம் இதமுடன் கொட்டிக் கிண்டி
வடித்திடு கலசங் தன்னில் வண்டுநீர் கட்டி வைத்து
துடித்திடும் இரண்டு வேளைச் சுகமுடன் நெல்லிக் காய்போல்
எடுத்துடன் கொள்ளத் தீரும் வியாதியின் குணந்தான் சொல்லே. 579

அக்கினி மந்தம் குன்மம் அரோசியம் பயித்திய வாய்வு
உக்கிரம் உட்டண வாய்வு மூல வாய்வு முடனே
நிற்குமே யென்று கும்பன் நேசமா யுரைத்த நூலைப்
பக்குவ மாகச் செய்வோர் பண்டித ராவார் தானே. 580

(185) காமாலை, சோகைக்குக் குளிகை

கரிப்பான் கழுதை லத்திச்சாறு கருதும் வகைக்குத் தான்நாழி
திரிப்பாம் இந்துப் புடனோமம் திரிகடுகு கருஞ்சீ ரகமும்
இருப்பாம் அரப்பொடி வெள்ளுள்ளி இசைந்து பலங்கா லாகும்
நறுக்கிச் சாற்றி லுடன்போட்டு நன்றாய் வற்ற வேகவையே. 581

வெந்திடும் மருந்து தன்னை வீறுள்ள அம்மி தன்னில்
அந்தமாய் அரைக்கும் போது ஆன்நிம் பழச்சாறு விட்டு
விந்தையாய் அரைத்து ருட்டு வெய்யிலில் உலர்த்தி வைத்துச்
சுந்தரம் இரண்டு வேளைத் துலங்கிடக் கொள்ள லாமே. 582

இப்படிக் கொள்ளு வோர்க்கு இயங்குகா மாலை சோகை
ஒப்புடன் பாண்டு ரோகம் உடம்பினில் வெளுப்பு மந்தம்
தப்பில் லாமல் சலங்கள் தான்விடு மென்று வேதம்
செப்பிய குறுமு னியுந்தான் தீங்கறச் செப்ப லுற்றாம். 583

(186) நீரிழிவுக்கு

ஆவரை கொன்றை நாவல் அழகுமா வில்வம் அத்தி
மேவிய மருதம் பட்டை வேரைந்துடன் தேனில் கொள்ள
பாவிய மான நீரில் பழையதோர் மேக மெல்லாம்
காவிரி ஆறு வற்றிக் கடல்களும் வற்று மென்றே. 584

வேறு

நாவற் பட்டை மாம்பட்டை நன்றாம் அத்திப் பிஞ்சுடனே
மேவும் ஆல விழுது கடலிறாஞ்சி மலாக்கா அதிமதுரம்
நீவும் இலாமிச்சு ஏலமுடன் நிறையொன் றாகத் தான்கூட்டி
மேவும் கசாயந் தான்வைத்து இரண்டு நேரம் கொள்ளநன்றே. 585

இப்படி யிரண்டு வேளை இதமுடன் தேனைக் குத்தி
தப்பில் லாதிரு பதுநாள் தான்கொள்ள நீரிழி வுகளும்
மப்படு பிரமே கமும்மது மேகம் மற்று யாவும்
கைப்பிடித் தடைத்தாற் போலக் காணுமிக் கசாயந் தானே. 586

(187) கீரி நோவுக்கு

திருகு கள்ளி வேர்ப்பட்டைத் திறமாய்க் குறுணி நெல்லெடைதான்
மருக நறுக்கி முக்குறுணி தண்ணீர் வார்த்து இருநாழி
குறுக வடித்துத் தேங்காய்ப்பால் இரண்டு படிதான் கூடிவிட்டுப்
பெருகும் பசுவின் பாலிரண்டு படியும் விட்டுக் காய்ச்சுவதே. 587

காய்ச்சிடும் மூன்றும் ஒன்றாய்க் கருதிய படிமூன் றாக
வாச்சிடும் ஆம ணக்கம் எண்ணெயும் இருநாழி வார்த்து
ஊச்சித மாக மெழுகு பதத்தினில் வடித்துக் கொண்டு
கூச்சமில் லாதொரு காசெடைதான் கொள்ளவே கீரி தரும். 588

(188) தேள் விடத்திற்கு

வெண்குன்றி வேர்க முற்சி வேருடன் இரதம் கூட்டிப்
பண்புள்ள கழற்சி தன்னில் பாங்குடன் இட்ட ரைத்துத்
தின்புற மாந்தர் கையில் திறமுடன் ஏற்ற யேறும்
இன்புடன் விடமி றங்க இறங்குமென் றருளிச் செய்தார். 589

ஐவிரல் விதையைத் தானும் ஆனக முற்சியி லடைத்து
கையினால் காஞ்சிரங் கம்பு கொண்டது வாயை மூடிப்
பையவே விடமி றங்கப் பரிவுடன் இறங்கு மென்று
வையகம் தன்னில் ஏற்றம் மருவிய விடமும் ஏறும். 590

(189) சுழிகணைக்கு

குப்பை மேனிச் சாற்றிலுப்பைக் கூடக் கலந்து வேப்பெண்ணெய்
செப்ப மாக மத்தித்துத் தேனே மூன்று நாள்புகட்ட
தப்பில் லாமல் மேவிளைப்பும் தானே சுழிகணை இசிவுகணையும்
உப்பிச மோடு நெஞ்சுக்கோழை உடன்துயர் கெட்டோடு மென்றே. 591

(190) நாரத்தம் பழக்கடுகு

நாரத்தம் பழமு மெட்டு நன்றாக வளையஞ் செய்து
சீரொத்த விதையைத் தள்ளி சேர்த்திடும் மருந்து சொல்வேன்
காரொத்த குழலே கல்லுப் புரியுடன் கடுகு காயம்
பாரொத்த அசம தாகம் பரிவுவெந் தயம்வி ளங்கமே. 592

வெண்கலப் பொடிஇந் துப்பு மிகுத்திடும் அரப்பொடி டியதுவும்
பண்புதிப் பிலியுடன் கருத்த சீரக முமெவச் சாரமும்
நன்று திப்பிலி மூலந்தான் நலமுடன் கழஞ்சே யாக
இம்புசேர் வெள்ளுள் ளியுமே இடித்தது நாழி கூட்டே. 593

சூத மிருக முஞ்சு துலங்கிடச் சுத்தி செய்து
பேதமில் லாவெள் ளுள்ளி அரப்பொடி மூன்று மொன்றாய்ச்
சாதக மாக நன்றாய்ச் சாந்துபோ லரைத்து எல்லாம்
ஆதர வாக உள்ளும் மேலுமே பூசி டாயே. 594

வெய்யினில் மூன்று நாளும மடகூடன் வைத்து நன்றாய்
பையவே குப்பை மேட்டில் புதைத்தெட்டு நாளும் கழித்து
வையக மதிக்க நன்றாய் மைபோல வேய ரைத்துத்
தையலே கொட்டைப் பாக்களவு உள்ளே கொள்ள நன்றே. 595

இப்படிக் கொள்ளு வோர்க்கு இதமுடன் அட்ட குன்மம்
தப்பிலாச் சகல வாய்வும் தான்குடல் வாதம் அண்டம்
செப்பிய வீக்கம் வாய்வுத் திரட்சியும் கட்டி யெல்லாம்
அப்பொழு தோடு மென்று அகத்திய முனியு ரைத்தார். 596

(191) துட்டு மாந்தத்திற்கு

வெந்தவித் தூற்று கின்ற விளக்கெண்ணெய் நாழி தன்னில்
அந்தமாந் தகரைச் சாறும் அதுவுமப் படியே என்று
நந்தநா யுருவி வேரும் தைவேளை நாய்வே ளையும்
முந்தவே கொழிஞ்சி வேரும் மூக்கரைச் சாரணையின் வேரே. 597

வகைக்கொரு எலுமிச்சங் காயளவு சாற ரைத்துக் கொண்டு
வகைப்பிலா வசம்பு ஓமம் பண்புகத் தூரி மஞ்சள்
மிகைப்புடன் சனிவி ளங்க வேண்டிய வகைக்க ரையாய்
திகைத்தவெள் ளுள்ளி தானும் சேர்ந்திரு பங்கு கூட்டே. 598

கருத்தசீ ரகமும் வெந்தயம் கடுகுரோ கணிவ கைக்கு
நிறுத்தொக்க ஒருபங் காக நீர்விட்டுத் தான ரைத்து
மருத்துவச் சட்டியிற் கலந்து வகையுடன் ஒன்றா யூற்றிப்
பெருத்திடும் மெழுகு பாகம் பிழையற வடித்துக் கொள்ளே. 599

பிள்ளைக்குத் தக்கனை யாக எண்ணெய்தான் புகட்ட அந்தப்
பிள்ளைதாய் தனக்கு உப்புக் கரிப்புடன் தவிர்த்த தென்றால்
தெள்ளிய துட்டு மாந்தம் கீரிப் பிரளியும் சுழிகணையும்
நள்ளிரு வாய்வுப் பிரளிக் காய்ச்சல் நவில்மந்தப் பிரளிபோமே. 600

இளைப்புடன் கணைகள் பூசக் கணைகளும் இயங்கி யோடி
அழைத்தாலும் வாரா தல்போல் அங்கத்தில் குடிவிட் டோடும்
தழைத்திடும் குழந்தை ரோகம் தானது நீங்கும் நன்றாய்
மழைக்குலம் தன்னைக் கண்டப் பயிரது போல வளரும். 601

(192) சிவார சிந்தாமணி

திரிகடுகு திரிபா லையும் சேர்ந்திடும் மதுரம் நாவி
இருவிகந் தகமும் லிங்கம் இரதமும் அக்கிரா காரம்
சரிமனோ சிலைதா ளகமும் தானிவை சரியாய்க் கொண்டு
பரிவுடன் வாள முந்தான் பாங்கொன்று கூட்டி டாயே. 602

கூட்டியே இஞ்சிச் சாறு விட்டொரு சாமம் நாலு
வாட்டியே அரைத்து உண்டை பயிறள வாயு லர்த்தி
நாட்டிற் சங்கி ராணி மோரினில் கொள்ளத் தீரும்
பூட்டி வயிற்று நோவு பொருந்துசர்க் கரையில் கொள்ளே. 603

பயித்திய குன்மம் நெல்லிப் பருப்பு சீரகக் கசாயம்
சயித்திய சன்னி குன்மம் தருவாழைப் பழத்தில் கொள்ள
வயிற்றினில் வலிகுன் மத்துக் காமெனும் நல்ல வெல்லம்
கயிற்றினில் குடல்வா தத்துக் காம்வெள்ளைச் சார ணையே. 604

வாய்வு குன்மத்துக் கிஞ்சி யாகுதல் தேனி லிட்டால்
ஏகிய எரிகுன் மத்துக் கிசைந்த சீரகமும் வில்வம்
தாகிய சன்னி வாதம் தருகுண்டு மணிக்க சாயம்
மேவு கையாந் தகரை விளைவாத சூலை போமே. 605

சன்னிக்கு இஞ்சிச் சாற்றில் களிதோடம் பஞ்ச கோலம்
மன்னிய வாதசு ரத்துக்குக் கரிசாலங் கசாய மாகும்
பின்னிய பித்தசு ரத்துக்குச் சீரகக் கசாய மாகும்
அன்னையே சிலேற்றும சுரத்துக்கு ஆமேஇஞ்சித் திப்பிலியே. 606

பிரமிய உட்ட ணத்துக்குப் புளியிலைச் சாற்றிற் கொள்ள
திரமுடன் ரத்தப் பிரமியம் பருத்தி யிலையினிற் கொள்ள
வரமுடன் எந்த ரோகம் வகுக்க லாந்தேன் கரிப்பான்
விரைசி வார சிந்தா மணியென விளம்ப லுற்றாம். 607

வேறு

(193) உண்ணாக்குக்கு

மெழுகினாற் கரண்டி பண்ணி எருக்கலம் பாலைக் குத்தி
பழுதிலா நவச்சா ரத்தைப் பாங்குடன் பொடிதான் செய்து
... ...
... ... 608

குப்பை மேனிச் சாறுதன்னில் கூறிய சுண்ணாம் பிட்டுத்
தப்பாமல் மூன்று நாளும் தானிவை வைக்கத் தீரும்
செப்புநா யுருவி சுட்ட சாம்பலை மூன்று நாளும்
ஒப்பர வாக வைக்க உடன்நிற்கு மென்று ரைத்தார். 609

வெள்ளுள்ளித் தைலந் தன்னில் மேல்பொடி திப்பி லித்தூள்
தெள்ளிதாய்ப் போட்டு வைக்கத் தீருமா மென்று ரைத்தார்
ஒள்ளிய சுண்ணந் தன்னில் ஒட்டடை கலந்து வைக்க
வள்ளலே பாக்கி லையில் பருத்தி யிலைதின் பீரே. 610

கல்லுப்பு நெய்யில் காய்ச்சிக் கதித்தஉண் ணாக்கில் வைக்க
நில்லுமா மென்று வியாசர் கும்பனுக் குரைத்த நூலை
அல்லவென் றவனி மீதில் யாவரும் அறியச் சொன்னோம்
வல்லமை பேசா வண்ணம் மானிடர் தமக்கு ரைத்தோம். 611

(194) சன்னி தோடத்திற்கு

தெண்டிரை உலகத் தோர்க்குத் திகைத்திடும் சன்னி தோடம்
கண்டுரம் பண்ணி நாவும் கருத்துமெய் மறந்து தென்றால்
கெண்டிதம் அவிழ்தஞ் செய்யக் கேளுநீ மதுரம் செப்பு
வண்டனி குழலி னாளே மாமுனி யுரைத்த நூலே. 612

பொன்னுடன் ருத்தி ராட்சம் பொருந்திய கலையின் கொம்பு
மின்னிய முத்து வெள்ளி யாக நீலம் பச்சை
உன்னிய அக்கிரா காரம் உகந்ததிப் பிலிகி ராம்பு
கன்னிகை முலைப்பால் வார்த்து கருத்துடன் நாவில் பூசே. 613

பா. 608 இல் இரண்டடிகளே உள்ளன.

இப்படி நாவில் பூச இயல்பதாய்த் தீரா தாகில்
சொற்படி நிம்ப வித்துச் சுட்டதோர் மயிலின் தூவல்
மைப்படு குழலி னாளே வாய்ப்பல்லு நாவில் பூசப்
பற்கடி சன்னி தோடம் பறந்திடும் உண்மை தானே. 614

(195) சினேகப் பொட்டணம்

தேங்காய்த் துருவி யிரண்டுபடி திடமா யுளுந்து மாவுரியாம்
பாங்காய்க் கருத்த காணமுரி பருத்தி விதையும் தானுமுரி
ஆங்கான் சொன்னோம் சணப்பவிதை நல்ல கத்தரி முருங்கைவிதை
பூங்கா வனத்தில் புன்னைவிதை புகழ்வோம் வகைக்கு அரைப்படியே. 615

புங்கம் விதையூ மத்தம்விதை பொருந்தும் நிம்ப விதைதானும்
தங்கம் கருஞ்சீ ரகம்விளங்கம் தயவாம் கடுகு சதகுப்பை
மங்கைக் கரசே வசம்புள்ளி வாத மடக்கி பெருந்தும்பை
பங்கப் படாத செருப்படியும் பாராய் கொடுவேலி நொச்சியுமே. 616

காயம் ஓமம் ஆமணக்கு கருத்த சன்னி நாயகமும்
மாய முருங்கை தைவேளை வரிட்டி வெள்ளை எருக்கம்பூ
நேயம் எருக்கம் வேரதுவும் நிறத்த குன்றி மேனியிலை
ஞாயத் துடனே வகைக்கு நன்றா யொருபலந் தான்கூட்டே. 617

வகையோர் பலமதாய்த் தான்கூட்டி வறுத்தே யிடித்துத் தூள்பண்ணி
மிகையாய் ஐந்து யெண்ணெயிட்டு மெள்ளக் கிண்டித் தானிறக்கித்
தொகையாய்ப் பொட்டணம் தான்கட்டிச் சுடவே சன்னி கோத்திடுகில்
திகையாய்ச் சொன்னோம் பிணிநீங்கும் சினேகப் பொட்டண மிதுவாமே. 618

(196) சன்னிக்குத் தூபம்

சட்டியை நெருப்பில் காய்ச்சித் தானுமே இறக்கிக் கொண்டு
இட்டமுட னேதிரி கடுகு இயல்பாய் நுணுக்கித் தான்போட்டு
அட்டியே பண்ணா மல்தான் அடவுடன் தூபங் காட்டில்
விட்டுதே சன்னி யென்று விளம்பிய முனிவன் சொன்னான். 619

வேறு

தாரமும் இரதம் கந்தகமும் சரியாய்த் தூளே தான்பண்ணிப்
பாரமாய்க் கலையில் வைத்துப் பரப்பியே திரியு ருட்டி
விரமாய் விளக்கில் போட்டு வேப்பெண்ணெய் தன்னை வார்த்துக்
கோரமாய் விளக்கை ஏற்றிக் கொடும்புகை மூக்கி லேற்றே. 620

(197) சன்னிக்கு நசியம்

பாரமாய்ச் சன்னி தோடம் பாய்ந்துடன் மூர்ச்சை யானால்
வீரமாய்த் தேனை விட்டு விளம்பிய பழைய கிட்டம்
காரமாய்த் திரிகடு குடனே கன்னியா மஞ்ச ளுள்ளித்
தாரமாய்த் தும்பை நொச்சிச் சாற்றினில் நசியம் பண்ணே. 621

அப்படித் தீரா விட்டால் அடவுடன் முசுறு முட்டை
கற்புடை முலைப்பால் சுக்குக் கடுகவே நசியம் பண்ண
மப்படி மதுக்கம் பூவால் சாற்றி னிந்திரி கடுகு
செப்பமாய் நறுக்கி மூக்கில் திமிரிடச் சன்னி போமே. 622

(198) சன்னிக்கு அஞ்சனம்

கஞ்சமா மலரின் பாதம் கடவுளைக் கருதிக் கொண்டு
அஞ்சனம் விரித்த சொல்லை அடவுடன் அகத்திச் சாற்றில்
கொஞ்சமாய்த் திரிகடுகுடனே கூட்டியே காற்றில் வைத்துக்
கெஞ்சவே கண்ணி லிட்டால் கீழ்விழும் சன்னி தானே. 623

(199) உள் காய்ச்சலுக்கு

ஆவின் பாலுடன் அம்புரு சீனியும்
மேவு சாத்திர வேதியு மாகவே
தாவு நாற்பது நாளது தான்குடி
பாவும் உட்சுரம் ஓடிப் பதுங்குமே. 624

(200) வச்சிரக் கபாடம்

கஞ்சாச் சாதிக் காயுடனே கனத்த மரத்தின் விளாம்பிசினாம்
அஞ்சாச் சாதி லிங்கமுடன் ஆக வோரொன்று இருகழஞ்சு
வஞ்ச மில்லாத் திப்பிலிதான் வாகு பெறவே நாற்கழஞ்சு
இஞ்சொல் புகழும் எலுமிச்சம் பழத்து நீரால் அரைத்திடுமே. 625

வகுத்த உண்டை எடைகுன்றி வச்சிரக் கபாட மெனத்திரட்டி
தொகுத்த உண்டை சர்க்கரையில் துய்ய தேனி லொன்றிட்டால்
மிகுத்த கிராணி அதிசாரம் மிக்க சுக்கிலப் பிரமேகம்
பகுத்த வாய்வு சூலைகுன்மம் பறந்தே ஓடும் பாரீரே. 626

(201) சிரங்கிற்கு

சேங்கொட்டை குண்டு வீக்கம் சிரங்குமே போகா தாகில்
தேங்காயை அரைத்து ஊருங் கோடுமேற் தூவாலை யிட்டால்
சாங்கமாய்ச் சிரங்கு வீக்கம் தானிவை மாறு மென்று
பூங்குழல் மாதே கும்பன் பொருந்தவே தானு ரைத்தார். 627

(202) வாதத்திற்குச் சாத்தெண்ணெய்த் தைலம்

சாத்தெண்ணெய்த் தைலந் தன்னைத் தரணியி லுரைக்கக் கேளீர்
பார்த்தது பொருளா யுள்ள பார்தனில் வைத்தி யர்க்கு
வேற்றுமை யில்லா வண்ணம் விவரமாய் முனிவன் சொன்ன
சாத்திரப் படிதப் பாதார் தமிழுக்கே உரைகல் லாவார். 628

வாகை இலுப்பை சாணாக்கு மணத்தக் காளி மாவிலங்கு
வேகங் கொடுவே லெருக்கு நொச்சில் வீழிமுருக் கூமத்தம்
தாவு நீர்மேல் நெருப்புக் குப்பைமேனி கள்ளி தழுதாழை
மேவு புங்கிலை புலித்துடக்கி வேலிப் பருத்தி வேப்பிலையே. 629

கரிப்பான் பிரமி குன்றியிலை கருங்கொடு வேலி கழற்சிபசுமஞ்சள்
திரிப்பாம் நுணாயிலை இலைக்கள்ளி சிறுசெருப் படியாம் பொடுதலையும்
குறிப்பாம் இருவகைக் குறிஞ்சாவும் குழலா தொண்டை முடக்கற்றான்
நரிப்பாம் நரிவிளாத்தி பாவட்டை நாறுகரந்தை நீர்க்க டம்பே. 630

ஆடா தோடை அமுக்கிரா அடருஞ் சங்கங் குப்பியுடன்
நீடார் முதியார் கூந்தலுந்தான் நிறையாய் வகைக்குச் சாறுநாழி
வாடா தெலுமிச்சம் பழச்சாறு மருவுங் காடி தான்நாழி
தேடா தொன்றோர் அளவாய்த் திருவே துவைத்துப் பிழியே. 631

திரிகடுகு ஓமம் காயம் திரிபாலை வசம்பு சுக்கு
இருவ கைச்சீ ரகமும் இசைந்த ரோகணி இந்துப்பு
நறும்பி சின்விளா வரிசி நன்றுகத் தூரி மஞ்சள்
பெருங்கு ரும்பைக் கிழங்கு பெரிய சித்திர மூலம். 632

அத்தித் திப்பிலி கிராம்பு அரத்தை மதுரம் சதகுப்பை
உத்த சிறுதேக் கிலவங்கம் உயர்ந்த செவ்வியம் வெள்ளுள்ளி
முத்தக் காசு குங்கிலியம் முழுமர மஞ்சள் மஞ்சிட்டி
சித்தம் மகிழும் செவ்வள்ளி செஞ்சந்தம் சண்பகப் பூவே. 633

சீராய் வகைக்கு வராகனெடை சிறப்பாய் நாலு தானாகும்
நேரா யொன்றாய்த் தானரைத்து நிறைய அதனில் நல்லெண்ணெய்
பேரா மணக்கெண் ணெய்புங்கு பெருகும் இலுப்பை வேப்பெண்ணெய். 634

வகைக்கொரு நாழி யாக வார்த்துடன் கலந்து வெய்யில்
தகைப்புடன் ஒருநாள் வைத்துத் தானடுப் பிலிலே காய்ச்ச
மிகைப்புடன் மெழுகு பாகம் வேறொரு கலசந் தன்னில்
வகைப்புடன் வடித்துக் கொண்டு வருந்தவே செய்தி டாயே. 635

பா. 634 இல் மூன்றடிகளே உள்ளன

உள்ளுக்கு ஒருக ரண்டி எண்ணெய்தான் கொடுத்து மேலும்
துள்ளவே நாடி நரம்பு எல்லாம் துவாலை யிட்டால்
வள்ளலே எண்பது வாதம் வலிப்புக ளுடனே சன்னி
வெள்ளம்போல் ஓடு மென்று விவரமாய் முனியு ரைத்தார். 636

(203) கிரந்திக்கு

கொடிக்கள்ளி தன்னை வாட்டிக் குறுகவே பிழிந்து கொண்டு
முடுக்கியே தினமு ழக்கு மூன்றுநா ளுள்ளே கொள்ள
திடத்துடன் கிரந்தி சூலை சிறுசிரங் கோடு சொறியும்
நடுக்கியே தீரு மென்று நாதனார் அருளிச் செய்தார். 637

(204) சூதக வாய்வுக்கு

கருத்த கம்பிளித் துணியில் கதிக்க சீலை சுற்றி
இருக்கமாய்ச் சுட்டெ டுத்து எருமைமோர் தன்னில் கொள்ள
சுருக்கென வயிற்று ளைவும் சூசிகா வாய்வு மந்தம்
அறுத்திடு மென்று கும்பன் அவனியோர்க் கருளிச் செய்தார். 638

(205)அக்கினி மாந்தத்திற்கு

தாளிச பத்திரி கிராம்பு தருமேல லவங்கப் பட்டை
நீளில வங்க பத்திரி நிறையொரு கழஞ்சே யாகும்
நாளுமே சுக்கு யிரண்டு நலமுடன் மிளகு மூன்று
சூளும் திப்பிலி தான்நாலு சொல்லும் கூசைநீர் ஐந்தே. 639

திப்பிலி மூலம் நாலு சிவதைவே ரிதுக்கு நேராய்
ஒப்புட னிடித்துத் தூளாய் ஒருபங்கு சீனி கூட்டி
வெப்புடன் வெந்நீர் தன்னில் வெருகடி தூளுங் கொள்ள
செப்புடன் வயிறு போகும் தீரும்நோய் தன்னைக் கேளாய். 640

அக்கினி மாந்தம் குன்மம் அரோசிக மூல வாய்வு
விக்கல்மேல் இரைப்புக் காசம் மிகுத்திடும் உட்டண வாய்வு
சிக்கென வயிற்றி ரைச்சல் தீருமென் றிப்பு விக்கே
தக்கதோர் வியாசன் கும்பன் தனக்குரை செய்தா ராமே. 641

(206) இலவங்காதிச் சூரணம்

சுக்குத் திப்பிலி மிளகு இருசீரகம் சாதிக்காய் ஓமம்
நிக்கும் காட்டாத் திப்பூச் சாதிபத்திரி ஏலம் குராசானி
உக்குமரங் கொட்டை சேரும் கஞ்சா யிலைவி தையும்
விக்கு மாதுளை வில்லைப்பழம் விளாம்பிசினில் இலவம் பிசினே. 642

காசுக் கட்டி இலவங்கம் கத்தூரி மஞ்சள் தேற்றாவிதை
வீசும் காயம் கிராம்பு நாவற்கொட்டை விடையம் கழற்சியுடன்
கூசும் புளியங் கொட்டைத்தோல் கூறும் அத்திப் பட்டையுடன்
பூசும் பொன்னிற மாய்வறுத்துப் பொருந்தும் வெருகடிப் பிரமாணம். 643

எடுத்துத் தேனிற் தான்கொள்ள இதமாம் கிராணி அதிசாரம்
அடுத்த மூலக் கிராணியுடன் அநேகம் கிராணி வாய்வுடன்
தொடுத்த விடமூ லக்கிராணி சூசிகா வாய்வுக் கிராணி
விடுத்தே ஒடு மென்றுமுனி விவரம் உரைத்த லவங்காதியிதே. 644

(207) அதிவிடையச் சூரணம்

இலவம் பிசினும் விளாம்பிசினும் இனிய நறும்பிசின் தேற்றாம்பிசின்
நலமாம் குந்தி ருக்கம்பின் நன்று சுக்கு அதிவிடையம்
குலமாம் குடசப் பாலைப்பட்டை குராசானி ஓமம் காசுக்கட்டி
பலமாம் கிராம்பு சாதிக்காய் பேசும் சாதி பத்திரியே. 645

எல்லாம் சமனாய்த் தான்கூட்டி இயல்பா யிடித்து வடிகொண்டு
சொல்லாய் முக்கழஞ்சு கொள்ள சுகமாம் கிராணி அதிசாரம்
நில்லாப் பெரும்பாடு வயிற்றுக் கடுப்பு நிற்குமென மாமுனிவர்
நல்லாய் உரைத்த திதுவென்று நன்றதி விடையச் சூரணமே. 646

(208) கிராணிக்குக் கபாட சூரணம்

அரத்தை திரிகடுகு ஓமம்காயம் ஆகுமிரு சீரகம் இந்துப்பு
... ...
... ... சிறுதேக் குடனே அதிவிடையம்
விரைக்கும் மல்லி இலவங்கம் விளங்கம் தேவ தாரமுமே. 647

திப்பிலி மூலம் பொட்டிலுப்பு சிறக்கும் வளைய லுப்புடனே
ஒப்பாய்ச் சமனாய்த் தானெடுத்து உயர்ந்த நல்லெண்ணெய் தனில்வறுத்து
செப்பாங் குளவே பொடிசெய்து தேனி லெடுத்துத் தானருந்த
தப்பா தநேகம் கிராணிவகை தானே அடைக்குங் கண்டீரே. 648

(209) குன்மத்திற்கு

மடற்கள்ளி தனைக்கொ ணர்ந்து வாகுடன் பயறு போல
நடத்தியே எரிந்து கொண்டு நாலுடன் படிக்கி ரண்டு
திடத்துடன் கல்லுப் பிட்டுச் சேர்த்திரண் டுறவாய் வெந்து
மடக்கினில் ஒருமோ ராக வார்த்துடன் வேக வையே. 649

பா. 647 இல் சீர்கள் சிதைந்துள்ளன.

வெந்திடும் மருந்து லர்த்தி வெள்ளைச்சா ரணையுங் கூடத்
தந்திடும் நிலத்தில் வாகை தானிவை யிரண்டு பாதி
அந்தமாம் திரிகடு குடனே ஆனஇந் துப்பு ஓமம்
உந்திரு சீரகம் காயமும் ஒருசம னாகக் கூட்டே. 650

கூட்டியே இடித்துத் தூளாய்க் குறுகவே தேனிற் கொள்ளப்
பூட்டிய உதர தோடம் குன்மமும் வாய்வுக் கட்டி
நாட்டிய வயிற்றில் மந்தம் நன்றாகு மென்று கும்பன்
தாட்டிக மாயு ரைத்துத் தமிழினை விளம்ப லுற்றார். 651

(210) இராச அயவேதிச் சூரணம்

சூரண ராசன் தன்னைத் தொல்புவி யோர்க்குச் சொல்லக்
காரணத் திரிகடு குடனே கதித்திடும் திரிபா லையும்
தேரிடும் செவ்வியம் வசம்பு சித்திர மூலம் காயம்
பாரினில் வெட்பா லரிசி பஞ்ச லவணமும் விளங்குமூலம். 652

வெற்றி இஞ்சி வெள்ளுள்ளி மிகவும் அத்தித் திப்பிலியும்
உள்ள வளையம் நேர்வாளம் உயர்ந்த சீரகம் அரேணுகம்
பற்றக் கரிய சீரகமும் பகரும் தேவ தாரமுடன்
மற்ற மஞ்சள் கொத்தமல்லி மரமஞ்சள் ஓமம் அதிவிடையம். 653

அருந்தும் குராசானி நவச்சாரம் ஆனசத்தி சாரமெ வச்சாரம்
பொருந்தும் வெ[illegible]காரம் சீனக்காரம் புங்கு ரோகணி வில்லைக்கனிபிரண்டை
கருந்தும் கழற்சி நிலவேம்பு கையாந் தகரை வேருடனே
வருந்தும் நொச்சி ஆயிலப்பட்டை வாகாய் ஊசி மல்லிகைவேர். 654

வெள்ளைச் சா்ரணை மலைதாங்கி வீறுமுட்கா வேளைபெருமருந்து
கள்ளிச் சாம்ப லுடன்ஏலம் கருதும் சிறுநா கப்பூவும்
தெள்ளும் தக்கோ லமுடனே சேரக் கூட்டி வெயிலுலர்த்தி
உள்ள படிக்குத் தானிடித்து ஒழுகின படியே செய்வீரே. 655

வகைக்கொரு வராக னாக மருந்தெலாம் பொடிய தாக்கி
இதக்கியல் சிவதை வேரும் இப்படி மூன்று கூறும்
பதைக்கவே இடித்து வெந்நீர் பண்புடன் கொள்வீ ராகில்
திகைத்திடும் வியாதி தீரும் வகைதனைச் செப்ப லுற்றாம். 656

வயிற்றில் வியாதி எட்டுவகை வலிகுன்மம் கிரந்தி மலக்கட்டு
மிகுத்த பீலிகை எண்பதுவும் மிக்க கூர்ம வாய்வுகளும்
அதித்த உதர வியாதிகளும் அன்ன தோடம் பாண்டுருவும்
கதித்த வாந்தி பிரமியம் சுவாச காசமி ருமல்தீரும். 657

வாத பித்த சிலேற்பனமும் மருவிய பழஞ்சுரம் எண்பதுவும்
தீதே யாகும் பயித்தியமும் சித்தப் பிரமை விக்கல்சத்தி
மாதே ஒருபா ரிசங்கொண்ட வயிற்றில் கிருமி வாய்வுகட்டி
சீத மிகுதி மூலமுடன் திசைவிட் டோடுங் கண்டீரே. 658

பத்தியம் மிளகு நீரும் சோறுடன் பருகு வீராய்
மெத்தவே கழிந்து தென்றால் மிகுதியும் தயிர்மோர் கூட்ட
அத்தனார் அருளிச் செய்தார் அவனியோர்க் காகு மென்று
மெதத்வே விரிததுக கும்பன் விளம்பின தமிழி தாமே 659

(211) சூலைக்குக் கருங்கோழிச் சூரணம்

சிறந்திடும் கருங்கோழி தன்னைச சிறக்கவே குடல்கால் போக்கிப்
பறங்கியின் படடை சீவிப பத்துடன் பலமநி றுத்து
அறைந்திடும் அதனவ யிறறில் அடைத்துப்பின் தைத்துக் காயின்
நிறைந்த சாரம முககுறுணி காணவே நீவி டாயே. 660

விடடுபபின அதனிற கோழி வெந்ததொரு விறகாய்க் கொண்டு
தொடடுசசோ றாக வெந்து சூரிய புடந்தான் செய்து
மட்டுடன் இடித்துச் சீலை வடிகொண்டு நாற்பது நாள்கள்
திடடமாய இரண்டு வேளை தினம்வெரு கடிதான கொள்ளே. 661

கொண்டால சூலை புடைசூலை கொடிய கடிவிடம் வண்டுக்கடி
பண்டும் உளள உளமூலம பகைக்கும் கிரந்தி கரப்பனிவை
அண்டா புகழும் அகத்தியனார் அருளிச் செய்த சூரணத்தை
மண்டலம காற்றுப் படாதிருக்க வாகாய் உரைத்தார் பத்தியமே 662

கைபபுடன புளிப்பு விட்டுக் கருதிய பருப்புக் கோழி
செப்பமாய முளையின் கீரை தின்றுபத் தியமும் காத்தால்
தப்பாமல் சரீர சுத்தி தானுமே யாகு மென்று
ஒப்பர வாகச் சொனனது ஓதிய வணணந தானே 663

(212) அமிர்த சஞ்சீவிக் குளிகை

சாததிர வேதி கோட்டமுடன் தானோர் ஏலம இலவங்கம்
காத்திர மான சந்தனமும் கடுகு ரோகணி இலுப்பைப்பூ
தோததிர மான நனனாரி துயய விலாமிச்சு இருவேலி
மாத்திரை யாக இருப்பதறகு மருநது இன்னம் சொல்வேனே. 664

சொல்லிய திப்பிலி அதிமதுரம் துலங்கு முத்தக் காகடனே
வல்லதோர் முந்தி ரிகையும் வளரும் பேரீஞ்சு கூட
எல்லாம் எடுத்துச் சமன்கொண்டு இதமாம் கருப்பஞ் சாறுவிட்டு
நல்லாய் அரைதது்க் கடலைநிறை நன்றாய் நிழலில் உலர்த்திடுமே. 665

உலர்த்திடும் குளிகை தன்னை உறறதோா வியாதிக் கெல்லாம்
நலமபெற முலைப்பால் தன்னில் நலமுடன் வெந்நீ ராகும்
மலங்கிய தாப சோபம பயித்தியம் மோகித் தாலும்
அலங்கிருத குளிகை யின்பேர் அமிாதசஞ் சீவி யாமே 666

(213) கிராணிக்குச் சுகாவி நெய்

ஆயிலப் பட்டை முத்தககாசு அத்திப் பட்டை கொடுவேலி
மாயும் ஆவரம் பட்டையுடன் வகைக்கு மூன்று பலங்கொண்டு
.. .. , .
பாயும் சுக்குப் பன்னிரண்டு பலந்தான் குறுணி நீரிலிடே. 667

இருநாழி யாகக காய்ச்சி இதனுடன் முன்னீர் விட்டு
நறுநெய்யும் பாலு மாக நன்றுடன் வகையொன் றுக்கு
ஒருநாழி அரையுங கூட்டி ஒன்றாகக் கலசந் தன்னில்
கருமஞ்சள் மிளகு காயம் திப்பிலி மதுரம் ஏலம். 668

ஆத்திப்பூ அதிவிடையம் ஓமம் அத்தித்திப் பிலியுங் கூட்டித்
தேத்தும் சிரகம செவ்வியம் சிறுதேக்கு பெருநகு ரும்பை
வித்திடும விளாவ ரிசியுடன் விளங்குதிப் பிலியின் மூலமும்
மாத்திரம வகையொன் றுக்கு வராகனாய் நிறுதது்க் கொள்ளே 669

கூட்டியே அரைத்தொன் றாகக் கொதிக்கவே காய வைத்து
மீட்டியே மெழுகு பாகம் வேறுதான் வடித்துக் கொண்டு
பூட்டியே அசனம செய்து பொருந்தவே கரண்டி கொள்ளில்
வாடடிய கிராணி யெல்லாம் வகையுடன ஓடு மென்றே 670

(214) இரத்தக் கிராணிக்கு

மோர்படி மூன்று தன்னில் மூவைந்து கடுக்காய் தட்டி
ஊறவே வைத்தி ரண்டு வேளையும் மூனறு நாளும்
சோரிபோல் ரத்தக கிராணி மூலமும் பெருமபா டெலலாம்
வாரியில் வெள்ளம் வந்து வற்றும்போ லாகுந் தானே. 671

பா. 667 இல் சீர்கள் சிதைந்துள்ளன

(215) மூலத்திற்குத் தேங்காய்

தேங்காய் ஒன்று தான்திருகிச் சீரகம் மூன்று பலமிடித்துப்
பாங்காய் உள்ளிச் சாறுழக்குப் பரிவாய் விட்டு ஆவின்நெய்
ஆங்கான் சர்க்கரை யிரண்டுபலம் அடவாய்க் கூட்டித் தான்வறுத்து
தாங்கா வெருகடி உட்கொள்ளத் தணியும் பிணிவகை சொல்வேனே. 672

மலமந்த வாய்வு வுடனே வறண்டிடும் உள்மூ லந்தான்
பலமெத்தக் குறைக்கு மூல முளைதனைப் போக்கு மென்று
வலமொத்த குழலார்க்குக் கிந்த நன்றுசீ விழுதல் போகும்
புலமெத்த வருந்திக் கும்பன் பொருந்திய நூலி தாமே. 673

(216) மேகநாதக் குழம்பு

நல்லெண்ணெய நாழி தன்னில் நலமுடன் வெள்ளை யான
வல்லகுங் கிலியந் தன்னை வாகுடன் பொடிய தாக்கிச்
சொல்லொரு சேர்பொ டிக்குத் தொகுப்புடன் நாழி நீரை
வெல்லவே விட்டு நன்றாய் மேவியே பிசைந்தி டாயே. 674

இப்படி நீரும் வற்ற இயல்புடன் பிசைந்து நன்றாய்
செப்பிய கலசத் துள்ளே சேரவே வழித்துப் போட்டு
மெய்ப்புடன வெருகடி தானும் மேவியே எடுத்த தன்னில்
தபபிலாச் சர்கக ரையும் சமன்கூட்டித் தினறி டாயே. 675

கொண்டிடில் பிரமே கந்தான் குணமாகும் இருபத் தொன்றும்
தண்டமிழ் மாத ருக்குத் தான்பெரும் பாடும் சீயும்
வண்டுரைப போதில் வாழும் மகாமுனி யுரைத்த நூலைப்
பணடித மாரும் அறிந்து பாரினில் செய்வார் தாமே. 676

(217) சகல பீனிசத்திற்கும் எண்ணெய்

அகத்தில் பழுப்பின சாறுநாழி அதுக்குச் சமனாய் நல்லெண்ணெய்
நகைக்கும் ஈருளளிப் பலமெட்டு நன்றா யறிந்து அதிற்போட்டுச்
சிகப்பா யெரித்துப் பதத்தில்வடி சிரசில் மூக்கில் நசியமிட
வகுப்பாய தீரும் வியாதியினபேர் வகைதான அறியச் சொல்வேனே. 677

தும்மலும் சலமும் அறறுத் துலஙகிய ரத்தம் சீயும்
கம்மலாம் பக்குங் கட்டும் கருதிய சராயும் நாற்றம்
எம்முகம் இளைபபி ருமலும் இலஙகிய மண்டைக் குத்தும்
விம்மலும் தீரு மெனறு விவரமாய் முனியு ரைததா 678

(218) கம்பளி பற்பம்

கருத்தக் கம்பளி மேற்சீலை களக்கவே சுற்றி வைத்து
நெருக்கமாய்த் தீயைப் போட்டு நேருடன் சுட்டு நன்றாய்
பொருப்புடன் பொடிதான் செய்து பொருந்தவே ஆவின் மோரில்
சுருக்கென வெருகடி தானும் துலங்கவே கொள்வ தாமே. 679

இந்த விதமாய் மூன்றுநாளில் இயல்வுடன் கொள்வீ ராகில்
மந்தமாம் கர்ப்ப வாய்வு வாரியாம் மூல வாய்வு
விந்தையாம் மேக வாய்வு மிகுந்தநீர்க் கட்டும் சூலை
அந்தர வாய்வும் போமென அகத்தியர் அருளிச் செய்தார். 680

(219) சிலாசத்து பற்பம்

அரசந் துளிரைத் தானரைத்து அதனுள் சிலாசத் தைப்பொதிந்து
விரசம் பெறவே எருவடுக்கி மிகுத்த தீயைத் தான்போட்டுச்
சரசம் இல்லா வெந்தாறிப் போன பின்பு தானெடுத்து
நிரசம் சர்க்கரை யிற்கொள்ள நீரை உடைக்கும் என்றுரைத்தார். 681

வாழை மடலைத் தானெடுத்து வாகாய்த் துளையிட் டதனுள்ளே
ஆழப் புதைத்துச் சிலாசத்தை அடுக்கி வாழை யிட்டெரித்து
வேளைக் கொருபண வெடையெடுத்து மிகவும் சர்க்கரை யிற்கொள்ள
நாளும் மடைவாய் திறந்தாற்போல் நருவி நீர்க்கட் டுடையுமே. 682

(220) வலிப்புக்குக் கசாயம்

வெள்ளாட்டில் கோம யந்தான் வேண்டும்நால் நாழி நாரண
கள்ளியை நறுக்கிப் போட்டுச் சுவறிட எரிக்கும் போது
உள்ளியும் திரிகடு குடனே ஓமமும் முடித்தொன் றாகத்
துள்ளவே நாலொன் றாகத் துலங்கவே எரித்தி டாயே. 683

எரித்ததில் மூன்றி லொன்று இருந்ததில் மூடி மருந்தை
அரைத்ததில் கரைத்துக் காலையில் அடவுடன் மூன்று நாளும்
திரத்துடன் கொள்வீ ராகில் செகந்தனில் வலிப்பு ஐந்தும்
துரத்துமெங் றகத்திய னாரும் தொல்லுல கோருக் குரைத்தார். 684

(221) இரதம், சாதிலிங்கம் முறிவுக்கு

கொடுப்பைவே ரரைத்துச் சாந்து கூரெலு மிச்சங் காய்போல்
அடுக்குஞ் சீரகமும் ஏலம் ஆகவொன் றொருவ ராகன்
முடுக்கமாம் நல்ல வெல்லம் முன்சாந்து அளவு போல
நடக்கும் ஆவின் பால்வார்த்து நன்றாக அரைத்தி டாயே. 685

அரைத்திடும் மருநது தன்னை ஆவின்பால் அதனில் கொள்ள
விரைத்திடும் இரத வேகம் மிகுத்தசாதி லிங்க வேகம்
நிரைத்ததே ருப்பை வேகம் நீள்பற்ப வேக மெல்லாம்
துரத்துமென் றகத்திய னாரும் துலககமா யுரைத்த நூலே. 686

(222) மேகத்திற்கு

தாங்கி யோங்கும் சதாவேரி சீரகம்
தேங்கு காலை சிறுவட்டத் துத்திவேர்
பாங்கு நீரைப் பருகிடில் நிச்சயம்
நீங்கு மேகம் நிலைகெட்டு ஓடுமே. 687

ஒளிக்கும் ஆனை நெருஞ்சில் உயர்க்மாம்
களிககும் பாலும் கலந்திடும சர்ககரை
அளிக்கும் போது அகனறிடும் மேகமும்
துளிக்கும் மெத்தச் சுகமிது காணுமே 688

(223) சிங்காதிச் சூரணம்

சிங்கி யுடனே தானிக்காய் சேர்ந்த நெல்லி சடாமஞ்சில்
துங்கம மிகுந்த திரிகடுகு குலங்கும் கோட்டம் இந்துப்பு
பொங்கும் கண்டங் காரியிவைப் போதக் கூட்டித் தேனிஞ்சி
இஙகு கொளள எலிகடியும் ஈளை கிரந்தி எய்தியதே. 689

(224) விக்கலுக்கு

அத்தித் திப்பிலி அஞ்சனம் நெற்பொரி
சுடடித் தீதனில் கலந்துண்ண வல்லீராய்
இட்ட விக்கல் இடாது தவிர்த்திடும்
சுட்ட பொன்னிறம் சுடரென மாறும். 690

(225) மேகத்திற்குச் சூரணம்

சீரகமும் அமுக்கி ராவும் சிறந்தலா மிச்சம கோட்டம்
பார்பனைக் கிழங்கோ டேலம் பததிரி நெல்லி முள்ளி
கூறெனும் மதுரகாப பூரம் குஙகுமம் சந்தன மாகும்
சாாவுரு முந்தி திரிகையும் தாமரை வளையத் தூடே. 691

அகிலதி மதுரம் கொதத மல்லி ஆவரைச் சமூலமும்
புகழுமர மஞ்சள தேற்றாம வித்துடன் புகழ்கர்ப் பூரமும்
ஆகியே சிலாசத்து சீந்திற சர்க்கரை யிரண்டு பங்கும்
தகைமையாயக கூட்டிக் கொள்ளச சகலமே சுங்கள் போமே. 692

(226) பித்தத்திற்கு

காட்டுக் கருணை ஈரெட்டு கடிய வேலி அதன்பாகம்
நாட்டில் சுக்கு அதன்பாகம் நல்ல மிளகு அதன்பாகம்
கூட்டி யிடித்துத் தேன்குத்திக் குழைத்து முழுங்க வல்லீராய்
ஒட்டிக் கொண்டு போம்பித்தம் ஒடிப் போமென் றுரையீரே. 693

(227) வெள்ளறுகுச் சூரணம்

வெள்ளறுகு கொடுவேலி மிளகரணை யின்வேர்
வெள்ளாகப் பட்டைமேவுஞ் சிறுகுறிஞ் சானும்
ஒள்ளியதோர் கருவேப்பம் பட்டைசெங்கத் தாரி
உகந்திடுமா காசக ருடன்மிளகு சமனாய்த்
தெள்ளியதேன் நெய்யுடனே அனுபானங் கொள்ளச்
சேர்ந்தகடி குட்டம்விட பாகங்க ரப்பனும்
துள்ளியபுண் சூலையிவை மற்றுமுள்ள புண்ணும்
துடித்துப்ப றந்துவிடும் சொல்லுமின்னந் தானே. 694

(228) குன்மத்திற்கு

குன்மம் காணும் பொல்லாது கொடிய வியாதி யதுகாணும்
கன்மம் காணும் ஓடாது கள்ளிப் பாலும் இந்துப்பும்
தென்னங் காயில் புகப்பெய்துத் தீயிற் சுட்டுக் கிழித்தாற்றில்
புன்னைக் காயளவு தின்பீராய் போமெ குன்மம் பொடியாமே. 695

(229) சத்தி குன்மத்திற்கு

பத்தியம்பா லுஞ்சோறும் நெற்பொரியும் பயறும்
வில்லைமுல்லை நேரியசீ ரகமேல மதுரநெல்லி
முற்படவே இளநீரில் எட்டொன் றாக்கி
முந்திப்பின் னெடுத்துவடித் துள்ளே கொள்ள
சொற்பெரிய சத்திகுன்மஞ் சுரத்தின் சத்தி
துயரமுடன் கிறுகிறுப்புள் ளுல்லை மூச்சு
பற்றறுமென் றிமையவரும் ரிசிகள் தானும்
பகர்ந்தனர்முன் அருந்ததமிழின் படியே கண்டீர். 696

(230) அண்டவாதம், விதை வாதத்திற்கு

கருத்தக் கம்பளியைச் சுட்டுக் கல்லினில் வைத்து நேக
வருத்தமா யரைத்து வெந்நீர் வாங்கியே அதனிற் போட்டுச்
சுருக்கமா யுள்ளே கொள்ளச் சூட்சமாய் மிளக ரைத்துப்
பெருத்திடும் அண்டந் தன்னில் பேணியே பூசு வீரே. 697

பூசிய பின்னே அனலாய்ப் புகையெழும் அதனின் மேலே
வீசிட எரிவ டங்கும் மிருந்தநித் திரையு மாகும்
ஆசையாய் வந்த அண்ட வாதமும் விதையின் வாதம்
மாசிலான் அருளி னாலே வகையுடன் தீரு மென்றே. 698

(231) நீரடைப்புக்கு

எருக்கிலை அதனின் மீதில் இனியதூள் தானெ டுத்துப்
பெருக்கமாய் வெண்கா ரத்தைப் பேணியே பொரித்துக் கொண்டு
நறுக்கென சாக்க ரையம் நன்றுடன் கலந்து மூனறு
சுருக்கமாய நெநீ ரோடே சுகமுடன் கொள்ள நன்றே. 699

பாரினில் வைத்தி யர்க்குப் பண்புடன் உரைக்க லுற்றேன்
சீர்பெற மருந்து இந்தத் திறமுடன் செய்வீ ராகில்
காரிருள கதிரோன் கண்ட கதையது போல வாகும்
நீரையும் சதையும் கல்லும் நிமிடத்தில் உடைக்கு மென்றே. 700

(232) சயத்திற்கு

காட்டுக் கருணை ஈரெட்டு கடிய வேலி அதிற்பாதி
நாட்டில் சுக்கு அதிறபாதி நல்ல மிளகு அதிற்பாதி
கூட்டிச் சோத்துக கழுநீரில் குழைந்து விழுங்க வல்லீராய்
ஒட் டித் துரத்தும சயரோகம் ஒருமண் டலத்தி லொழிந்திடுமே. 701

(233) குன்மத்திற்குக் குக்குடாதிச் சூரணம்

முற்றக் கோழி மயிர்வாங்கி முதுகு பிளந்து கடுகுப்பு
வற்றக் காயம ணைகழஞ்சு வளர்க்கும் மிளகு வெள்ளுள்ளி
பற்றப் பொடிததுப் பொடியாக்கிப் பதியாம் கள்ளிப் பால்வார்த்துச்
சற்றிக் கட்டிக் கொள்வீராய்ச் சுருள வெந்த சூரணமே. 702

குடல்வாதம் சூட்டுக் குன்மம் கொள்வது வெந்நீர் தன்னில்
அடவுடன் பாண்டு சோகை ஆனகா மாலை தேனில்
கடினமாம் மூல ரோகம கள்ளிப்பால தவிழ்த்துக கூட்டித்
திடமென வெருகடி தூளும் தின்றிட வியாதி போமே. 703

(234) குன்மத்திற்குப் பெருங்காய லேகியம்

காய மொன்று வசம்பிரண்டு கதிக்கும் விளங்கம் மூன்றாகும்
ஆயம் இந்துப்பு நாலாகும் ஐந்து சீரகம் சுக்காறு
பாயும் மிளகு ஏழுடனே பருத்த திப்பிலி எட்டாகும
ஞாயம் கோட்டம் ஒன்பதுடன் நயந்த கடுக்காய் பத்தாமே. 704

ஆமே சித்திரமூ லம்பதினொன்று ஆகும் குராசானி பன்னிரண்டு
தாமாம் வெல்ல மிதுக்கிரட்டி சரியே கூட்டி லேகியமாய்
வாமா நெல்லிக் காயளவு மகிழ்ந்து உண்டை தானுருட்டி
நாமே சொன்னோம் நாற்பதுநாள் நயந்து இரண்டு வேளைகொள்ளே. 705

கொள்ளவே குன்மம் எட்டும் குடல்வாதம் கவுசு பாண்டு
தள்ளொணா மலபந் தங்கள் சார்ந்திடும் அந்த வாய்வு
கள்ளவெள் வாத ரோகம் கருதிய உட்ட ணங்கள்
விள்ளொண் ணாத அசீரணங்கள் மிகவும்கா மாலை போமே. 706

சூசிகா வாய்வு மந்தம் சுக்கில வாய்வுக் கட்டி
பாசிபோற் படர்ந்த காசம் பத்திவிப் புருதி சத்தி
ஊசிபோற் குத்துஞ் சூலை உட்குத்து அக்கினி மாந்தம்
மாசிலான் அருளி னாலே வகைபட வியாதி போமே. 707

(235) அரையாப்புக்கு

பாரினில் மானி டர்க்குப் பருத்திடும் அரையாப் புக்கு
நீர்தனில் நெருப்பை நேக அரைத்ததன் மேலே வைத்துச்
சீர்பெறச் சில்லைத் தட்டித் திரமுடன் கட்டு வீராய்
ஊரைவிட் டோடும் கட்டி உதவியும் இல்லை கண்டாய். 708

(236) பிரமேகத்திற்கு

நிலக்குமி ழிலையில் பிடியை நீரினில் ஊறப் போட்டு
பலத்துடன் பிசைந்தி றுத்துப் பேணியே தயிரும் விட்டுத்
தலத்தினில் சீரகம் சர்க்கரை சரியுடன் கூட்டிக் கொள்ள
இலக்கண பிரமே கங்கள் இருபத் தொன்றுட னோடுமே. 709

(237) தில்ல வல்லாதி லேகியம்

சேங்கொட்டை பலமு மாறு சேரும்வெள் ளுள்ளி ஓமம்
ஓங்கிய பனையின் வெல்லம் உரமெனும் எள்ளுந் தானே
பாங்குடன் பலமைந் தாகப் பருமுத்த விதையும் பத்து
தேங்கிய காட்டுச் சீரகம் தெளிவுடன் பலமு மொன்றே. 710

கூட்டியே இடித்து ருட்டிக் கொட்டைப்பாக் களவு உண்டை
வாட்டியே இருபது நாளும் வகையுடன் கொள்ளத் தீரும்
மீட்டிய கிரந்தி சூலை மேகமும் களங்க மற்று
தீட்டிய தில்ல வல்லாதி லேகிய மாகு மென்றே. 711

(238) பஞ்ச லோகாதி உண்டை

காந்தசிந் தூரம் லோகம் கதித்தமண் டூர பற்பம்
சேர்ந்திடும் திரிபா லையும் சிறந்ததோர் தேற்றாங் கொட்டை
வாய்ந்ததோர் புளியங் கொட்டைத் தோலுடன் சித்திர மூலம்
ஆய்ந்தவெண் குன்றி மரமஞ்சள் ஆவரைப் பூவுங் கூட்டே. 712

விரும்பிய பருத்திக் கொட்டைப் பருப்பு டன்விளாம் பிசினும்
திரும்பிய கர்ப்பூர சிலாசத்துச் சேர்சம னாகக் கூட்டி
அரும்புசேர் அத்தி வேரில் அடவுடன் நீரி றக்கி
உறவுபோ லரைத்துக் குன்றி அளவுபோ லூருட்டிக் கொள்ளே. 713

கொள்ளவே நிழலு லர்த்திக் குளிகையைக் குழல டைத்து
மெள்ளவே ஆவின் மோரில் மிகவும்நா ளறிந்து கொள்ள
துள்ளவே பிரமே கங்கள் தொலையாத நீரிழி வுகளும்
நள்ளிருள் கதிரோன் கண்ட நன்பனி போல நீங்கும். 714

(239) பறங்கிப் பட்டைச் சூரணம்

நெருஞ்சி முடக்கற்றான் மல்லி நீர்முள்ளி விதைநன் னாரி
தருஞ்சன்ன லவங்கப் பட்டை சந்தனம் வால்மி ளகுடனே
அருந்துசீ ரகம்செவ் வியமும் அதிமதுரம் சித்திர மூலம்
பொருந்தி லவங்க பத்திரி புகழ்சிறு நாகப் பூவே. 715

வெள்ளரி விதையும் பூலா விலாமிச் சுடன்திரி கடுகு
தெள்ளிய கூகை நீறும் சிலாசத்துப் பலமோ ரொன்று
உள்ளுமுந் திரிபே ரீந்து ஒரொன்று பலமி ரண்டு
விள்ளொணாப் பறங்கிப் பட்டை விளங்கிய பலமும் பத்தே. 716

கதித்ததோர் கிராம்பு காலும் கனக்கவே இடித்துத் தூளாய்
பதித்திடும் கர்ப்பூ ரந்தான் பாங்குடன் அரைவ ராகன்
மதிக்கவே பொடிதான் செய்து விகையுடன் ஒன்றாய்க் கூட்டி
விதித்தசர்க் கரையும் பலந்தான் மேலிரு பதுவுங் கூட்டே. 717

கூட்டியே வைத்துக் கொண்டு குலாவுமண் டலந்தான் கொள்ள
வாட்டிய கிரந்தி சூலை மருவிய மேக வெட்டை
ஆட்டிய பித்த வாய்வு அதிகமாம் நீர்ச்சி றுப்பு
பூட்டிய மந்த வாய்வு போமென்று ரிசியுஞ் சொன்னார். 718

(240) ஈடுவகை கூடாதவளுக்கு

நாய்ப்பாகல் வித்துடனே நாகத்தின் பிச்சுட்டிப்
பேய்ப்பாலோ டிந்திரியம் பேதித்து – வாய்ப்பான
சுண்ணாம்பி லூட்டிச் சுரிகுழ லுக்கிட்டால்
விண்ணாடு பக்கும் விடாள். 719

(241) பல்வலிக்கு

ஒருதலை வெள்ளைப் பூடு ஓங்கிய வசம்பு சற்றே
முருகிய நாய்வே ளைவேர்ப் பட்டையிம் மூன்றுங் கூட்டி
வருகவே நறுக்கி வாயில் வலிப்புறத் தடக்கிக் கொள்ள
பெருகவெந் நீர்முன் கால்மட்டும் பேணியே கழுவ நன்றே. 720

கழுவியே கால்து டைத்துக் கனக்கவே வெண்ணெய் பூசி
பொழுதுமுன் னேயி ருக்கப் புழுவி ழுந்ததன் பிறகு
வழுவறத் துடைத்துப் போட்டு வாயினில் மருந்தைத் துப்பப்
பழுதிலாப் பல்வலி யுந்தான் பாங்குடன் தீரு மென்றே. 721

(242) புட்ப விரோசனம்

சீரான புட்பவி ரோசனத்தைச் செப்பக்கேள்
பேராம் புளியில் பிடிபோகம் – நேரான
அக்கிரா காரம்வ ராகனொன்று தான்வெதுப்பி
இக்கணமே ரண்டுபண வெடையிரதம் – சிக்கெனவே
கழற்சியிலைச் சாற்றிற் கதிக்க வரைத்துக்
குழைத்துக் குளிகைபோலே யுருட்டில் – இழக்கத்தில்
... ... லூசியினா லேதமா்
இட்டமுடன் சென்றதின் மேல்வைத்துக் – கட்டளையாய்
நாசியிலே முகந்துபார்க்க நன்றாய்க் கழியும்
மாகக் கழிச்சலுக்கு மாற்றுக்கேள் – தேசுபுகழ்
எருக்கம்பா லிட்டிளக்கி இதமான தொப்பிலிட
மருக்காமல் நிற்கும் மகிழ்ந்து. 722

(243) முடமயிருக்கு

இதமுடன் பச்சை மஞ்சள் எலுமிச்சங் காயள வரைத்துப்
பதமுடன் நாழி நீரில் பாங்குடன் எட்டொன் றாக்கி
இதமுடன் ஏழு நாளும் இரண்டுவே ளையுந் தான்கொள்ள
திதமுடன் முடமயிருந் தீரும் மாமுனி யுரைத்தா ரிதுவே. 723

பா. 722 இல் சீர்கள் விடுபட்டுள்ளன.

வேறு

தேற்றாம் பிஞ்சு காய்வைத்துச் சீலையி லூட்டி நிழலுலர்த்தி
மாற்றான் போல வரும்நோவு வகைக்குப் புகைக்க நசியம்பண்ண
ஏற்றால் எண்ணெ யிற்கலந்து இடவே நசியமும் குடித்தால்
நீற்றில் தானுங் கொண்ட பழிதான் தீரு மென்றுரைத்தார். 724

தட்சிணாமூர்த்தி துணை
முற்றும்.

அகத்தியர் அருளிச் செய்த வய எ..... று எழுதி
நிறைந்தது. முற்றும். குருவே துணை.

நிறைகள் - அளவுகள்

பண்டைக் காலத்தில் வழக்கிலிருந்த பழைய மருத்துவ அளவைகளே இச்சுவடி முழுமையிலும் உள்ளன. இவற்றிற்கான இக்கால அளவைகளைப் பின்வருமாறு கொள்ளலாம்.

குன்றியெடை	– 130 மி. கிராம்
பணவெடை	– 488 மி. கிராம்
வராகனெடை	– 4.2 கிராம்
கழஞ்செடை	– 5.1 கிராம்
காசெடை	– 165 மி. கிராம்
துட்டெடை	– 165 மி. கிராம்
பலம்	– 35 கிராம்
சேர்	– 280 கிராம்
வீசை	– 1.4 கி.கிராம்
தூக்கு	– 1.750 கி.கிராம்
ஆழாக்கு	– 168 மி.லிட்.,
உழக்கு	– 336 மி.லிட்.,
உரி	– 672 மி.லிட்.,
நாழி (படி)	– 1.3 லிட்.,
குறுணி (மரக்கால்)	– 5.3 லிட்.,
பதக்கு	– 10.7 லிட்.,
தூணி	– 21.5 லிட்.,
கலம்	– 64.5 லிட்.,
சாமம்	– 3 மணி நேரம்
மண்டலம்	– 48 நாள்கள்
வெருகடியளவு	– பூனையின் காலடி அளவு
மஞ்சாடியளவு	– 260 மி. கிராம்
துலாம்	– 3.500 கி. கிராம்

வைத்திய சிந்தாமணி

உரை விளக்கங்கள்

கயிலாய மலையில் காட்சியளிக்கும் சிவபெருமான் உமாதேவியாருக்கு மருத்துவக் கலையை உரைத்தருளினார். தேவியிடமிருந்து அகத்திய மாமுனிவர் இக்கலையைக் கற்றபின் இத்துறையில் பல நூல்களையும் செய்தருளினார். அவர் தமிழில் எடுத்துரைத்த மருத்துவ நூல்களிலிருந்து செய்திகள் பலவும் திரட்டப் பெற்று இங்கு 'வைத்திய சிந்தாமணி' என்ற நூலாகத் தொகுத்தளிக்கப் பெறுகின்றது. (பா. 1)

நோயுற்றோருக்கு மருந்தளிக்கும் முன், நோயின் வன்மையையும் மருந்தின் வன்மையையும் அறிந்த பின்னரே அளித்தல் வேண்டும். நோயுற்றவரின் நாடி நிலையை நன்கறிந்த பின்னரே நோய்க்கான மருந்தை அளித்தல் வேண்டும். அத்தகைய மருத்துவரே சிறந்தவராவார் என்பர். (பா.2)

கண்நோய், குன்மம், கிராணி, மூலம், விடம், கணை, ஈளை, சத்தி என இவ்வாறு உடலில் உண்டாகும் பல நோய்களையும் கண்டறிவதுடன், மருத்துவ நூல்களில் கூறப்பெறும் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நோய்களின் குறிகுணங்களையும் விவரமாக அறிந்து அதற்கான மருத்துவத்தைச் செய்தல் வேண்டும் என்பர். (பா. 3,4)

சண்டையிடுவோன், செவிடன், அறிவில்லாதவன், உடற்குறையுள்ளவன், விருந்துண்பவன், படித்தவரோடு பகைகொள்பவன், கபடமனமுள்ளவன், கஞ்சா, அபினி போன்ற போதைப் பொருள்களைக் கொள்பவன். நீண்ட உறக்கம் கொள்பவன் ஆகிய இவர்களுக்கு மருத்துவம் பார்த்தல் பயனளிக்காது என்பர். எனவே இவற்றை அறிந்து மருத்துவம் செய்தல் வேண்டும். (பா. 5,7)

1. மருந்துப் பொருள் சுத்தி செய்முறைகள்

செங்கற்பொடி, ஒட்டடை, சித்திரமூலம், மஞ்சள், திரிபலை, தேவதாரம், சந்தனம், கோவையிலை, வெற்றிலை, நிலப்பனை, ஊமத்தை, சாரணை, புரசம்பட்டை,

முருங்கைவேர், பாகலிலை, மஞ்சணாத்தி, கொன்றை வேர்ப்பட்டை இவற்றைத் தனித்தனியே எடுத்து மத்திக்கவும். (பா.9)

கந்தகம் : கந்தகத்தைக் கரண்டியில் வைத்து அதில் ஆவின் நெய் விட்டு, அப்படியே கிளறாமல் எரியிட்டு உருக்கி, ஆவின் பாலில் மூன்று முறை சாய்க்கவும்.

ஆவின் பாலைச் சட்டியிலிட்டு அதன்மேல் வேடுகட்டி அதில் கந்தகம் பரப்பி வைத்து, பிட்டவியில் எரித்து இறக்கி எடுக்கவும். (பா.10)

நேர்வாளம் : நேர்வாளத்தைப் பத்துநாள் காடியில் ஊற வைக்கவும். பிறகு சாணிப் பாலில் வேடு கட்டி வேக வைத்து நஞ்சினைப் போக்கவும். பிறகு, ஆவின்பால், அறைக்கீரைச் சாறு, குமரிச்சாறு இவற்றிலும் தனித்தனியே இவ்வாறே வெந்துலர்த்தி எடுக்கவும். (பா.11)

வெள்ளைப் பாடாணம் : வெள்ளைப் பாடாணத்தை நன்கு நறுக்கித் துணியில் முடிந்து, பசுவின் பாலில் ஊற வைக்கவும். இதில் நான்கு நாள் ஊறிய பின் சிறுகீரைச் சாற்றில் ஐந்துநாள் ஊற வைக்கவும். ஒவ்வொரு நாளும் பால் அல்லது சிறுகீரைச் சாற்றைப் புதிதாக விட்டு ஊறவைக்கவும். (பா. 12)

தொட்டிப் பாடாணம் : தொட்டிப் பாடாணத்தை ஆவின் நீரிலிட்டுத் தோளாந்திரமாக மூன்று முறை எரித்தெடுக்கவும். பிறகு கரிப்பான் சாறு மற்றும் குமரிச்சாறு ஆகியவற்றில் தனித்தனியே ஒரு சாமம் இதேபோல் எரித்தெடுக்கவும். (பா.13)

அரிதாரம் : அரிதாரத்தைத் துணியில் முடிந்து, ஆவின் நீர், எலுமிச்சம் பழச்சாறு, பழையகாடி இவற்றில் தனித்தனியே ஒருசாமம் தோளாந்திரமாக எரித்தெடுக்கவும். (பா. 14)

மனோசிலை : மனோசிலையை நன்கு நறுக்கித் துணியில் முடிந்து, ஆட்டுநீரில் ஏழு சாமம் வேக வைத்தெடுக்கவும். பிறகு, ஆவின்நீரில் இரண்டு சாமம் வேக வைத்தெடுக்கவும். (பா. 15)

சாதிலிங்கம்: சாதிலிங்கத்தை முலைப்பாலிலும் எலுமிச்சம் பழச்சாற்றிலும் தனித்தனியே ஒருநாள் ஊற வைத்தெடுக்கவும்.

பெருங்காயம் : பெருங்காயத்தை வெற்றிலைச் சாற்றில் ஒரு சாமம் நனைத்து வைக்கவும்.

கடுகு : கடுகை ஒருசாமம் நீரில் நனைத்து வைக்கவும். (பா. 16)

எவச்சாரம் : எவச்சாரத்தைக் கழுநீர். காடி இவற்றில் நன்னத்துலர்த்தவும்.

எட்டிக்கொட்டை : எட்டிக்கொட்டையைக் குப்பைக் கீரைச்சாற்றில் ஒரு சாமம் வேக வைத்தெடுக்கவும். (பா. 17)

இந்துப்பு : இந்துப்பைக் காடி அல்லது ஆவின்நீரில் நனைத்து உலர்த்தவும்.

வெடியுப்பு : வெடியுப்பை ஆவின் நீரில் நனைத்து உலர்த்தவும்.

இரும்பு : இரும்பை நறுக்கி எலுமிச்சம் பழச்சாற்றில் ஊற வைத்தெடுக்கவும்.

புளியிலை : புளியிலையை மோர், ஆவின் நீரில் நனைத்து உலர்த்தவும்.

அட்டுப்பு : உப்பைச் சட்டியிலிட்டு வறுக்கவும். (பா. 18)
ஏரண்டவிதை: ஆமணக்கம் விதையை இளநீரில் வேகவைத்து எடுக்கவும்.

குங்கிலியம்: குங்கிலியத்தைத் திரிபலை சாற்றில் ஊற வைத்தெடுக்கவும்.

ஊமத்தம் விதை : ஊமத்தம் விதையை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊற வைத்தெடுக்கவும்.

கடுகு, கசத்திப்பிலி : இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊற வைத்தெடுக்கவும். (பா. 19)
சீரகம் : இருவகைச் சீரகங்களையும் சிறிதளவு வறுத்தெடுக்கவும்.

ஓமம் : ஓமத்தைச் சுண்ணாம்பு நீரில் ஒருசாமம் ஊற வைத்தெடுக்கவும்.

மிளகு : மிளகை மோரில் மூன்று நாள் ஊற வைத்தெடுக்கவும்.

சுக்கு : சுக்கைச் சீவித் தோல் போக்கிச் சுண்ணாம்பு பூசி, வெய்யிலில் உலர்த்தி, ஒரு சாமம் சென்றபின் கழுவி வைக்கவும்.

கடுகு, திப்பிலி : இவற்றைக் கொடுவேலிக் கசாயத்தில் ஒருசாமம் ஊற வைத்தெடுத்து உலர்த்தவும். (பா. 21)

காந்தம் : காந்தத்தை மோர், காடி, எலுமிச்சம் பழச்சாறு இவற்றில் தனித்தனியே இரண்டு நாழிகை ஊற வைத்தெடுக்கவும். (பா. 22)

கந்தகம் : கந்தகத்தை எருக்கம்பால், கோரைக் கிழங்குச் சாறு, புரசம் பட்டைச் சாறு இவற்றில் தனித்தனியே நனைத்துக் குக்குடப் புடம் போடவும். செம்பைத் தகடாகத் தட்டிச் சிவக்கக் காய்ச்சி, காடியிலும் ஆவின் நீரிலும், நல்லெண்ணெயிலுமாகத் தனித்தனியே ஊற வைத்தெடுத்து, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துத் தகட்டிலிட்டுப் பத்துப்புடம் போட்டெடுக்கவும். (பா. 22, 23)

2. அயச்சிந்தூரம்

செய்முறை : அரப்பொடியைச் சுத்தம் செய்து அத்துடன், சாதிலிங்கத்தை ஆவின் நீரிலரைத்துப் புடமிட்டும், பிறகு நாவற்பட்டை நீரிலரைத்துப் புடமிட்டும் சேர்க்கவும். பிறகு, அப்பிரகத்தை ஆவின்பாலில் ஊற வைத்தெடுத்து, எலுமிச்சம் பழச்சாற்றில் இரண்டுநாள் ஊற வைத்தெடுக்கவும். இவற்றை நெல்லில் புதைத்தும், காடியில் இடித்தும் எடுக்கவும். இப்பொடியை எருக்கம்பால் விட்டரைத்து, அதைச் சட்டியிலிட்டுச் சீலைமண் செய்து பத்துக் கசபுடம் போட்டு எடுக்கவும். இதை ஆலவிழுதின் கசாயத்திலிட்டு முப்பது புடம் போட்டு எடுக்கவும். இந்தச் சிந்தூரத்தை இருப்புச் சட்டியிலிட்டு, ஆவின் பால் வார்த்து ஊற வைத்தெடுக்கவும். இதை நிழலில் உலர்த்தியெடுத்து மூங்கில் குழலில் அடைக்கவும்.

அளவு : பணவெடை (488 மி. கிராம்)

தீரும் நோய்கள் : உட்டணம், பிரமேகம், வெட்டை, பிரமேகம், சயகாசம், நீரிழிவு இவை தீரும். (பா.25–30)

3. சொர்ண பற்பம்

செய்முறை : தங்கத் தகட்டில் புற்றுமண்ணைத் தடவி மூன்று முறை காய்ச்சவும். பிறகு காடி, மாதுளைப் பழச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவற்றிலும் தனித்தனியே நனைத்து முன் போலவே காய்ச்சவும். காவிப் புற்று மண்ணை அரைத்து மேலே பூசி எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று முறை தோய்த்தெடுக்கவும். மேலே உப்பைப் பூசிக் காய்ச்சவும். பிறகு மாதுளம் பழச்சாற்றில் காவிக் கல்லை அரைத்தூற வைக்கவும். இவ்வாறு ஐந்து நாள் கழுவவும் சுத்தமாகும். இதனுடன் சமஅளவு கந்தகம் கூட்டவும். மூசையில் கந்தகத்தைக் கீழ்மேலாக வைத்து, மருந்தை ஆவியில் புடம்போட்டு எடுக்கவும். ஆறிய பின்பு எடுத்து வைக்கவும்.

அளவு : ஒரு மண்டலம் (48 நாள்கள்)

தீரும் நோய்கள் : வாத, பித்த, சிலேற்பன காசம், மேகம். (பா. 31–35)

4. தாமிர பற்பம்

செய்முறை : செம்பைத் தகடாகத் தட்டி 8 கழஞ்சு (40.8 கிராம்) எடுத்துக் கொள்ளவும். அத்துடன், கந்தகம், இரதம், கல்லுப்பு இவை வகைக்கு ஒரு கழஞ்சு (5.1

கிராம்) சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைக்கவும். இதைச் சிப்பியில் வைத்து, வெயிலில் வைத்துச் சிவந்தும் பதத்துடன் எடுத்து வைக்கவும்.

துணை மருந்து : சீனி

அளவு : பணவெடை (488 மி.கி)

தீரும் நோய்கள் : குன்மம், குடல்வாதம், சூலை, குடல்புரட்டு, வாய்வுத்திரட்சி, கவிசு, விப்புருதி. (பா. 36, 37)

5. அட்டலோக மாரணம்

உலோகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றில் மாளும். இவற்றையறிந்து சுத்தம் செய்தல் வேண்டும் என்பர். (பா. 38)

6. நவலோக பூபதி

செய்முறை : பொன், வெள்ளி, செம்பு, வங்கம், துத்தநாகம், வெண்கலம், தரா, இரும்பு ஆகிய எட்டு உலோகங்களின் பற்பங்கள் ஓரெடையும், சூத பற்பம் ஓரெடையுமாக எடுத்துச் சேர்க்கவும். இவற்றை எருக்க வேர்ச் சாற்றிலிட்டுக் காய்ச்சி அரைக்கவும். இதைக் குப்பியிலிட்டுச் சீலைமண் செய்து தோளாந்திரமாக எரித்தெடுக்கவும்.

அளவு : குன்றியெடை (130 மி.கி)

தீரும்நோய்கள் : சன்னிகள், பயித்தியம் 40, வாதம் 80, காசம், இருமல், சோமரோகம். (பா.39–42)

7. பஞ்சலோகச் சிந்தூரம்

செய்முறை : இரதம், காந்தம் இவை வகைக்கு 10 வராகன் (42 கிராம்), வெண்காரம், துத்தநாகம், திரா, சீனக்காரம், இந்துப்பு, தாமிரம் இவை வகைக்கு 6 வராகன் (25.2 கிராம்), அரிதாரம் 3 வராகன் (12.6 கிராம்), காரம் 4 வராகன் (16.8 கிராம்), காரீயம் 7 வராகன் (29.4 கிராம்), கந்தகம் 8 வராகன் (33.6 கிராம்) என இவற்றை எடுத்துப் பொடி செய்யவும். இதற்குச் சீலைமண் செய்து சட்டியிலிட்டு எரித்தெடுக்கவும். பொடியை மருதம் பட்டைச் சாற்றிலிட்டு வறுத்து எடுத்துக் குப்பியில் வைக்கவும்.

அளவு : பணவெடை (488 மி.கி), ஒரு மண்டலம் (48 நாட்கள்)

துணை மருந்து: தேன்.

தீரும் நோய்கள்: குன்மம் 8, மேகவெட்டை, சுக்கிலப் பிரமேகம், நீரிழிவு, பயித்தியம் 40, பவுத்திரம் தீரும். வேலிப் பருத்திச் சாற்றில் கொடுக்கவும். நீரடைப்பு, துன்மாங்கிசம், கல்லடைப்பு இவை தீரும். (பா.43–57)

8. அப்பிரகச் சிந்தூரம்

செய்முறை: அப்பிரகம் 20 பலம் (700 கிராம்), கந்தகம் 4 பலம் (140 கிராம்) எடுத்து, காடி வார்த்து, கல்லிலிட்டு அரைக்கவும். இதை முறைப்படி அகிலில் வைத்து மூடிப் பெரும்புடம் போட்டு எரித்தெடுக்கவும். மாதுளம்பூச் சாயல் போன்றிருக்கும் பதத்தில் சிந்தூரத்தை எடுத்து வைக்கவும். தேவையான அளவு கொடுக்கவும்.

தீரும்நோய்கள்: பிரமேகங்கள், நீரிழிவு, நீரடைப்பு, சயம், காசம், சிலேட்டுமம் தொண்ணூற்றாறு, கல்லடைப்பு, சோகை, காமாலை, பாண்டு, வீக்கம். (பா.58–60)

9. தாளக பற்பம்

செய்முறை: இரதம் 1½ வராகன் (6.3 கிராம்), தாளகம் 8 வராகன் (33.6 கிராம்) எடுத்துக் குழிக்கல்லிலிட்டு, வேலிப் பருத்திச் சாற்றில் அரைத்து, வில்லையாக்கி உலர்த்தி எடுக்கவும். வெள்ளைச் சாரணையைச் சுட்டுக் கரியாக்கி, ஒரு கலசத்தில் பாதி போட்டு, நடுவில் வில்லைகளை வைத்து, மேலே முறைப்படி புற்றுமண் சீலை செய்து வைக்கவும். சட்டியில் மணலைக் கொட்டி அதில் கலசத்தை வைத்து நான்கு சாமம் (12 மணி நேரம்) தீயிட்டு எரித்தெடுக்கவும்.

துணை மருந்து: தேன், கருப்புக்கட்டி.

அளவு: ஒரு பணவெடை (488 மி.கி) இரண்டு நேரம்.

தீரும் நோய்கள்: சூலை, குட்டம், கிரந்திப்புண், மண்டைச் சூலைப் புண்கள், பவுத்திரம்.

பத்தியம்: கஞ்சி சோறு, முருங்கைக் கீரை ஆகும். வாந்தி செய்தால் பழந்தயிர் கூட்டவும். மேலுமானால் சர்க்கரையும் வெண்ணெயும் கூட்டவும். (பா.61–65)

10. பொன்னரிதார பற்பம்

செய்முறை: பொன்னரிதாரம், முட்டைத்தோடு, சுண்ணாம்புக்கல் இவை ஒரளவாய் எடுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து, அகிலில் வைத்துலர்த்தியெடுத்துப் புடம் போட்டு எரிக்கவும். இதே போன்று மீண்டும் மீண்டும் மூன்று முறை செய்தெடுத்துச் சிமிழலடைக்கவும்.

துணை மருந்து: சீரகம், வெந்நீர்.

அளவு: ஒரு பணவெடை (488 மி. கி) அந்தி சந்தி இரண்டுவேளை.

தீரும் நோய்கள்: சீத சுரம், நாலாம் முறைக் காய்ச்சல், சிலேற்றும காச சுரம், வாதரோகம், பவுத்திரம், கிரந்திப்புண், சூலை, பிரமேகம், பக்கப் பிளவை, விப்புருதி, விரணம், கண்டமாலை, கடிவிடம், கரப்பான், மந்தார காசம்.

பத்தியம்: புளிப்பு, உப்பு, கத்தரிக்காய், ஆவின் மோர் ஆகும். (பா.66–69)

11. நாக பற்பம்

செய்முறை: சீனக்காரம் 1 பலம் (35 கிராம்), வெடியுப்பு 2 பலம் (70 கிராம்), நாகம் 10 பலம் (350 கிராம்) எடுத்துச் சட்டியிலிட்டு இருப்புக் கரண்டியால் கிண்டி முறைப்படி எரித்துப் பற்பமாக்கவும். கழுநீர் நிறமானதும் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சிமிழில் அடைத்து வைக்கவும்.

அளவு: ஒரு பணவெடை (488 மி.கி)

தீரும்நோய்கள் : *வாதம், பித்தம், சிலேற்றுமம், பிரமேகம், நீரிழிவு, சயம், குரல் நெரிவு*

(பா. 83, 84)

12. வங்க சிந்தூரம்

செய்முறை : வங்கம் 10 பலம் (350 கிராம்) எடுத்து ஓட்டிலிட்டு, அபினி 1 வராகனெடை (4.2 கிராம்) சேர்த்துருக்கவும். சித்தியாகும். பொன்னாவரை வேர், துத்திவேர் இவற்றை ஓரளவாயிட்டு நாலுசாம;ம (12 மணி நே;ம்) வறுக்கவும். ஆறிய பின்பெடுத்துச் சிமிழில் அடைத்து வைக்கவும்.

துணை மருந்து : தேன்

அளவு : ஒரு பணவெடை (488 மி.லி), இருவது நாள்கள்.

தீரும் நோய்கள் : குன்மம், வாய்வு, சூலை, உட்ண வாய்வு, மூலம், பிரமேகம், நீரிழிவு, நீரடைப்பு, துன்மாங்கிசம், விரணம். (பா.85-87)

13. வெள்வங்க பற்பம்

செய்முறை : வெள்வங்கத்தைத் தகடாகத் தட்டி 30 வராகன் (126 கிராம்) எடுத்துக் கொள்ளவும். சித்திரப் பாலை ஒரு சிமை எடுத்திடித்து துணியில் வெள்வங்கத் தகட்டைவைத்து மேலே பொடியைப் பரப்பி வைக்கவும். இதை நன்கு சுருட்டி வைத்துத் தீயிலிட்டு வேக வைத்தெடுக்கவும். இத்துடன் திப்பிலி, திப்பிலிமூலம், சாதிக்காய், கிராம்பு, ஓமம், சாதிபத்திரி இவை ஓரளவாயெடுத்து, தேனிலிட்டு நன்கு அரைத்துக் கலக்கவும்.

அளவு : இரண்டு வேளை

தீரும் நோய்கள்: நீரிழிவு, குன்மம், வாய்வு, மேகவெட்டை, சுரம். (பா.88-91)

14. நாக சிந்தூரம்

செய்முறை : நாகம் 10 பலம் (350 கிராம்) எடுத்து, இலுப்பை யெண்ணெய், ஆவின் நெய், ஆவின் நீர் இவற்றில் தனித்தனியே மூன்று முறை விட்டுருக்கிச் சாய்க்கவும். சுத்தியாகும். இதே போன்று வெள்ளாட்டுப் பாலிலிட்டு இருபது முறை

சாய்க்கவும் சுத்தியாகும். அதைச் சட்டியிலிட்டு அத்துடன், பொட்டிலுப்பு, ஓமம், மஞ்சள், சுக்கு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) இடித்துச் சேர்க்கவும். இதை முறைப்படி எரித்தெடுக்கவும். செந்நாயுருவி 5 பலம் (175 கிராம்) நறுக்கிப் பொடித்துத் தூவவும். சிவந்த பதமாகும். இதைக் கல்லிலிட்டரைத்துப் பின்பு சட்டியிலிட்டு ஒரு சாமம் (3 மணி நேரம்) வறுக்கவும். செங்களிக்க வைத்திறுத்திக் கொட்டியே சிமிழில் அடைக்கவும்.

துணை மருந்து : திரிகடுகுப்பொடி, தேன்

அளவு : வெருகடியளவு, இரண்டு வேளை, ஒரு மண்டலம்.

தீரும்நோய்கள் : நெஞ்சுநோய், ஈளை, எலிகடி, மந்தார காசம், அரிகுரல், சிலேற்றுமம் 96, பித்தம் 20, மூலச் சூடு 326, பிரமியம் 18, திரிபதகட்டி 5, கல்லடைப்பன் 18, சதையடைப்பன் 16, சோமரோகம்2, பவுத்திரம் 20, கையெரிப்பு, முக எரிப்பு, காலெரிப்பு.

மேலும், கொடுவேலிச் சூரணமும் தேனும் கலந்து 20 நாள் கொடுக்க. சத்திகுன்மம் 8, வாதம் 80, குன்மம் 18, கிரந்தி 18, சிரங்கு, முலைக்குத்து, புற்று இவை தீரும்.

பேய்ப்பீர்க்கங் கூட்டுத் தூளுடன் இச்சிந்தூரங் கலந்து தேன் விட்டுக் குழைத்துத் தண்டில் பூசி அனுபோகம் செய்யவும். அடிவயிற்றிலுள்ள மலட்டுப்பூச்சி, கர்ப்பநோய், கிருமி, பிடிவாதம் போன்ற பல நோய்கள் தீரும்.

மூல முளையிலே இம்மருந்தை மூன்று நாள் தடவவும். முளை கரைந்து விடும். (பா.93)

15. அண்ட மெழுகு

செய்முறை : கண்டங்கத்தரி வேரை நன்கு அரைத்து முட்டையின் மீது பூசி உலர வைக்கவும். இதை உதிர்த்தெடுத்து அத்துடன், வெற்றிலை, பாக்கு, புகையிலைவிதை இவை வகைக்கு 7 பலம் (245 கிராம்), புகையிலை முப்பதும் சேர்த்து, சுட்ட சுண்ணாம்புத் தண்ணீர் விட்டரைத்து, ஒன்றாகத் திரட்டி யுருட்டிக் கட்டவும். பின்னர், சீலை மண் ஏழுமுறை சுற்றிக் காயவைக்கவும். நான்குபடி கொள்ளும் சட்டியில் 2 நாழி (2.6 லிட்.) மணலிட்டு அதில் மேற்சொன்னதை வைத்து, மேலே மணலிட்டுச் சட்டி கொண்டு மூடி எரிக்கவும். ஐம்பது வறாட்டி வைத்து எரித்தெடுக்கவும். சிவந்த பதத்தில் இறக்கி உதிர்த்து வைக்கவும். இதனுடன் பாதியளவு இரதம் கூட்டி, கரண்டியில் வைத்தூதி எடுத்து உருக்கவும். இவ்வாறு மூன்று முறை செய்யவும் மெழுகாகும். இவ்வாறே, சாதிலிங்கம், அரிதாரம், மனோசிலை, கந்தகம், சீனக்காரம், வெடியுப்பு, நவச்சாரம், வெள்ளைப்பாடாணம், வெண்காரம் போன்றவற்றுடன் சேர்த்துருக்கி மெழுகாக்கலாம்.

துணை மருந்து : வெல்லம்

அளவு : சுண்டைக்காயளவு, ஒரு மண்டலம் (48 நாள்கள்).

தீரும் நோய்கள் : இரத மெழுகு – எல்லா நோய்களும் தீரும்.

அரிதார மெழுகு – சுரம் தீரும்.
சாதிலிங்க மெழுகு – சிரங்கு, கிரந்தி, சூலை வெடி தீரும்.
வெண்கார மெழுகு – சலக்கழிச்சல் தீரும்.
சீனக்கார மெழுகு – வெண்குட்டம், குட்டம் போன்றவை தீரும்.
நவச்சார மெழுகு – மகோதரம் தீரும்.
வெள்ளைப் பாடாண மெழுகு – குட்டங்கள் தீரும்.
கவுரிப் பாடாண மெழுகு – மூலம் தீரும்.
கந்தக மெழுகு – எல்லா நோய்களும், சலக்கழிச்சல் தீரும்.
வெடியுப்பு மெழுகு – நீர்க்கோவை, காமாலை, சோகை, வீக்கம், சன்னி, பிறவீச்சு தீரும்.
மனோசிலை மெழுகு – வாதம், வாதசன்னி, வாய்வுகுத்து, முதுகுகுத்து- கடுப்புளைவு தீரும்.

பத்தியம் : ஆவின் பால், நெய், வெள்ளாட்டின் பால், உப்புக்கண்டம், துவரை, அறைக்கீரை, சுறாமீன், கெளுத்தி மீன், கருவாடு, காடை, சேவல், கவுதாரி, கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

இரதம், அரிதாரம், மனோசிலை, காந்தம், சாதிலிங்கம், சீனக்காரம், கந்தகம் ஆகிய இவற்றின் மெழுகெல்லாம் ஒரெடையாகக்கட்டி முன்சொன்ன துணை மருந்துடன் கொடுக்கவும். முகவாத சன்னி, கபாலசன்னி, மூக்குக்குத்து, மகாவாதம் 80, மண்டைக்குத்து, செவிக்குத்து, கன்னரோகம், கண்டமாலை, பவுத்திரம். (பா.94)

16. நவலோகச் சிந்தூரம்

செய்முறை : அரப்பொடி, உருக்கு, செம்பு, வெண்கலம், பித்தளை, இரதம், வெண்காரம், கந்தகம், ஊசிக்காந்தம், மனோசிலை, அரிதாரம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) கூட்டிக் குமரிச்சாறு விட்டு 12 சாமம் (36 மணி நேரம்) அரைக்கவும். பின்பதையெடுத்து அகலில் வைத்து மேலே மூடிச் சீலைமண் செய்து, அடுப்பில் வைத்தெரிக்கவும். இப்படி மூன்று நாள் இரவும் பகலுமாக எரித்து இறக்கவும். நன்கு ஆறிய பின் அத்துடன், நாபி, திப்பிலி, திப்பிலி மூலம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) எடுத்து, உள்ளித்தைலம் விட்டரைத்துச் சேர்க்கவும்.

துணை மருந்து : இஞ்சி, அரத்தை, திரிகடுகு, உள்ளித்தைலம், வெந்நீர், தேன்.
அளவு : அரைப்பண எடை (244 மி.கி.)

தீரும் நோய்கள் : காமாலை, சோகை, பாண்டு, மூலம், மகோதரம், பீலிகை, வெப்புப் பாவை, வாய்வு, வாதம் 80, பித்தம் 40, சிலேட்டுமம் 96, சன்னிதோடம் 13, சுரம், சூதகவாய்வு, மேகவெட்டை. (பா.95–96)

17. இரச சிந்தூரம்

செய்முறை : இரதம் மூன்று பங்கு, கந்தகம் நான்கு பங்கு, தாளகம் நான்கு பங்கு சேர்த்துக் கூட்டி, நல்லெண்ணெய் விட்டுக் கரண்டியில் வைத்துக் காய்ச்சவும். உருகும்போது இரசம் விட்டுக் கிண்டி எடுத்துக் குழிக்கல்லில் வைத்துப் பொடியாக்கவும். இப்பொடியைக் குப்பியில் வைத்து மூடி முறைப்படி எரித்தெடுக்கவும். நன்கு சிவந்து பதமானால் இறக்கிக் குளிர வைத்துச் சிமிழில் அடைக்கவும். வேண்டிய துணை மருந்துகளில் கொடுக்கவும்.

இம்மருந்தை முறைப்படி செய்வது மிகவும் முக்கியமாகும். பக்குவம் தவறினால் பெருந் தீங்கு நிகழலாம். (பா.100–103)

18. உலோகச் சிந்தூரம்

செய்முறை : அரப்பொடி, உருக்கு, காந்தம், பழங்கிட்டம் இவை ஓரளவாக எடுத்து, அத்துடன் கரிப்பான் சாறு விட்டரைக்கவும். அரைத்ததைச் செப்பில் வைத்து மூடிச் சீலைமண் செய்து, கசபுடம் வைத்து எரிக்கவும். எரித்தெடுத்த சிந்தூரத்தைப் பொடியாக்கி மீண்டும் கரிப்பான் சாறு விட்டரைத்து முன்போலவே எரிக்கவும். இப்படிப் பத்துப்புடம் போட்டு எடுக்கவும். சிந்தூரமாகும்.

துணை மருந்து : திரிகடுகுத்தூள், தேன்.

அளவு : ஒரு பணவெடை (488 மி.கி.), இரண்டு வேளை.

தீரும் நோய்கள் : காமாலை, சோகை, சுவாசகாசம், பாண்டு, விடபாண்டு, மேகம், மந்தாரகாசம், குவளை விப்புருதி. (பா.104–108)

19. இரச கர்ப்பூரம்

செய்முறை : (முதற் பாடல் விடுபட்டுள்ளது. காண்க (பா.109–110)

துணை மருந்து: திரிகடுகுத் தூள், தேன்.

அளவு : பணவெடை (488 மி.கி.), இரண்டு வேளை, இருபது நாள்கள்.

தீரும் நோய்கள்: சத்தி, வலிகுன்மம் 16, வாதம் 80, புண், சூலை, சன்னிவாதம், மண்டைச்சூலை 17, பறங்கி 18, பீனிசம் 18, தொண்டைப்புற்று, செவிப்புற்று, யோனிப்புற்று, அண்டப்புற்று, இலிங்கப்புற்று, பவுத்திரம், அரையாப்பு, குட்டம் 18, கரப்பன் 18, கிரந்தி, கோழை, விப்புருதி, ஈளை, சிலேற்றுமம், தொடை வாழை, எலிகடி, வறட்சி, மேகம். (பா. 109–114)

20. பூபதி மாத்திரை

செய்முறை : நாவி, இரதம், கந்தகம், கூவிளைப்பொடி இவை ஓரளவாகயெடுத்து, செருப்படிச் சாறு விட்டரைத்து நான்கு சாமம் அரைக்கவும். இதைக் குன்றிபோலுருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக் குப்பியில் சேர்க்கவும்.

குப்பிக்குச் சீலைமண் செய்து சட்டியில் இருவிரல் மணலிட்டு அதில் குப்பியை வைத்துக் கழுத்தினளவு மேலும் மணலைக் கொட்டி, காடாக்கினியில் 12 சாமம் எரித்தெடுக்கவும். இதை அம்மியில் வைத்து முன் சொன்ன சாற்றை விட்டு 4 சாமம் அரைத்துருட்டிச் சிமிழில் வைக்கவும். (பா.115–118)

21. பூரண சந்திரோதயம்

செய்முறை : தங்கம் ஒரு பங்கு, இரதம் எட்டுப்பங்கு, கந்தகம் பதினாறு பங்கு எடுத்து அத்துடன், செம்பரத்தம் பூச்சாறு விட்டு 17 நாள் நன்கு அரைக்கவும். இதைக் குன்றிபோலுருட்டி யெடுத்துக் குப்பியில் அடைத்துச் சீலைமண் செய்யவும். பெரிய சட்டியின் இருவிரலளவு மணலிட்டு அதில் குப்பியை வைத்து, கழுத்தளவு மணலைக் கொட்டி, அடுப்பில் வைத்தெரிக்கவும். இவ்வாறு காடாக்கினியில் 12 சாமம் எரிக்கவும். மாந்துளிர் போன்ற பக்குவத்தில் இறக்கிக் குழிக் கல்லில் வைத்து, முன்சொன்ன சாற்றிலரைக்கவும். இதை ஒரு வராகனெடையளவு வில்லைகளாகச் செய்யவும். இதனால் பல நோய்களும் தீரும். (பா:119–121)

22. திரிலோக சிந்தாமணி

செய்முறை : சிவப்புக்கல், நீலம், கோமேதகம், வச்சிரம், அப்பிரகம், காந்தம், அரிதாரம், எவச்சாரம், சூதம், மனோசிலை, தங்கம், வெள்ளிப்பற்பம் இவற்றை ஓரளவாக நிறுத்தெடுத்து, குப்பியிலிட்டு முறைப்படி எரிக்கவும். பக்குவமான பதத்தில் இறக்கி வைக்கவும். தேவையான அளவு கொள்ளவும்.

தீரும் நோய்கள் : பித்த சுரம், நீரிழிவு, பிரமேகம், சயம், சித்தப் பிரமை, சன்னி. (பா.122–123)

23. இரச கர்ப்பூரம்

செய்முறை : சித்திர மூலம் 10 பலம் (350 கிராம்) எடுத்துக் குப்பிலிட்டு, அதன்மேல் உப்புமிட்டு, இரதம் 1 பலம் (35 கிராம்) வைத்து மூடி, முறைப்படி எரித்தெடுக்கவும். பற்பமாகும்.

தீரும் நோய் : சத்தி குன்மம். (பா. 124)

24. வசந்த குசுமாக்கினி

செய்முறை : தங்கம், வெள்ளி, வங்கம் இரண்டு வகை, காந்தம், இரதம், அப்பிரகம், பவளம், முத்து இவை வகைக்கு 4 வராகன் (16.8 கிராம்) எடுத்துக் குழிக்கல்லில் வைத்து, ஆவின் பால், கருப்பஞ்சாறு, ஆடாதோடைச் சாறு விட்டரைக்கவும். மேலும், சந்தனத் தண்ணீர், வெட்டிவேர், பசுமஞ்சள், வாழைத் தண்ணீர், கத்தூரித் தண்ணீர் என இவற்றையும் விட்டரைக்கவும். அரைத்ததை வில்லையாக உருட்டி வைக்கவும்.

அளவு : இரண்டு குன்றியெடை (260 மி.கி)
தீரும் நோய்கள் : பிரமியம், மேகவெட்டை, உட்டணம், நாபியில் தீராதவலி.
(பா.125–127)

25. இராச மிருகாங்கசம்

செய்முறை : சூத பற்பம் 3 பலம் (105 கிராம்), தங்கம், வெள்ளி, தாமிரம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) பொடித்துச் சேர்த்து வைக்கவும். வெண்காரத்தை வைத்து அத்துடன் வெள்ளாட்டுப் பாலை வார்த்து அரைக்கவும். இதைக் குப்பியிலிட்டு, சீலையண் செய்து, பெரிய சட்டியில் நான்கு விரலளவு உப்பையிட்டு அதன்மேல் குப்பியை வைத்து, மேலே உப்பைக் கொட்டி, ஏழு சீலைமண் செய்யவும். இதைக் கசபுடம் போட்டு எரிக்கவும். ஆறிய பின்பு எடுத்து வைக்கவும்.

துணை மருந்து : திப்பிலி, மிளகு, தேன்.
அளவு : தேவையான அளவு, நாற்பது நாள்.
தீரும் நோய்கள் : சயம், மேகவெட்டை, சூலை, சுரம், சன்னி. (பா.128–131)

26. திலோக்கிய சிந்தாமணி

செய்முறை: சூதம், வச்சிரம், தங்கம், வெள்ளி, தாமிரம், அப்பிரகம், நாபி, கந்தகம், மனோசிலை, தாளகம், பவளம், முத்து, சங்கு இவை ஓரளவாக எடுத்து, பற்பமாகச் செய்து, கொடுவேலிக் கசாயத்தில் ஏழு நாள்கள் அரைக்கவும். பிறகு, எருக்கலம் பால், நொச்சிக் கசாயம், காட்டுக் கருணைக் கிழங்குச் சாறு இவற்றில் முறையே ஒவ்வொன்றிலும் மூன்று நாள்கள் அரைக்கவும். பிறகு, முருங்கைக் கசாயத்தில் ஏழு நாளும், கொடுவேலிக் கசாயத்தில் இருபத்தோரு நாளும் அரைக்கவும். பிறகு இஞ்சிச்சாறு, கஞ்சாயிலைச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, கொம்மட்டிச் சாறு, மாதுளைச் சாறு இவற்றில் வகைக்கு மூன்று நாள்கள் அரைக்கவும். பிறகு, முன்போல உலர்த்திப் பொரிகாரம் சேர்த்து. நான்கில் ஒன்று நாபி, சுக்கு, இலவங்கம், திப்பிலி, சாதிக்காய் பொடித்துச் சேர்க்கவும். இதை மாதுளைச் சாறு, கொம்மட்டிச்சாறு இவற்றில் தனித்தனியே மூன்று நாள்கள் அரைக்கவும். பிறகு இதைக் குங்குமப் பூச்சாறு விட்டரைத்து, வில்லையாக்கி வைக்கவும்.

துணை மருந்து : தேன், திப்பிலித்தூள்
அளவு : தேவையான அளவு, நாற்பது நாள்.
தீரும் நோய்கள் : வாத, பித்த, சிலேற்றும நோய்கள். (பா.132–136)

27. வாத ராட்சதன்

செய்முறை : (முதலிரண்டு பாடல்கள் விடுபட்டுள்ளன.
காண்க பா.139–141)
துணை மருந்து : இஞ்சி, அரத்தை, திரிகடுகுத்தூள், முலைப்பால், இளநீர்.
தீரும் நோய்கள் : விடம், சீதளம், சன்னிதோடம், வாதம் 80 (பா.139–142)

28. கனக கோடா சூடி

செய்முறை : இரதம், கந்தகம், வெண்காரம், திரிகடுகு, திரிபலை, நாபி இவை வகைக்கு 1 கழஞ்சு (5.1 கிராம்), அரிதாரம், நேர்வாளம் இவை வகைக்கு 10 கழஞ்சு (51 கிராம்) சேர்த்து எடுத்து, புரசம் வேர்ச்சாறு விட்டரைத்து, குன்றிபோலருட்டிக் கொள்ளவும். நிழலில் உலர்த்தியெடுத்து வைக்கவும்.

அளவு : தேவையான அளவு
தீரும் நோய்கள் : சுரங்கள், சன்னிதோடம், மூலம், குன்மம், கெண்டை வாய்வு, கிளிசு, விப்புருதி, பாண்டு, மகோதரம், வயிற்றில் கட்டி, கவுசு, குடல் வாதம், இருமல் மேல்மூச்சு, பயித்தியம், வாயூறல், சந்துவாதம், குளிர்வெதுப்பு, கணை. (பா.143–145)

29. சுராங்கிசம்

செய்முறை : வெண்காரம், இரதம், திரிகடுகு, கந்தகம் இவை வகைக்கு 1 கழஞ்சு (5.1 கிராம்), நேர்வாளம் 2 கழஞ்சு (10.2 கிராம்) கடுகு ரோகணி 4 கழஞ்சு (20.4 கிராம்) என எடுத்துச் சேர்த்து, முலைப்பால் விட்டரைத்துக் குன்றி போலுருட்டவும்.

துணை மருந்து : முலைப்பால், இஞ்சிச்சாறு.
அளவு : தேவையான அளவு
தீரும் நோய்கள் : *சன்னிதோடம், வாயு, மந்தம்.* (பா.146, 147)

30. அக்கினி குமாரன்

செய்முறை : துத்தம், துருசு, நாபி, வெண்காரம், சூதம், நேர்வாளம், கந்தகம், வெள்ளைப்பாடாணம் இவற்றை ஓரளவாக எடுத்துச் சேர்த்து, கரிப்பான் சாறுவிட்டரைத்து, உளுந்தளவு உருண்டையாக உருட்டி வைக்கவும்.
துணை மருந்து: திரிகடுகுத்தூள், இஞ்சிச்சாறு.
அளவு : ஒரு மாத்திரை, மூன்று நாள்கள்.

தீரும் நோய்கள் : *சன்னிதோடம், தொந்த சுரம், மாறல்சுரம், விடசன்னி, வாதம் 80, சிலேற்றுமம் 96, மந்தார காசம், அசீரணம், சுகசன்னி, சுரம்.* (பா.148, 149)

31. தோட ரத்தினாதி

செய்முறை : அக்கிராகாரம், நாபி, அரிதாரம், சாதிலிங்கம், சுக்கு, கந்தகம், திப்பிலி, மிளகு, சூதம், மனோசிலை இவை ஓரளவாகயெடுத்து இஞ்சிச் சாற்றில் இரண்டு சாமம் (6 மணி நேரம்) அரைத்து உருட்டவும். இதை நிழலில் உலர்த்தியெடுக்கவும். இதை ஓட்டிலிட்டுக் காய்ச்சி வறுத்து, எலுமிச்சம் பழச்சாறு விட்டு இரண்டு சாமம் அரைக்கவும். இதை. உருட்டி வைக்கவும்.

துணை மருந்து : திரிகடுகுத்தூள், இஞ்சிச்சாறு, அரத்தை, ஆடாதோடை, துளசி, புட்டில் இவற்றின் சாறுகள்.

தீரும் நோய்கள் : சன்னிதோடம், நால்வகைச் சுரம். (பா.151–153)

32. சன்னிவாத வைரவன்

செய்முறை : சுக்கு, மிளகு, திப்பிலி, கந்தகம், சாதிலிங்கம், நாபி, இரதம், வெண்காரம் இவை ஓரளவாக எடுத்து, எலுமிச்சம் பழச்சாறு விட்டு, ஒரு சாமம் அரைக்கவும். இதை உளுந்தளவு உருண்டையாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுக்கவும்.

துணை மருந்து : தேன், ஆடாதோடைக் கசாயம்.
தீரும் நோய்கள் : விட சுரங்கள், சன்னி, ஈளை இருமல். (பா.154, 155)

33. சூசிகா பரணம்

செய்முறை : கஞ்சாயிலை, கந்தகம், அபினி, இந்துப்பு, ஊமத்தம் விதை, சாதிக்காய், எருக்கு, கொடுவேலி, நாபி, இரதம் இவற்றை ஓரளவாக எடுத்து, பொன்னூமத்தஞ் சாற்ற்ற விட்டு அரைக்கவும். இதை மிளகளவாக உருட்டி நிழலில் உலர்த்தி வைக்கவும்.

துணை மருந்து: நொச்சியிலை, இஞ்சிச்சாறு, தேன்.
தீரும் நோய்கள் : சன்னி, விசுளி, பாண்டு, சூலை. (பா.156, 157)

34. விடச்சுரக் குளிகை

செய்முறை : கந்தகம், பச்சைநாபி, மிளகு, சூதம், நேர்வாளம் இவற்றை நன்கு சுத்தி செய்து ஓரளவாகக் கூட்டி, பூசணிப்பருப்பும் கூட்டி முறைப்படி அரைக்கவும். இதை உளுந்தளவு உருண்டைகளாக்கிச் சேர்க்கவும்.

தீரும் நோய் : விடச்சுரம். (பா. 158)

35. ஆனந்த வைரவன்

செய்முறை : சாதிலிங்கம், வெண்காரம், சூதம், நாபி, சுக்கு, மிளகு, திப்பிலி இவை ஓரளவாக எடுத்து, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைக்கவும். குன்றியளவு உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துச் சிமிழலடைக்கவும்.

துணைமருந்து : இஞ்சிச்சாறு, சுக்குக்கசாயம், தேன்.
தீரும் நோய்கள் : சன்னி, சுரதோடம். (பா.159, 160)

36. விரோசன சிந்தாமணி

செய்முறை: திரிகடுகு, சீரகம், கடுகுரோகணி, முருங்கைப்பூ, நேர்வாளம் இவை ஓரளவாக எடுத்து, நீரிலிட்டரைக்கவும். சூரைக்காயளவு உருண்டையாக உருட்டி வைக்கவும்.

துணை மருந்து : பனை வெல்லம், இளநீர், பால், நெய், பனஞ்சீனி.

தீரும் நோய்கள் : வாய்வு, மந்தம், சீதக்கட்டு, கெண்டைவலி, வயிற்றுப்பிசம், கிளிசு, காமாலை, சோகை, விடபாண்டு, பழஞ்சுரம், மந்தார காசம், இருமல், புத்தி மயக்கம், பித்தவெறி, குன்மம், குடல் வாதம், குலையெரிதல், வாய்வுக்குத் குத்து.
(பா.161, 162)

37. சேது பந்தனம்

செய்முறை : அதிவிடையம், குராசானி, சாதிலிங்கம், ஊமத்த விதை இவற்றை ஓரளவாக எடுத்து வறுத்துக் கூட்டவும். சூதம், சாதிக்காய், இலவங்கம், வசுவாசி, விளாம்பிசின், மாதுளம்பிஞ்சு, அபினி இவற்றை ஓரளவாக நிறுத்தெடுத்துச் சேர்த்து, கஞ்சாயிலைச் சாற்றில் ஒரு சாமம் அரைக்கவும். பிறகு ஊமத்தம்சாறு விட்டு அரைக்கவும். இதைப் பணவெடையளவு உருண்டையாக உருட்டி வைக்கவும்.

துணை மருந்தும் தீரும் நோய்களும்

1. தேனில் கொடுக்கவும், கிராணி, வயிற்றுக்கடுப்புத் தீரும்.

2. சாதிபத்திரி, ஆவாரை, மலைதாங்கி, எள்ளுக்கீரை, ஆரைக்கீரை இவற்றின் கசாயத்தில் கொடுக்கவும். அதிசார கிராணி தீரும்.

3. மோரில் கொடுக்கவும். நீரிழிவு, சூலை தீரும். இதே துணை மருந்துகளில் கொடுக்க, கிராணி, குன்மம் 8, அதிசாரம், வாய்வு, மேகவெட்டை, மூலம், சேற்றுமம் போன்றவையும் தீரும். (பா.163–166)

38. புரந்தர நாத குளிகை

செய்முறை : வெள்ளைப் பாடாணம், துத்தம், பீதரோகணி இவை வகைக்கு 2 வராகன் (8.4 கிராம்), இர்தம் ஒரு வராகன் (4.2 கிராம்), எட்டிக்கொட்டை 3 வராகன் (12.6 கிராம்) கூட்டி, ஊமத்தஞ்சாறு விட்டு 4 சாமம் அரைக்கவும். பிறகு இதை மிளகளவாக உருட்டி வைக்கவும்.

துணை மருந்து : முலைப்பால், ஆவின்பால், குளிர்ந்தநீர்.
தீரும் நோய்கள் : வாத, பித்த, சிலேற்றும நோய்கள், சுரம். (பா.167, 168)

39. காந்த குலாந்தகம்

செய்முறை : காந்தம், சூதம், வெள்ளைப் பாடாணம், கவுரி, இலிங்கம் இவை ஓரளவாக எடுத்து, பொன்னாங்காணிச் சாறு விட்டு ஒரு சாமம் அரைக்கவும். இதை உருட்டி வைக்கவும். கையாந்தகரைச் சாற்றைச் சீலையில் தடவி, அதில் இவ்வுருண்டையை வைத்து உருட்டவும். சட்டியில் இரண்டு நாழி (2.6 லிட்.) உப்பையிட்டு, அதன்மேல் இதை வைத்து, மேலே இரண்டுபடி உப்பையிட்டு மூடவும். சீலைமண் செய்து, முறைப்படி எரிக்கவும். இரண்டு சாமம் ஆனபின்பு எடுத்து வைக்கவும்.

துணை மருந்து : பனை வெல்லம்
அளவு : பணவெடை (488 மி.கி.), இரண்டு வேளை, ஏழு நாள்கள்.
தீரும் நோய்கள்: கிரந்தி, குழிவாழை, வாய்வு, சூலை, வெடிசூலை, புண், விப்புருதி, கண்டமாலை, கரப்பான், சிரங்கு, கருவாங்க வாதம்.
பத்தியம்: உப்பு, காணம், மிளகு, வெள்ளுள்ளி ஆகும். (பா.169–173)

40. வாய்வுக் குடோரி

செய்முறை: சூதம், வெண்காரம், நாபி, சுக்கு, கடுக்காய், தான்றிக்காய், கந்தகம், அரிதாரம், இலிங்கம் இவை வகைக்கு ஒரு வராகன் (4.2 கிராம்), நேர்வாளம் 5 வராகன் (21 கிராம்) கூட்டி, போசம் வேர்ச்சாற்றில் இரண்டு சாமம் அரைக்கவும். குன்றியளவாக உருட்டி வைக்கவும்.

துணை மருந்து : இஞ்சிச்சாறு
அளவு : குன்றியளவு, மூன்று நாள்கள்.
தீரும் நோய்கள் : குட்டம், பீனிசம், வாய்வு, இளைப்பு, இருமல், ஈரல்வலி, வாத பித்த, சிலேற்றுமம், வயிற்றுள் கட்டி, சயித்தியம், சூதக வாய்வு, நீராமை, சுரம், சன்னி.
பத்தியம் : புளி, புகை, மாங்கிசம் ஆகாது. (பா.174–176)

41. மதன காமேசுர சிந்தூரம்

செய்முறை : நவச்சாரம், இரதம், கந்தகம் வகைக்கு 1 பலம் (35 கிராம்), எடுத்துச் செருப்படிச் சாற்றில் ஒரு சாமம் அரைக்கவும். பிறகு கருஊமத்தைச் சாற்றில் நான்கு சாமம் அரைக்கவும். இதைக் குப்பியில் வைத்து அடைத்துச் சீலைமண் செய்யவும். களிமண், சோறு, முட்டைக்கரு விட்டு அடைத்து முன்போலவே சீலை செய்யவும். பாவையில் இருவிரல் மணலிட்டுக் குப்பியை வைத்து, கழுத்து மட்டும் மேலே மணலைக் கொட்டி மீண்டும் சீலை செய்து எரிக்கவும். நன்கு ஆறிய பின்பு எடுக்கவும்.
(பா.177–179)

42. தம்பனை

செய்முறை : சாதிக்காய், கிராம்பு, பச்சைக்கர்ப்பூரம் வகைக்கு இரண்டு வராகன் (8.4 கிராம்) எடுத்து, ஊமத்தஞ்சாற்றில் 4 சாமம் அரைக்கவும்.

அளவு : 2 குன்றியெடை (260 மி.கி.)

தீரும் நோய்கள் : பிரமேகம். சரும உட்டணம், புண், தம்பனையாகும்.
(பா.182, 181)

43. விரோசனம்

செய்முறை : சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு, கடுகுரோகணி, நேர்வாளம் இவை வகைக்கு ஒரு கழஞ்சு (5.1 கிராம்) எடுத்து, எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து வைக்கவும்.

தீரும் நோய்கள் : சுரம், குளிர். (பா.182, 183)

44. விரோசனக் குளிகை

செய்முறை : இந்துப்பு, கடுக்காய், மிளகு, சுக்கு, கடுகுரோகணி, இவை வகைக்கு 8 கழஞ்சு (40. 8 கிராம்), நேர்வாளம் 6 கழஞ்சு (30.6 கிராம்) எடுத்து, தேசிப் பழச்சாற்றிலரைத்து உருட்டி வைக்கவும். (பா.184)

45. விடமை

செய்முறை : இரதம், கந்தகம், அரிதாரம், பெருங்காயம், துருசு, வெண்காரம், வெள்ளைப் பாடாணம், மனோசிலை இவை ஓரளவாக எடுத்து, அத்துடன் சமஅளவு நேர்வாளம் கூட்டவும். கொட்டங்கச்சிக்கரி வராகன் (8.4 கிராம்) கூட்டவும். இத்துடன், தேங்காய்ப்பால் விட்டு மூன்று சாமம் அரைத்து வழித்துச் சிமிழில் அடைத்து வைக்கவும்.

தீரும் நோய்கள் : பயறளவு உள்ளே கொடுக்க விடம் தீரும். விடம் மீறினால், தோள், தொடை மீதிற் கீறி மருந்து செய்யவும். இரண்டு பணவெடை குப்பை மேனிச் சாற்றில் எடுத்துக் கீறின வாயில் வைக்கவும் விடம் தீரும். மீறினால் எள்ளளவு முலைப்பாலில் உரைத்துக் கண்ணிலிடவும். பேய்ச்சுரம், அலற்றும் சன்னி இவை தீரும். ஆடு, மாட்டிற்கு உண்டாகும் அடைப்பன் நோய், சோளப்பயிர் கொட்டை தின்ற மயக்கம், பூரான்கடி, எலி கடி இவை தீரும். (பா.185–188)

46. மேகநாதன் குளிகை

செய்முறை: சாதிக்காய், வசுவாசி, கிராம்பு, சாதிலிங்கம், ஊசிக் காந்தம், ஊமத்தம்விதை இவை ஓரளவாக எடுத்து, அத்துடன் அபினி சமன் கலந்து, ஊமத்தஞ் சாற்றிலரைக்கவும். இதைத் தூதளங்காய்ப் போலுருட்டி நிழலில் உலர வைத்தெடுக்கவும்.

துணை மருந்து : வெந்நீர், தேன்.

தீரும் நோய்கள் : பெரும்பாடு, நீரிழிவு, மூலக்கடுப்பு, வாத, பித்த, சிலேற்பனம், வயிற்றுவலி. (பா.189–190)

47. ஆனந்த வைரவன்

செய்முறை: நாபி, சூதம், மனோசிலை, கந்தகம், சாதிலிங்கம், வெண்காரம் இவை ஓரளவாக எடுத்து, எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து உளுந்தளவு உருட்டி வைக்கவும்.

துணை மருந்து : இஞ்சிச்சாறு, முலைப்பால்.
தீரும் நோய்கள் : வாதசுரம், சன்னி, குளிர்சுரம். (பா.191)

48. சுரத்திற்கு

செய்முறை : அபினி, இரதம், நேர்வாளம், கந்தகம், மடற்துத்தம் இவை ஓரளவாக வெற்றிலைச் சாற்றிலரைத்துருட்டி எடுக்கவும்.

துணை மருந்து : இஞ்சிச்சாறு
அளவு : குன்றியளவு (130 மி.கி.)
தீரும் நோய் : சுரம். (பா. 192)

49. மாந்தக் குளிகை

செய்முறை : வாய்விளங்கம், ஆமையோடு, மிளகு, பொடுதலைக்காய், வசம்பு, திப்பிலி, கழற்சிப்பருப்பு இவை ஓரளவாகக் கூட்டிப் பொடுதலைச்சாறு விட்டரைக்கவும். இதைச் சூரைக் காயளவு உருட்டி நிழலில் வைத்தெடுக்கவும்.

தீரும் நோய்கள் : குழந்தைகளுக்குக் கண்டங்கத்தரிக் கசாயத்தில் கொடுக்கவும். இருமல், கழிச்சல் தீரும். வேலிப்பருத்திக் கசாயத்தில் கொடுக்கவும் பொருமல் தீரும். ஓமக் கசாயத்திலிடவும் கழிச்சல் தீரும். (பா.193–195)

50. குன்ம குடோரி

செய்முறை : சூதம் 2 வராகன் (8.4 கிராம்) இந்துப்பு ஒரு வராகன் (4.2 கிராம்), சீரகம் 4 வராகன் (16.8 கிராம்) எடுத்து, பேய்ப்பாகல் சாற்றிலரைத்துருட்டி வைக்கவும். இதைச் சாணிக்குள் பொதிந்து உமிக் காந்தலில் புடம் போட்டு எடுக்கவும். மீண்டும் முன்போலவே சாறு விட்டரைத்துச் சுண்டைக்காயளவு உருட்டி வைக்கவும்.

துணை மருந்து : தேன்.

தீரும் நோய்கள் : குன்மம் 8, மந்தம், வாய்வு, உட்டணம், வாய்வுச் சூலை, உதிரக்கட்டி.

பத்தியம் : மிளகு, உப்பு, அறைக்கீரை நீர் அருந்தவும். (பா.196–198)

51. புட்ப விரோசனம்

செய்முறை:1 சூதம், கந்தகம், நேர்வாளம், ஆதளைக்கிழங்கு, வெண்காரம், சிற்றாமணக்கு, கொன்றை, குளிர்ந்திடும் காய், சிவதை வேர், புரசம் வித்து இவை ஓரளவாக எடுத்து, திருகு கள்ளிப் பாலை விட்டு மூன்று நாள் அரைக்கவும். இதை தேங்காயில் கண் துளைத்து அதிலிட்டு மூடி அடைத்து, தைலம் இறக்கவும். இதைப் பீங்கானில் வைத்துப் புட்பத்தில் தடவி முகரவும். நடைக்கொருமுறை கழிச்சலுண்டாகும். (பா.199–201)

செய்முறை:2 தேங்காயில் கண் திறந்து அதில், நேர்வாளம், பேய்ப்பீர்க்கில் இவை வகைக்கு அரைப்பலம் (17.5 கிராம்) போட்டு மூடவும். அதைப் புதைத்து வைத்து எட்டாம் நாள் எடுக்கவும். பிறகு மூன்று முறை சீலைமண் செய்து வைக்கவும். அரைசாண் அகலம் குழி வெட்டி அதில் கலசம் வைத்துத் தலைகீழாகத் தேங்காயை மேலே வைக்கவும். எருவடுக்கித் தீ போட்டெரிக்கவும். தைலம் விழும். இதைப் புட்பத்தில் தடவி முகர்ந்து பார்க்கவும். கழிச்சலுண்டாகும். (பா.202–204)

52. மேக சஞ்சீவி மாத்திரை

செய்முறை : சாதிலிங்கம், குராசனி ஓமம், காந்தம், சாதிக்காய், வசுவாசி, காசுக்கட்டி, அக்கிராகாரம், கிராம்பு, துத்தம் இவை வகைக்கு 4 கழஞ்சு (20.4 கிராம்) கூட்டி அத்துடன், ஊமத்தவிதை, வங்க பற்பம், சூத பற்பம் இவை வகைக்கு ஒரு கழஞ்சு (5.1 கிராம்) சேர்க்கவும். அத்துடன், அப்பிரகச் சிந்தூரம், அபின் வகைக்கு 2 கழஞ்சு (10.2 கிராம்) சேர்த்து, முறைப்படி அரைத்து மாத்திரையாக்கி வைக்கவும்.

அளவு: மஞ்சாடியளவு (260 மி.கி.)

தீரும் நோய் : பிரமேகம். (பா.205,206)

53. மேகநாதன் மாத்திரை

செய்முறை : திப்பிலி, மிளகு, சுக்கு, கந்தகம், நாபி, வெண்காரம், இரதம் இவை ஓரளவாகக் கூட்டி, அத்துடன், நொச்சிச் சாற்றில் அரைத்து, எள் போல் உருட்டி வைக்கவும். (பா.208,209)

தீரும் நோய்கள்: காய்ச்சல், வாதம், மேகம், சூலை, சன்னிவாதம், உள்சீதம்.

54. சன்னிசுர மாத்திரை

செய்முறை : சிற்றரத்தை, மிளகு, மஞ்சள், முட்டைத்தோடு, திப்பிலி, கத்தூரி மஞ்சள், ஓட்டடைத்தூள், அதிவிடையம், சுக்கு இவை ஓரளவாக யெடுத்துப் பொடித்துக் குழலிலடைத்து வைக்கவும்.

அளவு : பணவெடை (488 மி.கி.)

தீரும்நோய் : சன்னிசுரம். (பா. 210)

55. புகை பிடிக்கத்திரி

செய்முறை : மிளகு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், சதகுப்பை, கத்தூரி மஞ்சள், கர்ப்பூரம் இவை ஓரளவாகக் கூட்டி, குன்றியிலைச் சாறு விட்டரைக்கவும். இதைச் சீலையில் தடவி, திரியாக்கி உலர்த்தி வைக்கவும். இதை அளவில் கொளுத்தி மூக்கில் பிடிக்கவும்.

தீரும் நோய்கள் : தலைநோய், கண்ணோவு, பீனிசம், பிடரிவாதம்.

(பா.211, 212)

56. இரசம் கட்டிச் சிந்தூரமாக

செய்முறை : வெள்ளைப் பாடாணம் 2 வராகன் (8.4 கிராம்) பொடி செய்து சட்டியிலிட்டு, இரதம் 4 வராகன் சேர்த்து மூடி, சீலைமண் செய்து, முறைப்படி அடுப்பில்

வைத்து, 10 நாழிகை கமலாக்கினியில் எரிக்கவும். ஆறியிறக்கி வெண்காரம் விட்டுருக்கவும் குளிகையாகும். இது சிந்தூரத்துக்கு ஆகும். (பா.214, 215)

57. இரசக் குளிகை

செய்முறை : இரதம், பெருங்காயம், இந்துப்பு, அரிதாரம், மனோசிலை, கடுகு, திப்பிலி இவை வகைக்கு 2 வராகன் (8.4 கிராம்) நேர்வாளம் ஒரு வராகன் (4.2 கிராம்) என இவற்றைச் சேர்த்து, அதில் தேன் விட்டு அரைக்கவும். இதை நன்கு உருட்டிச் சிமிழலடைக்கவும்.

துணை மருந்தும் தீரும் நோயும்

1. திப்பிலி – வாத சுரம்.
2. கடுக்காய்க் கசாயம் – பித்த சுரம்
3. திப்பிலிப் பொடி – சிலேற்றும சுரம்.
4. சுக்குப் பொடி – விட சுரம்.
5. எள்ளளவு கண்ணுக்கு இடவும் சன்னி தீரும்.
6. வெள்ளாட்டின் பாலில் கொள்ளவும் பிள்ளையுண்டாகும். (பா.216–218)

58. போசனக் குளிகை

செய்முறை : சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், வாலுளுவை, வெள்ளைச்சாரணை வேர், முட்காவேளை, மால்கிழங்கு, அசமோதகம், வசம்பு, சீரகம், செவ்வியம், சித்திரமூலம், திப்பிலிமூலம், சாதிக்காய், நவச்சாரம், சத்திசாரம், எவச்சாரம் இவை ஒரளவாக யெடுத்து, எலுமிச்சம்பழச்சாறு விட்டரைக்கவும். இதைச் சுண்டைக்காயளவு உருண்டைகளாக உருட்டி வைக்கவும்.

துணை மருந்து : இளவெந்நீர்.

தீரும் நோய்கள் : மந்த வாய்வு, வாய்வுத் திரட்சி, குன்மம், மகோதரம், வயிற்று நோய்கள், குடவாதம், மூலவாய்வு, முளுவை, அளுவை. (பா.219–221)

59. இரதம் முறிந்த சூலைக்குப் புகை

செய்முறை:1 எருக்கலங்கரி இரண்டு பங்கு, சாதிலிங்கம் ஒரு பங்கு, பூவரசம்பட்டை தேவையான அளவு எடுத்துப் பொடி செய்யவும். இதைச் சுங்கானில் வைத்து மேலே பட்டையை வைக்கவும். அதில் நெருப்பிட்டு, எருக்கங்குச்சியால் கிளறி புகைக்கவும். தொடர்ந்து மூன்று நாள் காலை, மாலை புகைக்கவும். வெந்நீர் கூட்டவும். ஏழாவது நாள் விளக்கெண்ணெய் உச்சியிலிட்டு வெந்நீரில் முழுகவும். பிறகு மிளகுநீரில் உப்பிட்டு அருந்தவும்.

தீரும் நோய்கள்: கபால சூலை, புண், கிரந்தி, மேகம், வெடிசூலைப்புண், அரையாப்பு, வாதசூலை, கரப்பன். (பா.222–225)

செய்முறை:2 கருங்குங்கிலிய மரக்கரி ஆறு பங்கும் சாதிலிங்கம் இரண்டு பங்கும் கூட்டி, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, உருண்டையாகப் பிடித்துலர்த்தவும். இதைச் சுங்கான் குழலில் வைத்துப் புகைக்கவும். பத்தியமாக. புளிதவிர்த்து, வெங்காயம், மோர்ச்சோறு ஒன்பது நாள் கொடுக்கவும். ஒருநாள் விட்டு ஒருநாள் தயிர்விட்டுப் பின் விளக்கெண்ணெய் தேய்த்து மூன்று முறை முழுகவும்.

தீரும் நோய்கள் : இரதம் முறிந்து கைகால் சூலைக் கட்டினது, கிரந்திப்புண், சூலை, முடக்கம், அரையாப்பு, மேகவெட்டை, வெடிசூலை, தொடை வாழை, கண்டமாலை, பறங்கிப்புண். (பா.226–229)

60. கண்ணிற்கு இரத்தினாதி மாத்திரை

செய்முறை : துத்தம், துருசு, நெல்லி, கடுக்காய், கர்ப்பூரம், பொன்னாங்காணி, சிறுகீரை, பலா இவற்றின் வேர், புளியம்பூ, வெண்தலையோடு, ஒரிலைத் தாமலை வேர் இவை ஒரளவாகக் கூட்டவும். அத்துடன், முத்து, பவளம், இரும்பு, பொன், வெள்ளி, செம்பு இவை வகைக்கு ஒரு கழஞ்சு (5.1 கிராம்) சேர்த்து, எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைக்கவும். இதை உருண்டையாகச் செய்து நிழலில் உலர்த்தி எடுக்கவும்.

துணை மருந்து : முலைப்பால் வார்த்து இடவும்.

தீரும் நோய்கள் : குந்தம், மாலைக்கண், முழிக்குருடு, சுக்கிரப்படுவன், ஆணிப்பூ, மணிநீலகாசம், கண்பூ, பித்தப் படலம், காசம், கண்மூடல், கண்மாசு. (பா.230–232)

61. கண்ணிற்குப் பச்சைத் தாமிராதி

செய்முறை: துத்தம், துருசு, சங்கு, பவளம், செம்பு, ஆமையோடு இவை ஒரளவாக எடுத்துப் பனைமட்டைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவை விட்டரைத்து உருட்டி வைக்கவும். இதை முலைப்பாலில் உரைத்திடவும்.

தீரும் நோய்கள்: மண்டையில் கனப்பு, பித்தம், கண்காசம், பூப்படலம், மணிநீலகாசம், கண்பூ. (பா.233, 234)

62. கிரந்திப் புண்ணிற்கு

செய்முறை : கந்தகம், இரதம், அரிதாரம், வெள்ளைப் பாடாணம், மனோசிலை, விடத்தோம வேர்ப்பட்டை இவை ஓரளவாகயெடுத்து, அதில் பாகற்சாறு விட்டு ஏழு நாள் அரைக்கவும். இதைக் குன்றிபோல உருட்டி வைக்கவும்.

துணை மருந்து : எருமைமோர்.

அளவு : அந்திசந்தி இரண்டுவேளை, ஏழுநாள்.

தீரும்நோய்கள் : கிரந்தி, தொடைவாழை, கண்டமாலை, புற்று, பவுத்திரம், விப்புருதி, வெடிசூலை, புண், பாதசக்கரம். (பா.235–237)

63. கர்ப்பூராதிப் பொடி

செய்முறை : வெள்ளைக்காக்கணம் வேர்த்தோல் மற்றும் விதை, வட்டச் சாரணை, சிறுகீரை, கொடுப்பை, நாயுருவி, வரட்பூலா இவற்றின் வேர்கள் ஓரளவாக எடுத்து அத்துடன், எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒரு சாமம் ஆட்டியெடுத்து வில்லையாகச் செய்யவும். இதைக் குழலிலிட்டுச் சீலைமண் செய்து பற்பமாக்கவும். அத்துடன் எலுமிச்சம்சாறு விட்டு உதிர்த்துப் பொடியாக்கிச் சிமிழினில் அடைத்து வைக்கவும்.

தீரும் நோய்கள் : கண்ணோவு, நீர்ப்பாய்ச்சல், காசம், மாலைக்கண், வெண்ணோக்காடு, கண்சூடு, மாங்கிச வளர்த்தி, சுக்கிரப்படுவன் போன்ற அனைத்துக் கண்ணோய்களும் தீரும். (பா.238–241)

64. பீதரோகணி மாத்திரை

செய்முறை : பீதரோகணி, சுக்கு, தலையோடு, ஓரிலைத் தாமரை வேர் இவை மூன்று பங்கும், துருசு, பச்சை வளையல் இவை இரண்டு பங்கும், பன்றிக் கொம்பு வெள்ளைக் காக்கணம் வேர் இவை ஒரு பங்கும் கூட்டி, முலைப்பால் வார்த்தரைத்து, உருண்டையாக உருட்டி வைக்கவும். கண்ணிலிடவும். எல்லாக் கண்ணோய்களும் தீரும். (பா.242, 243)

65. புற வளையம்

செய்முறை : சாணியில் முட்டை வெள்ளைக் கருவிட்டு வெளியே புறவளையமாகப் பூசவும். கண்சிவப்பு, ஆனி, பூ, துன்மாங்கிசம் இவை தீரும்.(பா.244)

66. ஏலாதி மாத்திரை

செய்முறை : ஏலம், இலவங்கம், அதிமதுரம், இருவேலி, சுக்கு, நன்னாரி, முந்திரிகை, பேரீஞ்சு, இலாமிச்சு, கோரோசனை, தாளிசபத்திரி, கோட்டம், சடாமாஞ்சில், சந்தனம், தேவதாரம், திப்பிலி, இலுப்பைப்பூ இவை வகைக்கு ஒரு கழஞ்சு (5.1 கிராம்), கடுகுரோகணி 10 கழஞ்சு (51 கிராம்) என இவற்றையெடுத்து, இளநீர் விட்டரைத்துருட்டி, நிழலில் உலர்த்தி வைக்கவும்.

துணை மருந்தும் தீரும் நோயும்

1. இளநீர் – பயித்திய சுரம்

2. குதிரை வாலிக் கசாயம் – பல சன்னி
3. ஆவின் நெய் – நீர்ச்சிறுப்பு
4. முலைப் பால் – நீர்க்கடுப்பு
5. தேன் – சுவாசகாசம்
6. இஞ்சிச் சாறு – வாதம். (பா.245)

67. இராசகேசரி மாத்திரை

செய்முறை : கோரோசனை, காநதம, குங்குமப்பூ, கோட்டம் , அகில், சீரகம், அரிதாரம், சிறுதேக்கு, பவழம், முத்து, இலுப்பைப்பூ, இலவங்கம், நன்னாரி, விலாமிச்சு, பொன்மெழுகு, சாதிலிங்கம், கல்நார், கழுநீர்ப்பூ, கிராம்பு, ஏலம், முந்திரிகை, தக்கோலம், திப்பிலிமூலம், முத்தக்காசு, கலையின் கொம்பு, கடுகுரோகணி, பேரீந்து, திப்பிலி, நேர்வாளம், சாத்திரவேதி, கருடப்பச்சை, மிளகு, கல்மதம், வெண்காரம், சிவதை இவை ஓரளவாக எடுத்துப் பொடித்துச் சேர்க்கவும். இவற்றை ஆவின்பால், செவ்விளநீர், முலைப்பால், மாதுளம்பழச்சாறு, கரும்புச்சாறு என ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாள் அரைத்து எடுக்கவும். இதைக் குளிகையாக உருட்டி வைக்கவும்.

துணை மருந்தும் தீரும் நோயும் :

1. சுக்கு, குறுந்தொட்டி வேர் இவையிட்ட கசாயம்–தாபசுரம், சத்தி, விக்கல்.
2. இஞ்சிச்சாறு –சன்னி, குளிர்க்காய்ச்சல்.
3. எருமைத்தயிர்–மேகம், சலக்கழிச்சல்.
4. செவ்விளநீர் வெந்தளித்து அதில் சீனியும் கலந்து கொடுக்கவும். சோகை, சிறுசிறுப்பு, துன்மாங்கிசம், ஈளை, இருமல், விக்கல்.
5. தூதுவளை வேர்ப்பொடி – தாதுண்டாம்.
6. ஆட்டுப்பால் – கிராணி, கடுப்புளைவு, கெண்டை, கழல் வாய்வு.
7. கைதோணியு மிளகுமிட்டுக் காய்ச்சிய நீர் – காமாலை, பாண்டு,
8. உகாய் வேர்ப்பட்டை, நாய்வேளைவேர், நெருஞ்சி வேர் இவையிட்ட கசாயம் – வாதகரப்பன், வலிகுன்மம், வாய்வு. (பா. 246)

68. மேக வெட்டைக்கு மாத்திரை

செய்முறை : காரீயத்தைக் கரண்டியில் வைத்து நல்லெண்ணெய் விட்டு, அடுப்பில் வைத்துக் கரய்ச்சவும். நன்கு உருகும்போது இரதம் விட்டு அரைக்கவும். இப்பொடியில் சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கம் இவை ஓரளவாகப் பொடித்துச் சேர்க்கவும். இதில், மாதுளைப் பூச்சாறு, தென்னம் பாளைச் சாறு விட்டரைக்கவும். இதை உருண்டையாக உருட்டியெடுத்து வைக்கவும்.

துணை மருந்து : ஆவாரைக் கசாயம்.

தீரும் நோய்கள் : மேகவெட்டை, நீரிழிவு, சலக்கழிச்சல், பிரமேகம்.

பத்தியம் : புளிப்பு, கைப்பு, கிரந்திப்பண்டம் ஆகாது. (பா.247–250)

69. வதனபிண்டி

செய்முறை : வெள்ளுள்ளி 100 பலம் (3.500 கி.கி.), பனைவெல்லம் 50 பலம் (1.750 கி.கி.), எள் 25 பலம் (875 கிராம்), ஆவின் மோர் ஒரு பதக்கு (10.7 லிட்.), நெய், நல்லெண்ணெய் வகைக்கு ஒரு நாழி (1.3 லிட்.) என இவற்றைச் சேர்த்து, அடுப்பிலிட்டுப் பதமாகக் காய்ச்சவும். இதில், திரிகடுகு, ஓமம், பெருங்காயம், இலவணம், கொத்தமல்லி, நாகப்பூ, இருசீரகம், வாய்விளங்கம், இலவங்கப்பட்டை, அத்தித்திப்பிலி, கிராம்பு, சித்திர மூலம், செவ்வியம், திப்பிலிமூலம், இலவங்கபத்திரி, அதிவிடையம், கடுகு, ஏலம், வெட்பாலரிசி. குராசானியோமம், வாலுளுவை இவை வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) இடித்துச் சேர்த்து நன்கு கிண்டி இறக்கவும்.

அளவு : புன்னைக் காயளவு, இரண்டுவேளை.

தீரும் நோய்கள் : சூசிகா வாய்வு, சன்னிசுரம், சயம், காசம், வாதம், வாய்வு, வயிற்றில் உதிரக்கட்டி, உளுவை, கெண்டை, உடற்குத்து, சூலை, மலட்டுநோய் இவை தீரும். (பா.251–256)

70. பீனிசத்திற்குச் சூரணம்

செய்முறை : சன்னலவங்கம், அதிமதுரம், சதகுப்பை, மகரப்பூ, இருசீரகம் இவை வகைக்கு 8 வராகன் (4.2 கிராம்) இதற்குச் சமன் கொத்தமல்லி கூட்டி, அத்துடன் சீனிகற்கண்டு கூட்டி இடித்து வைக்கவும்.

அளவு : வெருகடியளவு, இளவெந்நீரில் கொடுக்கவும்.

தீரும்நோய்கள் : பீனிசம், பித்தம், சிலேற்பனம், சிறுநீரடைப்பு, மேகம், இரத்தபித்தம். (பா.257, 258)

71. அரோசிய சிந்தாமணி

செய்முறை : வில்லை, முன்னை, வாகை, குமிழம், பாதிரை, கண்டங்காரி, பேராமல்லி, சிற்றாமல்லி, நெருஞ்சி, முள்ளி இவற்றின் வேர்கள் வகைக்கு 10 பலம் (350 கிராம்) எடுத்து, நறுக்கி வெட்டிப்-பாண்டத்திலிட்டு, 2 தூணி (21.5 லிட்.) நீர்விட்டுக் காய்ச்சி, எட்டிலொன்றாக வற்ற வைக்கவும். அதில், கோட்டம், திப்பிலி, மிளகு, ஏலம், கொத்தமல்லி, நாணற்பூ, சுக்கு, அகில், மாஞ்சில், நன்னாரி, முத்தக்காசு, விலாமிச்சு, சந்தனம், சாதிக்காய், தேவதாரம், இருவேலி, இலவங்கம், இந்துப்பு, தாளிச பத்திரி இவை வகைக்கு 2 வராகன் (8.4 கிராம்) பொடித்துச் சேர்க்கவும். இதில் நல்லெண்ணெய் 2 படி (2.6 லிட்.) சேர்த்துப் பதமாகக் காய்ச்சி வடிக்கவும். இதைத் தலையில் தேய்த்து முழுகவும்.

தீரும் நோய்கள் : சூசிகா வாய்வு, சன்னி, சுரம், மேகவெட்டை, வாந்தி, வாதபித்த சிலேட்டுமம், பீனிசம். (பா.259–262)

72. உடும்புச் சூரணம்

செய்முறை : வெந்நீரில் உடும்பைப் போட்டு, குடலைப் போக்கிச் சுத்தம் செய்தெடுக்கவும். திரிகடுகு, மகரப்பூ, தேசாபுரம், காயம், வெள்ளுள்ளி இவை வகைக்கு ஒரு பலம் சேர்த்து அரைத்து எடுத்து, உடும்பின் வயிற்றில் வைத்து நூல் கொண்டு தைக்கவும். ஒரு பாண்டத்தில் 6 மரக்கால் (31.8 லிட்.) நீர் விட்டு மேலே வேடு கட்டவும். அதில் இதை வைத்து மூடி மேலே சீலைமண் செய்து வைத்து எரித்தெடுக்கவும். பிறகு இதிலுள்ள பொடியை எடுத்து வைக்கவும்.

அளவு : வெருகடியளவு.
தீரும் நோய் : மூலம் (பா.263–264)

73. சிந்தாதி லேகியம்

செய்முறை : புளியிலை 2 துலாம் (7 கி.கி.) இரும்பு ஒரு துலாம் (3.500 கி.கி.) இவை வெந்த நீரில், நன்னாரி, பாதிரை, ஈசங்கு, கண்டங்கத்திரி, நீர்முள்ளி, தூதுவளை, பேராமுட்டி, நொச்சி, முள்ளி சிறுமுன்னை, கோட்டம், கரந்தை, சிற்றாமுட்டி, குவளை, நிலக்குமிழ், மலைதாங்கிவேர், கையாந்தகரை, கோரைக்கிழங்கு இவை ஓரளவாகக் கூட்டி நன்கு காய்ச்சவும். இதில், நாரத்தை, இஞ்சி, புளியாரை, மஞ்சள், வெல்லம் வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) கூட்டிக் காய்ச்சவும். இதில், ஓமம், இலவங்க பத்திரி, இலவங்கப்பட்டை, மஞ்சள், திப்பிலிமூலம், மரமஞ்சள், கருஞ்சீரகம், திரிகடுகு, திரிபாலை, கொத்தமல்லி, வாய்விளங்கம், சீரகம், வெட்டிவேர், இலாமிச்சு வேர், இந்துப்பு. முந்திரிகை, வெள்வெங்காயம், சடாமாஞ்சி, கண்டு பறங்கிப்பட்டை, சாதிக்காய். சாதிபத்திரி, சித்திரமூலம், கடுகு, கோட்டம், நாகப்பூ இவை வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) பொடித்துச் சேர்த்து, லேகிய பதமாகக் கிண்டி வைக்கவும்.

அளவு : புன்னைக் காயளவு, இரண்டு வேளை. 40 நாள்.
தீரும் நோய்கள் : சோகை, காமாலை, விடபாகம், மதகெண்டை, துடிகெண்டை, பாண்டு, கரப்பான், மேகவாய்வு, மகோதரம், சலோதரம், நீராமை போன்றவை தீரும். (பா.266–268)

74. வெகுமூத்திரத்துக்கு

செய்முறை : வட்டத்துத்தி இலையைப் பறித்து நன்கு அரைக்கவும். இதில் எலுமிச்சங்காயளவு எடுத்து, நல்லெண்ணெயிற் குழப்பிக்கொண்டு இரண்டு வேளை கொடுக்கவும். வெகுமூத்திரம் கட்டும். (பா.269)

75. அயவேதிச் சூரணம்

செய்முறை : திரிகடுகு, ஏலம், நெல்லி, கடுக்காய், மூத்தக்காசு, வாய்விளங்கம், சன்னலவங்கம், சாதிபத்திரி இவை ஓரளவாகக் கூட்டி அத்துடன் சிவதை மூன்று பங்கும் சர்க்கரையும் கூட்டிப் பொடித்து வைக்கவும்.

அளவு : வெருகடி அளவு.

தீரும் நோய்கள் : அக்கினி மந்தம், குன்மம், அரோசிகம், பயித்தியம், வாய்வு, பாண்டு, சோகை, விடபாண்டு, மூல வாய்வு, மகோதரங்கள், தசவாய்வு, பீலிகை, பக்க சூலை. (பா.270, 271)

76. கலியாண நாராயணன்

செய்முறை : நெல்லியின் சாறு 4 நாழி (5.2 லிட்.) சர்க்கரை 25 பலம் (875 கிராம்), நல்லெண்ணெய் 1 உழக்கு (336 மி. லிட்.) கூட்டி எரிக்கவும். ஒரு நாழியாக வற்ற வைக்கவும். இதில், திரிகடுகு, ஏலம், ஓமம், சித்திர மூலம், செவ்வியம், இலவங்கம், இலவங்கபத்திரி, வெட்பாலை, இருசீரகம், நாகப்பூ, கொத்தமல்லி, மஞ்சிட்டி, திப்பிலிமூலம், வாலுளுவை, தக்கோலம், சடாமாஞ்சில் இவை வகைக்கு ஒரு பலம் (35 கிராம்), திரிபலை 2 பலம் (70 கிராம்) சேர்த்திடித்துக் கொட்டிக் கிண்டவும்.

அளவு : புன்னைக் காயளவு, இரண்டு வேளை.

தீரும் நோய்கள் : சத்திகுன்மம், குலையெரிவு, உட்டிண வாய்வு, பயித்திய வாய்வு, பாண்டு, சோகை, காமாலை, பிரமேகங்கள், தாதுவர்த்தனை, மூலம், மலடு, அக்கினி மந்தம், காசம், அரோசிகம், வாந்தி, மூச்சிரைப்பு, குத்திருமல், தலைநோய், நீரிழிவு, விக்கல், கைகால் எரிவு, இரைச்சல் இவை தீரும். (பா.272–276)

77. கிரந்திக்கு எண்ணெய்

செய்முறை : ஆடாதோடை, கழற்சி, கோழியாவரை, அவுரி, சின்னி, கண்டங்கத்திரி, நெருஞ்சி, தும்பை, நிலவாகை, முருக்கு, சிற்றகத்தி, எருக்கு, செம்முள்ளி, வெருகு, கொட்டைக் கரந்தை, துத்தி, மணத்தக்காளி, இண்டு, சங்கங்குப்பி, கரிப்பான், பொடுதலை, சாரணை, கருவேல், தூதுவளை, புங்கு, கோவை, நத்தைச்சூரி, பொன்னாவரை, நீர்முள்ளி, மாவிலங்கு, வெண்ணொச்சி, கருநொச்சி, நாரத்தை, எலுமிச்சு, சிறுசெருப்படி, பெருஞ்செருப்படி, வெட்பாலை, வேலிப்பருத்தி, நாய்வேளை, கிரந்திநாயகம், சிறுநாயெரிஞ்சி, பூனை முள்ளி, பெருமுள்ளி, பெருவாயன் லத்தி என இவற்றின் சாறுகள் வகைக்கு ஓர் உழக்கு (336 மி.லிட்.) எடுத்துக் கொள்ளவும். அத்துடன், ஆமணக்கெண்ணெய் 8 படி (10.4 லிட்.) விடவும். வெருகங்கிழங்கு, செங்கத்தாரிவேர், கடுக்காய், வெள்ளுள்ளி இவை 4 பலம் (140 கிராம்), ஈருள்ளி 20 பலம் (700 கிராம்), இடித்துக் கூட்டவும். இதில், சீரகம், மிளகு, ஓமம், சித்திரமூலம், கோட்டம், கார்போகஅரிசி, சுக்கு, கருஞ்சீரகம், கத்தூரிமஞ்சள், பறங்கிப்பட்டை, வசம்பு, ஏலம், பூதகரப்பான்பட்டை, அதிமதுரம், கடுகுரோகணி, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, கிரந்திநாயகம், தகரம், சிவதைவேர், இலவங்கப்பட்டை, திப்பிலி இவை வகைக்கு 8 வராகன் (33.6 கிராம்) சேர்த்திடித்துக் கூட்டவும். இதை அடுப்பில் வைத்து மெழுகு பதமாக எரித்து வடிக்கவும்.

அளவு : ஓர் ஆழாக்கு (168 மி.லி.)

தீரும் நோய்கள் : சயம், குன்மம், வாதம் 80, கிரந்தி 18, காமாலை, பாண்டு, சோகை, விடவாதம், அண்ட வாதம், கழல் வாதம், அந்தர வாய்வு, சூலை, வண்டுகடி

விடகருப்பன், மண்டைக்கரப்பன், குழிவாழை, கண்டமாலை, வெடிசூலைப்புண் கர்ப்பரோகம், மேகவெட்டை, சுழிகணை, இருமல், காசம், நீரடைப்பு.

பத்தியம் : ஆவின்பால், பச்சைப்பயறுடன் பால்கஞ்சி (பா.277–286)

78. சரட்டைப்பொடி

செய்முறை :1 இரதம், வெள்ளைப் பாடாணம், அப்பிரகம் இவை வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) எடுத்துச் சேர்த்து, எலுமிச்சம் பழச்சாறு அல்லது பூசணிக் காய்ச்சாற்றில் ஒருசாமம் அரைக்கவும். இதைச் செப்பிலிட்டு மூடிச் சீலைமண் செய்து எரித்தெடுக்கவும்.

அளவு : பணவெடை (488 மி.கி.)
துணை மருந்து : தேன்
தீரும் நோய் : நீரழிவு (பா.287, 288)

செய்முறை:2 ஆவின்நீர், வெள்ளாட்டின் நீர், உப்பு, இலைக்கள்ளிப் பாலும் தண்டுச் சாறும், ஆவின்நெய் இவை வகைக்கு ஓர் உழக்கு (336 மி. லிட்.) சேர்த்துக் காய்ச்சவும்.

அளவு : வெருகடி
துணை மருந்து : ஆவின்நெய்

தீரும்நோய்கள் : மந்தம், வாய்வுத்திரட்சி, வயிற்றில் கட்டி, மகோதரம், வெப்புப் பாவை, கெண்டை, முளுவை, அளுவை, கவுசு, உள்நீர்க்கோவை, புறநீர்க்கோவை, குன்மம், குடல்வாதம் போன்ற பல வயிற்று நோய்களும் தீரும். (பா.289, 290)

79. மகாபூதிகா தைலம்

செய்முறை : வில்வம், குமிழம், வாதமடக்கி, ஆதளை, சிற்றாமுட்டி, பேராமுட்டி, நெருஞ்சி, கண்டங்கத்திரி, தேவதாரம், மாவிலங்கு, சங்கு, உவாய், சித்திரமூலம், நொச்சி, ஆனைநெருஞ்சி, சாரணை, எருக்கு, சிற்றாமணக்கு, காஞ்சிரை, சுக்கு, கருவேம்பு இவற்றின் வேர்கள் வகைக்கு 12 பலம் (420 கிராம்); அரத்தை, வேங்கைச் சிராய் வகைக்கு 20 பலம் (700 கிராம்); ஆயிலப்பட்டை 40 பலம் (1400 கிராம்) ; உளுந்து, காணம் இவை வகைக்கு 4 படி (5.2 லிட்.) சேர்த்து அத்துடன், தண்ணீர் 4 படி (5.2 லிட்.) சேர்க்கவும். மேற்சொன்ன வேர்வகைப் பலமொன்றுக்கு அரைப்படி தண்ணீரென வைத்துக் காய்ச்சவும். இதை எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சி வடித்து அதில் நல்லெண்ணெய் ஒரு நாழி (1.3 லிட்) ஆவின் பால் 8 படி (10.4லிட்.) இஞ்சிச்சாறு 1 படி (1.3 லிட்.), எலுமிச்சம்பழச்சாறு 2 படி (2.6 லிட்.) இவற்றை ஒன்றாகக் கூட்டிக் காய்ச்சவும். அத்துடன், அதிமதுரம், நன்னாரி, குக்கில், சடாமஞ்சில், பொன்முசுட்டை, ஏலம், விலாமிச்சு, பூலாங்கிழங்கு, வெட்டிவேர், சண்பகப்பூ, கோட்டம், மஞ்சள், கொத்தமல்லி,

இருசந்தனம், கடுகு, மரமஞ்சள், இந்துப்பு, சமுத்திராப்பழம் இவை வகைக்கு 8 வராகன் (33.6 கிராம்) எடுத்துப் பொடித்துச் சேர்க்கவும். மெழுகு பதமானதும் வடித்து அதில், குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம், கோரோசனை இவற்றைப் பொடித்துச் சேர்க்கவும். இதை எட்டுநாள் தானியப்புடத்தில் வைத்தெடுக்கவும். தேவையான அளவு தலையில் தேய்த்து, சீயக்காய் வெந்நீரிட்டு முழுகவும்.

தீரும் நோய்கள் : கபால சன்னி, பீனிசம், சுவாசகாசம், ஒருதலைவலி, அபாய பீனிசம், நீர்ப்பீனிசம், ரத்தப்பீனிசம், மண்டைச்சூலைக்குத்து, மந்தார காசம், செவியடைப்பு, நாசியடைப்பு, வாதபித்தகபம் இவை தீரும். உடல் நன்கு ஒளி பெறும்.

(பா. 291-300)

80. மகா விடமுட்டித் தைலம்

செய்முறை : காஞ்சிரை, வில்வம், நொச்சி, குமிழம், மாவிலங்கு, வாதமடக்கி, பாதிரை, ஆதளை, பேராமல்லி, சிற்றமல்லி, நெருஞ்சி, முள்ளி, ஆனைநெரிஞ்சி, கண்டங்கத்திரி, அமுக்கிரா, சங்கம், எருக்கு, புங்கு, ஆயிலப்பட்டை, சிற்றாமுட்டி, சாரணை, ஊமத்து, திருகுகள்ளி, இலைக்கள்ளி, சிற்றகத்தி, கொடுவேலி, கொடிக்கள்ளி, ஆமணக்கு, தேவதாரம், பிரண்டை, வாகை, கொன்றை, காட்டு முருங்கை, சங்கங்குப்பி, அழிஞ்சில், செங்கத்தாரி, வீட்டு முருங்கை இவற்றின் வேர்கள் வகைக்கு 10 பலம் (350 கிராம்) காஞ்சிரப்பட்டை 40 கிராம் (1400 கிராம்) எடுத்துச் சேர்க்கவும். அத்துடன் ஒரு பலத்திற்கு அரைப்படி நீர் விட்டுக் காய்ச்சவும். இதை எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சியபின் இறக்கவும். இதில், நல்லெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் இவை வகைக்கு 4 படி (5.2 லிட்.) சேர்க்கவும். அத்துடன், கடுகெண்ணெய், செந்திருக்கு, காட்டாமணக்கெண்ணெய், காஞ்சிரம் பழச்சாறு இவை வகைக்கு ஓர் உழக்கு (336 மி.லிட்.), ஆவின் பால் 3 குறுணி (15.9 லிட்.) சேர்க்கவும். மேலும், எருக்கு, கொடிக்கள்ளி, இலைக்கள்ளி, திருகுகள்ளி இவற்றின்பால் வகைக்கு 1 படி (1.3 லிட்.) வட்டச் சாரணை, சிற்றகத்தி, முருக்கு, அழிஞ்சில், முருங்கை, இஞ்சி, கஞ்சாங்கோரை, குப்பைமேனி, வேலிப்பருத்தி, துளசி, ஆடாதோடை, தாழம்விழுது, எலுமிச்சம், இலைக்கள்ளி, நீர்முள்ளி, சாரணை, பிரண்டை, ஆதளை, பிரமி, செப்பு-நெருஞ்சி, தேள்கொடுக்கி, சிறுசெருப்படி, பெருசெருப்படி இவற்றின்சாறுகள் வகைக்கு 1 நாழி (1.3 லிட்.) கூட்டவும். இத்துடன் உளுந்து 1 குறுணி (5.3 லிட்.) நீர் 4 நாழி (5.2 லிட்.) சேர்க்கவும். மேலும், அரத்தை 8 பலம் (280 கிராம்), சுக்கு 4 பலம் (140 கிராம்), காட்டுக்கருணை, புளிநடலைக்கிழங்கு இவை வகைக்கு 10 பலம் (350 கிராம்) கூட்டி, ஒரு பலத்திற்கு ஒருபடி நீர் சேர்க்கவும். அத்துடன், ஆட்டின்நீர், கழுதைநீர், ஆனைநீர், எருமை நீர். ஆவின்நீர், குதிரை நீர் இவை வகைக்கு ஒரு படியும் (1.3 லிட்.) தேங்காய்ப்பால், நீர்முள்ளித்தைலம், அண்டத்தைலம் வகைக்கு 4 படியும் (5.2 லிட்.) காடி 3 குறுணியும் (15.9 லிட்.) விட்டு ஒன்றாகச் சேர்த்துக் காய்ச்சவும். மேலும் எட்டிக்கொட்டை, திப்பிலிமூலம், செவ்வியம்,

சித்திரமூலம், திரிபலை, திரிகடுகு, இலவங்கப்பட்டை, இலவங்கபத்திரி, இலாமிச்சு, வெட்டிவேர், கடுகுரோகணி, சத்திசாரம், எவச்சாரம், பொட்டிலுப்பு, வளையலுப்பு, அட்டுப்பு, கறியுப்பு, பெருங்காயம், தேவதாரம், வசம்பு, செவ்வள்ளி, சாதிக்காய், பூலாங்கிழங்கு, நாகணம், வாய்விளங்கம், ஓமம், அகிற்கட்டை, மாஞ்சில், சதகுப்பை, சந்தனம், தாமரைவளையம், செஞ்சந்தனம், கோட்டம், குங்குமப்பூ, கத்தூரி, செங்கழு நீர்க் கிழங்கு, ஆமணக்கு, வேம்பு, புன்னை, சதுரக்கள்ளி, இலுப்பை முத்து இவை வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) தனித்தனியே அரைத்தெடுத்துச் சேர்த்து எரிக்கவும். மெழுகு பதமானால் எடுத்து வைக்கவும். தேவையான அளவு தேய்த்து முழுகவும்.

தீரும் நோய்கள் : வாதம் 80, மேகம், சன்னிவாதம், பிறவீச்சு, பாரிச வாய்வு, நடுக்கு வாதம், வெடிசன்னி, முகவாத சன்னி, பட்சி வாதம், உடற்குத்து, தனுர்வாதம். *மரணசன்னி, விடவாதம், விடகரப்பன்.* (பா.301–318)

81. மகா வில்வாதி லேகியம்

செய்முறை : வில்வவேர் 50 பலம் (1.750 கி.கி.) இலாமிச்சம் வேர், தூதுவளை, நன்னாரி, முன்னை, வெருவாகை, சிறுவிளா, பெருவிளா, பத்திரி, வெட்டிவேர், முசுமுசுக்கை, தேற்றான் இவற்றின் வேர்கள் வகைக்கு ஒரு பலம் (35 கிராம்)எடுத்து இடித்துச் சேர்க்கவும். இத்துடன் ஒரு பதக்கு (10.7 லிட்.) நீர் விட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாக வற்ற வடிக்கவும். அத்துடன், கொம்மட்டி, மாதுளை, எலுமிச்சம், விளா, இஞ்சி இவற்றின் சாறு வகைக்கு ஒரு நாழி (1.3 லிட்.) கூட்டவும். அத்துடன் சர்க்கரையும் கூட்டிக் குழம்பாகக் காய்ச்சவும். கிராம்பு, திரிகடுகு, திரிபாலை, இருசீரகம், பருத்திவிதை, ஏலம், இலவங்கம், சந்தனம், செவ்வியம், அரேணுகம், விளாவரிசி, இலுப்பைப்பூ, வில்லைக்கனி, நெய்தற்கிழங்கு, பேரீஞ்சு, முந்திரிகை இவை வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) சேர்த்து ஆவின் நெய்விட்டு இடிக்கவும். ஒரு நாழி தேன் விட்டுக் குழப்பி, தானிய புடம் வைத்துப் பதினெட்டாம் நாள் எடுக்கவும்.

தரும் நோய்கள் : குன்மம், காமாலை, பாண்டு, சோகை, இரைச்சல், வலி, பொருமல், சுவாசம், அரோசிகம், விக்கல், சத்தி, கைகாலெரிவு, வெள்ளோக்காளம், காசம், உட்காய்ச்சல், கிராணி, அதிதாபம், மயக்கம். (பா.319–321)

82. மதுமேகத்திற்கு

செய்முறை : வெள்ளாட்டுக் கிடாயின் தலையை வாங்கி, வீழிச்சாறு 2 படியும் (2.6 லிட்.) தண்ணீர் ஒரு பதக்கும் (10.7 லிட்.) விட்டு வற்றக் காய்ச்சவும். பிறகு சதையெடுத்து எலும்பு தள்ளிப் போடவும். **அதிமதுரம், கோட்டம், சிறுநாகப்பூ,**

கொத்தமல்லி, சீரகம், மிளகு, மஞ்சள், சன்னலவங்கம், வெள்ளுள்ளி, ஈருள்ளி இவை வகைக்கு 3 வராகன் (12.6 கிராம்) சேர்த்து இடித்துக் கலக்கி அத்துடன், விளக்கெண்ணெய், நறுநெய், நல்லெண்ணெய் இவை ஓரளவாக விட்டுப் பிசைந்து வேக வைக்கவும். இதை நன்கு வடிகட்டி இரண்டு வேளை கொடுக்கவும். மதுமேகம் தீரும். (பா.322, 323)

83. அசுவ கந்தாதிச் சூரணம்

செய்முறை : அமுக்கிரா 2 பலம் (70 கிராம்), திரிகடுகு, அரத்தை, மல்லி, சிறுதேக்கு, வாய்விளங்கம், கருஞ்சீரகம், சீரகம், திரிபலை, தேசாபுரம், ஓமம், செவ்வியம், சித்திரமூலம், கோட்டம், அக்கிராகாரம் இவை வகைக்கு 4 பலம் (140 கிராம்) தாளிச பத்திரி, கிராம்பு, சாதிக்காய், குராசானியோமம், மாஞ்சில் இவை வகைக்கு 4 வராகன் (12.8 கிராம்), வால்மிளகு, ஆனைத் திப்பிலி, சிறுநாகப்பூ, முந்திரிகை, பேரீஞ்சு, இலவங்கப்பட்டை, இலவங்கபத்திரி, விலாமிச்சு இவை வகைக்கு 2 வராகன் (8.4 கிராம்) என எல்லாவற்றையும் இடித்துத் தூளாக்கி அத்துடன் சர்க்கரை 4 பலம் (140 கிராம்) பொடித்துச் சேர்க்கவும்.

அளவு : வெருகடியளவு. இரண்டுவேளை வெந்நீரில்.

தீரும் நோய்கள் : பயித்திய வாய்வு, அக்கினிமந்தம், அரோசிகம், சோம ரோகம், காமாலை, சோகை, பாண்டு, அத்திசுரம், வாய்வு, உட்டிண வாய்வு, குன்மம், காசம், சயம். (பா. 324-327)

84. குண்டலாதி லேகியம்

செய்முறை : சங்கம் வேர் 50 பலம் (1.750 கி.கி.), கண்டங்கத்தரியும் செவ்வியமும் தூதுவளையும் வகைக்கு 25 பலம் (875 கிராம்), சித்திரமூலம், சிறுதேக்கு இவை வகைக்கு 12 பலம் (420 கிராம்), திப்பிலி மூலம் 10 பலம் (350 கிராம்), வில்வம், வாதமடக்கி, ஆதளை, நெருஞ்சில், குமிழம், முள்ளி, பாதிரை, பேராமல்லி, சிற்றாமல்லி இவற்றின் வேர் வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) சேர்த்து இடித்து, 2 நாழி நீர் விட்டு, மூன்றுநாள் எரிக்கவும். எட்டில் ஒன்றாக வற்றியபின்பு வெல்லம் 30 பலம் (1050 கிராம்) கூட்டவும். பாகுபோலக் கொதித்தபின் அதில், சுக்கு 8 பலம் (280 கிராம்), இலவங்கபத்திரி, சிறுநாகப்பூ, சன்னலவங்கப்பட்டை, ஏலம், காயம், ஓமம் இவை வகைக்கு ஒரு பலம் (35 கிராம்), மிளகு, அரத்தை, வாய்விளங்கம், கர்க்கடக சிங்கி, கடுகுரோகிணி, தாளிசபத்திரி இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்) ஒன்றாய்க் கூட்டி இடித்துச்

சீலை வடிசெய்து கொட்டிக் கிண்டவும். பிறகு அதில் தேன் 3 படி (3.9 லிட்.) விட்டுக் கிண்டி வைக்கவும்.

அளவு : நெல்லிக்காயளவு, அந்திசந்தி இரண்டுவேளை.

தீரும்நோய்கள் : பீனசம், சுவாசகாசம், பாண்டு, சருவாங்க வாய்வு, வாதம். உடல்வீக்கம், பித்தம், சிலேற்றுமம், காய்ச்சல், அட்டகுன்மம், அந்தர வாய்வு, மந்தம். *(பா.328–334)*

85. பூசணிக்கிருதம்

செய்முறை : *பூசணிக்காயை விதையில்லாமல் ஒரு துலாம் (3.500) கி.கிராம்)* எடுத்து வேக வைக்கவும். அதில் ஆவின்நெய் ஒருநாழி (1.3 லிட்.) விடவும். மேலே, அதிமதுரம், மாஞ்சில், சுக்கு, தேவதாரம், நாகப்பூ, திப்பிலி, கோட்டம், இந்துப்பு, நிலக்குமிழ், காரை இவை வகைக்கு 3 கழஞ்சு (15.3 கிராம்), கொத்தமல்லி, இலவங்கத்தோல், சீரகம், மிளகு, ஏலம் இவை வகைக்கு 3 பலம் (105 கிராம்) கூட்டியிடித்துச் சேர்க்கவும். தேவையான அளவு தேனும் சேர்த்துக் கிண்டி வைக்கவும்.

தீரும் நோய்கள் : ஈளை, இருமல், அத்திபித்தம், எரிகுன்மம். (பா.335–337)

86. சிரங்குக்கு எண்ணெய்

செய்முறை : வெள்ளைப் பாடாணம் ஒரு பங்கு; கந்தகம் இரண்டு பங்கு; உவாய் விதையை அரைத்த சாந்து எலுமிச்சங்காயளவு, அதே அளவு மெழுகும் கூட்டி, அத்துடன் நல்லெண்ணெய் கலந்து முறைப்படி காய்ச்சி வடிக்கவும்.

இதை உடம்பில் பூசி, இலுப்பைப் பிண்ணாக்கையிட்டு முழுகவும். சிரங்கெல்லாம் தீரும். (பா.338, 339)

87. கருங்கோழி பற்பம்

செய்முறை : பறங்கிப்பட்டை 10 பலம் (350 கிராம்) இடித்துக் கொள்ளவும். அத்துடன், திரிகடுகு, ஓமம், காந்தம், கந்தகம், சாதிலிங்கம், வாய்விளங்கம், சூதம், வெண்காரம், குராசானியோமம், அத்தித் திப்பிலி இவை வகைக்கு 4 வராகன் (16.8 கிராம்), கள்ளிக்கொழுந்து, சாதிக்காய், கிராம்பு, கஞ்சா, கழற்சிப்பருப்பு, அதிவிடையம், சாதிபத்திரி இவை வகைக்கு ½ பலம் (17.5 கிராம்) கூட்டிப் பிரண்டைச் சாறு விட்டரைத்துக் கொள்ளவும். கருங்கோழியின் மயிரும் காலும் குடலும் போக்கி, அதனுள்ளே

வைத்து நூலால் தைக்கவும். முற்றின வேப்பம் பட்டை, உவாய், நொச்சி, கழற்சி, பிரண்டை இவற்றின் சாறுகள் வகைக்கு ஒரு நாழி (1.3 லிட்.) பிழிந்து சேர்த்து, அதில் கோழியைப் போட்டு மூடி, வற்றக் காய்ச்சவும். வெந்தபின் எலும்பு தள்ளி இடித்துக் கொள்ளவும். அதில், தேன், வெந்நீர் விட்டுக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : குன்மம், சூலை, குடல்வாதம், மூலம், வாய்வுத்திரட்சி, வாதசூலை, கண்டமாலை, கடிவிடம், கன்னரோகம், கண்நோய், கழல்வாதம், கிரந்தி, பவுத்திரம், நெஞ்சுநோவு, வாய்ப்புண், நாபிச்சூலை, மேகவெட்டை, விரணம்.

பத்தியம் : உப்பு, புளிப்பு ஆகாது. (பா.340–345)

88. சுக்குக்கரி

செய்முறை : சுக்கு ஒரு பலம் (35 கிராம்) எடுத்துச் சுண்ணாம்புக் கல்லுடன் கலந்து நீர்விட்டு, வெந்து ஆறியபின் கழுவி உலர வைக்கவும். இதை இடித்துத் தூளாக்கி, ஓர் உழக்கு (336 மி.லிட்.) தேன்விட்டுக் காய்ச்சி எடுக்கவும்.

அளவு : கழற்சியளவு உருண்டை, இரண்டு வேளை.

தீரும் நோய்கள் : கிராணி, வாய்வு, அதிசாரங்கள், சூசிகா வாய்வு, சோறு செரியாமை.

(பா.346, 347)

89. வாத ராட்சத தைலம்

செய்முறை : வாதமடக்கி, வெண்ணொச்சி, வேலிப்பருத்தி, முடக்கற்றான் இவற்றின் சாறு வகைக்கு ஒருநாழி (1.3 லிட்.), புளியிலைச்சாறு 4 நாழி (5.2 லிட்.), எருக்கம்பால், வெள்ளாட்டின் பால் வகைக்கு ஓர் உழக்கு (336 மி.லிட்.), நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய் இவை வகைக்கு ஒருநாழி (1.3 லிட்.), திரிகடுகு 1 பலம் (35 கிராம்), வெள்ளுள்ளி 8 பலம் (280 கிராம்) என எல்லாவற்றையும் சேர்த்துக் காய்ச்சி வடிக்கவும்.

இத்தைலத்தை நசியம் பண்ணியும் உள்ளுக்கும் கொள்ளலாம்.

தீரும் நோய்கள் : சூலை, சன்னி, வாதம், கூன், பிறவீச்சு. (பா. 348–350)

90. பயித்தியத்திற்கு நசியம்

செய்முறை : கண்டங்கத்திரிப் பழத்தை எடுத்து, முலைப்பால் விட்டுப் பிசைந்து இறுத்து, மூக்கில் முறைப்படி விடவும்.

தீரும் நோய்கள் : பித்தம் 40, உள்மாந்தம், சோமரோகம், சயரோகம், சன்னி, முகவாதம், தலைநோவு, புத்தி மயக்கம். (பா.351, 352)

91. பித்தத்திற்கு உள்ளுக்கு மருந்து

செய்முறை : வடக்கே போகும் அழிஞ்சிவேரைக் கொண்டு வந்தரைத்து, ஓர் உழக்குப் (366 மி.லிட்.) பசுவின் பாலில் கலந்து கொடுக்கவும். பித்தம் 40, பித்த எரிவு எல்லாம் தீரும். (பா.353)

92. சம்பீரத் தைலம்

செய்முறை : துளசி, மகிழம், புளி, அவுரி இவற்றின் இலைச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நல்லெண்ணெய், காடி இவை வகைக்கு ஒரு நாழி (1.3 லிட்.) எடுத்துச் சேர்க்கவும். திரிகடுகு, திரிபாலை, பச்சிலை, கோட்டம், முத்தக்காசு, இலவங்கத்தோல், அதிமதுரம், இலாமிச்சு, இருவேலி, குங்குமப்பூ, சந்தனம், அகில், அழிஞ்சிவிதை, சாதிக்காய், புழுகுச்சட்டம், கர்ப்பூரம் இவை வகைக்கு ஒரு கழஞ்சு (5.1 கிராம்) எடுத்துச் சங்கம் பழச்சாறு விட்டரைத்துக் கூட்டவும். இதை நன்கு காய்ச்சிப் பதமாக எரித்து இறக்கவும். தலையில் தேய்த்து முழுகவும்.

தீரும் நோய்கள் : தலைநோய், குட்டம், பித்தம், தினவு, மயிர்க்கழிதல், உடல்நாற்றம், புழுக்கடி. (பா.354–357)

93. தூர்வாதித் தைலம்

செய்முறை : துளசி, கற்றாழை, சீந்தில், வெள்ளெருக்கம், அவுரி, அகத்தி, கையாந்தகரை இவற்றின் சாறு வகைக்கு 4 நாழி (5.2 லிட்.), எள்ளெண்ணெய் 1 உரி (672 மி.லிட்.), ஆவின்பால் 1 நாழி (1.3 லிட்.) கூட்டவும். இதில், தேவதாரம், இருவேலி, சந்தனம், நன்னாரி, கிரந்தி, தகரம், அசுவகத்தி, திரிகடுகு, திரிபலை, ஏலம், இலவங்கம், பச்சிலை, நாகப்பூ, கோட்டம், தாமரை வளையம், பெருங்குரும்பை இவை ஓரளவாகக் கூட்டியிடித்துச் சேர்த்துக் காய்ச்சவும். மேலே பூசவும்.

தீரும் நோய்கள் : விடவாதங்கள், கடிவிடம், வசூரி, சிறுசிரங்கு, தினவு. (பா.358–360)

94. புளியிலைக் குழம்பு

செய்முறை : ஆவின்மோர், புளியிலை, காடி இவை வகைக்கு 1 பதக்கு (10.7 லிட்.), வெள்ளுள்ளி, திரிபாலை, வகைக்கு 1 பலம் (35 கிராம்), பழையகிட்டம் 6 பலம் (210 கிராம்) கூட்டி எட்டொன்றாகக் காய்ச்சவும். அதில் வெல்லம் 16 பலம் (560 கிராம்)

கூட்டவும். மேலே, பச்சிலை, கர்க்கடகசிங்கி, ஏலம், திரிகடுகு, திரிபலை, சீரகம், ஓமம், இந்துப்பு இவை வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) கூட்டியிடித்து, ஆவின்நெய், நல்லெண்ணெய் இவை வகைக்கு ஓர் உழக்கு (336 மி.லி.) விட்டுக் குழம்பாய்க் காய்ச்சி வைக்கவும். இரண்டு வேளை கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : வாயிலும் மூக்கிலும் ரத்தம் விழுதல், காமாலை, சோகை, பாண்டு கணம். (பா. 361–364)

95. ஏலாதி லேகியம்

செய்முறை : தூதுவளை, கொடுவேலி, வில்லை, பெருவிளா, சிறுவிளா இவற்றின் வேர்கள் வகைக்கு ஒருபலம் (35 கிராம்) எடுத்துப் பொடித்து அத்துடன், 8 படி நீர் விட்டுக் காய்ச்சவும். ஒருபடியாக வற்றியபின், நெல்லிக்காய்ச்சாறு, இஞ்சிச்சாறு இவை வகைக்கு ஒருநாழி (1.3 லிட்.) சேர்த்து, வெல்லம் 4 பலம் (35 கிராம்), திரிகடுகு, மரமஞ்சள், அரத்தை, ஓமம், வாய்விளங்கம், கொத்தமல்லி, நாகப்பூ, சிறுதேக்கு, திப்பிலிமூலம், செவ்வியம், கருஞ்சீரகம், நற்சீரகம், கடுகுரோகணி, அதிவிடையம், கிராம்பு, கோட்டம், அதிமதுரம், தான்றிக்காய், கடுக்காய், பெருங்காயம், இந்துப்பு, வளையலுப்பு இவை வகைக்கு ¼ பலம் (8.75 கிராம்) கூட்டியிடித்துத் தூளாக்கிச் சேர்க்கவும். அத்துடன் தேன், ஆவின்நெய் வகைக்கு ஒரு நாழிவிட்டுக் கிண்டி இறக்கி வைக்கவும்.

அளவு : கரண்டியளவு, இரண்டுவேளை.

தீரும் நோய்கள் ; பயித்தியம், மயக்கம், வாய்வு, அரோசிகம், அக்கினிமந்தம், விக்கல், சத்தி. (பா.365–368)

96. மூலத்திற்குக் கருங்கோழிச் சூரணம்

செய்முறை : காட்டுக்கருணை, மால்கிழங்கு, பிரண்டைக்கிழங்கு இவை ஓரளவாக யெடுத்துப் பொடித்து அத்துடன், பறங்கிப்பட்டை ஒரு பலம் (35 கிராம்), கொத்தமல்லி, வாய்விளங்கம், குராசானி, கருஞ்சீரகம், பெருங்காயம், சிற்றரத்தை, வசம்பு, கடுகுரோகணி, ஓமம், திப்பிலிமூலம், சுக்கு இவை வகைக்கு ¼ பலம் (8.75 கிராம்), கிராம்பு, சாதிக்காய், கந்தகம், இரதம் இவை வகைக்கு ஒரு வராகன் (4.2 கிராம்) இடித்துத் தூளாக்கிச் சேர்க்கவும். இதைக் கருங்கோழியின் வயிற்றில் வைத்துத் தைத்து, சட்டியில் ஒரு பதக்கு (10.7 லிட்.) நீர்விட்டு அதில் கோழியை வைத்து மூடிச் சீலைமண் செய்து எரியிடவும். எட்டொன்றாய் வற்றியபின்பெடுத்து. எலும்பு தள்ளி இடித்து வைக்கவும்.

அளவு : வெருகடி. ஒரு மண்டலம் (48 நாள்கள்)

தீரும் நோய்கள் : மூலம், முளைமூலம். (பா. 369–373)

97. முயல்நெய்

செய்முறை : முயலின் கால், தலை, குடல்களை எடுத்து விட்டு, அதில் 40 பலம் (1400 கிராம்) நிறுத்தெடுத்து, அதை 24 மரக்கால் (127.2 லிட்.) நீரில் விட்டுக் காய்ச்சவும். நாலிலொன்றாகக் குறுகியபின், ஆவின்பால், நெய், ஆடாதோடைச்சாறு இவை வகைக்கு ஒருபடி (1.3 லிட்.) விடவும். அத்துடன், பெருவாகை, வில்லை, முன்னை, பெருங்குமிழ், பாதிரை, கண்டங்காரி, முள்ளி, தூதுவளை, நெருஞ்சி, சிற்றாமல்லி, பேராமல்லி, சங்கு, அமுக்கிரா, அரத்தை, தேவதாரம், மஞ்சள், மிளகு, திப்பிலி, இவை வகைக்கு மூன்று பலம் (105 கிராம்) நிறுத்தியிடித்துச் சேர்க்கவும். இவற்றை ஒரு தூணி (21.5 லிட்.) நீரிலிட்டுக் காய்ச்சி, நாலிலொன்றாக்கி வடிக்கவும். அத்துடன், பஞ்சமூலம், கடுகுரோகணி, கர்க்கடகசிங்கி, அரத்தை, மிளகு, வாலுளுவை, ஏலம், கோட்டம், ஓமம், கிராம்பு, சீரகம், இந்துப்பு, முந்திரிகை, அத்தித்திப்பிலி, இலவங்கப்பட்டை, சாதிபத்திரி, சிறுதேக்கு, சடாமாஞ்சில் வகைக்கு இரண்டு வராகன் (976 கிராம்) நிறுத்தரைத்துச் சேர்க்கவும். இதை மூன்றுநாள் கொதிக்க வைத்து வடிக்கவும்.

துணை மருந்து : திப்பிலிப்பொடி, சீனி.
அளவு : வராகன் (4.2 கிராம்)
தீரும்நோய்கள் : சிலேட்டும காசம் 96. (பா. 374–379)

98. ஏலாதிச் சூரணம்

செய்முறை : ஏலம், கிராம்பு, சடாமாஞ்சில், சுக்கு, திப்பிலி, முத்தக்காசு, கர்ப்பூரம், கொத்தமல்லி, பேரீஞ்சு, இலவங்கப்பத்திரி, அதிமதுரம், இலாமிச்சு, நெருஞ்சி, வெட்டிவேர், வில்வம், நிலப்பனை, சாரணை, நன்னாரி, சாதிக்காய், சந்தனம், தாமரைவளையம், முந்திரிகை, அமுக்கிரா, சிறுநாகேசுரம், கூகைநீறு, செஞ்சந்தனம், கருவேம்பு, மூக்கரைச் சாரணைவேர் இவை வகைக்கு 2 வராகன் (8.4 கிராம்) நிறுத்திடித்துச் சர்க்கரையும் கூட்டி, ஆவின் நெய்யில் வெருகடி கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : பயித்தியம், சயம், பெரும்பாடு, உடல்மெலிவு. (பா.380–382)

99. தாளி வில்வாதி லேகியம்

செய்முறை : வில்வவேர் 30 பலம் (1050 கிராம்) எடுத்து ஒரு கலம் (64.5 லிட்.) நீரிலிட்டுக் காய்ச்சி, எட்டிலொன்றாக வடிக்கவும். அத்துடன் பனைவெல்லம் சேர்க்கவும். ஒருநாழி (1.3 லிட்.) இஞ்சிச் சாற்றுடன் கொம்மட்டி, மாதுளங்காய் இவை வகைக்கு நான்கு உரைத்துக் கூட்டவும். மேலும், சுக்கு மூன்று பலம் (105 கிராம்) மிளகு 4 பலம் (140 கிராம்), திப்பிலி, திப்பிலிமூலம் 2 பலம் (70 கிராம்), செவ்வியம், சித்திரமூலம், தாளிசபத்திரி, நாகேசுரம் இவை வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) சேர்த்திடித்துக் கூட்டவும். அத்துடன் தேன் அரைப்படி விட்டுக் கிண்டவும். இதைப் பத்துநாள் தானியபுடம் வைத்தெடுக்கவும். புன்னைக் காயளவு கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : அக்கினிமாந்தம், குன்மம், அரோசிகம், வாந்தி, பித்தம், விக்கல், வாய்வு, காமாலை, சோகை, மூலவாய்வு, பித்த பாண்டு. (பா.383–387)

100. ஏலாதிச் சூரணம்

செய்முறை : கோட்டம், சடாமஞ்சில், ஏலம், குக்கில், திப்பிலி, முத்தக்காசு, அதிமதுரம், இலவங்கம், பேரீஞ்சு, முந்திரிகை, சாரணை, நெருஞ்சி வேர், நிலப்பனை, சீந்திற் சர்க்கரை, சந்தனம், இருநாகப்பூ, இருசீரகம், வகைக்கு துட்டு நிறை எடுத்து, சர்க்கரை சமஅளவு கலந்து, பொடித்து வைக்கவும்.

துணை மருந்து : ஆவின் நெய்.

அளவு : ஒரு மண்டலம் (48 நாள்கள்).

தீரும்நோய்கள் : பித்தம் 40, பித்த அரோசிகம், பாண்டு. அத்திசுரம், சயம், காமாலை, மூலவாய்வு, குன்மம் 8, மூத்திரகிரிச்சரம், ஆமலகம், பிரமேகம் 21, உட்டிண வாய்வு, வாந்தி இவை தீரும். (பா.388–390)

101. கண்டாத்திரி லேகியம்

செய்முறை : இஞ்சியின் மேற்தோல் சீவி 10 பலம் (350 கிராம்) எடுத்துக்கொண்டு ஆவின் நெய்யில் வறுத்துக் கொள்ளவும். திரிகடுகு வகைக்கு ஒரு பலம் (35 கிராம்), ஏலம், சீரகம், தாளிசபத்திரி, கொத்தமல்லி, தேசாபுரம், அரத்தை, நாகேசுரம், கடுக்காய், இலவங்கபத்திரி, நெல்லி, நெற்பொரி, பேரீஞ்சு, முந்திரிகை, இலாமிச்சு, பருத்திவிதை இவை வகைக்கு அரைப்பலம் (17.5 கிராம்) கூட்டி இடிக்கவும். மேலும், சாதிபத்திரி, கிராம்பு, சாதிக்காய், வகைக்கு 3 வராகன் (12.6 கிராம்), சம அளவு சர்க்கரையும், அரைப்படி (672 மி.லிட்.) நெய்யும், காற்படி (336 மி.லிட்.) தேனும் கூட்டி லேகியமாகச் செய்யவும்.

அளவு : சிறுபுன்னைக் காயளவு, இரண்டு வேளை.

தீரும் நோய்கள் : பயித்திய வாய்வு, குன்மம், வாய்வு, வாய் உலர்தல, மந்தம், உட்டணம், சூசிகா வாய்வு, காசம், சுரம், மூலவாய்வு, கிராணி, பித்தம், பாண்டு, காமாலை, சோகை, உளுவை, கெண்டை, மகோதரம், விக்கல், வாந்தி. (பா.391–395)

102. அரையாப்புக்கு எண்ணெய்

செய்முறை : கொடுவேலி, மாவிலங்கு, வேளைவேர் இவை எலுமிச்சங்காயளவு அரைத்தெடுத்து, இவற்றின்சாறு அரைப்படியும் நல்லெண்ணெய் அரைப்படியும் கூடவிட்டு நன்கு அரைக்கவும். மிளகு, வசம்பு, வெள்ளுள்ளி வகைக்கு 5 வராகன் (21 கிராம்) பச்சிலைச்சாறு விட்டரைத்து எரிக்கவும். மெழுகு பதமானதும் வடிகலசத்தில் வடித்தெடுக்கவும்.

அளவு : கரண்டியளவு. இரண்டுவேளை, மூன்று நாள் கொடுக்கவும். உப்பு வறுத்துக் கூட்டவும். (பா.396–398)

103. வயிற்றுக் கடுப்புக்கு

செய்முறை : சாதிக்காய், அபினி ஓரளவாயெடுத்து நல்லெண்ணெய் துளி விட்டுப் பதமாக நன்கு அரைத்துப் பனைவெல்லம் கூட்டி மூன்று நாள் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : இரத்த சீதம், கிராணி, உள்மூலம், அதிசாரம், வயிற்றுளைவு, நீர்க்கடுப்பு, சுரம்.
(பா. 399, 400)

104. நீரிழிவுக்கு உடும்பு நெய்

செய்முறை : ஆவின்நெய், காரெள்ளெண்ணெய், அப்பைக் கிழங்குச்சாறு, ஆத்திச் சாறு, நீர்வள்ளிச் சாறு, வீழிச்சாறு, கடலிறாஞ்சில் பட்டைச்சாறு, ஆவாரைப் பட்டைச்சாறு இவை வகைக்கு ஓர் உரி (672 மி.லிட்.) பருத்திப்பால் ஓர் உழக்கு (336 மி.லிட்.) பூனைக்காலி, அமுக்கிரா, நெருஞ்சி, சிறுபூளை, நிலப்பனை, ஆவரை, மஞ்சட்கிழங்கு, அதிமதுரம், சண்பகப்பூ, சாதிக்காய், ஏலம், சாதிபத்திரி, கோட்டம், கிராம்பு, களிப்பாக்கு, கல்மதம், அபினி இவை வகைக்கு ஒருகழஞ்சு (5.1 கிராம்) எடுத்துச் சேர்க்கவும். நல்ல உடும்பு ஒன்றுரித்துப் போட்டு நன்கு கொதிக்க வைக்கவும். முறைப்படி காய்ச்சி வடித்துப் பதப்படுத்தவும்.

அளவு : அந்திசந்தி இரண்டுவேளை, 20 நாள்கள்.
தீரும்நோய்கள் : பிரமேகம் 21, நீரிழிவு 21. (பா.401–404)

105. கிரந்திக்குக் கசாயம்

செய்முறை : பறங்கிப்பட்டை, செங்கத்தாரி, சித்திரமூலம், சிவனார் வேம்பு, சங்கங்குப்பி, சங்கன், பிரப்பம், அமுக்கிரா, நிலவாகை இவற்றின் வேர்கள் வகைக்கு 5 பலம் (175 கிராம்) எடுத்திடித்துத் தூளாக்கவும். கருஞ்சீரகம், அடவிச் சீரகம் வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) இடித்துச் சேர்த்து ஒருநாழி (1.3 லிட்.) நீரிலிட்டு ஆழாக்காகக் காய்ச்சவும்.

அளவு : இரண்டு வேளை. ஒரு மண்டலம் (48 நாள்கள்)
தீரும் நோய்கள் : கிரந்தி, சூலை, வண்டுகடி, குட்டம், வாதம். (பா.405–407)

106. அருளாதி லேகியம்

செய்முறை : ஆல், அரசு, வில்வம், அத்தி, மாதுளை, நெல்லி, வேம்பு, மா, நாவல், இச்சி இவற்றின் வேர்கள் வகைக்கு 10 பலம் (350 கிராம்) இடித்து, இவற்றின்

தழைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிடி போட்டு குளிர்ந்த நீர் ஒரு பதக்கு (10.7 லிட்.) விடவும். இவற்றின் சம அளவு இலாமிச்சு வேரும் கூட்டிக் காய்ச்சவும். எட்டிலொன்றாக வற்றியபின் சர்க்கரை 1 ¼ பலம் (43.75 கிராம்) போட்டுக் காய்ச்சவும். அத்துடன், திப்பிலி, சுக்கு, மிளகு, ஓமம், சீரகம், சிறுநாகப்பூ, ஏலம், இலவங்கம், கிராம்பு, சாதிக்காய், முத்தக்காசு, அதிவிடையம், சாதிபத்திரி, வாய்விளங்கம், இலவங்கபத்திரி, தாளிச பத்திரி, நாகப்பூ, கொத்தமல்லி, வால்மிளகு, கூகை நீறு, குராசாணியோமம், கருஞ்சீரகம் இவை வகைக்கு ½ பலம் (17.5 கிராம்) எடுத்து, இடித்துச் சேர்க்கவும். அத்துடன் தேன் ஓர்உரி (672 மி.லிட்.) சேர்த்துக் கிண்டி வைக்கவும்.

அளவு : இரண்டு வேளை. புன்னைக் காயளவு.

தீரும்நோய்கள் : வாய்வு, மந்தம், வயிற்றில் எரிவு, மூலம், கடுப்புளைவு, பித்தம், சீதரத்தம், வயிற்றுளைவு, பாண்டு, சோகை, குன்மம், பயித்திய வாய்வு, மேக வெட்டை.

(பா. 408–413)

107. இலகு வில்வாதி லேகியம்

செய்முறை : வில்வவேர்ப் பட்டை 30 பலம் (1050 கிராம்) எடுத்திடித்து, ஒரு தூணி (21.5 லிட்.) நீரிலிட்டு, எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சவும். பனைவெல்லம் 30 பலம் சேர்க்கவும். இத்துடன் சுக்கு, திப்பிலிமூலம், செவ்வியம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, சீரகம், ஓமம் இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்), மிளகு 4 பலம் (140 கிராம்), தாளிசபத்திரி ¼ பலம் (8.75 கிராம்) சேர்த்திடித்துக் கொட்டிக் கிண்டவும். தேன் ஒரு நாழி (1.3 லிட்) விட்டுக் கிளறி வைக்கவும்.

தீரும் நோய்கள் : குன்மம், வாய்வு, வாந்தி, பிராந்தி, அசீரணம், உட்டிண வாய்வு, உட்காய்ச்சல், காமாலை, பாண்டு, சோகை விடவாதம், பயித்தியம், இருமல், விக்கல், மூலவாய்வு, கழிச்சல், நீர்ப்பாடு, இரைச்சல், வயிறுபொருமல், கைகால் எரிவு, சொறி, கிறை மயக்கம், அகுவை, வெப்புப் பாவை, அக்கினி மந்தம், எரிகுன்மம். (பா.414–419)

108. காது நோவுக்கு

செய்முறை:1 உள்ளி, முருங்கைவேர், முத்தெருக்கிலை, உப்பு, கள்ளிப்பால் இவை ஓரளவாக நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி வடித்து காதிலிடவும் தீரும்.

செய்முறை2 : நல்லெண்ணெயில் ஆயிலப்பட்டை, சாதிக்காய் அரைத்து விட்டுக் காய்ச்சவும். மெழுகு பதமானபின் இறக்கி ஆறியபின் விடவம் தீரும். மண்டைக் கரப்பனும் தீரும்.

(பா.420, 421)

109. சுரமக்கினி மாத்திரை

செய்முறை : சூதம் 4 பங்கு, கந்தகம் 8 பங்கு, காந்தம் 16 பங்கு, உலோகம் 32 பங்கு என இவற்றை எடுத்துச் சேர்த்து குமரிச்சாறு விட்டரைத்து உருட்டி உலர்த்தி எடுக்கவும்.

அளவு : ஒரு பணவெடை (488 மி.கி.) இஞ்சிச் சாற்றில்

தீரும் நோய்கள் : காமாலை, பாண்டு, சூலை, அண்டவாதம், விரைவாதம், அலற்றும் சன்னி. (பா.422, 423)

110. அரக்கெண்ணெய்த் தைலம்

செய்முறை : (பாடலடிகள் விடுபட்டுள்ளன. காண்க.)

தீரும் நோய்கள் : உட்காய்ச்சல், மாறல் காய்ச்சல், குளிர்க்காய்ச்சல். பிரமேகம், குட்டம், நெஞ்சிருமல், சயகாசம், ஈளை. (பா. 424–426)

111. கலிங்காதி தைலம்

செய்முறை : பேய்க் கொம்மட்டிக் காய்ச்சாறு, எலுமிச்சம் பழசசாறு, கருநொச்சியிலைச் சாறு, வெள்ளுள்ளிச் சாறு, இஞ்சிச்சாறு இவை வகைக்கு ஒரு நாழி (1.3 லிட்.) கூட்டிக் காய்ச்சவும். ஒரு நாழியாக வற்றியபின் அத்துடன், சாதிலிங்கம், சூதம், பெருங்காயம், வெண்காரம், சோற்றுப்பு, கடுகு, ஓமம், வெந்தயம், சுக்கு, நேர்வாளம், காந்தம் இவை வகைக்கு மூன்று கழஞ்சு (12.6 கிராம்) கூட்டிக் காய்ச்சி லேகிய பதமானதும் இறக்கவும். பழம்புளி போலான இதைத் தூதுவிளங்காய்ப் போல் உருட்டிக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : குன்மம் 8, வாய்வு, உதிரத்தில் உட்தோடம். (பா. 427, 428)

112. கலிங்காதி எண்ணெய்

செய்முறை : பேய்க் கொம்மட்டிக் காயை வேண்டிய அளவு எடுத்து உடைத்த ஒரு பதக்கு (10.7 லிட்.) நீரிலிட்டு, எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சவும். அத்துடன், தேசாபுரம், கடுகுரோகணி, இந்துப்பு, திரிகடுகு, வகைக்கு இரண்டு வராகன் (8.4 கிராம்), கடுக்காய் ஒரு பலம் (35 கிராம்) பொடித்துச் சேர்க்கவும். விளக்கெண்ணெய் 2 நாழி (2.6 லிட்.) விட்டு, மெழுகு பதமாக வடித்திறக்கவும்.

அளவு : ஆழாக்கெண்ணெய் கொள்ளவும்.

தீரும்நோய்கள் : விடவாதம், கெண்டை, கிளிசு, அகுவை, வெப்புப்பாவை, குன்மம் 8, மகோதரம், நீராமை, வயிற்றில் கட்டி, நெஞ்சு நோக்காடு, சீதக்கட்டு, சிலேட்டுமம்.

பத்தியம் : மிளகுநீர், ஆவின்பால், மோர் ஆகும். (பா. 429–432)

113. தேற்றான் நெய்

செய்முறை : சீனி ஓர் உழக்கு (336 மி.லிட்.) , ஆவின் நெய் ஒரு நாழி (1.3 லிட்.) தேற்றான் வேர்த்தோல் ஒரு நாழி (1.3 லிட்.), சிறுகீரை வேர் ஒரு பிடி, பேய்ப்புடல், பற்பாடகம் இவை ஓரளவாக எடுத்துக் காய்ச்சி வடிக்கவும்.

தீரும் நோய்கள் : சயம், ஈளை, மந்தாரகாசம். (பா. 433)

114. வியாதி கிருதம்

செய்முறை : சேங்கொட்டை, பனைவெல்லம், எள் இவை ஓரளவாக இடித்து, ஒரு பழகிய கலசத்திட்டு வைக்கவும்.

அளவு : புன்னைக்காயளவு. 40 நாள்.
தீரும் நோய்கள் : குட்டம், கிரந்திப்புண், சொறி, சிரங்கு, வாத சூலை, வண்டுகடி, மூலம், குன்மம், வாய்வு, அடிவயிற்றில் திரண்ட வாய்வு. (பா.434, 435)

115. விடவாத எண்ணெய்

செய்முறை : வாதமடக்கி, முடக்கற்றான், ஆதொண்டை, நீர்முள்ளி, சங்கங்குப்பி, கொட்டைக் கரந்தை, துளசி, நொச்சி, கோழியவரை, மூக்கரைச் சாரணை, கரிப்பான், கருஞ்சூரை இவற்றின் சாறு வகைக்கு ஓர் உழக்கு (336 மி.லிட்.), விளக்கெண்ணெய் ஒரு நாழி (1.3 லிட்.) சிற்றகத்திச் சாறு ஒரு நாழி கூட்டி எரிக்கவும். அத்துடன், திரிகடுகு, கோட்டம், கத்தூரி மஞ்சள், வேம்பு, செங்கத்தாரி, சென்னகரப்பட்டை, வசம்பு, சாதிக்காய், வெள்ளுள்ளி, கடுக்காய், தானிக்காய், சிவதை, கருஞ்சீரகம், வகைக்கு ஒரு கழஞ்சு (5.1 கிராம்) கூட்டி அத்துடன், நேர்வாளம் விதை இருபதும் வைத்து அரைக்கவும். ஈருள்ளி இரண்டு பலம் (70 கிராம்) கூட்டிக் கொதியிடவும். மெழுகு பதமானதும் இறக்கி வைக்கவும்.

அளவு : இரண்டு காசெடை (330 மி.கி.)
தீரும் நோய்கள் : சூலை, கிரந்தி, சொறிசிரங்கு, கரப்பன், விடபாகம், வாய்வு, கெண்டை, கட்டி, மூலவாய்வு.
பத்தியம் : முள்ளி, அறைக்கீரை, உள்ளி, பருப்பு கூட்டவும். (பா.436–441)

116. பெரும்பாடு, வெள்ளை சாய்கிறதுக்கு

செய்முறை:1 சந்தனம், ஏலம், கோட்டம், சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, கிராம்பு, ஆவிரை, சீரகம், அதிமதுரம், கலையின் கொம்பு இவை ஓரளவாக எடுத்துப் பொடித்து, ஆவின் வெண்ணெயில் கலந்து கொடுக்கவும். இதை வெந்நீரில் மூன்று நாள் கொடுக்கவும். சீயும் ரத்தமும் அடைபடும். உட்டணம், பிறமேகம் தீரும்.

செய்முறை:2 மூங்கிலிலை, நீர்ப்பலாயிலை எடுத்து, தூதுவிளங்காயளவு அரைத்து, எருமைத் தயிரில் கூட்டி, சர்க்கரையும் கலந்து எலுமிச்சங்காயளவு மூன்று நாளும் கொள்ளவும்.

செய்முறை:3 வெற்றிலையை அரைத்து, எலுமிச்சங்காயளவு எடுத்து ஆழாக்கு முலைப்பாலில் கலந்து மூன்றுநாள் குடிக்கவும். சீயும் ரத்தக்கட்டியும் உடனே நிற்கும். (பா.442–445)

117. விப்புருதிக்கு

செய்முறை : மிளகு, ஓமம், வெல்லம் வகைக்கு ஒரு வராகன் (4.2 கிராம்) எடுத்து அரைத்து, மூன்று கோழி முட்டையில் கலந்து கொள்ளவும்.

தீரும் நோய்கள் : வாய்வுக்கனம், விப்புருதி, வயிற்று உப்பிசம். வயிற்று வலி (பா. 446)

118. வாதத்திற்குச் சூரணம்

செய்முறை : சித்திரமூலம், மிளகரணை, வெண்ணொச்சி இவை ஓரளவாகயெடுத்து வத்திரகாயம் செய்து, வராகனெடை (4.2 கிராம்) குளிர்ந்த நீரில் கொள்ளவும். வாதம் எண்பதும் தீரும். (பா.447)

119. சுரத்திற்கு

செய்முறை : துளசியை வேண்டிய அளவு இடித்து வைத்து அத்துடன், சுக்கு, திப்பிலி, ஓமம், மிளகு, வெள்ளுள்ளி இவையும் சேர்த்துத் துணியில் முடிந்து வைக்கவும். பழகிய பாண்டத்தில் நீரை ஊற்றிச் சீலை கட்டி அதன்மீது இதை வைத்து மேலே மூடி எரிக்கவும். நன்கு வெந்ததும் இறக்கிக் கெட்டியாக அரைத்தெடுக்கவும்.

தீரும்நோய்கள் : அத்திசுரம், குளிர்சுரம், வாதபித்த சிலேட்டும சுரம். (பா,448, 449)

120. நேத்திர வாய்வுக்கு

செய்முறை : துத்தம், சீனக்காரம் இவற்றை நன்கு சுட்டெடுத்து, களிம்புள்ள வெண்கல வட்டிலில் வைத்து, ஆவின் வெண்ணெய் விட்டு. செங்கற்பொடியும் கூட்டவும். சீரகம் பொடித்துச் சேர்க்கவும். இதைத் காவிச் செம்பினால் இரண்டு சாமம் நன்கு அரைத்து எடுத்துச் செம்புச் சிமிழில் வைக்கவும்.

அளவு : எள்ளளவு இடவும்.

தீரும் கண் நோய்கள் : கண்ணோவு, அமரம், சூடு, புழுவெட்டு, கண்பூ, வெண்ணோவு, நேத்திரவாய்வு, அக்கரம், பில்லம், மன்னார்கோடம், தினவு, புகைச்சல், குந்தம். (பா.450–452)

121. மூலக்கடுப்புக்கு

செய்முறை: ஆவரையின் சாறு, ஆவின்மோர் இவை வகைக்கு ஓர் உழக்கு (336 மி.லிட்.) சேர்த்துக் காய்ச்சியெடுத்து மூன்று நாள் கொள்ளவும். வயிற்றுளைவு, உள்மூலம், சீதரத்தம் தீரும். (பா.453)

122. இஞ்சிக் குழம்பு

செய்முறை : இஞ்சிச்சாறு ஒருபடி (1.3 லிட்.), கொம்மட்டிக் காய்ச்சாறு, மாதுளங்காய் அல்லது நாரத்தம் பழச்சாறு வகைக்கு ஒரு உழக்கு (336 மி.லிட்.) சேர்த்து அத்துடன், பனைவெல்லம் 10பலம் (350 கிராம்) கூட்டிக் காய்ச்சவும். மேலும், இலவங்கப்பட்டை, ஏலம், வெட்பாலரிசி, திரிகடுகு, திரிபாலை, இலவங்கபத்திரி, சித்திரமூலம், வாய்விளங்கம், கருஞ்சீரகம் இவை வகைக்கு ¼ பலம் (8.75 கிராம்) கூட்டியிடித்துச் சேர்க்கவும். தேன் ஓர் உழக்கு (336 மி.லிட்.) விட்டுக் கிண்டி வைக்கவும்.

அளவு : புன்னைக் காயளவு, இரண்டு வேளை.

தீரும் நோய்கள் : சோபம், சூலை, சுவாசகாசம், பயித்தியம், விக்கல், சத்தி, குன்மம், வாய்வு. (பா.454–457)

123. குக்குடாதித் தைலம்

செய்முறை : வேப்பம் முத்து, முசுறுமுட்டை, மிளகு, திப்பிலி, வசம்பு, சுக்கு, நாங்குள்பாம்பு, பற்படாகம், சந்தனம், கோட்டம், மஞ்சள், கிலுகிலுப்பை, நன்னாரி, இந்துப்பு இவை வகைக்கு 12 வராகன் (50.4 கிராம்) எடுத்து, ஆடாதோடைச்சாறு விட்டரைத்து, நல்லெண்ணெய் 4 நாழி (5.2 லிட்.) சேர்த்துக் காய்ச்சி வடிக்கவும். காசளவு கொள்ளவும்.

தீரும் நோய்கள் : சன்னி. (பா. 458, 459)

124. கந்திக் குழம்பு

செய்முறை : சங்கிலைச் சாறு ஒரு உரி (672 மி.லிட்.) எடுத்து அதில் கந்தகம் 6 வராகன்(25.2 கிராம்) பொடித்துப் போட்டு, வெல்லம் ஒரு பலம் (35 கிராம்) கூட்டி, பீங்கானில் போட்டு வெயிலில் வைத்து, மெழுகு பதமானதும் எடுத்து வைக்கவும்.

அளவு : பணவெடை (488 மி.கி.) வெற்றிலையில் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : மேகவாய்வு, சூலை, பாரிச வாய்வு, அற்புத வாதம். (பா. 460, 461)

125. பிள்ளைகளின் விடாக்கழிச்சலுக்கு

செய்முறை : சாதிக்காய், அதிவிடையம், சாதிபத்திரி, அபினி இவை ஓரளவாகக் கூட்டி நல்லெண்ணெயில் பொரித்துப் பொடித்தெடுக்கவும். இதில் பணவெடை (488 மி.கி.) முலைப்பாலில் கொடுக்கவும். கழிச்சல் நிற்கும். (பா.462)

126. விடப்பருவத் தைலம்

செய்முறை : இரதம், கந்தகம், வெண்காரம், நாபி, மனோசிலை, இலிங்கம், தாளகம், கர்க்கடகசிங்கி, திரிகடுகு இவை வகைக்கு ஒரு வராகன் (4.2 கிராம்) எடுத்து, எலுமிச்சம் பழச்சாற்றிலும் காடியிலும் அரைக்கவும். இதைச் சீலையில் தடவி நிழலில் உலர்த்தியெடுத்துத் திரியாக்கி வேப்பெண்ணெய் விட்டெரித்து, அண்டத் தைலங்கலந்து கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : சன்னி 17, சுரசன்னி, வாதம் 80, வலிப்பு, பிறவீச்சு, கடுப்பு, குத்து. (பா.463–465)

127. குறுப்புத் தள்ளினதுக்கு

செய்முறை : வெந்தயம் ஒரு பலம் (35 கிராம்) எடுத்து விளக்கெண்ணெயும் நிலக்குமிழ வேர்ப்பட்டையும் அரைத்துக் கூட்டி எரிக்கவும். நன்கு வெந்தபின் இறக்கிக் கொள்ளவும். மூலக்கடுப்பு தீரும். (பா. 466)

128. சருவசுரக் கசாயம்

செய்முறை : தாமரை வளையம், கோட்டம், முத்தக்காசு, காஞ்சொறி வேர், சிறுதேக்கு, திப்பிலிமூலம், நிலவேம்பு, கருஞ்சீரகம், கடுகுரோகணி, பற்படாகம், ஆடாதோடை இவை ஓரளவாகயெடுத்து இடித்து, 4 நாழி (5.2 லிட்.) நீரிலிட்டுக் காய்ச்சவும் எட்டிலொன்றாக வற்றி வடிக்கவும்.

தீரும் நோய்கள் : வாத, பித்த, சிலேற்றும சுரங்கள். (பா. 467, 468)

129. பித்த வலிக்கு

செய்முறை : திப்பிலியை வறுத்துப் பொடி செய்து சர்க்கரையும் கூட்டி, வெருகடியளவு, மிளகுச்சாறு அல்லது மணத்தக்காளிச் சாற்றில் ஏழு நாள் கொள்ளவும்.

தீரும் நோய்கள் : சிலேற்றுமத்தால் இருமல், வாய் மூக்கில் இரத்த பித்தம் ரத்தகாசம், தலைநோய். (பா. 469–470)

130. பீனிசத்திற்குப் புகை

செய்முறை : பெருங்காயம், மிளகு, நொச்சி, சந்தனம், இவை ஓரளவாகயெடுத்து நீரிலிட்டு அரைத்து வழித்துச் சீலையில் தடவிக் காய வைக்கவும். இதைத் திரியாக்கிக் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்கவும்.

தீரும் நோய்கள் : பித்தவலி, சன்னி, பிறவலி, மண்டைக்குத்து, பீனிசம், மயக்கம். (பா. 471, 472)

131. அசீரணத்திற்கு

செய்முறை : வெற்றிலை பத்தெடுத்துச் சட்டியில் போட்டு வறுத்து, ஒருபடி நீர்விட்டு ஆழாக்காக வற்றக் காய்ச்சிக் கொள்ளவும்.

தீரும் நோய்கள் : அசீரணம், சன்னி, சயித்தியம், வாந்தி, பிராந்தி, வயிற்றில் நோவு, சீதம், கடுப்பு, தாகம். (பா. 473, 474)

132. மந்தார காசத்திற்கு

செய்முறை : வேலிப் பருத்திச் சாற்றில் வெள்ளுள்ளி உரித்துப் போட்டுக் கொதிக்க வைக்கவும். பதத்தில் வெந்து இறக்கி நாற்பதுநாள் கொள்ளவும்.

தீரும் நோய்கள் : மந்தாரகாசம், சன்னி, பிறவலிப்பு, வாதவாய்வு, குன்மம் 8 (பா.475, 476)

133. பித்த வாய்வுக்குச் சந்தனாதிச் சூரணம்

செய்முறை : சந்தனம், அதிமதுரம், முத்தக்காசு, பூலாங்கிழங்கு, முந்திரிகை பேரீந்து, விலாமிச்சு, நெல்லிமுள்ளி, கோட்டம், செங்கழுநீர் இவை வகைக்கு அரைப்பலம் (17.5 கிராம்) கூட்டியிடித்து, அத்துடன் சர்க்கரையும் கூட்டிப் பொடி செய்யவும். வெருகடியளவு கழுநீரில் கொள்ளவும்.

தீரும் நோய்கள் : பித்தம், பிரமேகம், கிறுகிறுப்பு, குலையெரிவு, காலெரிவு. (பா. 477, 478)

134. கிரந்தி, சூலை, அரையாப்புக்கு

செய்முறை : பெருமரப்பட்டையை அரைத்து எலுமிச்சங்காயளவு வெந்நீரில் மூன்று நாள் கொள்ளவும். ஆவின் பாலும் சோறும் கொள்ளவும்.

தீரும் நோய்கள் : கிரந்தி, சூலை, சிரங்கு, வாதம், கடிவிடம், அரையாப்பு, மேகம். (பா. 479, 480)

135. இரத்த பிரமியத்திற்கு

செய்முறை : ஆவின்மோர் அரைப்படி எடுத்து, அதில் சங்கிலையை அரைத்து வடிகட்டிக் கொள்ளவும். விடியற்காலையில் மூன்று நாள் குடிக்கவும். உப்பில்லாப் பத்தியம்.

தீரும் நோய்கள் : மேகவெட்டை, இரத்தப் பிரமியம், பெரும்பாடு. (பா.481, 482)

136. மஞ்சள் காமாலைக்கு

செய்முறை : எருமை மோர் ஒரு குறுணி (5.3 லிட்.) எடுத்து அதில் எலுமிச்சம் பழம் பிழிந்து, அதில் கிட்டத்தை இடித்துப் போட்டு பூமியில் புடம் வைத்தெடுக்கவும். இதை மூன்றுநாள் கொடுக்கவும். உப்பில்லாப் பத்தியம் இருக்கவும். குப்பை மேனிச் சாற்றைத் தலையில் தேய்த்துக் குளிர்ந்த நீரில் குளிக்கவும். மஞ்சட்காமாலை தீரும். பித்தம், சோகை, பாண்டு, குவளை, விப்புருதி, ஈளை இவையும் தீரும். (பா.483–485)

137. தேற்றாம் பழச்சீலை

செய்முறை : தேற்றாம் பழத்தைப் பிசைந்திறுத்துச் சீலையில் தடவி உலர்த்தி வைக்கவும். இதை நீரில் கலந்து கொடுக்கவும்.

***தீரும் நோய்கள்** : வாந்தி, பிராந்தி, மந்தாரம், காசம், இருமல், பித்தம், எரிகுன்மம்.* (பா. 486)

138. பீனிசத்திற்கு எண்ணெய்

செய்முறை:1 எருக்கம்பூச்சாறு ஒரு நாழி (1.3 லிட்.), எள்ளெண்ணெய் 4 படி (5.2 லிட்.), வெள்ளுள்ளி 20 பலம் (700 கிராம்), வசம்பு 10 பலம் (350 கிராம்) என இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி வடிக்கவும்.

தீரும் நோய்கள் : வாதம், வாய்வு, சன்னி, சூலை, தலைநோவு, உடம்புகுத்து.

(பா.487, 488)

செய்முறை:2 வெள்ளைச் சாரணை, குப்பைமேனி இவற்றின் சாறு வகைக்கு ஒரு உரி (672 மி.லிட்.), வெள்ளுள்ளி 8 பலம் (280 கிராம்), நல்லெண்ணெய் 2 நாழி (2.6 லிட்.) கூட்டிக் காய்ச்சவும். பதமாக வடித்திறக்கி முழுகவும்.

தீரும் நோய்கள் : மூக்கில் நீர் விழுதல், இரத்த பீனிசம், நேத்திர வாய்வு, சன்னி. (பா.489–491)

139. வயிற்றுக் கடுப்புக்கு

செய்முறை : வறுத்த புளியங்கொட்டைத் தோலைப் பொடி செய்து அதே அளவு பனைவெல்லம் கலந்து அரைக்கவும். இதில் வெருகடியளவு வெந்நீரில் கொடுக்கவும். சீதரத்தம் தீரும். (பா. 492)

140. அசீரணத்திற்கு

செய்முறை : வேப்பிலையை இடித்துப் பிழிந்து அத்துடன் ஒரு பிடி உப்பையிட்டு, இரண்டுபடி நீர்விட்டு, எட்டொன்றாகக் காய்ச்சி வடித்துக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : அசீரணம், சன்னிவாதம், மந்தம், விகுளி. (பா.493, 494)

141. கடுப்பு மூலத்திற்கு

செய்முறை:1 மிளகைச் சட்டியிலிட்டு வறுத்து, நீர்விட்டு எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சிக் கொள்ளவும்.

தீரும் நோய்கள் : மந்தம், அசீரணம், மூலம், கடுப்பு. (பா.495)

செய்முறை:2 புளியங்கொழுந்தை நன்கு அரைத்து எருமைத் தயிரில் புன்னைக் காயளவு உட்கொள்ளவும். சத்தக்கடுப்பு, மூலக்கடுப்பு, சீதரத்தம் தீரும். (பா. 496)

142. கர்ப்பூர வள்ளித் தைலம்

செய்முறை : கர்ப்பூரவள்ளி, கொழிஞ்சி, முசுமுசுக்கை, கஞ்சாங்கோரை இவற்றின் இலைச்சாறு வகைக்கு ஓர் உழக்கு (336 மி.லி.), நல்லெண்ணெயில் கலந்து அத்துடன், ஏலம், இலவங்கப்பட்டை, தேவதாரம், விலாமிச்சு, இருவேலி, சண்பகப்பூ, சாதிக்காய், வாய்விளங்கம், ஓமம், கொத்தமல்லி இவை வகைக்கு ஒரு கழஞ்சு (5.1 கிராம்) சேர்த்துக் காய்ச்சவும். இதைத் தலையில் தேய்த்து முழுகவும்.

தீரும் நோய்கள் : பித்தம். பீனிசம், பிரமேகம் 21. (பா.497-499)

143. மூலத்திற்கு

செய்முறை : கருணைக் கிழங்கைக் கரித்துணியிலே சுற்றி எருமைச் சாணிக்குள்ளே பொதிந்து சுடவும். கருகாமல் வெந்தெடுத்து இஞ்சிச் சாற்றிலிட்டு அரைத்தெடுக்கவும். அத்துடன் ஓமம் ½ பலம் (17.5 கிராம்), பனைவெல்லம் 1 பலம் (35 கிராம்) போட்டுக் காய்ச்சி லேகியமாக எடுக்கவும். கழற்சிக் காயளவு கொள்ளவும். மூலம் தீரும். (பா.500, 501)

144. அண்டவாதத்திற்கு

செய்முறை : வெள்ளுள்ளி 4 பலம் (140 கிராம்), பனைவெல்லம் இரண்டு பலம் (70 கிராம்), பெருங்காயம் ½ வராகன் (2.1 கிராம்) இவற்றுடன் கழற்சிக்காயும் உடைத்துப் போட்டு அரைத்துக் கொள்ளவும். இரண்டு வேளை ஏழுநாள் கொள்ளவும். அண்ட வாதமும் அந்தர வாய்வும் தீரும். (பா502, 503)

145. வண்டு கடிக்கு

செய்முறை : பூமதாளப் பட்டையை அரைத்து, எலுமிச்சங்காயளவு இளவெந்நீரில் ஏழுநாள் கொடுக்கவும். வண்டுகடி, கிரந்தி, காணாக்கடி தீரும். உப்பு, புளி நீக்கவும். (பா. 504)

146. அதிசார சுரத்திற்குக் கசாயம்

செய்முறை : முத்தக்காசு, வில்லைவேர், வட்டத்திருப்பி, சுக்கு, வெட்பாலரிசி, திப்பிலி, அதிவிடையம் இவை ஓரளவாக நீரிலிட்டுக் காய்ச்சி வடிக்கவும். (பா.505)

147. சன்னி வாதத்திற்கு எண்ணெய்

செய்முறை தேங்காயெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பையெண்ணெய், புங்கெண்ணெய், கொம்மட்டியெண்ணெய் இவை வகைக்கு 2 ½ உழக்கு (840 மி.லிட்.) எடுத்து அத்துடன், கொடுவேலியின் சாறு, வேலிப்பருத்திச்சாறு, குழலாதொண்டைச்சாறு, ஊமத்தஞ்சாறு, எருக்கம்பால், கள்ளிப்பால், வகைக்கு ஓர் உழக்கு (336 மி.லிட்.), கழற்சிக் கொட்டை 150, அரிதாரம் 7 வராகன் (29.4 கிராம்), கூட்டிக் காய்ச்சி வடிக்கவும்.

தீரும் நோய்கள் : வாதம் 80, சன்னிவாதம், மயக்கம். (பா.506–508)

148. சோறு செரியாமைக்கு

செய்முறை : ஓமம், வசம்பு, சுக்கு, சாரணைவேர் இவை ஓரளவாகக் கூட்டிச் சட்டியிலிட்டு வறுத்து அத்துடன் கறியுப்பும் போட்டு நாழி நீர்விட்டுக் காய்ச்சி உழக்காக வற்ற வைத்துக் கொடுக்கவும். (பா. 509)

149. அசீரணத்திற்கு

செய்முறை : புங்கிலை, வசம்பு, ஓமம் இவற்றைப் பொன்னிறமாக வறுத்து ஒருபடி (1.3 லிட்.) நீர்விட்டுக் காய்ச்சி, உழக்காக வற்றவைத்துக் கொடுக்கவும். வாந்தி, பிராந்தி தீரும். (பா. 510)

150. குடல்படுவனுக்கு

செய்முறை : வாகையை நீரிலிட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். குடற்படுவன், அசீரணம் தீரும். (பா.511)

151. நீர்க்கட்டுக்கு

செய்முறை : சிறுகீரை, பொன்னாங்காணி, சிறுபூளை, நெருஞ்சி, நாணல், கரிப்பான், நீர்முள்ளி இவற்றின் வேரும், வெள்ளரி விதையும் ஓரளவாகக் கூட்டி, நாழி நீர் விட்டு எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சி அத்துடன் பொரிகாரத்தைப் பொரித்து கரைத்து வடித்தெடுக்கவும்.

தீரும் நோய்கள் : நீர்க்கடுப்பு, துன்மாங்கிசம், கல்லடைப்பு, வெள்ளுடைப்பு. (பா.512, 513)

152. குட்டரோகத்திற்கு

செய்முறை : (பாடலடிகள் விடுபட்டுள்ளன காண்க.) (பா.514, 515)

153. எலும்புருக்கிக்கு

செய்முறை : தேங்காய்ப்பால், பருத்திவிதையின்பால் வகைக்கு அரைப்படி (672 மி.லிட்.), பசுவின் பால் 1 நாழி (1.3 லிட்.) கூட்டி உரியாகக் காய்ச்சி அத்துடன், முள்ளிலவம்பிசின் ஒரு வராகன் கூட்டிக் காய்ச்சி வடிக்கவும்.

தீரும் நோய்கள் : விரணம், எலும்புருக்கி, பிரமேகம், பெரும்பாடு .(பா. 516,517)

154. மாந்தத்திற்கு லேகியம்

செய்முறை : கச்சந்திராய், வேப்பிலை, கண்டங்கத்தரி இவற்றின் சாறு, விளக்கெண்ணெய் இவை வகைக்கு ஓர் உழக்கு (336 மி.லிட்.) வெல்லம் 8 பலம் (280 கிராம்), வெள்ளுள்ளி 5 பலம் (175 கிராம்), இந்துப்பு, சுக்கு, ஓமம், திப்பிலி, மிளகு வகைக்கு அரைப்பலம் (17.5 கிராம்) இடித்துச் சேர்த்துக் காய்ச்சவும். புன்னைக் காயளவு இரண்டு வேளை கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : உதிர்க்கட்டு, கிராணி, மந்தம், சூசிகா வாய்வு, அதிசாரம் (பா.518, 520)

155. மூலக்கடுப்புக்கு

செய்முறை : புளியங்கொழுந்தும் ஈருள்ளியும் நறுக்கிச் சாறு [illegible], எருமைத் தயிரில் மூன்று நாள் உட்கொள்ளவும். மூலக் கடுப்பும் சீதரத்தமும் [illegible]

156. கண்டமாலை, பவுத்திரத்திற்கு எண்ணெய்

செய்முறை : முந்தெருக்கன்செவியின் வேர், சிறுபூளைவேர், வகைக்கு ஒரு பிடியெடுத்து, நல்லெண்ணெய் ஒரு நாழி (1.3 லிட்.) விட்டு, அத்துடன் வெள்ளுள்ளி 5 பலம் கூட்டியிடித்துச் சேர்க்கவும். இதை முறைப்படிக் காய்ச்சி, ஒரு வராகன் (4.2 கிராம்) வெண்காரம் கூட்டவும். பதமாக இறுத்து வைக்கவும்.

அளவு : ஆழக்கெண்ணெய் (168 மி.லிட்.)

தீரும்நோய்கள் : விப்புருதி, பவுத்திரங்கள், கண்டமாலை, தொடை வாழை, குழிவாழைப்புண், கர்ப்பவிப்புருதி, படுவன். (பா.522-524)

157. வாதத்திற்கு, வாய்வுக்குப் பற்று

செய்முறை:1 பொன்னாவரை வேர்த்தோலும் சுக்கும் சமமாக யெடுத்து, நீர்விட்டரைத்துப் பூசவும். வாதம், கட்டி, விடகரப்பான் தீரும்.

செய்முறை:2 வெள்ளுள்ளி, கடுகு, சுக்கு இவற்றை நீர் விட்டரைத்துப் பூசவும். வாய்வு, வாதம், வலி கடுப்பும் தீரும். (பா.525, 526)

158. இரணத்திற்கு

செய்முறை : விளக்கெண்ணெய், நாயுருவி இவற்றை அரைத்துக் காய்ச்சி, மெழுகு பதத்தில் இறக்கிப் புண்ணிலிடவும். (பா. 527)

159. துருசு வைப்பு

செப்புச் சட்டுவம் மீதுள்ள உப்பு, குப்பைமேனிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவற்றை அடுப்பிலிட்டுக் காய்ச்சி வற்ற வைக்கவும். துருசு ஆகும். (பா.528)

160. அபினி வைப்பு

வில்லையின் கனி, காஞ்சுரை வகைக்கு இருநூறு எடுத்து, பதக்கு (10.7 லிட்.) நீரிலிட்டுப் பிசைந்திறுத்துக் காய்ச்சவும். ஊமத்தம் விதை ஒரு பதக்கு வறுத்துப் பொடியாக்கி, அம்மியில் வைத்து மெழுகு போலரைத்து வில்லையாகத் தட்டவும். இதை ஊமத்தம் பழுப்பின் மீது வைத்து நிழலில் உலர்த்தி எடுக்கவும். அபினியாகும்.

(பா.529, 530)

161. கரப்பனுக்கு எண்ணெய்

செய்முறை : அகத்தி, கர்ப்பூரவள்ளி, அவுரி, வெள்ளறுகு, சங்கு, ஆடாதோடை, மணத்தக்காளி, ஆவரை, சங்கங்குப்பி, நிலக்கடம்பு, நாயகம், கருநொச்சி, முருக்கு, ஈரவுள்ளி வகைக்கு உழக்குச்சாறு கொண்டு, ஆமணக்கம் எண்ணெய் ஒரு நாழி சேர்க்கவும். அத்துடன் மஞ்சள், மரமஞ்சள், கத்தூரி மஞ்சள், சிவதை, கடுகுரோகணி, சீரகம், திரிகடுகு, திரிபலை, ஏலம் இவை வகைக்கு ஒரு வராகன் (4.2 கிராம்) அரைத்துக் கூட்டவும். இதை மெழுகு பதமாகக் காய்ச்சி வடிக்கவும்.

அளவு : ஆழக்கெண்ணெய். மூன்று நாள். (பா.531–534)

162. அரிதாரம் வைப்பு

கழுதை விட்டையைப் பிசைந்து அதில் அரிதாரத்தை வைத்துப் புடம் போட்டெரிக்கவும். இதை மருந்துடன் கூட்டி அனுபானம் அறிந்து கூட்டிக் கொடுக்கவும். (பா.535, 536)

163. புண்ணுக்குக் களிம்பு

செய்முறை : துத்தம், துருசு, வெள்ளைக்குங்கிலியம், காசுக்கட்டி, மெழுகு, நெய், விளக்கெண்ணெய் இவை ஓரளவாகக் கூட்டிக் காய்ச்சி மெழுகு பதமாக இறக்கவும். புளியிலைத் தண்ணீரில் புண்ணைக் கழுவி, இந்தக் களிம்பைப் புண்ணின் மேல் போட்டு வரவும். புண் ஆறும். (பா.537, 538)

164. மந்தார காசத்திற்கு

செய்முறை : தேற்றாங் கொட்டையை நறுக்கி ஊற வைத்து அத்துடன் சீரகமும் கூட்டி, ஆவின்பால், கழுநீர் விட்டுக் காய்ச்சவும். பனைவெல்லம் போட்டு, மெழுகாகக் காய்ச்சி ஆற வைக்கவும். இதைப் பொடியாக்கி ஒரு வராகன் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : காசம், ஈளை, இளைப்பு, மந்தார காசம், விடக்கடி, ரத்தகாசம். (பா.539–541)

165. காமாலை, பித்த சூட்டுக்குத் தைலம்

செய்முறை : கற்றாழைவேர்ச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு, பசுவின் பால், கொடுப்பைச்சாறு, முசுமுசுக்கைச்சாறு இவை வகைக்கு 4 நாழி (5.2 லிட்.) சேர்க்கவும். அதிமதுரம் ஒரு பலம் (35 கிராம்) சேர்த்து, நல்லெண்ணெய் நாழியில் விட்டெரிக்கவும். பதமாய் வடித்திறக்கித் தலையில் தேய்த்து முழுகவும். (பா. 542)

166. இருமலுக்குச் சுக்குக் குழம்பு

செய்முறை:1 நெல்லிமுள்ளி, திப்பிலி, நெற்பொரி, சர்க்கரை இவை ஓரளவாகப் பொடித்து நெய்யில் கொள்ளவும். இருமல், ஈளை, சோபம் தீரும்.

செய்முறை:2 சுக்கு ஒரு பலம் (35 கிராம்) எடுத்து, ஆவின் பாலுடன் கலந்து காய்ச்சிக் குடிக்கவும். இருமல், இளைப்பு தீரும். (பா.543, 544)

167. வயிற்றுக் கடுப்புக்கு

செய்முறை : அத்திப்பிஞ்சு ஒரு பிடியும், பூவரசு இளம்பிஞ்சும், மாம்பட்டையும், காயாமரப்பட்டையும் வாழைமரப் பட்டைச் சாற்றில் கலந்து எரித்துக் கசாயமாக்கிக் கொடுக்கவும். வயிற்றுக் கடுப்பு நீங்கும். (பா.545)

168. அதிசார சுரத்திற்குக் கசாயம்

செய்முறை : மலைதாங்கி, முத்தக்காசு, அத்திப்பட்டை, நீர்ப்பலா, நாவற்பட்டை, மாதுளையின் கொழுந்தும் பிஞ்சும், இருவேலி, இலாமிச்சு, மாம்பட்டை, ஏலம், விடத்தோன்கொம்பு, கோட்டம், சீரகம், அதிமதுரம், காசுக்கட்டி இவை ஓரளவாகயெடுத்து, நீரிலிட்டு, எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சி வடித்துக் கொடுக்கவும். காய்ச்சல், அதிசாரம் தீரும். (பா. 546)

169. கண்டாவுடதம்

செய்முறை : அக்கிரகாரம், வெள்ளி, பவளம், அதிமதுரம், வில்வம், கலங்கொம்பு, பொன், முத்து, மாசிக்காய், திப்பிலி, கிராம்பு, உருத்திராக்கம் ஆகிய பன்னிரெண்டு பொருட்களையும் தேவையான அளவு எடுத்து, முலைப்பால் விட்டு முறைப்படி அரைத்து நுனி நாவில் தேய்க்கவும். பதின்மூன்று தோடமம் தீரும். (பா. 547)

170. பதினெட்டு நஞ்சுக்கு மருந்து

நஞ்சுவகை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு முறிவு மருந்துப்பொருள் கொள்ளப்பெறும். அவை,

எட்டிக்கு – நாவல்
தோன்றிக்கு – தான்றிக்காய்
ஊமத்தைக்கு – தாமரை
ஆவரைக்கு – கள்ளி
அரளிக்கு – கடுக்காய்
நெய் தேனுக்கு – வெந்தகரி
எருக்கலைக்கு – எள், சர்க்கரை

கழுதை வண்டுக்கு — சங்கம்பழம்
நீத்துக்கு — மஞ்சள்
நேர்வாளத்திற்கு — வசம்பு
சிவதைக்கு — வெள்வேல்
நெல்வேர், சர்க்கரைக்கு — இலாமிச்சு
நாவிக்கு — சிறுகீரை
குன்றிக்கு — வெண்காரம்
பாடாணத்திற்கு — மிளகு
வெற்றிலையோடு எண்ணெய்க்கு — முற்றின தேங்காய். (பா. 548)

171. வேப்பெண்ணெய் நெய்

செய்முறை : வேப்பெண்ணெய் ஒரு படி (1.3 லிட்.) எடுத்து அதில், சீனக்காரம், மயிலிறகு வகைக்கு 3 வராகன் (12.6 கிராம்) சீலையில் முடிந்து போட்டுக் காய்ச்சவும். இந்த நெய்யுடன் கழற்சிப்பருப்புப் பொடி கலந்து காசளவு கொள்ளவும். சன்னி 17, வாத வாய்வுகள் தீரும். (பா.549, 550)

172. பாம்பு ஆடாமல் கூட்டடைய

பங்கம்பாளை, தலைச்சுருளி, அவுரி, மாதுளை, கள்ளி, வெண்குன்றி, கழற்சி, சிறியாநங்கை, எட்டி, கோடகசாலை, கருடக்கொடி, ஆடாதோடை, பீர்க்கு, கர்ப்பூரவள்ளி ஆகிய பதினான்கு மூலிகைகளின் வேர்களைக் கையில் குளிசமாகக் கட்டிக் கொள்ளவும். நாகம், எரிபாம்பு தீண்டாது. (பா.551, 552)

173. விக்கலுக்கு

செய்முறை : சுக்கு, திப்பிலி, வாலுளுவை, அமுக்கிரா, பழம்புளி இவற்றை ஓரளவாக எடுத்துப் பொடிசெய்து, தேன்விட்டுக் கலந்து மூன்று நாள் தினமும் இரண்டு வேளை கொடுக்கவும். விக்கல் நிற்கும். (பா. 553)

174. கண் காசத்திற்கு

செய்முறை:1 கையாந்தகரை, நெல்லிக்காய் இவற்றின் சாறு வகைக்கு 4 நாழி (5.2 லிட்.), நல்லெண்ணெய், ஆவின் பால் வகைக்கு 5 உழக்கு (1650 மி. லிட்.), கூட்டி அத்துடன், அதிமதுரம் 12 பலம் (420 கிராம்) சேர்த்துக் காய்ச்சி வடித்து முழுகவும். கண்காசம் அகலும்.

செய்முறை:2 அரிதாரம், அரவிந்தம், கையாந்தகரை, மயிரோசிகை, புன்னைதாது, இவற்றைத் தேங்காய் நீர்வார்த்து அரைத்து உண்டை செய்து திலகமாக இடவும். கண்காசம் தீரும். (பா.554, 555)

175. மாந்த சுரக் கசாயம்

செய்முறை : சீந்திற்தண்டு, களிப்பாக்கு, சிவதைவேர், கடுக்காய், சுக்கு, கடுகுரோகணி வகைக்கு ஒரு கழஞ்சு (5.1 கிராம்) சேர்த்து நீரிலிட்டு, எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சிக் கொடுக்கவும். மாந்தசுரம் விட்டு வயிறு கழியும். (பா.556)

176. குளிர்சுரக் கசாயம்

செய்முறை:1 முத்தக்காசு, பேய்ப்புடல், சீந்தில், சிறுதேக்கு, வசம்பு, மிளகு, பற்படாகம், பெருங்குமிழவேர், கொத்தமல்லி, கடுக்காய், தேவதாரம் இவற்றை ஓரளவாக நீரிலிட்டு வற்றக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். குளிர்சுரம் தீரும்.

செய்முறை:2 கோட்டம், திப்பிலி, கண்டங்கத்தரி, சிறுதேக்கு, நிலவேம்பு, முத்தக்காசு, காஞ்சொறி, சீந்தில், பற்படாகம் இவற்றை ஓரளவாக நீரிலிட்டு முறைப்படிக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். குளிர்சுரம் தீரும். (பா.557, 558)

செய்முறை :3 ஓமம், இருசீரகம், திரிகடுகு இவற்றை ஓரளவாக எடுத்துப் பொடித்துத் தேனில் கொடுக்கவும். (பா.559)

177. குட்டம், சூலை, கிரந்திக்குக் குக்குடாதிச் சூரணம்

செய்முறை : பறங்கிப்பட்டை 4 பலம் (140 கிராம்) எடுத்துச் சங்கங்குப்பிச் சாற்றில் நனைத்துலர்த்தவும். காந்தம், இலிங்கம். கடுகு, வால்மிளகு, சுக்கு, சாத்திரவேதி, ஓமம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கார்போகரிசி, கடுகுரோகணி, கல்நார், சிவதை, குக்கில், பொரிகாரம், ஏலம், வாய்விளங்கம், மரமஞ்சள், மகரப்பூ, ஐந்துசாரம், பஞ்சலவணம், துருசு, துத்தம், அரிதாரம், கர்க்கடகசிங்கி, கருஞ்சீரகம், நற்சீரகம், சித்திரமூலம், கத்தூரி மஞ்சள், அபினி, வெந்தயம், மிளகு, குராசானியோமம் இவை வகைக்கு ¼ பலம் (8.75 கிராம்) எடுத்துப் பொடிக்கவும். கோழியின் குடல், கால் போக்கி அதனுள்ளே இப்பொடியை வைத்துத் தைத்து நூல் கொண்டு கட்டி வைக்கவும். சட்டியில் ஆவின்பால், கோமயம், சித்திரமூலச்சாறு, கள்ளிச்சாறு, நொச்சிச்சாறு, பொடுதலைச்சாறு, காணச்சாறு இவற்றை வேண்டிய அளவு கூட்டி, அதில் கோழியை வைத்து மேலே சட்டி மூடி ஏழு சீலைமண் செய்யவும். இதை அடுப்பில் வைத்து ஒருசாமம் வேகவிடவும். நன்கு வெந்ததும் எலும்பைத் தள்ளி மற்றதை இடித்துத் தூளாக்கி வைக்கவும்.

அளவு : வெருகடியளவு. ஒரு மண்டலம் (48 நாட்கள்) தேனில் கொடுக்கவும்.

தீரும்நோய்கள் : குட்டம் 18, சூலை வாய்வு, கிரந்தி, பவுத்திரம், வண்டுகடி, வாதம், மந்தம், நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு, பிரமேகம், வயிறு பொருமல் வயிற்றுவலி, மகோதரம், உடம்புக்குத்து, பக்கசூலை. (பா.560–567)

178. அண்ட வாதத்திற்கு

செய்முறை : கருவளையலைப் பொடி செய்து மிளகுடன் பெருங்காயமும் கூட்டிப் பூசவும். அண்டவாதம் தீரும். (பா.568)

179. பல்வலிக்கு

செய்முறை : மருக்காரை, சுக்கு, மருதந்தோல், வெள்வேல், எருக்கனிலை இவை ஐந்தும் ஓரளவாக நீரிலிட்டுக் காய்ச்சி, நான்கிலொன்றாக வற்ற வைத்து, நான்கு நாள் வாய் கொப்பளிக்கவும். பல்வலி தீரும். (பா. 569)

180. மூலத்திற்கு

செய்முறை : கொட்டைப்பாசி, மாவடு, கறுப்பரிசி இவற்றை எள்ளெண்ணெய் விட்டரைத்துக் கொள்ளவும். மூலம் தீரும். (பா. 570)

181. சயத்திற்கு

செய்முறை:1 காட்டுக்கருணை ஒரு பங்கு, கொடுவேலி அரைப்பங்கு, சுக்கு கால் பங்கு, மிளகு அரைக்கால் பங்கு எடுத்து, கழுநீரில் அரைத்துக் கொடுக்கவும். ஒரு மண்டலத்தில் சயம் தீரும். (பா. 571)

182. திரிதோடத்திற்கு

செய்முறை : சிறுதேக்கு, நிலவேம்பு, திப்பிலி, கோட்டம், முத்தக்காசு, சிறுகாஞ்சி, பற்படாகம், சீந்தில், கத்தரி, சுக்கு இவை ஓரளவாக எடுத்து, நாழி நீரிலிட்டு எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். வாத, பித்த, சிலேற்றும சுரம் தீரும். (பா. 572)

183. நாவறட்சி, தோடம், கணைக்கு

செய்முறை : கண்டங்கத்தரி, நிலப்பனை, கருவேலிலையும் மேற்பட்டையும், மிளகுத்தக்காளி, கூத்தன் குதம்பை, தகரை, உசிலம்பட்டை, அக்கிராகாரம், கோட்டம், அதிமதுரம், திப்பிலி, கிராம்பு, மாசிக்காய், இலவங்கப்பட்டை, இருசீரகம், சமுத்திராப்பழம் இவை வகைக்கு 2 வராகன் (8.4 கிராம்) எடுத்துப் பொடித்து நல்லெண்ணெயில் ஊற வைத்து எரித்து, சீலையில் தடவி நாவில் போடவும். (பா. 573-575)

184. வில்வாதி லேகியம்

செய்முறை : வில்லைவேர் மேற்தோல் போக்கியது 12 பலம் (420 கிராம்) எடுத்து 8 நாழி (10.4 லிட்.) நீரிலிட்டு நான்கிலொன்றாக வற்றக் காய்ச்சவும். இதில் வெல்லம் 6

பலம் (210 கிராம்) போடவும். அத்துடன், இஞ்சிச்சாறு, நாரத்தம் பழச்சாறு வகைக்கு ஓர் உரி (672 மி.லிட்.) கூட விட்டுக் குழம்பாக காய்ச்சவும். அதில் தேன் உரியெடுத்து விடவும். மேலும், திரிகடுகு, திரிபலை, செவ்வியம், தாளிசபத்திரி, சிறுநாகப்பூ, சிற்றரத்தை, சன்னலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, திப்பிலி மூலம், ஏலம் இவை வகைக்கு 8 வராகன் (33.6 கிராம்) கூட்டியிடித்துச் சேர்க்கவும். இதை வடிகலசத்திலிட்டு வடித்து எடுக்கவும். இதை லேகிய பதமாக்கிக் கொள்ளவும்.

அளவு : நெல்லிக்காயளவு, இரண்டு வேளை.

தீரும் நோய்கள் : அக்கினி மந்தம், குன்மம், அரோசியம், பயித்திய வாய்வு, ட்டிண வாய்வு, மூல வாய்வு. (பா.576–580)

185. காமாலை, சோகைக்குக் குளிகை

செய்முறை: கரிப்பான் சாறு, கழுதைலத்திச்சாறு இவை வகைக்கு ஒரு நாழி (1.3 லிட்.) எடுத்து அத்துடன், இந்துப்பு, ஓமம், திரிகடுகு, கருஞ்சீரகம், அரப்பொடி, வெள்ளுள்ளி வகைக்கு ¼ பலம் (8.75 கிராம்) நறுக்கிப் பொடித்துச் சேர்த்து வேக வைக்கவும். இம்மருந்தை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துருட்டி, வெய்யிலில் உலர்த்தி எடுக்கவும்.

அளவு : இரண்டுவேளை.

தீரும் நோய்கள் : காமாலை, சோகை, பாண்டு, உடல்வெளுப்பு, மந்தம். (பா.581–583)

186. நீரிழிவுக்கு

செய்முறை:1 ஆவரை, கொன்றை, நாவல், மா, வில்வம், அத்தி, மருதம் இவற்றின் பட்டைகளைத் தேனில் அரைத்துக் கொள்ளவும்.

செய்முறை:2 நாவற்பட்டை, மாம்பட்டை, அத்திப்பிஞ்சு, ஆலவிழுது, கடலிறாஞ்சி, மலாகா, அதிமதுரம், இலாமிச்சு, ஏலம் இவை ஓரளவாக எடுத்துக் கூட்டி நீரிலிட்டுக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். இதைத் தேனுடன் இரண்டு வேளை இருபது நாள் கொள்ளவும். நீரிழிவு, பிரமேகம், மதுமேகம் யாவும் தீரும். (பா.584,586)

187. கீரிநோவுக்கு

செய்முறை: திருகுகள்ளி வேர்ப்பட்டையை ஒரு குறுணி எடுத்து, முக்குறுணி நீரிலிட்டுக் காய்ச்சி, இருநாழியாக வடித்து, அதில் தேங்காய்ப்பாலும், ஆவின் பாலும் வகைக்கு இரண்டுபடி விட்டுக் காய்ச்சவும். மூன்று படியாக வற்றிய பின்பு

ஆமணக்கெண்ணெய் இரண்டு நாழிவிட்டுக் காய்ச்சி, மெழுகு பதத்தில் வடிக்கவும். இதில் காசெடை கொள்ளவும். கிரிநோவு தீரும். (பா.587, 588)

188. தேள்விடத்திற்கு

செய்முறை : வெண்குன்றிவேர், கழற்சிவேர் இவற்றுடன் இரதம் கூட்டி, கழற்சிச் சாற்றிலிட்டு அரைத்து எடுக்கவும். இதைக் கையிலிடவும், விடம் இறங்கும். (பா.589)

189. சுழிகணைக்கு

செய்முறை : குப்பை மேனிச் சாற்றுடன் உப்பும் கலந்து வேப்பெண்ணெய் விட்டு அரைத்துத் தேனுடன் மூன்று நாள் கொடுக்கவும். மேலிளைப்பு, சுழிகணை, இசிவுகணை, உப்பிசம், நெஞ்சுக்கோழை இவை தீரும். (பா.591)

190. நாரத்தம் பழக்கடுகு

செய்முறை : நாரத்தம் பழம் எட்டு எடுத்து, வளையமிட்டு அதிலுள்ள விதையைப்போக்கி வைக்கவும். இதில் கல்லுப்பு ஒரு உரி (672 மி.லிட்) பெருங்காயம், ஓமம், வெந்தயம், வாய்விளங்கம், வெண்கலப்பொடி, இந்துப்பு, அரப்பொடி, திப்பிலி மூலம் வகைக்கு ஒரு கழஞ்சு (5.1 கிராம்), வெள்ளுள்ளிச் சாறு ஒரு நாழி (1.3 லிட்.), சேர்க்கவும். சூதம் இரண்டு கழஞ்சு (10.2 கிராம்) சுத்தி செய்தெடுத்து, வெள்ளுள்ளி, அரப்பொடி இவற்றையும் ஒன்று சேர்த்தரைத்து உள்ளும் மேலும் பூசி வெயிலில் மூன்று நாள் வைத்தெடுக்கவும். இதை எட்டுநாள் பூமியில் வைத்தெடுக்கவும். எடுத்ததை மைபோல அரைத்துக் கொள்ளவும்.

அளவு : கொட்டைப் பாக்களவு.

தீரும் நோய்கள் : குன்மம், வாய்வு, குடல்வாதம், அண்டவாதம், வீக்கம், வாய்வுத் திரட்சி, கட்டி. (பா.592–596)

191. துட்டு மாந்தத்துக்கு

செய்முறை : விளக்கெண்ணெய், தகரைச்சாறு வகைக்கு ஒருநாழி (1.3 லிட்.) நாயுருவி வேர், தைவேளைவேர், நாய்வேளைவேர், கொழிஞ்சி வேர், மூக்கரைச் சாரணை வேர் வகைக்கு எலுமிச்சங்காயளவு அரைத்துக் கொள்ளவும். வசம்பு, ஓமம், கத்தூரி மஞ்சள் இவை வகைக்கு அரைப்பலம் (17.5 கிராம்) கூட்டியரைக்கவும். வெள்ளுள்ளி இரண்டு பங்கும், கருஞ்சீரகம், வெந்தயம், கடுகு ரோகணி வகைக்கு ஒரு பங்கும் நீர் விட்டரைத்துச் சேர்க்கவும். இவற்றை ஒன்றாகக் கூட்டிக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வைக்கவும். இதைக் குழந்தைகளுக்கு வேண்டிய அளவு கொடுக்கவும். பிள்ளையின் தாய் உப்பும், கரிப்பும் தவிர்க்க வேண்டும்.

தீரும் நோய்கள் : குழந்தைகளுக்குண்டாகும் துட்டு மாந்தம், கிரிப்பிரளி, சுழிக்கணை, வாய்வுப்பிரளி, காய்ச்சல், மந்தம், இளைப்பு, கணைகள். (பா.597–601)

192. சிவார சிந்தாமணி

செய்முறை : திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், நாவி, கந்தகம், இலிங்கம், இரதம், அக்கிராகாரம், மனோசிலை, தாளகம், நேர்வாளம் இவை ஒரளவாகக் கொண்டு இஞ்சிச் சாறு விட்டு நான்கு சாமம் அரைத்தெடுத்துப் பயிறளவு உருண்டையுருட்டிக்கொள்ளவும்.

துணை மருந்தும் தீரும் நோய்களும் :

1. மோர் – கிராணி.
2. சர்க்கரை – வயிற்று நோவு.
3. நெல்லிப்பருப்பு, சீரகக்கசாயம் – பயித்தியகுன்மம்
4. வாழைப்பழம் – சன்னி குன்மம்.
5. வெல்லம் – வயிற்றுவலி, குன்மம்.
6. வெள்ளைச்சாரணைச் சாறு – குடல் வாதம்.
7. இஞ்சி அல்லது தேன் – வாய்வு குன்மம்.
8. சீரகம், வில்வச்சாறு – எரிகுன்மம்.
9. குண்டுமணிக்கசாயம் – சன்னிவாதம்.
10. கையாந்தகரைச் சாறு – வாதசூலை.
11. இஞ்சிச்சாறு – சன்னி.
12. பஞ்சகோலம் – சளிதோடம்.
13. கரிசலைக் கசாயம் – வாதசுரம்.
14. சீரகக் கசாயம் – பித்த சுரம்.
15. இஞ்சித் திப்பிலிச் சாறு – சிலேற்றும சுரம்.
16. புளியிலைச் சாறு – பிரமிய உட்டணம்.
17. பருத்தியிலைச் சாறு – இரத்தப் பிரமியம்.
18. தேன், கரிப்பான் – எல்லா நோயும் தீரும் (பா.602–607)

193. உண்ணாக்குக்கு

செய்முறை : (பாடலடிகள் சிதைந்துள்ளன. காண்க.) (பா.608–611)

194. சன்னி தோடத்திற்கு

செய்முறை : பொன், ருத்திராட்சம், கலையின் கொம்பு, முத்து, வெள்ளி, நீலம், பச்சை, அக்கிராகாரம், திப்பிலி, கிராம்பு, இவற்றை முலைப்பால் விட்டரைத்து நாவில் பூசவும். சன்னி தோடம் தீரும். (பா.612– 6l4)

195. சினேகப் பொட்டணம்

செய்முறை : தேங்காய்த் துருவல் 2 படி (2.6 லிட்.), உளுந்து மா, கருத்தகாணம், பருத்திவிதை இவை வகைக்கு ஓர் உரி (672 மி.லிட்.), சணப்பவிதை, கத்தரிவிதை, முருங்கைவிதை, புன்னை விதை வகைக்கு ½ படி (672 மி.லிட்.), புங்கம் விதை, ஊமத்தம் விதை, நிம்ப விதை, கருஞ்சீரகம், வாய்விளங்கம், கடுகு, சதகுப்பை, வசம்பு, உள்ளி, வாதமடக்கி, பெருந்தும்பை, செருப்படி, கொடுவேலி, நொச்சி, பெருங்காயம், ஓமம், ஆமணக்கு, சன்னி நாயகம், முருங்கை, தைவேளை, வெள்ளெருக்கம் பூ, எருக்கம் வேர், குன்றி, குப்பைமேனிவேர் இவை வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) கூட்டி வறுத்துப் பொடித்து ஐந்தெண்ணெய் இட்டுக் கிண்டி இறக்கவும். இதைப் பொட்டணம் கட்டிச் சுடவும். சன்னி தீரும். (பா.615–618)

196. சன்னிக்குத் தூபம்

செய்முறை :1 சட்டியை நெருப்பிலிட்டுக் காய்ச்சி இறக்கிக் கொண்டு அதில் திரிகடுகுத் தூளை நுணுக்கிப் போட்டுத் தூபம் காட்டவும். சன்னி தீரும்.

செய்முறை :2 அரிதாரம், இரதம், கந்தகம் இவற்றை ஓரளவாகத் தூள் செய்து, துணியில் வைத்துப் பரப்பித் திரியாக உருட்டி, விளக்கில் வேப்பெண்ணெய் வார்த்து ஏற்றவும். வரும் புகையை மூக்கில் ஏற்றவும் சன்னி தீரும். (பா.619, 620)

197. சன்னிக்கு நசியம்

செய்முறை :1 தேன், பழைய கிட்டம், திரிகடுகு, மஞ்சள், உள்ளி இவற்றை நொச்சி அல்லது தும்பைச் சாற்றில் அரைத்து நசியம் பண்ணவும். தீரும்.

செய்முறை:2 முசுறுமுட்டை, கக்கு இவற்றை முலைப்பாலில் நசியமிடவும். தீரும். (பா.621, 622)

198. சன்னிக்கு அஞ்சனம்

செய்முறை : திரிகடுகை அகத்திச் சாற்றிலரைத்து உலர்த்தி எடுக்கவும். இதைச் சிறிதளவு கண்ணிலிட்டால் சன்னி தீரும். (பா.623)

199. உள் காய்ச்சலுக்கு

செய்முறை : ஆவின் பாலுடன் சீனி, சாத்திரவேதி கலந்து நாற்பது நாள் குடிக்கவும். உட்சுரம் தீரும். (பா.624)

200. வச்சிரக் கபாடம்

செய்முறை : கஞ்சா, சாதிக்காய், விளாம்பிசின், சாதிலிங்கம் இவை வகைக்கு இரண்டு கழஞ்சு (10.2 கிராம்), திப்பிலி 4 கழஞ்சு (20.4 கிராம்) சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துருட்டவும்.

அளவு : குன்றியளவு (130 மி.கி) தேன், சர்க்கரையில் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : கிராணி, அதிசாரம், சுக்கிலப் பிரமேகம், வாய்வு, சூலை, குன்மம். (பா.625, 626)

201. சிரங்குக்கு

தேங்காயை அரைத்துச் சிரங்கின்மீது தூவாலையிட்டால் வீக்கம் தணியும். (பா.627)

202. வாதத்திற்குச் சாத்தெண்ணெய்த் தைலம்

செய்முறை : வாகை, இலுப்பை, சாணாக்கு, மணத்தக்காளி, மாவிலங்கு, கொடுவேலி, எருக்கு, நொச்சில், வீழி, முருக்கு, ஊமத்தம், நீர்மேல்நெருப்பு, குப்பைமேனி, கள்ளி, தழுதாழை, புங்கிலை, புலித்துடக்கி, வேலிப்பருத்தி, வேப்பிலை, கரிப்பான், பிரமி, குன்றியிலை, கழற்சி, பசுமஞ்சள், நுணாயிலை, இலைக்கள்ளி, சிறுசெருப்படி, பொடுதலை, சிறுகுறிஞ்சா, பெருகுறிஞ்சா, குழலாதொண்டை, முடக்கற்றான், நரிவிளாத்தி, பாவட்டை, கரந்தை, நீர்க்கடம்பு, ஆடாதோடை, அமுக்கிரா, சங்கங்குப்பி, முதியார்கூந்தல் இவற்றின் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, காடி இவை வகைக்கு ஒருநாழி (1.3 லிட்.) எடுத்துக் கொள்ளவும். அதில், திரிகடுகு, ஓமம், பெருங்காயம், திரிபாலை, வசம்பு, சுக்கு, கருஞ்சீரகம், நற்சீரகம், கடுகுரோகணி, இந்துப்பு, நறும்பிசின், விளாவரிசி, கத்தூரி மஞ்சள், பெருங்குரும்பைக்கிழங்கு, சித்திரமூலம், அத்தித் திப்பிலி, கிராம்பு, அரத்தை, அதிமதுரம், சதகுப்பை, சிறுதேக்கு, இலவங்கம், செவ்வியம், வெள்ளுள்ளி, முத்தக்காசு, குங்கிலியம், மரமஞ்சள், மஞ்சிட்டி, செவ்வள்ளி, செஞ்சந்தனம், சண்பகப்பூ இவை வகைக்கு வராகனெடை (4.2 கிராம்) கூட்டியரைத்துச் சேர்க்கவும். இத்துடன், நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பையெண்ணெய், வேப்பெண்ணெய் இவை வகைக்கு ஒரு நாழி (1.3 லிட்.) சேர்த்துக் காய்ச்சவும். மெழுகு பதத்தில் இறக்கி வைக்கவும். இதில் ஒரு கரண்டி உள்ளுக்குக் கொடுத்து மேலேயும் துவாலை இடவும்.

தீரும் நோய்கள்: வாதம் 80, வலிப்பு, சன்னி. (பா.628–636)

203. கிரந்திக்கு

கொடிக் கள்ளியை வாட்டிப் பிழந்து எடுத்து ஓர் உழக்கு (336 மி. லிட்.) மூன்று தினமும் கொள்ளவும். கிரந்தி சூலை, சொறிசிரங்கு தீரும். (பா.637)

204. சூதக வாய்வுக்கு

கம்பளித் துணியில் சீலை சுற்றி எரித்து எருமை மோரில் கொள்ளவும். வயிற்றுளைவு, சூசிகா வாய்வு, மந்தம் தீரும். (பா. 638)

205. அக்கினி மாந்தத்திற்கு

செய்முறை : தாளிசபத்திரி, கிராம்பு, ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி வகைக்கு ஒரு கழஞ்சு (5.1 கிராம்), சுக்கு 2 கழஞ்சு, மிளகு 3 கழஞ்சு சுடகைநீறு 5 கழஞ்சு, திப்பிலி, திப்பிலிமூலம், சிவதை வேர் வகைக்கு 4 கழஞ்சு (20.4 கிராம்) சேர்த்துப் பொடிக்கவும். ஒரு பங்கு சீனி கூட்டி வெந்நீரில் வெருகடியளவு கொள்ளவும்.

தீரும் நோய்கள் : அக்கினிமாந்தம், குன்மம், அரோசிகம், மூலவாய்வு, விக்கல், மேல்இரைப்பு, காசம், உட்டிண வாய்வு, வயிற்றிரைச்சல். (பா.639–641)

206. இலவங்காதிச் சூரணம்

செய்முறை : சுக்கு, திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், ஓமம், காட்டாத்திப்பூ, சாதிப்பத்திரி, ஏலம், குராசானி, மாங்கொட்டை, கஞ்சாயிலையும் விதையும், மாதுளை, வில்லைப்பழம், விளாம்பிசின், இலவம்பிசின், காசுக்கட்டி, இலவங்கம், கத்தூரி மஞ்சள், தேற்றான்விதை, பெருங்காயம், கிராம்பு, நாவற்கொட்டை, அதிவிடையம், கழற்சிப்பருப்பு, புளியங்கொட்டைத்தோல், அத்திப்பட்டை இவற்றை ஓரளவாகயெடுத்துப் பொன்னிறமாக வறுத்துப் பொடிக்கவும்.

அளவு : வெருகடியளவு. தேனில் கொள்ளவும்.

தீரும் நோய்கள் : கிராணி, அதிசாரம், மூலக்கிராணி, கிராணி வாய்வு விடமூலக்கிராணி, சூசிகா வாய்வுக்கிராணி. (பா.642–644)

207. அதிவிடையச் சூரணம்

செய்முறை : இலவம்பிசின், வினாம்பிசின், நறும்பிசின், தேற்றாம்பிசின், குந்திருக்கம், சுக்கு, அதிவிடையம், குடசப்பாலைப்பட்டை, குராசானியோமம், காசுக்கட்டி, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி இவை ஓரளவாகக் கூட்டி இடித்துக் கொள்ளவும்.

அளவு : முக்கழஞ்சு (15.3 கிராம்)

தீரும் நோய்கள் : கிராணி, அதிசாரம், பெரும்பாடு, வயிற்றுக்கடுப்பு.
(பா.645, 646)

208. கிராணிக்குக் கபாட சூரணம்

செய்முறை : (பாடலடிகள் விடுபட்டுள்ளன. காண்க.) (பா.647, 648)

209. குன்மத்திற்கு

செய்முறை : மடற்கள்ளிச்சாறு 4 படி (5.2 லிட்.), கல்லுப்பு 2 படி (2.6 லிட்.) சேர்த்து வேக வைக்கவும். வெள்ளைச்சாரணை, நிலவாகை, திரிகடுகு, இந்துப்பு, ஓமம், இருசீரகம், பெருங்காயம் இவை ஓரளவாகக் கூட்டி இடித்துத் தூளாக்கவும். இப்பொடியைத் தேனில் கொள்ளவும்.

தீரும் நோய்கள் : உதரதோடம், குன்மம், வாய்வுக்கட்டி, மந்தம். (பா.649–651)

210. இராச அயவேதிச் சூரணம்

செய்முறை : திரிகடுகு, திரிபாலை, செவ்வியம், வசம்பு, சித்திர மூலம், காயம், வெட்பாலரிசி, பஞ்சலவணம், சித்திரமூலம், இஞ்சி, வெள்ளுள்ளி, அத்தித்திப்பிலி, தாமரை வளையம், நேர்வாளம், சீரகம், அரேணுகம், கருஞ்சீரகம், தேவதாரம், மஞ்சள், கொத்தமல்லி, மரமஞ்சள், ஓமம், அதிவிடையம், குராசானியோமம், நவச்சாரம், சத்திசாரம், எவச்சாரம், வெண்காரம், சீனக்காரம், கடுகுரோகணி, வில்லைக்கனி, பிரண்டை, கழற்சி, நிலவேம்பு, கையாந்தகரை வேர், நொச்சி, ஆயிலப்பட்டை, ஊசிமல்லிகை வேர், வெள்ளைச்சாரணை, மலைதாங்கி, முட்காவேளை, பெருமருந்து, கள்ளிச்சாம்பல், ஏலம, சிறுநாகப்பூ, தக்கோலம் இவை ஓரளவாக எடுத்துப் பொடித்து வெயிலுலர்த்தி வைக்கவும்.

துணை மருந்து : சிவதை வேர்த்தூளும் வெந்நீரும்.

தீரும் நோய்கள் : வலிகுன்மம், கிரந்தி, மலக்கட்டு, பீலிகை 80, கூர்மவாய்வு, உதரநோய், அன்னதோடம், பாண்டு, வாந்தி, பிரமியம், சுவாசகாசம், இருமல், வாத பித்த சிலேற்பனம், பழஞ்சுரம் 80, பயித்தியம், சித்தப்பிரமை, விக்கல், சத்தி, வயிற்றில் கிருமி, வாய்வுக்கட்டி, இரத்த மூலம்.

பத்தியம் : மிளகு நீரும் சோறும். தயிர் மோரும் கூட்டவும். (பா.652–659)

211. சூலைக்குக் கருங்கோழிச் சூரணம்

செய்முறை : பறங்கிப்பட்டை 10 பலம் (350 கிராம்) எடுத்து, கருங்கோழி வயிற்றில் வைத்துத் தைத்து வேக வைக்கவும். வெந்த பின்பெடுத்துச் சூரிய புடம் வைத்து இடித்துக் கொள்ளவும்.

அளவு : வெருகடியளவு. இரண்டுவேளை. நாற்பதுநாள்.

தீரும் நோய்கள் : சூலை, புடைசூலை, கடிவிடம், வண்டுகடி, உள்மூலம், கிரந்தி, கரப்பன்.

பத்தியம் : கைப்பு, புளிப்பு நீக்கவும். பருப்பு, கோழி, முளைக்கீரை ஆகும். (பா.660–662)

212. அமிர்த சஞ்சீவிக் குளிகை

செய்முறை : சாத்திரவேதி, கோட்டம், ஏலம், இலவங்கம், சந்தனம், கடுகுரோகணி, இலுப்பைப்பூ, நன்னாரி, விலாமிச்சு, இருவேலி, திப்பிலி, அதிமதுரம், முத்தக்காசு, முந்திரிகை. பேரீஞ்சு இவை ஓரளவாகயெடுத்துக் கருப்பஞ்சாறு விட்டு அரைத்து [illegible]யளவு உருட்டி நிழலில் உலர்த்தவும்.

அனுபான மருந்து : முலைப்பால், வெந்நீர்

தீரும் நோய்கள் : [illegible], பயித்தியம். (பா 664–666)

213. கிராணிக்குச் சுகாலி நெய்

செய்முறை : ஆயிலப்பட்டை, முத்தக்காசு, அத்திப்பட்டை, கொடுவேலிப்பட்டை, [illegible]பட்டை வகைக்கு 3 பலம் (175 கிராம்) எடுத்து அததுடன், சுக்கு 12 பலம் (420 கிராம்) சேர்த்து, ஒரு குறுணி (5 3 லிட்.) நீரிலிட்டுக் காய்ச்சவும். இரண்டு நாழியாக வற்றியபின் நெய், ஆவின் பால் வகைக்கு ஒரு நாழி (1 3 லிட்) கூட்டவும். அத்துடன், மஞ்சள், மிளகு, காயம், திப்பிலி, அதிமதுரம், ஏலம், அத்திப்பூ, அதிவிடையம், ஓமம், அத்தித்திப்பிலி, சீரகம், செவ்வியம, சிறுதேககு, பெருங்குரும்பை, விளாவரிசி, திப்பிலி மூலம் இவை வகைக்கு ஒரு வராகன் (4.2 கிராம்) கூட்டியரைத்துச் சேர்த்துக் கொதிக்க வைக்கவும். மெழுகு பதமானதும் வடித்து வைக்கவும். சாப்பிட்ட பின்பு ஒரு கரண்டி அளவு கொள்ளவும். கிராணி தீரும். (பா 667–670)

214. இரத்தக் கிராணிக்கு

செய்முறை : மோர் 8 படி (3 9 லிட்.) எடுத்து அதில் 15 கடுக்காய் தட்டிப் போட்டு ஊற வைக்கவும். இதை இரண்டு வேளையும் மூன்று நாள் கொள்ளவும். இரத்தக் கிராணி, மூலம், பெருப்பாடு இவை தீரும் (பா.671)

215. மூலத்திற்குத் தேங்காய்

செய்முறை : தேங்காய் ஒன்றைத் திருகியெடுத்து அத்துடன் சீரகம் 3 பலம் (105 கிராம்) இடித்துச் சேர்க்கவும். மேலும், ஆவின்நெய், உள்ளிச்சாறு, வகைக்கு ஓர் உழக்கு (336 மி. லிட்.), சர்க்கரை 2 பலம் (70 கிராம்) கூட்டி வறுத்துப் பொடித்து வைக்கவும்.

அளவு : வெருகடியளவு.
தீரும் நோய்கள் : மந்தவாய்வு, உள்மூலம், மூலமுளை. (பா.672, 673)

216. மேகநாதக் குழம்பு

செய்முறை : நல்லெண்ணெய் ஒரு நாழியில் (1.3 லிட்.) வெள்ளைக் குங்கிலியம் பொடித்துப் போட்டு நீருடன் பிசைந்திடவும். வற்றக் காய்ச்சியெடுத்து வழித்துப்போடவும்.
அளவு : வெருகடியளவு, சர்க்கரையுடன் கொள்ளவும்.
தீரும் நோய்கள் : பிரமேகம் 21, பெரும்பாடு. (பா.674–676)

217. சகல பீனிசத்துக்கும் எண்ணெய்

செய்முறை : அகத்திப்பழுப்புச்சாறு, நல்லெண்ணெய் இவை வகைக்கு ஒரு நாழி (1.3 லிட்.), ஈருள்ளி 8 பலம் (280 கிராம்). அரிந்து போட்டுக் காய்ச்சி வடிக்கவும். இதை மூக்கில் நசியமிடவும்.

தீரும் நோய்கள் : தும்மல், நீர் வடிதல், ரத்தம் சீழ் வடிதல், இளைப்பிருமல், மண்டைக்குத்து. (பா.677, 678)

218. கம்பளி பற்பம்

செய்முறை : கம்பளியின் மேல் துணியைச் சுற்றித் தீயில் எரித்தெடுக்கவும். இதைப் பொடி செய்து வைக்கவும்.

அளவு : வெருகடியளவு மோரில் மூன்று நாள் கொள்ளவும்.
தீரும் நோய்கள் : கர்ப்ப வாய்வு, மூல வாய்வு, மேக வாய்வு, நீர்க்கட்டு, சூலை. அந்தர வாய்வு. (பா. 679, 680)

219. சிலாசத்து பற்பம்

செய்முறை: 1 அரசந்து(பாலை) அரைத்து, அதனுள் சிலாசத்தை வைத்துத் தீயிலிட்டு எரிக்கவும். நன்கு வெந்தபின் பொடித்து வைக்கவும். இதைச் சர்க்கரையுடன் கலந்து குடிக்கவும்.

செய்முறை:2 வாழை மடலையெடுத்துத் துளையிட்டு அதனுள்ளே சிலாசத்தைப் புதைத்து வைத்து எரித்தெடுக்கவும். இதில் ஒரு பணவெடை (488 மி. கி.) எடுத்துச் சர்க்கரையில் கலந்து கொள்ளவும். நீர்க்கட்டு உடையும். நீர் பெருகும். (பா.681, 682)

220. வலிப்புக்கு கசாயம்

செய்முறை: வெள்ளாட்டின் நீர் ஒரு நாழி (1.3 லிட்.) எடுத்து, அதில் திரிகடுகு, ஓமம் இவற்றை முடிந்து போடவும். இதை நாலிலொன்றாகக் காய்ச்சி வடிக்கவும். இதைக் காலையில் மூன்று நாளும் கொள்ளவும். வலிப்புகள் தீரும். (பா.683, 684)

221. இரதம், சாதிலிங்கம் முறிவுக்கு

செய்முறை: கொடுப்பை வேர் அரைத்து எலுமிச்சங்காயளவு எடுக்கவும். அதே அளவு வெல்லம் கூட்டி அத்துடன், சீரகம், ஏலம் வகைக்கு ஒரு வராகன் (4.2 கிராம்) சேர்த்து, ஆவின் பால் விட்டரைத்துக் கொள்ளவும். இதை ஆவின் பால் சேர்ததருந்தவும். இரதவேகம், சாதிலிங்க வேகம், பற்பவேகம் தணியும். (பா.685, 686)

222. மேகத்திற்கு

செய்முறை:1 சதாவேரி, சீரகம், பாலை, வட்டத்துத்திவேர் இவை ஓரளவாயிட்டுக் காய்ச்சிய நீரைப் பருகவும்.

செய்முறை:2 ஆனைநெருஞ்சில், ஆவின்பால், சாக்கரை கலந்து காய்ச்சிப் பருகவும். மேகம் தீரும். (பா.687, 688)

223. சிங்காதிச் சூரணம்

செய்முறை : சிங்கி, தானிக்காய், நெல்லி, சடாமாஞ்சில், திரிகடுகு, கோட்டம், இந்துப்பு, கண்டங்காரி, இவை ஓரளவாகக் கூட்டிப் பொடித்து, தேன், இஞ்சிச் சாற்றில் கொள்ளவும். எலிகடி, ஈளை, கிரந்தி தீரும். (பா.689)

224. விக்கலுக்கு

செயமுறை : அத்தித் திப்பிலியும், நெற்பொரியும் வறுத்துப் பொடித்துக் கொடுக்கவும். விக்கல் தீரும். (பா.690)

225. மேகத்திற்குச் சூரணம்

செய்முறை : சீரகம், அழுக்கிரா, இலாமிச்சு, கோட்டம், பனைக்கிழங்கு, ஏலம், இலவங்கப்பத்திரி, நெல்லிமுள்ளி; அதிமதுரம், பச்சைக் கர்ப்பூரம், குங்குமப்பூ, சந்தனம், முந்திரிகை, தாமரை வளையம். அகில், கொத்தமல்லி, ஆவரைச்சமூலம், மரமஞ்சள், தேற்றாம்விதை, சிலாசத்து, சீந்திற்சர்க்கரை இவை ஓரளவாகக் கூட்டிப் பொடித்து வைக்கவும். (பா.691. 692)

226. பித்தத்திற்கு

செய்முறை: காட்டுக்கருணை, கொடுவேலி, சுக்கு, மிளகு ஓரளவாக இடித்துத் தேன் விட்டுக் குழைத்து விழுங்கவும். பித்தம் தீரும். (பா.693)

227. வெள்ளறுகுச் சூரணம்

செய்முறை: வெள்ளறுகு, கொடுவேலி, மிளகரணை வேர், வெள்ளாகப்பட்டை, சிறுகுறிஞ்சான்பட்டை, கருவேப்பம்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, ஆகா*r* கருடன், மிளகு இவை ஓரளவாகச் சேர்த்துப் பொடிக்கவும். இதைத் தேன், ஆவின் நெய்யில் கலந்து கொடுக்கவும்.

தீரும் நோய்கள்: கடிவிடம், குட்டம், விடபாகம், கரப்பன் சூலைப்புண். (பா. 694)

௨௨. குனமத்திற்கு

செய்முறை: கள்ளிப் பாலுடன் இந்துப்பைக் கலந்து தென்னங்காயில் வைத்துத் தீயிற் சுட்டு எடுத்து, ஆறியபின் புன்னைக் காயளவு கொடுக்கவும். தீரும். (பா.695)

229. சத்திகுன்மத்திற்கு

செய்முறை : வில்லை, முல்லை, சீரகம், ஏலம், அதிமதுரம், நெல்லி இவற்றை இளநீரில் அரைத்துக் காய்ச்சி எட்டிலொன்றாக வற்ற வடித்துக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : சத்தி குன்மம், சத்திசுரம், கிறுகிறுப்பு. (பா.696)

௨3௦. அண்ட வாதம, விதை வாதத்திறகு

செய்முறை : கம்பளியைச் சுட்டுக் கரியாக்கிக் கல்லில் வைத்து அரைக்கவும். அத்துடன் வெந்நீர் கலந்து உள்ளே கொடுக்கவும். மேலே மிளகை யரைத்துப் பற்றுப் போடவும். எரிச்சலுண்டாகிப் பின்பு குளிரும். அண்டவாதம், விதைவாதம் தீரும். (பா. 697, 698)

231. நீரடைப்புக்கு

செய்முறை : எருக்கிலை மீதுள்ள தூளை எடுத்து அத்துடன் வெண்காரம் பொரித்தெடுத்த பொடியும் சர்க்கரையும் கலந்து மூன்று நாள் வெந்நீரில் கொள்ளவும். (பா. 699, 700)

232. சயத்திற்கு

செய்முறை : காட்டுக்கருணையுடன் கொடுவேலி, சுக்கு, மிளகு சேர்த்துப் பொடித்துக் கழுநீரில் குழைத்துக் கொடுக்கவும். ஒரு மண்டலத்தில் தீரும். (பா.701)

233. குன்மத்திற்குக் குக்குடாதிச் சூரணம்

செய்முறை : திரிகடுகு, உப்பு, பெருங்காயம், மிளகு, வெள்ளுள்ளி இவை வகைக்கு 8 கழஞ்சு (40.8 கிராம்) சேர்த்துப் பொடியாக்கிக் கள்ளிப்பால் வார்த்து அரைத்துக் கொள்ளவும். இதைக் கோழியின் வயிற்றில் வைத்துத் தைத்து, வேகவைத்தெடுக்கவும். ஆறிய பின் பொடித்து வைக்கவும்.

அளவு : வெருகடி.

துணை மருந்தும் தீரும் நோய்களும் :

1. வெந்நீர் – குடல்வாதம், குட்டுக்குன்மம்.
2. தேன் – பாண்டு, சோகை, காமாலை.
3. கள்ளிப்பால் – மூலநோய். (பா. 702, 703)

234. குனமத்திற்குப் பெருங்காய லேகியம்

செய்முறை : பெருங்காயம், வசம்பு, வாய்விளங்கம், இந்துப்பு, சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், கடுக்காய், சித்திரமூலம், குராசாணியோமம் இவை ஓரளவாகயெடுத்துப் பொடித்து அத்துடன் இரண்டு பங்கு வெல்லம் கூட்டி இடித்துச் சேர்க்கவும்.

அளவு : நெல்லிக்காயளவு. இரண்டு வேளை. நாற்பது நாள்.

தீரும் நோய்கள் : குன்மம் 8, குடல்வாதம், கவுசு, பாண்டு, மலபந்தங்கள், அந்தரவாய்வு, வாதம், உட்டணம், அசீரணம், காமாலை, சூசிகா வாய்வு, மந்தம், சுக்கில வாய்வு, கட்டி, காசம், விப்புருதி, சத்தி, சூலை, உட்குத்து, அக்கினிமாந்தம். (பா.704–707)

235. அரையாப்புக்கு

செய்முறை : நீர்மேல் நெருப்பை (கல்லுருவிப்பூடு) நன்கு அரைத்து வைத்துக் கட்டவும். அரையாப்புக் கரையும். (பா.708)

236. பிரமேகத்திற்கு

செய்முறை : நிலக்குமிழின் இலையைப் பறித்து நீரில் ஊறப் போட்டு பிசைந்து அத்துடன் தயிரும் கலந்து, சீரகம், சர்க்கரை சமஅளவு கூட்டிக் கொள்ளவும். பிரமேகம் அனைத்தும் தீரும். (பா. 709)

237. தில்ல வல்லாதி லேகியம்

செய்முறை : சேங்கொட்டை 6 பலம் (210 கிராம்), வெள்ளுள்ளி, ஓமம், பனைவெல்லம், எள் இவை வகைக்கு ஐந்து பலம் (175 கிராம்), முத்தவிதை 10 பலம் (350 கிராம்), காட்டுச் சீரகம் ஒரு பலம் (35 கிராம்) கூட்டியிடித்துக் கொள்ளவும்.

அளவு : கொட்டைப்பாக்களவு. இருபது நாள்.
தீரும் நோய்கள் : கிரந்தி, சூலை, மேகம். (பா.710, 711)

238. பஞ்சலோகாதி உண்டை

செய்முறை : காந்தசிந்தூரம், உலோகச்சிந்தூரம், மண்டூரபற்பம், திரிபாலை, தேற்றாங்கொட்டை, புளியங்கொட்டைத்தோல். சித்திரமூலம், வெண்குன்றி, மரமஞ்சள், ஆவரைப்பூ, பருத்திக்கொட்டைப் பருப்பு, விளாம்பிசின், கர்ப்பூர சிலாசத்து இவை ஒரளவாகக் கூட்டியெடுத்து, அத்திவேர்க் கசாயத்தில் அரைத்து, குன்றியளவு உருட்டி, நிழலில் உலர்த்தி வைக்கவும். ஆவின் மோரில் இதைக் கொடுக்கவும்.
தீரும் நோய்கள் : பிரமேகம், நீரிழிவு. (பா.713, 714)

239. பறங்கிப் பட்டைச் சூரணம்

செய்முறை : நெருஞ்சி, முடக்கற்றான், கொத்தமல்லி, நீர்முள்ளிவிதை, நன்னாரி, சன்னலவங்கப்பட்டை, சந்தனம், வால்மிளகு, சீரகம், செவ்வியம், அதிமதுரம், சித்திரமூலம், இலவங்கபத்திரி, சிறுநாகப்பூ, வெள்ளரிவிதை, பூலா, விலாமிச்சு. திரிகடுகு, கூகைநீறு, சிலாசத்து இவை வகைக்கு ஒரு பலம் (35 கிராம்) சேர்த்து, அத்துடன், முந்திரிகை, பேரீந்து வகைக்கு 2 பலம் (70 கிராம்), பறங்கிப்பட்டை 10 பலம் (350 கிராம்), கிராம்பு ¼ பலம் (8.75 கிராம்) கூட்டியிடித்து எடுக்கவும். இதில் பச்சைக் கர்ப்பூரம்½ வராகன் (2.1 கிராம்) பொடித்துச் சேர்க்கவும். சர்க்கரை 20 பலம் (700 கிராம்) கலந்து வைக்கவும்.

அளவு : ஒரு மண்டலம்.

தீரும் நோய்கள் : கிரந்திசூலை, மேகவெட்டை, பித்தவாய்வு, நீர்ச்சிறுப்பு, மந்த வாய்வு. (பா.715–718)

240. ஈடுவகை கூடாதவளுக்கு

செய்முறை : நாய்ப்பாகல் வித்துடன் நாகத்தின் பிச்சும், இந்திரியமும், சுண்ணாம்பும் கூட்டி இடவும். (பா.719)

241. பல்வலிக்கு

செய்முறை : வெள்ளைப்பூண்டு, வசம்பு, நாய்வேளை வேர்ப்பட்டை இவை ஓரளவாகயெடுத்து நறுக்கி, வலியுள்ள இடத்தில் அடக்கி வைக்கவும். வெந்நீரில் கால்களைக் கழுவித்துடைத்து மேலே வெண்ணெய் பூசவும். மாலையில் மருந்தை வெளியே துப்பி விடவும். பல்வலி தீரும். (பா.720, 721)

242. புட்பவிரோசனம்

செய்முறை : புளி ஒரு பிடி, அக்கிராகாரம் ஒரு வராகன் (4.2 கிராம்). இரதம் 2 பணவெடை (976 மி.கி.) எடுத்துக் கழற்சியிலைச் சாற்றில் அரைத்துருட்டி வைக்கவும். இதை ஊசியிலே குத்தி நாசியில் முகந்து பார்க்கவும். கழிச்சலாகும். (பா.722)

243. முடமயிருக்கு

செய்முறை : பச்சை மஞ்சளையரைத்து எலுமிச்சங் காயளவு எடுத்து, நாழி நீரில் கரைத்துக் காய்ச்சி, எட்டிலொன்றாக வற்ற வைத்துக் குடிக்கவும்.

அளவு : இரண்டு வேளை. ஏழு நாள். (பா. 723)

பின்னிணைப்பு :1

மருந்துப் பொருள்கள் அகர வரிசை
(எண் : பாடல் எண்)

அக்கிராகாரம் – ஒரு மருந்துச் செடி வகை – Anacyclus Pyrethrum
151, 205, 324, 547, 573, 602, 613

அகத்தி – Sesbania grandiflora- 358, 531, 623, 677

அகில் – Eag!e wood - Aquilaria agallocha- 246, 260, 355, 425

அகிற்கட்டை – " " 314

அசுவகந்தி – அமுக்கிரா– 359

அசமதாகம் – ஓமம் – Carum roxburghianum- 498, 509, 592

அட்டுப்பு – காய்ச்சிய வுப்பு – salt produced by evaporation- 18, 313

அடவிச் சீரகம் – காட்டுச் சீரகம் – 406

அண்டத்தைலம் – கோழிமுட்டைத் தைலம் – 311, 464

அண்டம் – முட்டை – Egg - 94

அத்தி – Focus glomerata - 408, 584

அத்தித் திப்பிலி – ஆனைத்திப்பிலி – Scindapsus officinalis-252, 341, 377,
633, 653, 669, 690

அத்திப்பட்டை – Bark of Ficus glomerata -546, 643, 667

அத்திப்பிஞ்சு – Bud of Ficus -585

அத்திவேர் – Root of Ficus - 713

அதிமதுரம் – Glycyrrhiza glabra- 245, 257, 281, 296, 322, 335, 355,
367, 380,388, 402, 442, 477, 542, 546, 547, 554, 573, 585,
602, 665, 692, 715

அதிவிடையம் – Aconitum heterophyllum- 163, 207, 210, 253, 341, 367,
410, 425, 462, 505, 643, 645, 647, 653, 669,

அப்பிரகம் – மைக்காக்கல் – Mica, talc -26, 58, 122, 125, 132, 139, 287

அப்பைக் கிழங்கு – Root of Kedrostis rostata - 401

அபின்– opium - 206

அபினி – அபின் – opium - 6, 85, 156, 163, 189, 192, 403, 462, 530, 562

அமுக்கிரா – Withania somnifera - 301, 324, 375, 381, 402, 405, 424,
553, 631, 691

அரசந்துளிர் – leaf of Ficus religiosa - 681
அரசம் விரோதி – பூவரசு – 545
அரசு – Ficus religiosa - 408
அரத்தை – Alpinia galangal- 98, 142, 153, 292, 310, 324, 332, 366, 375, 377, 392, 633, 647.
அரப்பொடி – இரும்புத்தூள் – Iron filings -25, 95, 104, 581, 593, 594.
அரவிந்தம் – தாமரை – Lotus - 555
அரிதாரம் – Yellow orpiment- 14, 70, 94, 95, 122, 143, 151, 185, 216, 235, 507, 535, 562.
அரேணுகம் – கடுக்காய் வேர் – 320, 653
அல்லி – Nymphaea pubescens - 402
அவுரி – Indigofera tinctoria- 277, 354, 358, 531, 551
அழிஞ்சில் – சிறு மரவகை – Alangium salvifolium- 303, 306, 353, 355
அறைக்கீரை – Amarantus tristis -11, 94, 198, 441
ஆகாச கருடன்– கொல்லன் கோவை -Corallocarpus epigaeus - 694
ஆட்டு மூத்திரம் – Goat’s urine -311
ஆடாதோடை – Adhatoda vasica- 125, 153, 155, 277, 307, 374, 459, 467, 531, 551, 631
ஆத்தி – Bauhinia racemosa- 401, 669
ஆதொண்டை – காற்றொட்டி – Capparis Zeylanica - 436
ஆதளை– காட்டாமணக்கு – Jatropha curcos- 199, 291, 301, 307, 329
ஆமணக்கு – Ricinus communis - 228, 302, 306, 315, 617,
ஆமணக்கெண்ணெய் – Castor oil - 304, 532, 587
ஆமூத்திரம் – Cow’s urine - 15
ஆமையோடு – Shell of tortoise - 193, 233
ஆயிலப்பட்டை – Bark of Holoptelea integrifolia- 293, 302, 421, 654, 667
ஆரை– நீர்க்கீரை வகை – Marshilia quadrifolia - 165
ஆலவிழுது – Aerial root of Ficus tree - 28, 585
ஆவரம்பட்டை – ஆவிரையின் பட்டை – 667
ஆவரை – ஆவிரை – Cassia auriculata-402, 453, 531, 548, 584, 692, 712
ஆவாரை – ஆவிரை – 165, 248, 401
ஆவின்கோமயம் – Cow’ urine - 289
ஆவின் நெய் – Cow’s ghee- 93, 320, 363, 368, 382, 389, 391, 401, 672

பின்னிணைப்பு : 2

நோய்கள் அகரவரிசை
(எண் : பாடல் எண்)

சுழிகணை - A disease in children due to tables mensentrica-285, 591, 600

சூசிகா வாய்வு - சூதக வாய்வு - a disorderof menstruation- Amennorrhoea - 255, 262, 347, 395, 520, 638, 707

சூசிகா வாய்வுக் கிராணி - Amennorrhoea with diarrhoea - 644

சூட்டுக் குன்மம் - 703

சூதக வாய்வு - சூசிகா வாய்வு - 99, 176

சூலை - குத்தல் நோய் -acute pain - 37, 64, 68, 112, 131, 157, 165, 209, 229, 255, 284, 343, 350, 407, 423, 441, 457, 461, 480, 488, 566, 626, 637, 662, 680, 694, 707, 711

சூலைக்கட்டி - a kind of abscess attended with an unbearable excruiating pain - 229

சூலைவெடி - 94

செவிக்குத்து -ear disease - 94

செவிப்புற்று- cancer of the ear - 113

செவியடைப்பு - loss of the sense of hearing - 299

சொறி -psoriasis - 419, 637

சொறி சிரங்கு - a kind of itch or scabies marked by intense itching and burning sensation - 435, 441

சோகை -இரத்தமின்மை - Anaemia - 60, 94, 98, 107, 162, 246, 268, 271, 275, 284, 321, 364, 387, 395, 418, 485, 583, 703

சோபம் - களைப்பு -Fatigue - 457, 543

சோமரோகம் - கர்ப்ப வெட்டை - whites - 42, 93, 327, 352

தசவாய்வு - உயிருக்கு அடிப்படையாக உள்ள பத்து வாயுக்கள் - 271

தண்ணீர்த்தாகம் - thirst - 575

தலைநோய் - disease of the head - 212

தலை நோவு - head ache - 352, 488

தனுர்வாதம் - பெண்களுக்குப் பேறு காலத்திலும் பேற்றின் பிறகும் காணும் ஒரு வாத நோய் - 318

தாகம் - thirst - 474

தாதுக்கட்டி - thickening of semen - 268

தாதுவர்த்தனை - promoting the animal secretions - 275

தாபசுரம் -a kind of malaria fever - Remittent fever - 246

தாபசோபம் - தாகமும் களைப்பும் - 666

தினவு - நமைச்சல் - itching - 357, 360, 419

வெடிசன்னி – ஒரு வகைச் சன்னி
வெடிசூலை – a kind of rheumatism - 173, 229, 173, 229
வெடிசூலைப்புண் – Ulcer due to rheumatism - 225, 237, 285
வெண்குட்டம் – white leprosy - 94
வெண்ணோக்காடு – An eye disease - 241
வெப்ப்பாவை – swelling in the bowels after chronic fever - 98, 290, 419, 431
வெள்ளோக்காளம் – nausea when water alone is emitted - 321

பாடல் முதற்குறிப்பு அகரவரிசை
(எண் : பாடல் எண்)

அருஞ்சொற்கள் அகர வரிசை

(எண் : பாடல் எண்)

துணை நூல்கள்

1. அகத்தியர் பரிபாஷைத் திரட்டு – பி. இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, 1970.

2. அகத்திய மகாமுனிவர் – தி.மு. செந்தினாயகம் பிள்ளை. கௌமார சோதிட சாலை, 42, அரண்மனைக்காரத் தெரு, சென்னை, 1936.

3. அகத்திய முனிவரருளிச் செய்த பெரு நூல் வைத்திய காவியம் 1500 – சிதம்பரம் குருநாத சுவாமிகள், சென்னை– 1897.

4. அகத்தியர் வைத்திய காவியம் 1500 – (பதிப்.) டாக்டர் வே. இரா. மாதவன். தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.

5. சிகிச்சா ரத்ந தீபம் இரண்டாம் பாகமாகிய வைத்திய சிந்தாமணி – சி. கண்ணுசாமிப் பிள்ளை, பி. இரத்தினநாயகர் சன்ஸ்.

6. சித்த மருத்துவ நூலோதி – டாக்டர் சே. பிரேமா, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988.

7. சித்த மருந்து செய்பெரு முறைகள் – வி. பலராமய்யா, அருட்பெருஞ்சோதி பதிப்பகம், சென்னை – 600 029.

8. சித்த வைத்திய பதார்த்த குண விளக்கம் – பி. இரத்தின நாயக்கர் சன்ஸ், சென்னை – 1949.

9. பதார்த்த குண சிந்தாமணி –ரா. ஆதிமூல பாவலர், பாரதி விலாச அச்சுக்கூடம், வேலப்பாடி, 1940.

10. யூகி வைத்திய சிந்தாமணி – (பதிப்.) டாக்டர் ஆர். தியாகராசன், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் வெளியீடு, 1976.

11. Heritage of the Tamils - Siddha Medicine - (Edi.) S.V. Subramanian and V.R. Madhavan. International Institute of Tamil Studies, Madras - 600 113, 1984.

12. Siddha Medical Manuscripts in Tamil - V.R. Madhavan. I.I.T.S., Madras- 600 113. 1984.

13. Tamil-English Dictionary of Medicine, Chemistry, Botany and Allied Sciences, T.V. Sambasivam Pillai, Vol.1-5.

14. Tamil Lexicon, Vol. I-VI. University of Madras, 1982.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005
அண்மை வெளியீடுகள் (2003)

அறிவியல் களஞ்சியம் தொகுதி 13	700.00
பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும், பாவேந்தரும் மொழிபெயர்ப்பும்	30.00
பழந்தமிழ்த் தொடரியல் வரலாற்று ஆய்வு	70.00
தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி 5	150.00
உயிர் வேதியியல்	270.00
குழந்தை நல மருத்துவம் தொகுதி - 1	210.00
குழந்தை நல மருத்துவம் தொகுதி - 2	170.00
சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் தொகுதி-2 (மறுபதிப்பு)	400.00
வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-5 (மறுபதிப்பு)	700.00
வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-6 (மறுபதிப்பு)	700.00
வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-7 (மறுபதிப்பு) (அச்சில்)	700.00
அருங்கலைச் சொல் அகர முதலி (மீள்பதிப்பு)	600.00
திருமுறைத் திருநெறி தொகுதி - 1	105.00
தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி-2	85.00
வைத்திய சிந்தாமணி	80.00
அயல்நாட்டவருக்குத் தமிழ் கருத்துப் பரிமாற்ற இலக்கணம்	70.00
சுந்தரர் தேவாரப் பாடல்களில் இசை	70.00
தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி-6	150.00

தொடர்பு முகவரி : இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)
தஞ்சாவூர் - 613 001.